**கிறிஸ்துவுக்கும் அவருடைய தூதர்களுக்கும்,**
**சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும்.**
**இடையே எழுந்த**

# ”மகா சர்ச்சை”


**எலன் ஜி. உவைட்**



பேட்டல் கிரீக், மிச்சிகன்.
ஜேம்ஸ் உவைட்டால் வெளியிடப்பட்டது
1858


தமிழாக்கம்
**செல்வின் ஜெ. மோஸஸ்**

# பொருளடக்கம்


அத்தியாயம் 1 சத்தானின் வீழ்ச்சி . . . . .
அத்தியாயம் 2 மனிதனின் வீழ்ச்சி . . . . .
அத்தியாயம் 3 மீட்பின் திட்டம் . . . . .
அத்தியாயம் 4 கிறிஸ்துவின் முதல் வருகை . . . . .
அத்தியாயம் 5 கிறிஸ்துவின் ஊழியம்
அத்தியாயம் 6 மறுரூபமடைதல்
அத்தியாயம் 7 கிறிஸ்துவின் காட்டிக் கொடுத்தல்
அத்தியாயம் 8 கிறிஸ்துவின் விசாரனை
அத்தியாயம் 9 கிறிஸ்துவின் சிலுவை மரணம்
அத்தியாயம் 10 கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
அத்தியாயம் 11 கிறிஸ்துவின் பரமேறுதல்
அத்தியாயம் 12 கிறிஸ்துவின் சீடர்கள்
அத்தியாயம் 13 ஸ்தேவானின் மரணம்
அத்தியாயம் 14 சவுலின்மாறுதல்
அத்தியாயம் 15 யூதர்கள்பவுலைகொல்ல தீர்மானித்தார்கள்
அத்தியாயம் 16 பவுல் எருசலேம் சென்றார்
அத்தியாயம் 17 பொய் மனச்சாட்சியின் காலம்
அத்தியாயம் 18 பாவத்தின் மர்மம்
அத்தியாயம் 19 மரணம், விசனத்தில் நித்திய ஜீவனல்ல
அத்தியாயம் 20 சீர்திருத்தம்
அத்தியாயம் 21 திருச்சபையும் உலகமும் ஒருமுகமானது
அத்தியாயம் 22 வில்லியம் மில்லர்
அத்தியாயம் 23 முதலாம் தூதனின் தூது
அத்தியாயம் 24 இரண்டாம் தூதனின் தூது
அத்தியாயம் 25 வருகையின் இயக்கம் விளக்கப்படுகிறது
அத்தியாயம் 26 மற்றொரு விளக்கப்படம்
அத்தியாயம் 27 ஆசாரிப்புக் கூடாரம்
அத்தியாயம் 28 மூன்றாம் தூதனின் தூது
அத்தியாயம் 29 ஒரு திடமான பீடம்
அத்தியாயம் 30 ஆத்மீக சக்தியில் நம்பிக்கை
அத்தியாயம் 31 பேராசை
அத்தியாயம் 32 அந்த அதிர்வு
அத்தியாயம் 33 பாபிலோனின் பாவங்கள்
அத்தியாயம் 34 உரத்த கதறல்
அத்தியாயம் 35 மூன்றாம் தூது மூடப்பட்டது
அத்தியாயம் 36 யாக்கோபின் உபத்திரவ வேளை
அத்தியாயம் 37 பரிசுத்தவான்களின் விடுதலை
அத்தியாயம் 38 பரிசுத்தவான்களின் வெகுமதி
அத்தியாயம் 39 தனித்த பூமி
அத்தியாயம் 40 இரண்டாம் உயிர்த்தெழுதல்
அத்தியாயம் 41 இரண்டாம் மரணம்

# ஜீவிய சரித்திரத்தின் சுருக்கம்

எலன் கோல்ட் உவைட், 1827-1915

17 வயது வரை, எலன் அம்மையார் ஒரு மெத்தடிஸ்ட் திருச்சபையின் அங்கத்தினராக இருந்தார்கள். இவர், இயேசு கிறிஸ்துவின் விசுவாசமுள்ள சீடர். இயேசு கிறிஸ்துவின் துரித வருகையைக் குறித்து விசுவாசித்து, பேசியபடியால், அச்சபையிலிருந்து 1843ஆம் ஆண்டு நீக்கப்பட்டவர். உலகிற்கு அளிக்கப்பட வேண்டிய தூதினை, பரம தரிசனங்கள் மூலமாக, இரு நபர்களுக்கு, தேவன் அளித்தார். இந்த பெரிய பொறுப்பினை அவ்விருவரும் மறுத்ததினால், தேவன் அத்தரிசனங்களையும், தூதையும் இவருக்கு அளித்தார். இவர், அநேக கட்டுரைகளிலும், நூல்களிலும், தேவன் காட்டிய கண்டனங்களையும், எச்சரிப்புகளையும் விவரித்து எழுதினார். ஆரோக்கிய தூது பற்றிய வெளிச்சம் கிட்டியதிலிருந்து, ஆரோக்கிய வாழ்வை ஆதரிக்க துவங்கினார். ஆதியிலே, ஏதேன் தோட்டத்திலே, தேவன் வழங்கிய முதலாவது ஆகார பழங்கங்களை ஒத்த, தீய பொருட்களின் உபயோகத்திற்கு விலகியிருப்பதின் அவசியங்களையும், அனைத்து ரீதிகளிலும் கடைபிடிக்க வேண்டிய இச்சையடக்கத்தின் அவசியங்களைப் பற்றியும் சுதாரித்து வர, அழைப்பு விடுத்தார்.

அநேகர் அவரை தீர்க்கதரிசி என அழைப்பதை பொருட்படுத்தாத திருமதி உவைட், தன்னை அவர்களாகவே "தீர்க்கதரிசி" என்று அழைத்துக்கொள்ள வில்லை. அவரிடம் கேட்கப்பட்ட பொழுது, தான் ஒரு "தூதுவன்" என அறிவித்தார். இப்பதிலின் மூலமாக, தான் செய்து வந்த ஆரோக்கிய சீர்திருத்தங்கள், பாவத்திலிருந்து திரும்ப கொடுக்கப்பட்ட அழைப்புகள், மற்றும் உண்டாக்கப்பட்ட "திருச்சபையின் பிளவுகளை சரிசெய்தல்" போன்ற உயர்ந்த காரியங்களை செய்வதற்கு ஒரு தீர்க்கதரிசியாக மட்டும் இருப்பது போதுமானதல்ல என்பதை தெளிவுபடுத்தி காட்டினார். அநேக பக்தி ரசமான நூல்களை படைத்த இவர், தான் எழுதிய நூல்களிலேயே, இந்த நூலாகிய "கிறிஸ்துவுக்கும் அவருடைய தூதர்களுக்கும், சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் இடையே உண்டான மகா சர்ச்சை"யைத்தான் மிக முக்கியமாக கருதினார்.

# முகவுரை

"வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை." ஏசாயா 8:20.

21ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலே, ஒவ்வொரு நபரும் ஒரு தீர்க்கதரிசியாக மாறிவிட்டது போல் தெரிகிறது. இன்டர்நெட்டில் கூட தீர்க்கதரிசன தளங்கள் இருக்கின்றன. ஆகிலும், சிலர் கூறும் காரியங்கள் விசித்திரமாக உள்ளன. அவர்கள் யாவரும் தேவ வார்த்தையை பெற்றவர்கள் என்று நாம் எவ்விதமாக அறிந்துக்கொள்ளலாம்? வேதத்தோடும் சாட்சி ஆகமத்தோடும் அவர்கள் சொல்வதை ஒப்பிட்டு பார்த்தால் மட்டுமே அது முடியும். நிச்சயமாகவே, கடந்த காலங்களில் தமது பிள்ளைகளுக்கு தேவன் அருளிய வார்த்தைகளை, அவரே முரணாகப் பேசமாட்டாரே!

இறுதி காலங்களில் வாழ்பவர்களுக்கு இஃது ஒரு பெரிய சோதனையாக திகழும் என்பதால், இயேசுவே நேரிடையாக - "அநேகங் கள்ளத்தீர்க்கதரசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். மத்தேயு 24:11." என தீர்க்கதரிசனம் உரைத்தார். இதற்கு வலுவேலும் விதமாக யோவான், "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளதீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோசித்தறியுங்கள். ஐ யோவான் 4:1" என்று வலியுறுத்தியுள்ளார். எலன் உவைட் இதற்கு விலக்கல்ல. இப்புத்தகத்தை எடுத்து பரிசுத்த வேதகாமத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். கிருபை நிறைந்த பரம பிதாவிடம் மன்றாடுங்கள். அவர் தமது ஆவியானவரை அனுப்பி, நம்மை சத்தியத்திற்குள்ளாக நடத்துவார்.

20-ஆம் நூற்றாண்டில் கடைசி பகுதியிலே , 'கிறிஸ்தவர்கள்' என்று தாய்களை அழைத்துகொண்டவர்கள் தேவனிடத்திலிருந்து தரிசனங்களை பெற்றுக்கொண்டோம் எனக்கூறிய யாவரையும் வன்மையாக எதிர்த்தார்கள் தங்களுடைய கூற்றை நிரூபித்துக்காட்டுவதற்காக வெளிப்படுத்துதல் 22: 18-19 ஐ உபயோகித்தார்கள்.

ஆனால், யோவன் மரித்த பின்பு வேலு யாதொரு தீர்க்கதரசியும் எழும்ப மாட்டார்கள் என்றா இந்த வேதவாசகம் கூறுகிறது? அப்படியென்றால் ,"கள்ளதீர்க்கதரசிகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்று இயேசு ஏன் கூறவேண்டும்? "சகல ஆவிகளையும் சோசிதித்தறியுங்கள்" என யோவான் மூலமாக பரிசுத்த ஆவியானவர் ஏன் உரைக்க வேண்டும்? யேவோனுக்கு பின்பு வந்த தேவதீர்க்கதரசிகள் யாவரையும் நாம் புறக்கணித்துவிட்டால், இக்குழப்பத்திலிருந்து தப்பித்துவிடலாமல்லவா? ஆனால் தேவத்திட்டம் அதுவல்ல. அவசியமான காலத்தில், தமது சித்தத்திற்கு ஏற்ப, புதிய சத்தியங்களை தேவன் விளம்புவார். இருதயங்களில் உண்மையுள்ளவர்கள் அதனை சோதித்தறிந்து, மனமகிழ்ச்சியுடன் அதனை ஏற்று, பின்பற்றுவார்கள். ஆம், சாத்தானும் கிரியை செய்ய அனுமதிக்கப்படுவான். இல்லாவிடில் தேவன் நியாயமானவரல்ல என்று பிசாசானவன் குற்றம் சாட்டுவானே!

ஐ கொரிந்தியர் 12 மூலமாக பரிசுத்த ஆவியானவர் அநேக முக்கிய கேள்விகளை கேட்கிறார். அனைவரும் அப்போஸ்தலரா? அனைவரும் தீர்க்கதரசிகளா? யாவரும் அற்புதங்களை செய்யக்கூடிய ஊழியர்க்காரர்களா?

சுகப்படுத்தும் வல்லமையை யாவரும் பெற்றவர்களா? இக்கேள்விகளை கேட்டபின், பவுல் மூலமாக ஆவியானவர், ”இவைகளைக்காட்டிலும் மேன்மையான ஒன்றை ” நான் காட்டுவேன் என்று காறி அன்பில்லாவிட்டால் இவை அனைத்தும் உபயோகமற்றவை என தெளிவுபடுத்தினார். இன்னும் சற்று கூடுதலாகவே ஐ கொரிந்தியர் 14:1ல் ”அன்பை நாடுங்கள். .... விஷேசமாய்த் தீர்க்கதரசின வரத்தை விரும்புங்கள்” என்று கூறினார் . மேலும், ”ஆவியை அவித்துபோடாதிருங்கள். தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். ஐ தெசலோனிக்கேயர் 15:19-21” என்று கூறுகிறார்.

எலன் உவைட்டுக்கு ‘மகா சர்சைசை’ யின் தரிசனம் 1858 ஆம் ஆண்டின் இளவேனிற் காலத்தில், லோவட்ஸ் தோப்பு, ஒஹாயோ என்கிற அமெரிக்கா மாகானத்தில் கொடுக்கப்பட்டது. இந்த தரிசனத்தின் பெரும்பான்மையான பகுதியை சுமார் 11 ஆண்டுகளுக்கு முன்பாகவே அவர்கள் பெற்றிருந்த போதிலும், இப்பொழுது அவைகளை எழுதும்படி ஏவப்பட்டார்கள். இந்த முயற்சியை சீரழிக்கும்படி சாத்தான் கடுமையாக முயற்சித்தான். சில பகுதிகள் (குறிப்பாக 30 ஆம் அத்தியாயம் ) 1847 ” சிறிய மந்தை” 1851 ” கிறிஸ்துவ அனுபவங்களும் நோக்கங்களும் ” , 1854 பிற்சேர்க்கை போன்ற சிறிய பிரசுரங்களாக வெளியிடப்பட்டன. இவை அனைத்தும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலே முதலாவதாக 1858 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பரிசுத்த வேதாகமத்தை அழித்துவிட வேண்டும் என்று கடுமையாக முயற்சித்த சாத்தான், இப்புத்தகத்தையும் அழித்துவிடும் படியாகவும், கெடுத்து விடும்படியாகவும் பல முயற்சிகளை மேற்கொண்டான். ஒரு தேவ பிள்ளைக்கு வேதகாமத்திற்கு அடுத்தபடியாக இப்புத்தகம் முக்கியம் வகிக்கிறது. தேவன் தமது வார்த்தையை காத்துக் கொண்டார்.

”யுத்தங்கள், குற்றங்கள், காமவிகாரங்கள், மதநம்பிகைகள் ஏன் இவையெல்லாவற்றிலும் எண்ணிலடங்கா பிரச்சனைகள்?”, எனக்கேட்போர் அநேகர். கிறிஸ்துவிற்கும் சாத்தானுக்கும் ஆதிமுதல் ஏற்பட்டிருக்கும் மகா சர்ச்சையை புரிந்துகொள்வதால், இக்கேள்விகளுக்குண்டான விடைகளின் அடிப்படை அமைந்திருக்கிறது.

பரிசுத்த வேதகாமத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் இப்புத்தகத்தை படிக்கும் அன்பான வாசகர்களே, தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்து நடத்துவாராக!

குறிப்பு : ஜீவிய சரித்திரத்தின் சுருக்கம், முகவுரை, வார்த்தை தொகுப்பு ஆகியவை எலன் உவைட்டால் எழுதப்பட்டவை அல்ல; மூல நூலிலிருந்து எடுக்கப்பட்டவையும் அல்ல.

# வார்த்தை தொகுப்பு

| வார்த்தை | பொருள் | முதல் தோற்றம் |
|---|---|---|
| இயசு கிறிஸ்து | தேவதத்துவத்தின் மூவரில் ஒருவர் உலகத்தையும், பிரபஞ்-சத்தையும் படைத்தவர். 2000 ஆண்டுகளுக்கு முன் மனிதனாகப் பிறந்து 33 வயதில் கொலைச் செய்யப்பட்டு, உயிர்த்தெழுந்து, தற்சமயம் பரதத்தில் நமது மீட்பிற்காக கிரியை செய்கிறவர். அவர் மீண்டும் இவ்வுலகத்திற்கு வந்து, நித்தியமாக இப்பரபஞ்சத்தை ஆளுகை செய்யவிருக்கிறார் | தலைப்பு |
| சாத்தான் | பிசாசு. அனைத்து தீமைகளின் பிதா சிருஷ்டிப்பிலேயே மிக நேர்த்தியான சிருஷ்டியாக படைக்கப்பட்ட இவன் போராடத் தீர்மானித்தான். தொடர்ச்சியாக தீமை செய்து வருகிற இவனை தேவன் இறுதியில் அழித்துப்போடுவார். | தலைப்பு |
| கர்த்தர் | இயேசு கிறிஸ்து, பரம பிதா | அத்தியாயம் 1 |
| நான் கண்டேன் எனக்குகாட்டப் பட்டது | இத்தீர்க்கதரிசனங்களை எலன் உவைட் தனது சொந்த கண்களால் கண்ட காட்சிகள். அவரருகில் நின்ற தூதன் இவைகளைக் காட்டினான். | அத்தியாயம் 1 |
| தேவன் | பிதா, குமாரன், பரிசுத்த ஆவி . மூவரும் தேவனே ! | அத்தியாயம் 1 |
| தேவ குமாரன் | இயேசு கிறிஸ்து. | அத்தியாயம் 1 |
| தேவ வார்த்தை | 1. தேவன் விளம்புவது | அத்தியாயம் 1 |
| | 2. பரிசுத்த வேதகாமம் | அத்தியாயம் 18 |
| இரட்சிக்க, கிரயம் | தேவனுக்கே சொந்தமான நாம் (மனிதர்கள்), பாவத்தினால் சாத்தானிற்கு சொந்தமாகிவிட்டோம். இயேசுவின் நாமம் நம்மை அவன் பிடிலிருந்து இரட்சிக்கும். | அத்தியாயம் 3 |

| | | |
|---|---|---|
| தேவதூதன் | தரிசனங்களை கண்டபொழுது, எலன் உவைட்டுடன் இருப்பதற்காக அனுப்பட்ட தூதன். | அத்தியாயம் 3 |
| வருகை | இயேசு உலகிற்கு வந்தது. முதல்முறை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன். இரண்டாம் முறை விரைவில் (1-1). | அத்தியாயம் 4 |
| தேவ ஆட்டுக்குட்டி | இயேசு கிறிஸ்து | அத்தியாயம் 4 |
| யோவான் ஸ்நானகன் | ஒரு தீர்க்கதரசி இயேசுவின் உறவினர். மனந்திரும்பவும் ஞானஸ்நானம் எடுக்கவும் அழைத்தவர். | அத்தியாயம் 4 |
| ஞானஸ்நானம் | கிறிஸ்தவனாக மாறுவதற்கு நீரில் முழுமையாக முழ்கி எழும்புதல். | அத்தியாயம் 4 |
| எலியா | மரிக்காமல் பரத்திற்கு எடுக்கப்பட்ட தீர்க்கதரசி | அத்தியாயம் 4 |
| பலி | தேவனுக்கு பலியிடப்பட்ட மிருகம். இயேசு கிறிஸ்த்துவையும் குறிக்கும். | அத்தியாயம் 5 |
| தேவ ஜனங்கள் | 1. ஆதியிலே - இஸ்ரவேலரும், யூதரும். | அத்தியாயம் 5 |
| | 2. இப்பொழுதோ, இயேசுவை விசுவாசித்து, அவருடைய சித்தத்தின்படி செய்கின்ற யாவரும். | அத்தியாயம் 17 |
| தேவனுடைய புத்தகம் | 1. பரலோகத்திற்கும் ஜீவ புஸ்தகம்.<br>2. பரிசுத்த வேதகாமம். | அத்தியாயம் 6 |
| மிகாவேல் | பரலோக தூதர்களின் தலைவன் | அத்தியாயம் 6 |
| சகோதரன், சகோதரி | இயேசுவை விசுவாசித்து, அவருடய சித்தத்தின் செய்கிறவர்கள். | அத்தியாயம் 7 |
| ஓசன்னா | தேவனை துதி ! | அத்தியாயம் 9 |
| ஓய்வுநாள் | வெள்ளிக்கிழமை சூரியாஸ்தமனத்தில் தொடங்கி, சனிக்கிழமை சூரியாஸ்தமனத்தில் முடிவடையும் ஓய்வுநாள். (ஆதியாகமம் 2:2-3). | அத்தியாயம் 10 |

| | | |
|---|---|---|
| தூது | தேவனிடத்திலிருந்து வந்த வார்த்-தைகள். இவ்வார்த்தைகளை பரப்பிய இயக்கத்தையும் குறிக்கும். | அத்தியாயம் 10 |
| பரமேறுதல் | பரலோகத்திற்கு ஏறுதல். மரணத்தை குறிப்பதல்ல. | அத்தியாயம் 11 |
| அப்போஸ்தலர் | சுவிசேஷசத்தை அறிவிப்பதையே ஜீவனாக கொண்டிருப்பவர்கள். குறிப்பாக, இயேசுவின் சீடர்களும், பவுலும். | அத்தியாயம் 12 |
| மனுஷகுமாரன் | இயேசு கிறிஸ்து. | அத்தியாயம் 13 |
| புற ஜாதியார் | யூதர்கள் அல்லாதவர்கள் | அத்தியாயம் 14 |
| பவுல் | மனந்திரும்புதலுக்கு முன் 'சவுல்' என அழைக்கப்பட்டவன். (அப்போஸ்தலர் 13:9) | அத்தியாயம் 15 |
| 1843, 1844 | இயேசுவின் வருகையும், உலகத் -தின் முடிவும் இந்த ஆண்டுகளில் இருக்கும் என நம்பப்பட்டது. மெய்யாகவே, தானியேல் 8:14 ல் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசன காலம் இவ்வாண்டில் முடிவடைந்தது. | அத்தியாயம் 23 |
| மேய்ப்பர் | 1. சபைத் தலைவர்கள், போதகர்கள் 2. இயேசு கிறிஸ்து. | அத்தியாயம் 23 |
| பரிசுத்தவான்கள் | முழு இருதயத்தோடு தேவனை நேசித்து, அவர் கற்பனைகளின் படியே நடப்பவர்கள் . | அத்தியாயம் 24 |
| ஆசாரிப்புக் கூடாரம் | இயசுகிறிஸ்து நமது இரட்சிப்-பிற்காக பரலோகத்தில் கிரியைச் செய்யும் ஸ்தலம் மோசே உண்டாக்கிய கூடாரம் இப்-பரலோக அமைப்பின் மாதிரி-யாகும். இதனையே 'வாசஸ்தலம்' என்றும் 'தேவாலயம்' என்றும் அழைக்கலாம். | அத்தியாயம் 25 |
| பரிகாரம் | தமது சொந்த இரத்தத்தினால் மனிதர்களை தேவனுக்கு முன்-பாக நீதியாக்குவதற்காக, இயேசு செய்யும் வேலை. | அத்தியாயம் 25 |

| | | |
|---|---|---|
| சீயோன் | 1. பரம நகரத்தின் ஒரு பெயர்.<br>2. தேவனை பின்பற்றும் ஜனக் கூட்டத்தின் நாமம். | அத்தியாயம் 26 |
| புதிய எருசேலம் | பரம நகரத்தின் புதிய நாமம். தேவனின் இருப்பிடமாக இருக்கும் இது, பூமிக்கு இறங்கி வந்து, நித்தியமாக இங்கு ஸ்தாபிக்கப்பட உள்ளது. | அத்தியாயம் 27 |
| கேருபீன் | தேவதூதர்களின் உயர்ந்த தர வரிசை. | அத்தியாயம் 27 |
| மத்தியஸ்தர் | குற்றமுள்ள பாவிகளுக்கும் குற்றமற்ற தேவனுக்கும் இடையே நின்று கொண்டு பாவிகளின் இரட்சிப்பிற்காக இயேசு கையாளும் பதவி. | அத்தியாயம் 27 |
| மிருகம் | தேவனுக்கு விரோதமாக செயல்படும் திரளானோரை குறிக்கும் நாமம். (வெளி.13) | அத்தியாயம் 28 |
| கானான் | இஸ்ரவேலருக்கு வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசம். பரலோகத்-தையும் குறிக்கும். (ஆதி 12:5) | அத்தியாயம் 28 |
| யோகாவோ | பரமபிதாவின் நாமங்களில் ஒன்று. | அத்தியாயம் 28 |
| பெந்தெகொஸ்தே நாள் | இஸ்ரவேலருக்கு தேவன் அரு-ளிய பண்டிகைகளில் ஒன்று. (லேவியராகமம் 23:15-16) | அத்தியாயம் 29 |
| அட்வெண்டிஸ்ட் | இயேசுவின் இரண்டாம் வருகையை விசுவாசிக்கும் ஜனங்களின் நாமம். | அத்தியாயம் 29 |
| லவோதிக்கேயா | வெளிபடுத்துதல் 2 ஸ்ரீ 3 அதிகாரங்களில் கொடுக்கப்பட்டருக்கிற ஏழு சபைகளில் கடைசியான சபை. | அத்தியாயம் 32 |
| பின் மாரி | இயேசு இவ்வுலகிற்கு வருவதற்கு சற்று முன், ஜனங்களை ஆயத்தப்-படுத்துவதற்காக அருளப்படும் மிகுதியான பரிசுத்த ஆவி. (யோவேல் 2:23 ஸ்ரீ அப்போஸ். 3:19) | அத்தியாயம் 32 |
| யூபிலி | சுதந்திரத்தின் ஆண்டு. ஒவ்வொரு 50 ஆண்டுகளிலும் இஸ்ரவேலர்கள் ஒரு ஆண்டினை விமரிசையாகக் கொண்டாடினார்கள். (லேவியராகமம் 25 :10) | அத்தியாயம் 37 |

அத்தியாயம் 1

# சாத்தானின் வீழ்ச்சி

இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்த படியாக சாத்தான், ஒரு காலத்தில், பரலோகத்தில் கீர்த்தி பெற்ற தூதனாக விளம்பினான் என்பதை தேவன் எனக்கு காட்டினார். அவனுடைய முகக்குறி சாந்தமும், பிற தூதர்களைப் போலவே மகிழ்ச்சியை வெளிப்படுத் துகிறதுமாயிருந்தது. அவன் நெற்றி உயர்ந்து, அகன்றிருந்தது. அஃது அவனது அறிவு நுட்பத்தை காட்டியது. அவனது சாயல் பூரணமாக இருந்தது. தேவன் அவரது குமாரனை நோக்கி, ”நமது சாயலில் மனிதனை உண்டாக்குவோம்” என்று கூறியபோது, சாத்தான், இயேசுவின் மீது பொறாமை கொண்டான். மனிதனின் படைப்பில் தானும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்று விரும்பினான். அவனது உள்ளம் பொறாமை மற்றும் வெறுப்பினால் நிறைந்திருந்தது. தேவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் தான் இருந்து, மிக உயர்வான கீர்த்தியை தானே அடையவேண்டும் என விரும்பினான். இக்காலம் வரை, பரலோகத்தில், அனைத்துமே ஒழுங்காகவும், ஒற்றுமையாகவும், தேவனின் அரசாட்சிக்கு முற்றிலும் கீழ்ப்படிந்ததாகவும் இருந்தது

தேவ சித்தத்திற்க்கும், கட்டளைகளுக்கும் விரோதமாக எழும்புவது மகா பாவமாகும். பரலோகமே குழப்பத்தில் இருந்தது. தேவதூதர்கள் சுறுசுறுப்பாக நகர்ந்து கொண்டிருந்தார்கள். தன்னையே உயர்த்தும் வாஞ்சையில், இயேசுவின் அதிகாரத்திற்கு பணிய விருப்பமில்லாமல், தேவனின் ஆட்சிக்கு மறைமுகமான எதிர்ப்பை சாத்தான் வளர்த்து வந்தான். சில தூதர்கள் சாத்தானின் எதிர்ப்புக்கு பரலோக தூதர்களின் இடையே வாதம் உண்டானது. சாத்தானும், அவனை சார்ந்த தூதர்களும், இயேசுவின் உன்னதத்தை எதிர்த்து, தேவன் இத்தீர்மானத்தை நிறைவேற்றியதின் நோக்கம் என்னவாக இருக்கும் என்று அறியும்படி தேவனின் ஞானத்தை அளக்க ஆரம்பித்தனர். தேவ குமாரனின் அதிகாரத்தை எதிர்த்ததினால், இத்தூதர்கள் அனைவரும் பரம பிதாவின் முன்பாக அழைத்துவரப்பட்டார்கள். அச்சமயத்திலே, சாத்தானும் அவனைச் சார்ந்த தூதர்களும் பரத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதன்பின், பரலோகத்தில் ஒரு யுத்தம் மூண்டது. தேவதூதர்கள் இந்தப் போரில் ஈடுபட்டார்கள். தேவகுமாரனையும், அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்த யாவரையும் ஜெயிக்க வேண்டும் என்று சாத்தான் வாஞ்சித்தான். இறுதியாக, உண்மையும் உத்தமமுமான தூதர்கள், போரை வென்றனர். சாத்தானும், அவனது ஆதரவாளர்களும் பரலோகத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

வெளியே தள்ளப்பட்டு, பரதத்தின் கதவுகள் அடைக்கப்பட்டதை கண்ட சாத்தான், தனக்கு உண்டாயிருந்து சகல அலங்காரமும், பரலோக மகிமையும் நித்தியமாக தன்னை விட்டு எடுத்துக்கொள்ளப்பட்டதை உணர்ந்தான். இந்நிலையில், மனம் வருந்தினான். மீண்டும் பரலோகத்தில் தன்னை ஏற்றுக்கொள்ளவேண்டும். என்று விரும்பினானன். ஆனால், பரலோகமோ ஆபத்தில் இருக்கலாகாது; மறுபடியும் உள்ளே வந்தால் பரலோகமே சிதைந்து விடக்கூடும்; ஏனெனில் பாவம் அவனில்தான் தோன்றியது; கலகமூட்டும் விதைகள் அவனில் இருந்தது. சாத்தானும் அவன் யோசனையும் மனங்கசந்து, அழுது. தேவனிடத்தில்,மன்னிப்பை கோரினார்கள் . ஆகிலும் அவர்கள் பாவம், வெறுப்பு, மற்றும் பொறாமை அவர்களுக்கு தண்டனையில்லாமல் மன்னிப்பு என்கிற நிலையை எட்டாத நிலையாக ஆக்கிற்று.

தேவனுடைய அன்பை தான் இழந்து விட்டதை உணர்ந்த சாத்தான், தனது மெய்யான ரூபத்தை நிலை நாட்டத் துவங்கினான். தனது தீய தூதர்களோடு கலந்தாலோசித்து, தேவனுக்கு விரோதமாக செயலாற்ற ஆரம்பித்தான். ஆதாமும் ஏவாளும் அழகிய ஏதேன் தோட்டத்தில் வைக்கப் பட்டபொழுது, அவர்களை அழிப்பதற்கான திட்டங்களை தீட்டினான். தேவ கற்பனைகளுக்கு கீழ்படிந்து இருக்கும் வரை. ஆதாமையும் ஏவாளையும் அசைக்க முடியாது என்பதை சாத்தான் உணர்ந்தான். தேவ அன்பிற்கு பாத்திரவான்களாக இல்லாதபடி அவர்கள் முதற்கன் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களாக ஆக்கப்பட வேண்டும். இந்த திட்டத்தின் மூலமாக, தேவ கோபத்திற்கு அவர்கள் ஆளாகி, சாத்தானின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுவார்கள் என திட்டம் வகுத்தான். மனிதனுக்கு ஆர்வம் பொங்குவதற்காக, சாத்தான் வேறு ஒரு சாயலை தரிக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. தேவனுடைய சத்தியத்துவத்தை எதிர்த்து மெதுவாக தனது திட்டங்களை நகர்த்தி, மனிதனின் உள்ளத்தில் சந்தேகத்தை எழுப்பி அவர்களின் எதிர்பார்ப்பை தாண்டி, இறுதியாக, தான் செய்த தவறுக்கு ஒத்த ஒரு தவறை மனிதனும் செய்யவேண்டும் என்று எண்ணினான். இதற்காக, தேவன் விதித்திருந்த கட்டுப்பாடுகளை தெரிந்துகொண்டு, தனது திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஏதேன் தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த நன்மை தீமை அறியக்கூடிய விருட்சத்தை பயன்படுத்தினான்.

பார்க்கவும் : ஏசாயா 14 : 12-20; எசேக்கியல் 28 : 1-19;
வெளி. 12 : 7-9

அத்தியாயம் 2

# மனிதனின் வீழ்ச்சி

பரிசுத்த தூதர்கள் ஓயாமல் தோட்டத்திற்கு வருவதும் போவதுமாக இருந்ததை நான் கண்டேன். அவர்கள், ஆதாமுக்கும், ஏவாளுக்கும், அவர்களது பொறுப்புகளை குறித்து அறிவுரைகள் கூறி வந்தார்கள். சாத்தானின் எழுச்சியை பற்றியும், வீழ்ச்சியை பற்றியும் சொல்லித் தந்தார்கள். தூதர்கள் சாத்தானைக் குறித்து எச்சரித்து விட்டு, தங்கள் பொறுப்புகளை சுமக்கும் நேரங்களில் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமலிருப்பதின் அவசியத்தையும் எடுத்துரைத்தார்கள். தேவ கட்டளைகளுக்கு கொடுக்கக் கூடிய முழுமையான கவனமும் கீழ்ப்படிதலுமே பத்திரமாக இருப்பதின் வழிமுறைகள் என்பதை தூதர்கள் தெளிவு படுத்தினார்கள். கீழ்ப்படிவதில் கவனமாக இருந்தால், வீழ்ந்துப்போன எதிரிக்கு அவர்கள் மீது அதிகாரமில்லாமல் போகும்.

ஏவாளின் கீழ்ப்படியாமையை தூண்டுவதின் மூலம், சாத்தான் தனது வேலையை துவங்கினான். அவள் தன் கணவனை விட்டு தனித்து உலா வந்தது முதல் குற்றம். இரண்டாவதாக, விலக்கின விருட்சத்தின் அருகாமையில் நடந்துக் கொண்டிருந்தாள். அடுத்தபடியாக, சோதிப்பவனின் சத்தத்திற்கு செவிசாய்த்தாள். இறுதியாக, தேவன் உரைத்த, ”அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்” என்ற எச்சரிப்பை சந்தேகித்தாள். ஒரு வேளை, தேவன் சொல்வதுபோல் ஒன்றும் நடவாது என்று நினைத்தாள். அவள் கீழ்படியாமையுனுள் பிரவேசித்தாள். தனது கரத்தை நீட்டி, விலக்கப்பட்ட கனியை பறித்து, புசித்தாள். அது கண்களுக்கு இன்பமாயும், வாய்க்கு நல்லதுமாய் இருந்தது. தேவன் இவ்வளவு நன்மையான காரியத்தை தங்களுக்கு விலக்கி வைத்தாரே என தேவன் மீது எரிச்சலடைந்தாள். புசித்த கனியை கணவனிடம் கொடுத்து, அவனையும் சோதித்தாள். சர்ப்பம் கூறிய யாவையும், அவனிடம் பகிர்ந்து, சர்ப்பம் பேசியதை மிகுந்த ஆச்சரியத்தோடு கூறினாள்.

ஆதாமின் முகக்குறியில் ஏற்பட்ட வருத்தத்தை நான் கண்டேன். அவன் பயத்தோடும், திகைப்போடும் இருந்தான். அவன் உள்ளத்தில் ஏதோ ஒரு போராட்டம். இந்நிலையை உருவாக்கிய எதிராளி யார் என்பதை உணர்ந்த அவன், தன் மனைவி மரித்துப்போவாள் என்பதையும் அறிந்தான். அவர்கள் இருவரும் பிரியவேண்டிய சூழ்நிலையை கண்டான். ஏவாளின் மீது அவன் வைத்திருந்த அன்பு பெரிது. முற்றிலும் சோர்ந்து போனவனாக அவளது வேதனையான முடிவை தான் பகிர்ந்து கொள்ள முன் வந்தான். அக்கனியை அவன் வாங்கி, துரிதமாக புசித்தான். சாத்தான் பேரானந்தம் அடைந்தான். பரலோகத்திலே சர்ச்சையை உருவாக்கி, பலரை தன் வசப்படுத்திக் கொண்டான். வீழ்ந்த அவன், இப்பொழுது, பிறரையும் வீழ்த்த ஆரம்பித்தான். அந்தப்படியே, ஸ்திரியை வஞ்சித்ததின் மூலமாக புருஷனையும் வஞ்சித்துக் கொண்டான். ஆதாமும், ஏவாளோடு, தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாமல், வீழ்ந்துப் போனான்.

மனிதனின் வீழ்ச்சி பரலோகமெங்கும் பரவியது. அனைத்து கின்னரங்களும் அமைதியாகின. தேவ தூதர்கள், துக்கத்தினால், தங்கள் சிரசின் மீதிருந்த கிரீடங்களை இறக்கி வைத்தார்கள். பரலோகம் முழுவதும் சமாதானமற்ற நிலை ஏற்பட்டது. குற்றம் புரிந்த மணமக்களை என்ன செய்வது என்று தீர்மானிக்கும்படி பரலோகக் குழு கூட்டப்பட்டது. ஜீவவிருட்சத்தின் கனியையும் ஈர்க்கப்பட்டு, புசித்து விடுவார்களோ என்று தூதர்கள் அனைவரும் கலங்கினார்கள். ஆனால் தேவன் ஜீவ விருட்சத்தை காக்கும்படி சிறப்பு தூதர்களை நியமித்தார். அஃதோடு மீறியவர்களை, தோட்டத்தை விட்டு துரத்தினார். ஜீவ விருட்சத்தை காத்த தூதர்களின் கரங்களில் சுடரொளி பட்டயங்கள் இருந்தன.

சாத்தான் இம்முறை வென்றான், பிறரை விழச்செய்தானே! பரத்திலிருந்து அவன் தள்ளப்பட்டான். பரமானந்தம் அனுபவிக்குமிடத் திலிருந்து மனிதர்கள் வெளியேற்றப்பட்டனர்.

பார்க்க : ஆதியாகமம் 3

## அத்தியாயம் 3

# மீட்பின் திட்டம்

மனிதன், தன் பூரணத்தை இழந்தான்; தேவன் மிகவும், நேர்த்தியாக படைத்திருந்த உலகம் இனி துன்பங்களினாலும், நோய்களினாலும், மரணங்களினாலும் நிறையப்போகிறது; குற்றம் புரிந்தவர்கள் தப்பியோட வழி ஏதும் இல்லை; இவைகளை தெளிவாக உணர்ந்த பரலோகமே ஸ்தம்பித்து, துக்கத்தினால் நிறைந்திருந்தது. ஆதாமின் குடும்பம் மரித்தாக வேண்டும். நேர்த்தியான இயேசுவின் முகக்குறியில், நிழலாடிய துக்கத்தையும், அனுதாபத்தையும் நான் கண்டேன். பிதாவை மறைத்திருந்த மிகப் பிரகாசமான ஒளியை நோக்கி இயேசு நகர்ந்ததையும் கண்டேன். இயேசு பிதாவோடுசம்பாஷித்த நேரம் முழுவதும், தூதர்கள் மன விசாரத்தோடு இருப்பதை கண்டேன். இயேசு தமது பிதாவோடு நெருங்கிய சம்பாஷனையில் இருப்பதாக என் தூதன் என்னிடம் கூறினான். பிதாவை சூழ்ந்திருந்த மகிமையின் ஒளியில் மூன்று முறை இயேசு மறைக்கப்பட்டார். மூன்றாவது முறையாக அவர் அந்த ஒளியிலிருந்து வெளிப்பட்ட போது, அவரை காண முடிந்தது. இப்பொழுது, அவரது முகக்குறி அமைதியாக, எவ்வித குழப்பமும், கிலேசமும் இல்லாமல் இருந்தது. வார்த்தைகளினால் விவரிக்கமுடியாதபடி அவரது முகம் தயையும், அழகும் நிறைந்திருந்தது. வீழ்ந்துபோன மனிதனை மீட்கும்படி ஒரு வழி உண்டாக்கப் பட்டிருப்பதை பெருந்திரளான தூதர்களுக்கு அவரே அறிவித்தார். தனது பிதாவிடம் தான் மன்றாடியதையும், தனது ஜீவனையே மீட்கும் கிரயமாக கொடுக்க முன் வந்ததையும் எடுத்து கூறினார். அஃதோடு, சாவின் பாரத்தை தானே தாங்கப்போவதாகவும், அவர்மூலமாக மனிதன் மன்னிப்பை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெளிவுபடுத்தினார். அந்தப்படியே, தனது இரத்தத்தின் புண்ணியத்தினாலும், தேவ கட்டளைக்கு

கீழ்ப்படிகிறதினாலும், தேவனின் அன்பிற்கு மீண்டும் பாத்திரவான்களாக வழி உண்டு என்பதையும் விளக்கினார். இதனடிப்படையில், துரத்தப்பட்ட மனிதன், மீண்டும் அந்த அழகிய தோட்டத்தினுள் நுழையவும், ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்கவும் வழியுண்டு என எடுத்துரைத்தார். தங்களது சேனாதிபதி உரைத்தமீட்பின் திட்டத்தை கேட்ட தூதர்களால் களிகூறமுடியவில்லை. பிதாவின் கோபத்திற்கும், மனிதனின் பாவத்திற்கும் இடையேதான் நின்று, சகல பாவத்தையும் தாங்கி, பலரின் இகழ்ச்சியையும் ஏற்று, இந்த மீட்பின் வழியை உண்டு பண்ணியதை, இயேசு விவரித்தார். வெகு சிலரே அவரை ஏற்றுக்கொள்வார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் பரம மகிமை அனைத்தையும் விட்டுவிட்டு, உலகில் மனிதனாக தோன்றி, தம்மை தாழ்த்தி, தமது சொந்த அனுபவங்களின் மூலமாக மனிதனை அலைக்கழிக்கும் சகல சோதனைகளையும் சகித்து, சோதனைகளை மேற்கொள்ளும் வழிமுறைகளை கற்றும் கொடுக்க சித்தம் கொண்டார். இறுதியாக, அவருடைய கற்பிக்கும் பணி முடியும். பொழுது, பிசாசின் விருப்பப்படியே கொடிய மனிதர்களின் மூலமாக தனக்கு வர இருக்கும் மகாகொடூரமான மரணத்தையும், சகல அவமானங்களையும், சகிக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்தார். தேவ தூதர்கள் கூட காண இயலாத அளவுக்கு கொடூரமான மரணத்தைப் பற்றி கூறினார். தான் ஒரு குற்றம் தீர்க்கப்பட்ட பாவியாக வானத்துக்கும் பூமிக்கும் இடையே பல மணி நேரங்கள் மரண வேதனையோடு தொங்க வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தார். சரீர வேதனைகளோடு ஒப்பிட முடியாத மன அவஸ்தையையும் அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வுலக பாவத்தின் பாரம் முழுமையாக அவர் மீது சுமத்தப்படும். அவர்களிடம், அவர் மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, பரத்திற்கு ஏறி, தன் பிதாவிடம் வழதப்பிச் சென்ற மனிதர்களுக்காக பரிந்து பேசப் போவதைப் பற்றியும் சொன்னார்.

தூதர்கள் அவரை சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கினார்கள். தங்கள் ஜீவனை கொடுக்க அவர்கள் முன்வந்தார்கள். இயேசுவோ, தாமே மரிக்கவேண்டியதின் அவசியத்தையும், அவர்களுடைய ஜீவன் இப்பெரிய கடனை தீர்ப்பதற்கு போதுமானதல்ல என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறினார். அவருடைய ஜீவன் மாத்திரமே பரமபிதா ஏற்றுக்கொள்ளும் பிரதிக்கிரயம் என்றும் கூறினார்.

தேவதூதர்களின் பங்காக, தனக்கு பல்வேறு சமயங்களில் அவர்கள் உடன் இருந்து உற்சாகப் படுத்துவது மிக அவசியம் என்பதை அவர்களிடம் இயேசு சொன்னார். மனிதனின் விழுந்து போன நிலையை தான் எடுத்துக்கொள்ள போவதால், அவர் சந்திக்க இருக்கும் அவமானங்களையும் மாபெரும் வேதனைகளையும் அவர்கள் கவனிக்க வேண்டும் என தெளிவுபடுத்தினார். இத்தருனங்களில், அவர் படும் வேதனைகள், பிற மனிதரின் வெறுப்புகள் போன்றவற்றை அவர்கள் கவனிக்கும்போது, எக்காரணத்தைக் கொண்டும், அவர்கள் உணர்ச்சிமிகுந்து, அவர்கள் கான்கின்ற எதையும் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ள கூடாது என்றும் கட்டளை பிறப்பித்தார். மரித்து, உயிர்தெழும்போது அவருக்கு அவர்கள் பணிவிடை செய்யவேண்டும் என்றும் கூறினார். இத்தகைய மீட்பின் திட்டம் வரையப்பட்டு, பிதாவும் அதனை ஏற்றுக்கொண்டார் என தெரிவித்தார்.

பரிசுத்த துக்கத்துடன், இயேசு தூதர்களை தேற்றினார். இதற்கு பின்,

தான் இரட்சிக்க வேண்டியவர்கள் தன்னுடன் நித்தியமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை தெரியப்படுத்தினார். தனது மரணத்தின் மூலம் அநேகரை அவர்மீட்டுக்கொள்ள வேண்டும் என்றும், மரணத்தின் வல்லமையை பெற்றிருந்த சாத்தானை அழித்துவிடவேண்டும் என்றும் அவர் வாஞ்சித்தார். இத்தியாகத்திற்கு பின், பரமபிதா தன்வசம் இந்த இராஜ்ஜியத்தையே ஒப்படைத்து விடுவார் என்றும், இராஜ்ஜியத்தை மத்திரமல்லாமல் அஃதோடு அந்த அதிகாரத்தை இவரே நித்தியம் நித்தியமாக வைத்துக்கொள்வார் என்றும் அறிவித்தார். சாத்தானும், அவனைச்சார்ந்த பாவிகளும் ஒருபோதும் பரலோகத்தின் பரிசுத்தத்தை குலைத்துவிடாமல் இருப்பதற்காக, அவர்களை முழுவதுமாய் அழிக்க வேண்டும் என்று உறுதியாக இருந்தார். இவ்விதமாக, தமது தியாக பலியின் வாயிலாக, தேவத் தொடர்பை இழந்திருந்த பாவ மனிதன் மீண்டும் ஒப்புரவாகி, பாவ மன்னிப்பை பெற்று, நித்தியமாக பரலோக தேவனோடு வாழும் பாக்கியத்தை பெற இருக்கிறான் என்பதை உணர்ந்து பரமசேனைகள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் தரவேண்டும் என உத்தரவிட்டார்.

பின்பாக, அறிவிக்கமுடியாத மகிழ்ச்சி பரலோகத்தை நிறைத்தது, பரமசேனை துதி கீதங்களைப் பாடி பரமதேவனை போற்றினார்கள். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கின்னரங்களை மீண்டும் இயக்கி, முன்பு பாடியதை காட்டிலும் அதிக உற்சாகத்துடன் தேவனுடைய பெருந்தன்மையை போற்றி பாடினார்கள். தனது சுய சந்தோஷத்தை மறுத்து, கலகக்காரருக்காக தம்மையே தியாக பலியாக ஒப்புக்கொடுக்க முன் வந்த தேவ குமாரனை வெகுவாக பாராட்டி பாடினார்கள். பிதாவின் புயத்தை விட்டு அகன்று, வேதனைகள் நிறைந்த வாழ்வை தெரிந்துக்கொண்டு, அவமானமான சாவையும் வரவேற்ற இயேசுவை மிகுதியாக துதித்தார்கள்.

எனது தூதன் என்னிடம், ”போராட்டம் ஏதுமில்லாமல், பரம பிதா, தனது ஒரேபேரான குமாரனை தந்தருளினாரா?” என்று கேட்டான். இல்லவே இல்லை. குற்றம் புரிந்த மனிதனை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கவா, அல்லது அவர்களுக்காக மரிப்பதற்கென தமது ஒரே குமாரனை கொடுப்பதா, என்ற விவாதத்தில் தான் பரம பிதாவும் இருந்தார். இத்தகைய தியாகத்தை செய்வதற்கு அநேக தூதர்கள் ஆவலோடு முன் வந்தார்கள். ஆனால், மனிதனின் பாவத்தை சுமந்து தீர்க்கக் கூடிய வல்லமை குமாரனின் மரணத்திற்கு மாத்திரமே உண்டு என்பதால் வேறு எந்த தியாகமும் பலனற்றது என என் தூதன் விளக்கினான்.

தேவ தூதர்களுக்கோ ஒரு சிறப்பு பணி ஒதுக்கப் பட்டிருந்தது. அவர்கள், பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையே மேலும் கீழும் சென்று, குமாரனுக்கு உற்சாக பணிவிடை செய்யவேண்டியிருந்தது. இஃதோடு, பிசாசின் வல்லமையை எதிர்த்து வாழ்கின்ற யாவருக்கும் கிருபையின் பாதுகாப்பை நல்குவதும் தூதர்களின் பணியே!! அழிந்து போகிற மனிதனை மீட்கும் பொருட்டாக, பிதா, எவ்விதத்திலும் நியாயத்தீர்ப்பின் சட்டங்களை மாற்ற இயலாத நிலை இருந்தது. எனவே, மனிதனின் மீறுதல்களுக்கு மரிப்பதற்காக தமது ஒரே குமாரனை தந்தருளினார்.

மானிடனை வீழ்த்தியதின் விளைவாக, தேவகுமாரனை பரலோக

கெம்பீரத்திலிருந்து இறக்கிவிட்ட மகிழ்ச்சியில் சாத்தான் தனது தூதர்களுடன் களிகூர்ந்தான். இயேசு மனித அவதாரம் எடுத்த பின், அவரை எளிதாக மேற்கொண்டு, மீட்பின் திட்டத்தையே தடை செய்ய தன்னால் கூடும் என தனது தூதர்களிடம் கூறினான்.

முன்பு இருந்த மேன்மை மிக தூதனாகவும், இப்பொழுது இருக்கின்ற வீழ்ந்த தூதனாகவும், சாத்தான், எனக்கு காட்டப்பட்டான். இன்னமும் இராஜ தோற்றத்தை கொண்டிருந்தான். உயர்ந்த முகச்சாயலை பெற்றிருந்தான். வீழ்ந்து போன ஒரு தூதனாயிற்றே! ஆனால், அவன் முகத்தோற்றம், மன விசாரம் நிறைந்ததாயும், பாரமுள்ளதாயும், வன்மம் நிறைந்ததாயும், வெறுப்பு, பொய் அடங்கியதாயும் காட்சியளித்தது. ஒரு காலத்தில் உயர்ந்த புருவங்களையும் அகன்ற நெற்றியையும் பெற்றிருந்த அவன் இப்பொழுது பின்னோக்கி இழுக்கப்பட்டிருந்த சாயலை பெற்றிருந்தான். அவன் தன்னையே இழிவு படுத்திக் கொண்டிருந்த படியால், தன்னில் உண்டாயிருந்த சகல உயரிய குணங்கள் அனைத்தும் மங்கி, சகல தீமையின் குணங்கள் வளர்ந்திருந்தன. அவனுடைய கண்கள் தந்திரமுள்ளதாயும், கபடம் நிறைந்ததாயும், உருவ குத்துகிறதாயும் இருந்தன. அவனுடைய வடிவம். பெரிதாக இருந்தது ஆனால் அவனது மாமிசம் கைகளிலும் முகத்திலும் கொடூரமாக தொங்கிக்கொண்டிருந்தது. நான் அவனை பார்த்தபோது அவனது நாடி தனது இடது கையில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தது. ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். அச்சமயத்தில், அவன் முகத்தில் ஒரு கொடூரமான வஞ்ச புன்னகை தோன்றி என்னை நடுங்க வைத்தது. தனது பாவ இலக்குக்கு ஒருவன் இரையாகும் முன் இந்த சிரிப்பை சாத்தான் உடுத்திக்கொள்வான். அந்த இரை அவனது பிடியில் அகப்பட்டுக்கொள்ளும்போது இந்த புன்னகை கொடூரமாக மாறும்.

பார்க்க :- ஏசாயா 53

அத்தியாயம் 4

# கிறிஸ்துவின் முதல் வருகை

இதற்கு பின், இயேசு மனித சாயலை ஏற்று, மனிதனாக தம்மை தாழ்த்தி, பிசாசின் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைகளை நான் கண்டேன்.

அவருடைய பிறப்பு எவ்வித உலக ஆடம்பரங்களும் இல்லாதிருந்தது. ஒரு மாட்டுத் தொழுவத்தில் புல்லணையில் பொதியப்பட்டவராக அவர் பிறந்தார். இருப்பினும் மற்ற எந்த பிறப்பும் பெற்றிராத கீர்த்தியை இப்பிறப்பு பெற்றது. மேய்ப்பர்களுக்கு தேவதூதர்களே இந்நற்செய்தியை கொடுத்தார்கள். இச்சம்பவத்தை பரலோகின் ஒளியும், மகிமையும் கௌரவித்தன. பரமசேனை தங்கள் கின்னரங்களினால் பரம பிதாவை வாழ்த்தினார்கள். தேவன் தமது

குமாரனின் முடிவை பெருமிதத்துடன் கவனித்தார். தூதர்கள் அவரை பணிந்து சேவித்தார்கள்.

இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது தேவதூதர்கள் சூழ்ந்திருக்க, பரிசுத்த ஆவியானவர் புறாவின் தோற்றத்தில் வந்திறங்க, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்", என்ற பரம பிதாவின் சத்தம் வானத்தில் உண்டாயிற்று.

யோர்தானில் ஞானஸ்தானம் கொடுத்த யோவானிற்கு தான் சந்தித்தது இவ்வுலகின் இரட்சகர் என்று உறுதியாக தெரிந்திருக்கவில்லை. தேவன் கொடுத்திருந்த அடையாளத்தின் படியே ஆவியானவர் புறாவின் வடிவிலே வந்திறங்கினதை கண்டவுடன், உரத்த தொனியில், "இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" என சாட்சியளித்தார்.

யோவான், மேசியாவின் வருகையை குறித்தும், அவர் ஆற்ற இருக்கும் மகா ஊழியங்களை குறித்தும், தனது சீடர்களுக்கு கற்று தந்தார். தனது நாட்கள் முடியும் காலம் வந்துவிட்டபடியால், அவர்கள் அனைவரும் தனக்கு பின் வருகிறவரை பின்பற்றும் படி வினவினார். யோவான் தனித்திருந்து, எளிய வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டே தனது ஊழியத்தை செய்து வந்தார். இயேசுவின் முதல் வருகையை அறிவித்தவர் என்ற பெயரை யோவான் பெற்றிருந்தும், கடைசி நாட்களில், இயேசுவோடு சேர்ந்து ஊழியத்தில் பங்குபெறும் வாய்ப்பு அவருக்கு கிட்டாது போனது. இருப்பினும், கோடரியை மரங்களின் வேர் அருகே வைத்தவர் யோவான். திரளான ஜனங்கள், தங்கள் வேலைகளை விட்டு, வனாந்தரத்தில் பிரசங்கித்து கொண்டிருந்த யோவானின் செய்தியை கேட்க வாஞ்சையோடு வந்தார்கள். முடிவைப் பற்றி கவலை கொள்ளாமல், பாவத்தை கண்டித்தார். தேவ ஆட்டுக்குட்டியின் வருகைக்காக வழியை ஆயத்தம் பண்ணினார்.

யோவானின் தெளிவான செய்திகளை ஏரோது கவனித்த படியால், பெரிதும் பாதிக்கப்பட்டான். அவன், யோவானின் சீடனாக விரும்பினான். இந்நிலையில், உயிரோடிருக்கும் தனதுசகோதரனின் மனைவியை, ஏரோது மணம் முடிக்க விரும்பியதை யோவான் அறிந்து, அதனை கண்டித்தார். ஆகிலும், அந்த பெண்ணையே விவாகம் பண்ணிய ஏரோது, அவளின் செல்வாக்கினால் யோவானை சிறையில் அடைத்தான். சிறையிலிருந்த நாட்களில், தனது சீடர்களின் மூலமாக, இயேசுவின் வல்லமையான ஊழியங்களைக் குறித்து அறிந்து, தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான். விரைவிலேயே, மனைவியின் வசீகரத்தினால் ஏரோது, யோவானை சிரைச்சேதம் பண்ணி கொலை செய்தான். ஆகிலும், இயேசுவை பின்பற்றி, அவருடைய ஆறுதலான வார்த்தைகளை கேட்டு, அவரை விசுவாசிக்கிறவன், யோவான் ஸ்நானகனிலும் உயர்ந்தவன் என்று நான் கண்டேன்.

எலியாவின் ஆவியோடும், வல்லமையோடும். யோவான் இயேசுவின் முதல் வருகையைக் குறித்துப் பிரசங்கித்தது போல, கடைசி நாட்களில் வாழ்கின்ற யாவரும் இயேசுவின் இரண்டாம் வருகையை குறித்த சத்தியத்தை எடுத்துரைக்க புறப்பட வேண்டியதின் அவசியத்தை

நான் கண்டேன்.

ஞானஸ்நானத்திற்கு பின் இயேசு, பிசாசினால் சோதிக்கப்படும்படியாக, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். தீவிரமான இச்சோதனைகளை எதிர்கொள்ளும்படி, தூய ஆவியானவர், இயேசுவை, ஆயத்தப்படுத்தி இருந்தார். நாற்பது நாட்களாக பிசாசினால் சோதிக்கப்பட்டவர். அந்நாட்களிலே ஒன்றும் புசியாதிருந்தார். சூழ்நிலைகள் அனைத்தும் மனித பெலத்தில் இருக்கும் எவரும் மடிந்து விடக்கூடிய நிலையில் தான் இருந்தது. பிசாசோடும், காட்டு விலங்குகளோடும். இயேசு தனித்திருந்தார். அவர் உபவாசித்து இருந்தபடியால், தேவகுமாரன் மிகவும் சோர்ந்து, இளைத்துப் போயிருந்ததை கண்டேன். அனாலும், அவருக்கு நியமனம் செய்யப்பட்டிருந்த பொறுப்புகளை அவர் சுமந்தே தீரவேண்டும் என்கிற நிலை இருந்தது.

மனிதனாக தம்மை தாழ்த்தியபடியால், இயேசுவை எளிதில் வீழ்த்தி விடலாம் என எண்ணி, சாத்தான் மகிழ்ந்தான். இதினிமித்தமாக, அநேக சோதனைகளை அவர் மீது தொடுத்தான். அவன் இயேசுவை நோக்கி, ”நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்த கல்லுகள் அப்பங்குளாகும்படி சொல்லும்” என்றான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக, ”மனுஷன் அப்த்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் எனறு எழுதியிருக்கிறதே” என்று கூறினார்.

இயேசு, தேவகுமாரனாக இருப்பதை குறித்து ஒரு தர்க்கதை எழுப்ப சாத்தான் விரும்பினான். இயேசுவின் பலவினமான தோற்றத்தை காண்பித்து, அவரைக் காட்டிலும் தான் பலவான் என்று பெருமைப்படுக்கொண்டான். ஆகிலும், இந்த இன்னல்கள் அனைத்திலும் தனது பரமபிதா அறிவித்த செய்தி இயேசுவை பெலப்படுத்தியது. சாத்தானுக்கு, அவனுடைய பலவீனங்களையும், இயேசுதான் உலகின் இரட்சகர் என்கிற உண்மையையும், சொல்லத் தேவைப்பட்டதாக இயேசு ஒருபோதும் முயற்சிகள் மேற்கொள்ளவில்லை, என்று நான் கண்டேன். இயேசுவின் அதிகாரத்திற்கு அவன் கீழ்ப்படியாததே, அவனை பரலோகத்திலிருந்து வெளியேற்றியது.

அவனுடைய பலத்தை நிரூபிப்பதற்காக, சாத்தான், இயேசுவை எருசலேம் தேவாலயத்தின் கோபுரத்தின் மேல் கொண்டு நிறுத்தினான். அங்கே, மீண்டும் அவரைச் சோதிக்கும்படி, ”நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது” என்று கூறினான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக, ”உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறது” என்றார். மீட்பின் திட்டம் தோற்று விட வேண்டும் என சாத்தான் வாஞ்சித்தான். ஆனால் அத்திட்டம் மிக ஆழமாக போடப்பட்டிருப் பதையும், அதனை சாத்தானால் கெடுக்க இயலாது என்பதையும் நான் கண்டேன்.

சோதிக்கப்படுகின்ற கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருக்கும் இயேசுவே உகந்த உதாரணம் என நான் கண்டேன். சோதனைகளை பொருமையோடு கையாளவேண்டும். தேவன், தாமே, மகிமையடையக்கூடிய சூழ்நிலைகளைத் தவிர வேறு எதற்கும் நாம் தேவனை அழைத்து, அற்புதங்களை நிகழ்த்த வைப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை, இயேசு, ஒருவேளை தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து தாழக் குதித்திருந்தால், அஃது பரம தகப்பனுக்கு கணமாகாது. ஏனெனில், சாத்தானையும் தூதர்களையும் தவிர வேறு எவரும் இக்காட்சியை காணவில்லை. தேவ வல்லமையை பிசாசிடம் காட்டுவது கர்த்தரையே சோதித்ததாகும். மேற்கொள்ளப்பட வேண்டிய நபரிடம், இயேசு, தம்மை தாழ்த்திக் கொண்டதை போலாகிவிடுமல்லவா?

”மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல இராஜ்ஜியங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்கு காண்பித்து : நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு, அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.

இங்கு சாத்தான், இயேசுவிற்கு உலக ராஜ்யங்களை காட்டினான், அவை அனைத்தும் மிகவும் கவர்ச்சிகரமாக காட்டப்பட்டது. தன்னை பணிந்துகொண்டால் அவையெல்லாம் இயேசுவிற்கு கொடுப்பதாக ஆசை காட்டினான். இரட்சிப்பின் திட்டம் நிறைவேறினால், தனது வல்லமை பறிக்கப்பட்டுவிடும் என்று சாத்தான் அறிந்திருந்தான். மனிதனை மீட்பதற்காக இயேசு மரித்தால், அவனது சக்தி முடிந்துவிடும் என்றும், அவனும் அழிந்துபோவான் என்றும் சாத்தான் நன்றாக அறிந்திருந்தான். ஆகையால் கூடிமட்டும் மீட்பிக் திட்டத்தை தடுத்துவிட திட்டம் போட்டான். மனிதனின் மீட்டு திட்டம் தோல்வியடையும் என்றும். அப்படி நடந்தால், பரலோக தேவனுக்குஎதிராக ஆளுகை செய்யப் போவதாக பெருமிதம் கொண்டான்.

இயேசு, பரத்திலேயே தனது மகிமையையும், வல்லமையையும் விட்டுவிட்டு வெளியேறியபோது சாத்தான் பேரானந்தம் அடைந்தான். தேவகுமாரன் தனது வல்லமைக்குள் ஒப்படைக்கப்பட்டதாக நினைத்தான். ஏதேனில் தம்பதியினரை வஞ்சித்தது போல, தேவகுமாரனையும் வீழ்த்திவிடலாம் சாத்தான் நினைத்தான். பரமபிதாவின் சித்தத்திற்கு விரோதமாக இயேசுவை செயல்பட வைத்துவிட்டால், தனது கொடிய திட்டம் நிறைவேறிவிடும் என கனவு கண்டான். ஆனால் இயேசுவோ, ”அப்பாலே போ சாத்தானே” என்று கடிந்து கொண்டார். அவர் தமது பரம தகப்பனை மட்டுமே பணிந்துகொள்வார். தமது ஜீவனைக் கொண்டு, சாத்தானின் பிழயை தகர்த்தெறியும் காலம் நெருங்கி வருவதை இயேசு உணர்ந்தார். இவ்வுலக ராஜ்யங்கள் அனைத்தும் தன்னுடையது என்றும், அவனை பணிந்துகொண்டால், அவருடைய சிரமங்களிலிருந்து விடுபெறலாம் என்றும் இயேசுவை சோதித்தான். இயேசு மிக உறுதியாக இருந்தார். பாடுகள் நிறைந்த ஜீவனை தெரிந்துகொண்டு,

மரணபரியந்தமும் தம்மை தாழ்த்தி போராட்டத்தை எதிர்கொள்ள அவர் ஆயத்தமாய் இருந்தார். உலக ராஜ்யங்கள் அனைத்தையும் சாத்தானிடமிருந்து மீட்டு, தமது பிதாவின் கரத்தில் கொடுக்கவேண்டும் என்று அவர் ஆசித்தார். சாத்தானையும் பிதாவின் கரத்தில் ஒப்புக்கொடுத்து, நித்திய மரணத்தினால் அவனை அழித்து அதினிமித்தமாக இயேசுவும், மகிமையின் பரிசுத்தவான்களும் நிம்மதியாக இருக்க முடியும்.

பார்க்க : உபாகமம் 6 : 16, 8 : 3;

ஐஐ இராஜாக்கள் : 17 : 35-36;

சங்கீதம் 91 : 11-12;

லூக்கா 2-4 அதிகாரங்கள்

## அத்தியாயம் 5

# கிறிஸ்துவின் ஊழியம்

சோதனைகளை முடித்தபின்பு, சாத்தான், சிறிது காலம் இயேசுவை விட்டுச் சென்றான். அவ்வேளையில், தூதர்கள் அவருக்கு ஆகாரமளித்து ஊக்குவித்தார்கள். பிதாவின் ஆசீர்வாதம் அவரில் தங்கிற்று. பயங்கரமான சோதனைகளினால் வெல்ல முடியாத சாத்தான், இயேசுவின் ஊழிய நாட்களுக்காக காத்திருந்தான். இயேசுவை ஏற்றுக்கொள்ளாத, அவரை அழிக்க வகை தேடுகின்ற மக்களை தூண்டிவிட்டு தனது இலட்சியத்தை நிறைவேற்றிவிடலாம் என சாத்தான் இன்னமும் நம்பினான். தேவகுமாரனை மேற்கொள்ள முடியாத ஆதங்கத்தில் சாத்தானும் அவனுடைய தூதர்களும் கூடி ஆலோசித்தார்கள். அதிக தந்திர யுக்திகளை கையாண்டு, உலக இரட்சகரைக் குறித்த விசுவாசத்தை அழித்து, மக்களின் அவநம்பிக்கையை தூண்டி, இயேசுவின் ஊழியத்தை சோர்வடையச் செய்வேண்டுமென, அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. யூதர்கள், தங்களது சடங்குகளிலும், பலி ஆராதனைகளிலும் எவ்வளவு துல்லியமாக இருந்து வந்தாலும் தீர்க்கத்தரிசனங்களினாலும், அவைகளின் நிறைவேறுதல் இவ்வுலகில் தோன்ற இருக்கும் மகா அரசனின் மூலமாகத்தான் இருக்கும் என்கிற செய்தியினாலும், அவர்களை மறைத்துவிட முடியும் என்பதை சாத்தான் உணர்ந்திருந்தான்.

இயேசுவின் ஊழிய நாட்களிலே, மனிதரின் அவிசுவாசம், வெறுப்பு, மற்றும் அலட்சியத்தை சாத்தானும் அவனுடைய தூதர்களும் சேர்ந்து உற்சாகப்படுத்தி வந்ததை நான் கண்டேன். மனிதரின் பாவங்களை இயேசு, சுற்றி காட்டியபோது, பலருக்கு மிகுந்த கோபம் எழும்பிற்று. இதனை பயன்படுத்தி, இயேசுவின் ஜீவனை அழிக்க புறப்படும்படி சாத்தான்

அவர்களை ஏவினான். ஒருமுறை, இயேசுவை கல்லெறிய பார்த்தார்கள். தேவ தூதர்கள் அவரைக்காத்து, மூர்க்கவெறி பிடித்த கும்பலில் இருந்து. பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச்சென்றார்கள். மீண்டும் சத்தியமானது அவரது பரிசுத்த உதடுகளிலிருந்து ஒழுகியபோது, மலையின் மேலிருந்து கிழே தள்ளிவிட எத்தனித்தார்கள். அப்பொழுது, அவர்களிடையே எழுந்த சர்ச்சையின்போது, தேவதூதர்கள் இயேசுவை அக்கூட்டத்தின் விழியாகவே அவரை பாதுகாப்பன ஒரு இடத்திற்கு அழைத்துச்சென்றார்கள்.

இம்மாபெறும் மீட்பின் திட்டம் தோற்றுவிடும் என சாத்தான் இன்னமும் விரும்பினான். தனக்கு உண்டான பலம் எல்லாவற்றையும் உபயோகித்து, மனிதரின் இதயங்களை கடினபடுத்தி, அவர்களின் உணர்வுகளை கசப்பாக்கினான் துன்பங்களின். இயேசுவை தேவ குமாரன் என்று ஏற்றுக்கொள்பவர் மிக சொற்பமாய் இருக்க வேண்டும் என்றும், அதனை பார்க்கும் இயேசு, இச்சொற்ப பேருக்காக இத்தனை திரளான பாடுகளும், உயிர் தியாகமும் அவசியம் தானா என எண்ணி, இத்திட்டத்தை அவர் கைவிடவேண்டும் என்றும் சாத்தான் விரும்பினான். ஆகிலும், இருவர் மாத்திரம் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து, பாவத்திலிருந்து தங்கள் ஆத்துமாக்களை தப்புவிக்க வாஞ்சையாய் இருப்பார்களாகின், அவ்விருவருக்காக இயேசு திட்டத்தை நிறைவேற்ற வாஞ்சையாக இருந்தார் என்பதை நான் கண்டேன்.

துன்பங்களின் அதிகாரியாகிய சாத்தானின் பிடியிலிருந்து மக்களை விடுவிப்பதின் மூலம் இயேசு தனது ஊழியத்தை தொடங்கினார். பிசாசின் பொல்லாத வல்லமையினால் தவித்தவர்களை சுகபடுத்தினார். நோய்களை குணபடுத்தி, ஊனர்கள் துள்ளி குதித்து தேவனை மகிமைபடுத்தும் அளவிற்கு சுகத்தை அளித்தார். குருடர்களுக்கு பார்வையை தந்து, அநேகாண்டாய் பாடு அனுபவித்தவர்களை விடுவித்தார். பெலவீனமானவர்களை தனது இரக்கம் நிறைந்த வார்த்தை களினால் பெலபடுத்தினார். மரித்தோரை எழுப்பி, அவர்கள் தேவனை துதிக்கச் செய்தார் அவரை விசுவாசித்த அனைவருக்கும் தனது வல்லமையை காண்பித்தார்.

கிறிஸ்துவின் வாழ்க்கை, தயை நிறைந்ததாகவும், இரக்கம் நிறைந்ததாயும், அன்பு கொண்டதாயும் இருந்தது. அவனிடத்தில் வருவோரின் பாடுகளை தீர்க்க எப்பொழுதும் வாஞ்சையுள்ள வராயிருந்தார். திரளான ஜனங்கள் அவருடைய வல்லமையை உணர்ந்தார்கள். ஆகிலும், தாழ்மையை தரித்த போதகரை ஏற்றுக் கொள்ள வெட்கப்பட்டார்கள். ஆட்சியாளர்கள் இயேசுவை விசுவாசியாததனால் , அவேரோடு சேர்ந்து பாடனுபவிக்க எவரும் முன் வரவில்லை. அவர் துக்கம் நிறைந்தவரும், பாடுகளை சகிப்பவருமாயிருந்தார். வெகு சிலரே இத்தகைய கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள். பலர், இவ்வுலகம் தரக்கூடிய பெருமையை அனுபவிக்க துடித்தார்கள், அநேகர் தேவ குமாரனை பின்பற்றினார்கள், அவருடைய போதனைகளை கவனித்தார்கள், சிறந்த பொருளடக்கத்தை அவரது தூதர்கள் பெற்றிருந்தாலும், மிக எளிய மனிதனும் புரிந்து கெள்ளக்கூடிய அளவிலேயே அது இருந்தது.

சாத்தானும் அவனுடைய சகாக்களும் மிக சுறுசுறுப்பாக இயங்கினார்கள், யூதர்களின் உள்ளங்களை இருளடையச் செய்தார்கள். இயேசுவின் உயிரை பறிக்கும்படி, மதத் தலைவர்களை, சாத்தான், எழுப்பிவிட்டான். இயேசுவை தங்களிடம் கொண்டு வரும்படி ஆட்களை அனுப்பினார்கள். அவர்கள் இயேசு இருந்த இடத்திற்கு வந்தபோது, பிரமித்தார்கள். அவர் பெலவீனர்களோடு அன்பாகவும், இளகிய மனதோடும் பேசினார். அஃதோடு, இயேசு பிசாசின் பிடியிலிருந்து சிலரை அதிகாரத்தோடு காப்பாற்றியதையும் அவர்கள் கண்டார்கள். அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட ஞான வசனங்களை கேட்ட அதிகாரிகள், ஈர்க்கப்பட்டார்கள். அவர்கள் கைகளை அவர் மீது வைக்கக்கூடாமல் போனது. அவர்கள் திரும்பி வந்தபோது, இயேசு அவர்களோடு வரவில்லை. ஆசிரியரும், மூப்பர்களும் இதனை வினவியபோது, தாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்து சொன்னார்கள். இம்மனிதனைப் போல எம்மனிதனும் பேசியதில்லை" என சாட்சி அளித்தார்கள்.

அநேகர் இயேசுவை நம்பினார்கள். ஆனால் வெளியரங்கமாய் அறிவிக்க பயந்தார்கள். தேவனுக்கு பய்ப்படுவதைக் காட்டிலும் அதிகமாக மனிதனின் நிபந்தனைகளுக்கு மிகவும் பயந்தார்கள்.

இதுவரை சாத்தானின் வெறுப்பும், தந்திரங்களும், மீட்பின் திட்டத்தை உடைத்தெறிய முடியாமல் தவித்தது. இயேசு இவ்வுலகிற்கு வந்ததன் பிரதான நோக்கம் நிறைவேறவேண்டிய காலம் நெருங்கிற்று. சாத்தான் தனது தூதர்களுடன் கலந்தாலோசித்தான் . கிறிஸ்துவின் சொந்த ஜனங்களையே அவருக்கு எதிராக எழுப்பி, அவருடைய இரத்தத்தின் மீது வெறியடையச் செய்து. அவர் மீது கொடூரத்தையும், அவமானத்தையும் சுமத்தும்படி அவர்களை தூண்டிவிட்டான். இயேசு இத்தகைய அவமானத்தை ஏற்றுக்கொள்ளாமல், தமது தாழ்மையையும், சாந்தத்தையும் புறக்கணித்து விடுவார் என்று சாத்தான் யோசித்துக் கொண்டிருந்தான்.

இவ்விதமாக, சாத்தான் தனது திட்டங்களை வகுத்து கொண்டிருந்தபோது, இயேசு தனது சீடர்களிடம் தான் கடந்து செல்ல வேண்டிய பாடுகளை குறித்து விவரித்தார். அவர் மரிக்க வேண்டும் என்றும், மூன்றாம் நாளிலே அவர் உயிர்த்தெழுவார் என்றும் விளக்கினார். ஆனால் சீடர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர்களால் அதனை ஜீரனித்துக் கொள்ள முடியாமல் போயிற்று.

பார்க்க : லூக்கா 4:29; யோவான் 7: 45-48; 8: 59

அத்தியாயம் 6

# மறுரூபமடைதல்

இயேசுவின் மறுரூபமடைதலின் அனுபவத்தின் மூலமாக,

சீடர்களின் விசுவாசம் மிகவும் திடப்பட்டதை நான் கண்டேன் இயேசுதான் வாக்குத்தத்தம் செய்யப் பட்ட மேசியா என்பதற்கு திடமான சாட்சியை அளிக்க தேவன் சித்தம் கொண்டார். இதனிமித்தம். மானிடர் தங்களது துயரங்களின் மத்தியிலும் ஏமாற்றங்களின் நடுவிலும் அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை முற்றிலும் துறந்து விட அவசியமில்லை. இயேசு மறுரூபமான போது மோசேயும் எலியாவும் அவரோடே பேசும்படியாக பிதாவானவர் அனுப்பி வைத்தார். இப்பணியை செய்வதற்காக தமது தூதர்களை அனுப்பாமல், கர்த்தர், இவ்வுலகின் பாடுகளை ருசித்திருந்த இருவரை தெரிந்து கொண்டார். அவ்வேளையில், இயேசுவின் மிக நெருக்கமான சீடர்கள் மாத்திரமே இந்த மகிமையின் காட்சியை காண அனுமதிக்கப்பட்டார்கள்.

எலியா தேவனோடு நடந்தவர். அவருடைய ஊழியம் மனரம்மியமானதாக இருக்கவில்லை. அவர் மூலமாக, தேவன், பாவத்தை கண்டித்தார். தேவ தீர்க்கத்தரிசியான இவர். தனது ஜீவனை காத்துக்கொள்ளும்படி இடம் மாறிக்கொண்டே இருந்தார்.

காட்டு விலங்கைப் போல வேட்டையாடப் பட்ட இவரை தேவன் மறுரூபமாக்கி, பரத்திற்கு எடுத்துக்கொண்டார்.

மோசே தேவனால் கணப்படுத்தப்பட்டவன். அவருக்கு முன்பாக வாழ்ந்த எவரும் அவரைப் போல இருந்ததில்லை. ஒரு மனிதன் தன் நண்பனிடம் பேசுவதை போல, தேவனோடு முகமுகமாய் பேசிய வாய்ப்பை மோசே பெற்றிருந்தார். பரம பிதாவை மறைத்திருந்த பிரகாசமான வெளிச்சத்தையும், உன்னத மகிமையையும் கண்டிருந்தார். இஸ்வரவேலருக்கு மத்தியஸ்தராக இருந்து, அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்கு தேவன் அவரை உபயோகப்படுத்தினார். இஸ்ரவேலர்களின் அவிசுவாசம், முறுமுறுத்தல், பாவங்கள் ஆகியவற்றிற்கு எதிராக தேவனின் கோபம் மூண்டபோது, மோசே இஸ்ரவேலர்கள் மீது வைத்திருந்த அன்பு - சோதிக்கப்பட்டது. இஸ்ரவேலர்களை அழித்துப்போடுவதற்காக, மோசே, அவர்களை ஒப்புக்கொடுத்தால், அவரை பெரிய ஜாதியாக்குவதாக தேவன் வாக்குத்தத்தம் கொடுத்த நிலையிலும் அவர்களுக்காக தேவனிடத்தில் ஊக்கத்துடன் வேண்டிக்கொண்டான். தேவனின் கடுங்கோபத்தை திசை திருப்பி, இஸ்ரவேலரின் பாவங்களை மன்னிக்கும்படி வின்னப்பித்த மோசே, அப்படி அவர்களை மன்னியாத பட்சத்தில், தனது பெயரை ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கி போடும்படி வேண்டினான்.

தண்ணீர் கிடைக்காத, சூழ்நிலையில், இஸ்ரவேலர்கள், தேவனுக்கும் மேசேக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். கர்த்தர் அவர்கள் முறுமுறுப்பை கேட்டு, மோசேயை போய் கன்மலையை அடித்து, அதிலிருந்து புறப்படுகின்ற தண்ணீரை ஜனங்கள் குடிக்கும்படி உத்தரவிட்டார். மோசேயோ எரிச்சலில் கன்மலையை அடித்தார். இச்செய்கையின் மூலமாக தேவனுக்கு கிடைக்கவேண்டிய மேன்மையை, மோசே, தனக்கே எடுத்துக்

கொண்டான். இதினிமித்தமாக தேவன் விசனமடைந்து, வாக்குத்தம் பண்ண பட்டிருந்த தேசத்தினுள் மோசே பிரவேசிக்கக்கூடாது என கட்டளையிட்டார்.

மோசே மலையிலிருந்து இறங்கியபோது, சாட்சிப் பலகைகள் இரண்டும் அவன் கையிலிருந்தது. அப்பொழுது அவன் இஸ்ரவேலர்கள் பொற்கன்றுக் குட்டியை தொழுதுக் கொண்டிருந்ததை கண்டு, கடுங்கோபங்கொண்டு, கையிலிருந்த இரண்டு சாட்சிப் பலகைகளையும் மலை அடியிலே எறிந்து உடைத்துப் போட்டான். இதனால் மோசே ஒரு பாவமும் செய்யவில்லை என்று நான் கண்டேன், தேவனுக்காக அவன் கோபங்கொண்டான் ஆகிலும், இதயத்தின் இயற்கையான உணர்வுகளுக்கு இடம் கொடுத்தபடியால், தேவனுக்கு கிட்டவேண்டிய மகிமையை, தான் பெற்றகொண்டான் என்று ஆயிற்று, ஆகையால், வாக்குத்தத்தம் செய்யப்பட தேசத்தினுள் அவன் நுழைய இயலாமல் போனது.

மோசே தேவனை விசன படுத்தியது சாத்தானுக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. இந்தப் படியே, தேவகுமாரனையும் தான் வீழ்த்தப்போவதாக தனது தூதர்களிடம் சூளுரைத்துக் கொண்டிருந்தான். இந்த மீறுதலினால் மோசே, சாத்தானின் வல்லமைக்கு கீழே வந்தான். மோசே மரணத்தின் வழியாக கடந்து போனதை நான் கண்டேன். ஆகிலும், கலங்கமடைவதற்கு முன்பே மீகாவேல் அவனுக்கு உயிரைக் கொடுத்தார். மோசேயின் சரீரம் தனக்கே சொந்தம் என்று சாத்தான் எண்ணினான். மீகாவேலோ மோசேயை உயிரடையச் செய்து பரத்திற்கு எடுத்துச் சென்றார். ஏமாற்றமடைந்த சாத்தான், தேவனிடத்தில் மோசேயின் சரீரம் தன்னுடையது என வாதாடினான். இயேசுவோ, சாத்தானை நிந்தியாமல், அவனை தன் பிதாவிடம் திருப்பி, "கர்த்தர் நீதியை நடப்பிக்கட்டும்" என்று கூறினார்.

"இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிப்பார்ப்பதில்லை, என்று இயேசு தமது சீடர்களிடம் சொன்னார். அவருடைய மறுரூபமடையும் சம்பவத்தில் இத்தீர்க்கத்தரிசனம் நிறைவேறியது. இயேசுவின் முகத்தோற்றத்தில் மாறுதல் ஏற்பட்டு, சூரியனைப் போல பிரகாசித்தது. அவருடைய வஸ்திரம் வெண்மையாகவும் பிரகாசமாகவும் இருந்தது. இயேசுவின் இரண்டாம் வருகையின் போது மரணத்திலிருந்து எழுப்பப்பட இருப்பவர்களின் பிரதிநிதியாக மோசே வந்திருந்தான். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, மரணத்தைக் காணாமல் சாவாமையைப் பெற்றுக்கொள்ள இருப்பவர்களின் பிரதிநிதியாக எலியாவும் வந்திருந்தான். இயேசுவின் மாட்சிமையை சீடர்கள் பிரமிப்போடும், அச்சத்தோடும் பார்த்துக்கொண்டிருந்த வேளையில், தேவன், தமது கம்பீரச் சத்தத்தில், "இவர் என்னுடைய நேசக்குமாரன், இவருக்கு செவிக்கொடுங்கள்" என்று சொன்னார்

.பார்க்க : யாத்திராகமம் 32

எண்ணாகமம் 20:7-12

உபாகமம் 34:5

ஐஐ இராஜாக்கள் 2:11

மாற்கு 9:1-13

யூதா 9

அத்தியாயம் 7

# கிறிஸ்துவின் காட்டிக்கொடுத்தல்

பஸ்கா பண்டிகை பந்தியில் தமது சீடர்களோடு இயேசு புசித்த வேளைக்கு நான் எடுத்துச் செல்லப்பட்டேன் சாத்தான் யூதாசை வஞ்சித்திருந்தான். யூதாஸ் சிற்றின்பங்களில் லயித்திருந்தான். சாத்தானோ, அவனை, கிறிஸ்துவின் மெய்யான சீடன் என்று எண்ண வைத்திருந்தான். அவன், இயேசுவை மேசியா என்று ஏற்று, அவருடைய மகத்தான கிரியைகளைக்கண்டு, அவருடைய ஊழியத்தில் வெகுவாக பங்கு கொண்டிருந்த போதிலும், பேராசை அவனை பிடித்திருந்தது. பணத்தை மிகவும் நேசித்தான். இயேசுவின் மீது ஊற்றப்பட்ட தைலத்தின் விலையை குறித்து கோபப்பட்டான். மரியாள் கர்த்தரை நேசித்தாள். அவளுடைய திரளான பாவங்களை இயேசு மன்னித்திருந்தார். அவளது அன்பான சகோதரனை உயிரோடு எழுப்பியிருந்தார். எனவே, இயேசுவின் மீது ஊற்றப்படுவதற்கு எதுவும் தகுதி நிறைந்ததாக அவள் கருதவில்லை. யூதாசோ, தனது பணத்தாசையை மறைப்பதற்காக, அத்தைலத்தை விற்று ஏழைகளுக்கு கொடுத்திருக்கலாமே என்று கூறினான். ஏழைகள் மீது எவ்வித பாசத்தையும் அவன் வைத்திருக்கவில்லை. சுயநலம் நிறைந்த அவன், தன் வசம் ஒப்படைக்கப்பட்ட பல வேலைகளில் தனக்கு ஆதாயம் தேடிக்கொண்டான். இயேசுவின் தேவைகளில் கவனமே காட்டாத யூதாஸ், பல நேரங்களில் ஏழைகளை குறித்துப் பேசினான். தனது பேராசை எண்ணங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு, ஏழைகளின் மீது அக்கறை கெண்டவன் போல் காட்டிக்கொண்டான். மரியாளின் தயாள குணத்தின் மீது யூதாசு கடிந்துக்கொண்டது, அவனது இக்குணத்தை தெளிவு படுத்தியது.

யூதாசின் இதயத்தில் சாத்தான் நுழைவதற்கு தக்க வழி உண்டாயிற்று. யூதர்கள் இயேசுவை வெறுத்தார்கள்; ஆனாலும் அவருடைய போதனைகளை கேட்பதற்கும், அவருடைய மகத்தான கிரியைகளை காண்பதற்கும் திரளான ஜனங்கள் வந்தார்கள். வாஞ்சையோடும், ஆவலுடனும் இயேசுவை பார்க்கவும், அவருடைய போதனைகளை கேட்கவும் திரண்டு வந்த கூட்டம், தவறாமல், பிரதான ஆசாரியரையும், மூப்பர்களையும் கவர்ந்திழுத்தது. அநேக தலைவர்கள் இயேசுவை விசுவாசித்தார்கள். ஆனால், யூத மத அமைப்பிலிருந்து நீக்கப்பட்டு விடுவார்கள் என்கிற பயத்தினால், அதனை வெளிக்காட்ட

பயந்தார்கள். ஜனங்களின் கவனத்தை இயேசுவிடமிருந்து திருப்புவதற்காக ஏதாவது செய்யவேண்டும் என ஆசாரியர்களும் தலைவர்களும் யோசித்தார்கள். அனைத்து மக்களும் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்துவிடுவார்கள் என பயந்தார்கள். அவர்களுடைய பாதுகாப்பே கேள்விக் குறியாக இருந்தது. தங்களுடைய பதவியை இழக்கவேண்டும் அல்லது இயேசுவை கொலை செய்ய வேண்டும். அப்படியே இயேசுவை கொலை செய்தாலும், அவருடைய வல்லமையின் "வாழும் அத்தாட்சிகள்" தொடர்ந்து இருப்பார்களே! இயேசு லாசருவை மரணத்திலிருந்து எழுப்பினார். இயேசுவின் வல்லமையைக் குறித்து லாசரு சாட்சி கொடுப்பானே என்று பயந்தார்கள். மரணத்திலிருந்து எழுப்பப்பட்ட லாசருவைப் பார்க்க அநேகர் வந்ததினால், லாசருவையும் கொலைச் செய்ய திட்டமிட்டார்கள். அதன் பின் ஜனங்களின் கவனத்தை திருப்பி, மனித தத்துவங்களையும், சம்பிரதாய ஐதீகங்களையும் கவனிக்க வைக்க வேண்டும் என தீர்மானித்தார்கள். ஜனங்களின் மத்தியிலிருக்கும்போது இயேசுவை பிடித்தால், கல்லெறியப்படுவார்கள் என்பதை உணர்ந்த ஆசாரியர்கள், அவர் தனித்திருக்கும் போது பிடிக்க முடிவெடுத்தார்கள்.

சில வெள்ளிக் காசுகளுக்கு இயேசுவை பெற்றுக்கொள்ள ஆர்வமாக ஆசாரியர்கள் இருப்பதை யூதாசு அறிந்திருந்தான். அவனுடைய பண ஆசை, இயேசுவை, அவருடைய எதிரிகளிடம் காட்டிக்கொடுக்க அவனை ஏவியது. சாத்தான், யூதாசு மூலமாக துரிதமாக வேலை செய்துக் கொண்டு இருந்தான். யூதாசின் நிமித்தமாக, அன்றிரவு, யாவருமே வருந்தவேண்டும் என்பதை இயேசு பாரத்தோடு சீடர்களிடம் எடுத்துரைத்தார். பேதுரு அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தான். ஆனால் இயேசுவோ அவனிடம், "கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து", என்று கூறினார்.

பின்பு, இயேசு தனது சீடர்களோடு தோட்டத்தில் இருப்பதை நான் கண்டேன். சோதனைகளில் பிரவேசியாதபடி ஜாக்கிரதையாக இருந்து ஜெபிக்கும்படி இயேசு சீடர்களிடம் வேண்டிக்கொண்டார். அவர்களுடைய விசுவாசம் சோதிக்கப்படும் என்பதையும், நம்பிக்கை முறிந்துபோகும் என்பதையும், இயேசு அறிந்திருந்தபடியால், அவர்களை விழித்திருந்து ஜெபிக்கச் சொன்னார். மிகுந்த பாரத்தோடும் கண்ணீரோடும் இயேசு ஜெபித்தார். "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது", என்று ஜெபித்தார். தேவ குமாரன் மிகுந்த விசனத்தோடு ஜெபித்தார். குருதியைப் போல பெரிய வியர்வைத்துளிகள் அவருடைய முகத்திலிருந்து தோன்றி, நிலத்தில் விழுந்தன. இக்காட்சியை தூதர்கள் பார்த்து கொண்டிருந்தார்கள். ஆனாலும் ஒரு தூதன் மாத்திரமே இயேசுவுக்கு பணிவிடை செய்யும்படியாக நியமிக்கப்பட்டிருந்தான். பரலோகத்தின் தூதர்கள் தங்களுடைய கீரிடங்களையும், வாத்தியங்களையும் இறக்கி வைத்துவிட்டு இக்காட்சியை அமைதியாக கவனித்தார்கள். பரத்தில் மகிழ்ச்சி இல்லை. சூதவகுமாரனை

சூழ்ந்து கொள்ள விரும்பினார்கள். அதிகாரத்திலிருந்த தூதர்கள் அவர்களை தடுத்துவிட்டார்கள். திட்டமிடப்பட்ட காரியம் நிறைவேறியாகவேண்டும்.

ஜெபித்த பின்பு, சீடர்களை பார்ப்பதற்காக இயேசு வந்தார். அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அத்துயரமான வேளையிலும், தனது சீடர்களின் ஜெபமும், ஆறுதலும் இல்லாதிருந்தது. சற்று நேரத்திற்கு முன் மிகுந்த ஆர்வமுடனிருந்த பேதுரு இப்பொழுது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். இயேசு பேதுருவை நோக்கி, "சீமோனே, நித்திரைபண்ணுகிறாயா? ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக்கூடாதா?" என வினவினார். யூதாஸ் தனது கூட்டத்தோடு இயேசுவை பிடிக்கவந்த வேளையில், இயேசு, மூன்று முறை ஜெபித்திருந்தார். யூதாஸ் வழக்கம்போல இயேசுவை வாழ்த்தினான். அக்கூட்டத்தினர் அவரை சூழ்ந்தபோது இயேசு, தனது வல்லமையை வெளிப்படுத்தி, "யாரைத் தேடுகிறீர்கள்? நான்தான்" என்று கூறினார். அவர்கள், இயேசு இப்படி சொன்னவுடனே, பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். தமது வல்லமையை அவர்கள் அறியும்படியாகவும், தம்மால் அவர்களிடமிருந்து தப்பிக்க முடியும் என்றும் அவர்களுக்கு காட்டினார்.

கோல்களோடும் பட்டயங்களோடும் வந்திருந்த கூட்டம் இத்தனை துரிதமாக விழுந்ததை கண்ட சீடர்களுக்கு புது நம்பிக்கை. உண்டாயிற்று, மீண்டும் எழுந்து, இயேசுவை, அக்கூட்டத்தினர் சூழ்ந்தபோது, பேதுரு பட்டயத்தை உருவி ஒருவன் காதை வெட்டினான். இயேசு அவனை கடிந்து கொண்டு, "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?" என வினவினார். இவ்வார்த்தைகளை அவர் கூறியபோது, தூதர்களின் முகக்குறி உயிரடைந்ததை கண்டேன். தங்கள் தளபதியை சூழ்ந்து, அக்கூட்டத்திலிருந்து அவரை காப்பாற்றிவிட வேண்டும் என்று ஆசித்தார்கள். அவ்வேளையில் இயேசு, "அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும்?" என்றார். நம்பிக்கை கொண்டிருந்த சீடர்களின் இதயங்கள் மீண்டும் நம்பிக்கையிழந்து, மிகுந்த ஏமாற்றமடைந்தது.

தங்களது ஜீவனை காக்கும்படியாக, சீடர்கள், ஒருவர் ஒரு பக்கமாகவும் மற்றொருவர் வேறு பக்கமாகவும் சிதறி ஓடினார்கள். இயேசு தனித்து நின்றார். சாத்தான் ஜெயித்து நிற்பதை போல இருந்தது!! தேவதூதர்களுக்கோ எத்தகைய வருத்தம்!! அநேக பரிசுத்த தூதர்கள், குழுக்களாக பிரிந்து, இக்காட்சியை காண அனுப்பப்பட்டார்கள். மனிதர்கள், அவர்படும் கொடும்பாடுகள் அனைத்தையும் மெய்யாக அனுபவித்து காணவேண்டியதால், இயேசுவின் ஒவ்வொரு கஷ்டங்களையும் அவர்மீது சுமத்தப்படவிருக்கும் ஒவ்வொரு அவமானத்தையும் கொடுமையையும் தூதர்கள் குறித்து வைக்கும்படியாக அனுப்பப்பட்டார்கள்.

பார்க்க : மத்தேயு 26 : 1-56; மாற்கு 14 : 1-52;

லூக்கா 22 : 1-46; யோவான் 11; 12 ; 1-11;

18 : 1-12

அத்தியாயம் 8

# கிறிஸ்துவின் விசாரனை

தூதர்கள், பரலோகத்திலிருந்து கிளம்பியபோது, தங்கள் ஜொலிக்கும் கிரீடங்களை இறக்கி வைத்தார்கள். தங்களுடைய அதிகாரி முட்கிரீடத்தை அணிந்திருக்கும் வேளையில், தங்களது பொற்கிரீடங்களை அவர்கள் அணிய இயலாதல்லவா? சாத்தானும் அவனுடைய தூதர்களும் அந்த விசாரணை அறையிலே மனிதத்தன்மையையும், அனுதாபத்தையும் அழித்துவிட வேண்டு மென்று சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தார்கள். மனித இயல்பினால் தாங்க இயலாத விதத்தில் அவதூறான சொற்களினாலும், அவமானத்தினாலும் இயேசுவை தாக்குமாறு பிரதான ஆசாரியர்களையும், மூப்பர்களையும், சாத்தான் தூண்டிவிட்டான். இத்தகைய பாடுகளின் நிமித்தமாக, இயேசு தனது அதிருப்தியை காட்டுவார் என்றும், முனுமுனுப்பார் என்றும் சாத்தான் எதிர்பார்த்தான். அல்லது, தமது வல்லமையை வெளிக்காட்டி, இக்கொடிய கும்பலிலிருந்து தப்பிவிடுவார் என்றும் எதிர்பார்த்தான் இஃது இரண்டில் எது நடந்தாலும், மீட்பின் திட்டம் தோல்வியடைந்துவிடும் என்று சாத்தான் எதிர்பார்த்தான்.

இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட பின்பு, பேதுரு இயேசுவை தொடர்ந்து வந்தான், இயேசுவை என்ன செய்கிறார்கள் என்பதை பார்ப்பதில் மிகவும் ஆவல் கொண்டிருந்தான். இயேசுவின் சீடர்களில் அவனும் ஒருவன் என யாரோ கூறிய போது, பேதுரு அதை மறுத்தான். தனது ஜீவனைக் குறித்து அவன் பயந்தான். எனவே, சீடர்களில் அவனும் ஒருவன், என்ற குற்றச்சாட்டு எழுந்த போது, இயேசுவை தனக்கு தெரியவே தெரியாது என்று சாதித்தான். சீடர்கள் வாக்கில் உண்மையுள்ளவர்கள். எனப்பெயர் பெற்றிருந்தார்கள். இதனை பயன்படுத்தி, மூன்றாம் முறையாகவும் இயேசுவை தனக்கு தெரியவே தெரியாது என்று சத்தியம் பண்ணினான். அச்சமயத்தில், சற்றே தூரத்தில் நின்றுக் கொண்டிருந்த இயேசு அவனை வருத்தத்தோடு பார்த்தார். அப்பொழுது, இயேசு மேல் அறையில் கூறிய வார்த்தைகளும் அதற்கு அவன் அருளிய மறுஉத்தரவும் நினைவிற்கு வந்தன. இயேசுவை மறுதலித்த பேதுரு, அவர் பார்த்த பார்வையில் உருகி, மனம்மாறினான். மனங்கசந்து அழுது, தனது பாவத்தை அறிக்கை செய்து, திருந்தி, பிறரை பெலப்படுத்தும்படியாக ஆயத்தமானான். ஜனக்கூட்டம், இயேசுவின் இரத்தத்திற்காக கூக்குரலிட்டது. அவரை கொடூரமாக வாரினால் அடித்து, ஒரு பழைய சிவப்பு அங்கியை தரித்து, சிரசில் முட்கிரீடத்தை அணிவித்தார்கள். அவருடைய கரத்தில் ஒரு நாணலை கொடுத்து, கேலியாக அவரை பணிந்து, யூதரின் ராஜாவே, வாழ்க எனக் கூறி வணங்கினார்கள். பின்பு நாணலை பிடுங்கி, தலையில் அடித்து, முட்களினால் தலை குத்தப்பட்டு, குருதி முகத்தில் தாடியின் வழியாக

ஓடியதைக் கண்டேன்.

தேவதூதர்களுக்கு இஃது சகிக்கமுடியாத ஒரு காட்சியாக இருந்தது. இயேசுவை அவர்கள் கைகளிலிருந்து தப்புவிக்க அவர்கள் வாஞ்சித்தார்கள். ஆனால், அதிகார தூதர்கள் அதனை தடுத்து, மனிதன் சார்பில் கொடுக்கப்படவேண்டிய பிரதிக்கிரயம் அது என்றும், இயேசுவின் மரணத்தினால் அது முடியுமென்றும் அறிவித்தார்கள். தூதர்கள் தனது இழிவான அனுபவத்தை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். அத்திரளான கூட்டத்தையும் வலிமையிழக்கச் செய்ய பரலோகத்தின் மிக பெலவீனமான தூதனுக்கே வல்லமையிருந்தது. அத்தகைய விடுதலையை தான் விரும்பினால், அதை உடனே தூதர்கள் செயலாற்றுவார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆகிலும், பாவிகளின் கரங்களில் அநேக பாடுகளை இயேசு அனுபவிப்பது, மீட்புத்திட்டத்தின் மிகப் பெரிய தேவையாகும்.

தரக்குறைவான ஏச்சுகளை வீசி, கோபத்தின் கொந்தளிப்பில் இருந்த ஜனக்கூட்டத்தின் மத்தியில் இயேசு சாந்தமாகவும், தாழ்மையாகவும் நின்று கொண்டிருந்தார். கதிரவனை காட்டிலும் பிரகாசமான, தேவ நகரத்தையே ஒளிமயமாக்கிய இயேசுவின் அற்புத முதத்தின் மீது எச்சிலுமிழ்ந்தார்கள். ஆகிலும் தன்னை துன்பப்படுத்தியவர்களின் மீது தமதுகோபக்கணைகளை அவர் வீசவில்லை. சாந்தமாக தனது கரத்தை உயர்த்தி, எச்சிலை துடைத்துவிட்டார். ஒரு பழைய அங்கியை வைத்து அவருடைய முகத்தை மூடி, முகத்தில் அறைந்து, "உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால் சொல்", என்று கூவினார்கள். தூதர்களிடையே மாபெரும் கோபம் எழும்பிற்று இயேசுவை உடனடியாக விடுவித்திருப்பார்கள். அவர்களுடைய அதிகார தூதன் அவர்களை தடுத்தான்.

சற்றே தைரியமடைந்தவர்களாக, தூதர்கள், இயேசு நின்ற அறையினுள் பிரவேசித்தார்கள். அவர், தமது வல்லமையை உபயோகித்து, தமது எதிராளிகளின் கரத்திலிருந்து தம்மை விடுவித்து, தம்மை கொடுமைப்படுத்திய நபர்களை தண்டிப்பார் என தூதர்கள் எதிர்பார்த்தார்கள். அவ்விசாரணையின் போது நடந்த ஒவ்வொரு காட்சியும், தூதர்களின் நம்பிக்கையையும் ஏமாற்றத்தையும் மாறி மாறி தூண்டிக்கொண்டிருந்தது. ஆகிலும், இயேசு மறுரூபமாக்கப்பட்ட மலையில் எழுப்பிய சத்தத்தையும், அவரை தாங்கிய மகிமையையும் கண்டிருந்ததினால், இவர் மெய்யாகவே தேவகுமாரன்தான் என்பதை தைரியமாக விசுவாசித்தார்கள். இயேசு செய்திருந்த அநேக அற்புதங்களை தூதர்கள் எண்ணிப் பார்த்தார்கள் - சுகவீனர்களை சுகப்படுத்தியதையும், குருடர்களின் கண்களை திறந்ததையும், கேளாத செவிகளை கேட்கச் செய்ததையும், பிசாசுகளை விரட்டியதையும், மரணத்திலிருந்து எழுப்பியதையும் மனதில் கண்டார்கள். இத்தகைய வல்லமையைப்பெற்றிருந்த இயேசு, மரிக்கப்போகிறார் என்பதை நம்ப தவித்தார்கள். அவர் தமது வல்லமையை உபயோகித்து, சகல

அதிகாரத்தோடும், தம்மை சூழ்ந்திருந்த இரத்த-வெறி கும்பலை விரட்டியடிக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். சீடர்களும் அப்படியே, இயேசு தமது அதிகாரத்தின் மூலமாக, தான் யூதர்களின் அரசன் என்பதை நிலை நிறுத்த வேண்டும் என விரும்பினார்கள்.

இயேசுவை காட்டிக்கொடுத்த யூதாசு, தனது தவறை உணர்ந்து மன வியாகுலம் கொண்டான். இயேசுவின் அவமானங்களை கண்டபோது, தனது பாவத்தை உணர்ந்தான். இயேசுவைக் காட்டிலும் பணத்தை அவன் நேசித்தானே! தான் அழைத்து வந்த கூட்டத்தின் கையில் சிக்கி, இத்தனை இன்னல்களை அவர் அனுபவிப்பார் என்று அவன் நினைக்கவில்லை. இயேசு ஒரு அற்புதம் செய்து, அவர்கள் கைகளில் இருந்து தப்பித்துவிடுவார் என எண்ணினான். இயேசுவை, ஆலோசனை சங்கத்தில் நிறுத்தி, அவமானப்படுத்தி, அவதூறாக பேசியதை யூதாஸ் கண்டபோது, தன் குற்றத்தை ஆழமாக உணர்ந்தவனாக அக்கூட்டத்தின் மத்தியில் வந்து, "குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவம் செய்தேன்" என்று உரைத்தான். அவன் பெற்றிருந்த வெள்ளிக் காசுகளை அவர்களிடமே திருப்பித் தந்து, இயேசு குற்றமற்றவர் என்றும் அவரை விடுவிக்க வேண்டும் என்றும் வருந்தி வேண்டிக்கொண்டான். கோபமும், குழப்பமும் அந்த ஆசாரியர்களை சற்று நேரம் அமைதியாக்கின. இயேசுவை தங்களுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கும்படியாக, அவர்கள் இயேசுவின் சீடன் ஒருவனையே விலைக்கு வாங்கியிருந்தார்கள் என்கிற உண்மையை ஜனங்களிடமிருந்து மறைத்துவிட வேண்டுமென்று ஆசாரியர்கள் தவித்தார்கள். இயேசுவை திருடனைப்போல வேட்டையாடியதையும், இரகசியமாக அவரை கைது செய்ததையும் மறைத்துவிட வேண்டும் என்றும் விரும்பினார்கள். ஆனால், யூதாசின் உரத்த அறிக்கை அவர்களுடைய இரகசியத்தை அம்பலப்படுத்தியது. எனினும், இயேசு அவர்கள் பிடியிலிருந்தபடியால் யூதாசை, "எங்களுக்கென்ன, அது உன் பாடு" என்று சொல்லி விரட்டினார்கள். வேதனை மிகுந்தவனாக, யூதாஸ் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்தில் எறிந்துவிட்டு, புறப்பட்டுப்போய், நான்டுகொண்டு செத்தான்.

அக்கூட்டத்தில், இயேசுவின் மீது அனுதாபம் கொண்டவர்கள் அநேகர் இருந்தார்கள். ஆகிலும், இயேசு கடைப்பிடித்த மௌனம், அவர்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அத்தனை நிந்தைகள், அவமதிப்புகள் சூழ இருந்த போதும், அவருடைய முகச்சாயலில் எவ்வித கடுமையோ, குழப்பமோ தென்படவில்லை. அவருடைய தோற்றம் நேர்த்தியாகவும், பூரணமாகவும் இருந்தது. பார்வையாளர்கள் அவரை வியப்போடு பார்த்தனர். அவருடைய பூரண சாயலையும், அவரை விசாரித்துவந்த அதிகாரிகளுடைய சாயலையும் ஒப்பிட்டுப் பார்த்த பார்வையாளர்கள், இயேசுவிடம் உயரிய அரசக்களை இருப்பதையும், மற்றவர்களிடம் அது இல்லாததையும் கண்டார்கள். குற்றவாளியின் சின்னங்கள் எதையும் இயேசு பெற்றிருக்கவில்லை. அவருடைய முகம் உதாரகுணமுள்ளதாயும், தயை நிறைந்ததாயும், உயரிய ரகமாயும் இருந்தது. அவருடைய பொறுமையும், சகிப்புத்திறனும் மனிதரைப் போல் இல்லாதிருந்ததைக் கண்ட யாவரும் நடுங்கினார்கள். தேவச் சாயலைப் பெற்றிருந்ததால், ஏரோதும் பிலாத்துவும் கூட, இயேசுவைப் பார்த்து

கலங்கினார்கள்.

ஆரம்பத்திலிருந்தே, இயேசு குற்றமற்றவர் என்பதை பிலாத்து நன்கு உணர்ந்திருந்தான். அவர் முற்றிலும் களங்கமில்லாதவர் என நம்பினான். பிலாத்துவின் இத்தகைய சிந்தனைகளைக் கண்ட தூதர்கள், பிலாத்துவின் மனைவிக்கு கனவின் மூலமாக இச்செய்தியை வெளிப்படுத்தி, அதனையே பிலாத்துவிடம் கூறும்படி ஏவினார்கள். அவளும் உடனடியாக பிலாத்துவை அழைத்து, "நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன்" என்று சொன்னாள். இச்செய்தியை படித்த மாத்திரத்தில், பிலாத்து கலங்கி, உற்சாகமற்றுப் போனான். இக்காரியத்தில் தனது பங்கு ஒன்றும் இருக்காது என்பதை மட்டும் உறுதிசெய்தான். எனவே அவன், தண்ணீரை அள்ளி, கைகளைக் கழுவி, தான் குற்றமற்றவன் என்று சொல்லி, இயேசுவை அவர்கள் கையில் ஒப்புக் கொடுத்தான்.

ஏரோது எருசலேமில் இருப்பதை அறிந்த பிலாத்து, மகிழ்ந்து, இப்பிரச்சனையை அவனிடம் ஒப்படைத்துவிட்டு, தான் விலகிக்கொள்ள முடிவு செய்தான். அப்படியே இயேசுவையும், அவர் மிது குற்றம் சுமத்தியவர்களையும் ஏரோதிடத்திற்கு அனுப்பி வைத்தான். ஏரோதின் இருதயம் கடினப்பட்டிருந்தது. யோவான் ஸ்நானகனை அவன் கொலை செய்திருந்ததின் தாக்கம் இன்னமும் இருந்தது. இயேசுவின் அற்புதங்களைக் குறித்து கேள்விப் பட்டிருந்தபடியால். யோவான் உயிர்தெழுந்துவிட்டானோ என்கிற திகில், ஏரோதின் உள்ளத்தில் குடியிருந்தது. பிலாத்து இயேசுவை ஏரோதிடம் ஒப்படைத்தான். இச்செயலின் மூலமாக பிலாத்து, தன் அதிகாரத்தையும், நீதித்திறனையும் அங்கீகரித்துக்கொண்டதாக நினைத்து, ஏரோது நெகிழ்ந்து போனான். ஏரோதும் பிலாத்தும் எதிரிகளாக இருந்து, நண்பர்களானவர்கள். இயேசுவைக் கண்டதும் அவரிடமிருந்து பெரிய அற்புதங்களை எதிர்பார்த்து, ஏரோது சந்தோஷமடைந்தான். ஆகிலும், அவனுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது இயேசுவின் கடமையாக இருக்கவில்லை. அவருடைய அற்புதங்கள் வல்லமையும் பிறருடைய இரட்சிப்புக்காக பிரயோஜனப்படுத்தப்பட வேண்டுமே தவிர, தனது விடுதலைக்காக அல்ல என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

ஏரோது விடுத்த அநேக வினாக்களுக்கு இயேசு விடையளிக்கவில்லை. இம்மௌனத்தினால் எரிச்சலடைந்த ஏரோது, தனது போர்வீரர்களோடு சேர்ந்து இயேசுவை ஏளனம் செய்து, அவமானப் படுத்தினான். இயேசுவின் உயரிய தேவ தோற்றத்தைக் கண்டு பிரமித்த ஏரோது, அவரை குற்றப்படுத்த பயந்து, அவரை மீண்டும் பிலாத்துவிடமே அனுப்பி வைத்தான்.

சாத்தானும் அவனுடைய தூதர்களுமாக இணைந்து, பிலாத்துவை சோதித்து, அவனுடைய சொந்த அழிவிற்கே அவனை வழிநடத்தினார்கள். இயேசுவை குற்றப்படுத்தி, மூர்க்கமாக இருந்த மக்களிடம் கொலை செய்யப்படுவதற்காக கொடுக்காவிடில், பிலாத்து, தனது உலக கௌரவத்தையும், பதவியையும் இழக்க நேரிடும் என்று சாத்தான் கூறினான்.

அந்தப்படியே, தனது பதவியை தக்க வைத்துக்கொள்ளும் விதத்தில், இயேசுவின் மரணத்தை ஒப்புக்கொண்டான். இயேசுவின் இரத்தப்பழிக்கு தான் குற்றமற்றவன் என்று கூறி, அவரை ஜனங்களின் கையில் கொடுத்தான். அதற்கு ஜனங்களெல்லாரும், "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று கூறி அவரை பெற்றுக் கொண்டார்கள். ஆகிலும், பிலாத்து தப்பிவிடவில்லை. தனது நம்பிக்கையின்படி நடந்திருந்தால், பிலாத்து, இக்குற்றச்சாட்டிலிருந்து தப்பித்திருப்பான்.

இயேசுவின் விசாரனையும் தண்டனையும் அநேக உள்ளங்களை பாதித்து. அவருடைய உயிர்தெழுதலுக்குப் பின் எழ வேண்டிய அதிகமான கருத்துக்களும் தோன்ற துவங்கின. இயேசுவின் பாடுகளின் சமயங்களிலிருந்து விசுவாசம் வைக்கிற அநேகா் பிற்காலங்களில் திருச்சபையில் சேர்க்கப்படுவார்கள் என்பதும் உறுதியாயிற்று.

இத்தனைக் கொடிய பாதிப்புகளை ஏற்படுத்தியப் பின்பும், இயேசுவின் வாயிலிருந்து ஒரு சிறிய முறுமுறுப்பைக் கூட கொண்டுவர இயலாததினால், சாத்தான் பெருங்கோபங்கொண்டான். மனித சாயலை இயேசு ஏற்றிருந்தபோதிலும், தேவ வல்லமையைப் போல வலியைச் சகித்துக் கொள்ளும் பொறுமையை அவர் பெற்றிருந்ததையும், அதினிமித்தமாக, தமது பிதாவின் சித்தத்திற்கு புறம்பாக சற்றேனும் அவர் விலகவில்லை என்பதையும் நான் கண்டேன்.

பார்க்க : மத்தேயு 26 : 57-75; 27 : 1-31

மாற்கு 14:53-72; 15:1-20

லூக்கா 22:47-71; 23:1-25

யோவான் 18:1-40; 19-1-16

அத்தியாயம் 9

# கிறிஸ்துவின் சிலுவை மரணம்

சிலுவையிலறையப்படுவதற்காக தேவ குமாரன் மனிதரிடம் ஒப்படைக்கப்பட்டார். இரட்சகரை அவர்கள் நடத்திச் சென்றார்கள். வாரினால் அடிக்கப்பட்டதினால் பல வேதனைகளையும் பாடுகளையும் சகித்திருந்த இயேசு, மிகவும் பெலவீனமாகியிருந்தார். அச்சமயத்தில், அவரை விரைவிலேயே அறைய இருந்த சிலுவையை, அவர் மீது சுமத்தினார்கள். அப்பாரத்தினிமித்தமாக அவர் மூன்று முறை

மயங்கிவிழுந்தார். ஆகையால், அவரை பின்பற்றினவனும் நம்பினவனுமாகிய ஒருவனை பிடித்து, சிலுவையை அவன் மீது சுமத்தி, மரண ஸ்தலம் வரை கொண்டு போனார்கள். தேவதூதர்கள் புடைசூழ்ந்து இருந்தார்கள். அவருடைய சீடர்கள் வேதனையோடும், கண்ணீரோடும் கல்வாரியின் அருகே வந்தார்கள். பண்டிகைக்காக, இயேசு, எருசலேமுக்கு வந்த நாளை நினைவுக்கூர்ந்தார்கள். அன்று, திரளான ஜனங்கள் இயேசு வருவதை அறிந்து, தங்கள் வஸ்திரங்களை சாலையில் விரித்து, குருந்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, புறப்பட்டு, "ஓசன்னா" என ஆர்ப்பரித்த காட்சிகளை சீடர்கள் நினைவு படுத்தி பார்த்தார்கள். இப்பொழுதோ முற்றிலும் மாறுபட்ட காட்சி!! அவர்களுடைய எதிர்பார்ப்புகள் வீணாகிப்போயிற்று. இப்பொழுது, அவர்கள் இயேசுவை குதூகலமாக பின்பற்றி வரவில்லை. மாறாக, வேதனையும் பயமும் நிறைந்த இதயங்களோடும், பாடுகளை அனுபவித்து, அவமானங்களைச் சுமந்து, இன்னும் சற்று நேரத்தில் மரிக்கவிருந்த இயேசுவை பின்பற்றி வந்திருந்தார்கள்.

இயேசுவின் தாயும் அங்கிருந்தார். பாசமான தாய் மாத்திரமே உணரக்கூடிய வேதனை அவளுடைய இருதயத்தை உருவக்குத்தியிருந்தது. சீடர்களின் எண்ணங்களோடு சேர்ந்து, தானும் இயேசு ஏதாவது அற்புதம் செய்து தப்பிவிடமாட்டாரா என ஏங்கினாள். சிலுவை மரணபரியந்தமும் தனது குமாரன் தம்மை ஒப்புக்கொடுத்துவிட்டார் என்பதை கிரகித்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் சகல அயத்தங்களும் செய்யப்பட்டு, இயேசுவை சிலுவையில் கிடத்தினார்கள். சுத்தியல்களும் ஆணிகளும் கொண்டுவரப்பட்டன சீடர்களின் இதயங்கள் ஒடிந்து போயின. அவருடைய கரங்களை விரித்து ஆணிகளை கடாவும் முன்னே, இக்காட்சியை இயேசுவின் தாய் பார்க்கலாகது என்பதினால், சீடர்கள் அத்தாயை இடமாற்றினார்கள். சிலுவையில் அடித்தார்கள். இயேசு முறுமுறுக்கவில்லை. ஆனால் வலியால் முனக ஆரம்பித்தார். அவர் வாடிய முகத்தின் நெற்றியில் வியர்வை துளிகள் துளிர்த்தன. தேவகுமாரன் அனுபவித்துக் கொண்டிருந்த வேதனையால் மகிழ்ந்திருந்த சாத்தான், அவருடைய மரணத்தின் மூலமாக தனக்கு கிடைக்கவிருக்கும் தோல்வியை கண்டு பயந்தான்.

இயேசுவை சிலுவையில் அறைந்த பின்பு, சிலுவையை உயர்த்தி, பூமியில் ஆயத்தப்படுத்தப்படிருந்த குழியில் அதனை மிக வேகமாக இறங்கினார்கள். இச்செயலால் இயேசுவின் மாமிசம் பல இடங்களில் கிழிக்கப்பட்டு, வேதனையின் உச்சத்திற்கு அவர் சென்றார். அவருடைய மரணத்தை எவ்வளவு கேவலப்படுத்த முடியுமோ அவ்வளவு கேவலப்படுத்தினார்கள். அவருடனே இரண்டு கள்ளர்களையும், இரு பக்கங்களில், சிலுவையி லறைந்தார்கள். அக்கள்ளர்கள் தப்பிக்கப் போராடினார்கள். அவர்களை மேற்கொண்டுதான் அவர்களை சிலுவையிலறைந்தார்கள். இயேசுவோ சாந்தமாக தம்மை ஒப்புக்கொடுத்தார். அக்கள்ளர்கள் தங்களை தண்டித்தவர்களின் மீது சாபங்களை உதிர்த்த வேளையில், இயேசு பாரத்தோடு அவர்களுக்காக,

”பிதாவே இவர்களை மன்னியும் இவர்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” என்று ஜெபித்தார். அவருடைய சரீர வேதனைகளை மட்டும் இயேசு சகித்திருக்கவில்லை இவ்வுலகின் பாவ பாரத்தையும் அவர் தாங்கி கொண்டிருந்தார்.

இயேசு சிலுவையில் தொங்கின வேளையில் ஒருவன் அவரை கடந்து சென்றான். அவன் அவரைப் பார்த்து, ”தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவயிலிருந்து இறங்கி வா” என ஏளனம் செய்தான். ”நீர் தேவனுடைய குமாரனானால் . . . ” என்கிற இதே வார்த்தைகளை சாத்தானும் வனாந்தரத்தில் சொல்லியிருந்தான். அங்கு கூடியிருந்த பிரதான ஆசாரியர்களும், வேதபாரகரும் அவரை நோக்கி, ”மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை” என்று கூறினார்கள். ”நாம் கண்டு விசுவாசிக்கதக்கதாக இஸ்ரவேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கட்டும்” என பரியாசம் செய்தார்கள். அங்கு குழுமியிருந்த தூதர்கள் மீண்டும் அவரை விடுவிக்க ஆசித்தார்கள். ஆனால் அவர்களுக்கு அனுமதி கிட்டவில்லை. இயேசுவின் வேலையின் நோக்கம் ஏறக்குறைய நிறைவேறியாகி விட்டது. சிலுவையின் மீது வேதனையோடு தொங்கிய சமயத்திலும், இயேசு, தமது தாயை மறந்துவிடவில்லை. இயேசுவின் துயர்க்காட்சிகளிலிருந்து அந்த தாயால் விலகியிருக்க இயலவில்லை. துக்கம் நிறைந்த இதயத்தோடு நின்று கொண்டிருந்த தாயையும், அருகில் நின்று கொண்டிருந்த அன்பான சீடனாகிய யோவானையும் கண்டு, ”ஸ்திரியே, அதோ, உன் மகன்” என்றும், ”அதோ, உன் தாய்” என்றும் கூறினார். அவ்வேளையிலிருந்தே, யோவான் இயேசுவின் தாயை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

வேதனையில் தவித்த இயேசு தாகமாயிருந்தார் அவ்வேளையிலும், அவருடைய நிந்தைகளை பெருகப்பண்ணும் விதமாக, அவருக்கு கசப்புக்கலந்த காடியை குடிக்கக்கொடுத்தார்கள். தூதர்கள் இவையெல்லாம் கண்ட பின்பு, மனம் நொறுங்கி, இதற்குமேல் பார்க்க இயலாமல் தங்கள் முகங்களை மறைத்துக் கொண்டார்கள். இக்கோரக்காட்சியைக் காண கதிரவனே மறுத்துவிட்டது. அக்கொலைபாதகர்களின் இதயங்கள் திகிலடைந்து போகும் வண்ணமாக, இயேசு உரத்த சத்ததில் ”முடிந்தது” என்று சொல்லி ஜீவனை விட்டார். அச்சமயத்திலே, தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாக கிழிந்தது, பூமி அதிர்ந்தது, பாறைகள் பிளந்தன, பூமியை அந்தகாரம் சூழ்ந்தது. இயேசு மரித்தபோது, சீடர்களின் நம்பிக்கையும் துடைத்தெடுக்கப் படுவதைப் போல இருந்தது. இயேசுவை பின்பற்றிய அநேகர் அக்கோர காட்சியைக் கண்டு, வருத்தம் நிறைந்தவர்களாக இருந்தார்கள்.

மீட்பின் திட்டத்தின் அஸ்திபாரம் மிகவும் அழுத்தமாக இடப்பட்டிருந்ததை உணர்ந்த சாத்தான், இம்முறை குதூகலிக்கவில்லை. மாறாக, இயேசுவின் மரணத்தின் மூலமாக தனது மரணமும் அழிவும் உறுதியானதை அவன் உணர்ந்தான். தான் முழுமையாக சுதந்தரித்துக்காள்ள முடியும் என்று எண்ணிய சாம்ராஜ்ஜியத்தை மீண்டும்

இயேசுவிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதையும் கவனித்தான். உடனே, அவனுடைய தூதர்களோடு ஆலோசனை பண்ணினான். தேவகுமாரனை எதிர்த்து எதையும் சாதிக்காத நிலையில், இன்னமும் அதிக வலிமையோடும், யுக்திகளோடும், அவருடைய பிள்ளைகளிடத்தில் கவனத்தை திருப்ப முடிவு செய்தார்கள். இயேசுவினால் சுதந்திரிக்கப்பட்ட இரட்சிப்பை அவர்கள் பெற்றுக்கொள்ளாமல் இருக்க, தடைகளை எழுப்ப தீர்மானித்தார்கள். இப்படி செய்வதன் மூலம், தொடர்ந்து தேவனுடைய அரசாங்கத்துக்கு விரோதமாக செயல்பட முடியும். அதேசமயம், இயேசுவிடமிருந்து அநேகரை தன் வசப்படுத்தியதாகவும் திருப்தி கொள்ளமுடியும். இறுதியில், இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட மக்களின் பாவங்கள் மீண்டும் சாத்தான் மீது சுமத்தப்படும். ஆகிலும், மீட்பை பெற விருப்பமில்லதவர்களின் பாவங்களை அவர்களே சுமந்தாக வேண்டும் என்பதில் சற்று களிகூர்ந்தான்.

இயேசுவின் வாழ்க்கை உலக கம்பீரியமற்று, மிதமிஞ்சிய காட்சிகளற்று இருந்தது. உலக கௌரவத்தையே எதிர்பார்த்திருந்த தலைவர்களுக்கு நரதிரான குணத்தை இயேசுவின் தாழ்மையான வாழ்க்கை எடுத்துக்காட்டியது. அவருடைய கட்டுப்பாடான, பரிசுத்தமான ஜீவியம் அவர்களுடைய பாவங்களை சுட்டிக் காட்டுகிறதாக அமைந்தது. எனவே, அவருடைய தாழ்மையும், சுத்தத்தையும் அவர்கள் நிந்தித்தார்கள். ஆகிலும், இப்பூமியில் அவரை இகழ்ந்த அனைவரும், பிதாவின் மகாமகிமையோடும், பரலோகத்தின் பிரகாசத்தோடும் இயேசு வெளிப்படும் காட்சியை ஒரு நாள் நிச்சயமாக காண்பார்கள். அவருடைய இரத்தப்பழியை தங்கள் மேலும் தங்களுடைய பிள்ளைகள் மேலும் ஏற்றுக் கொண்ட கூட்டத்தினர் யாவரும், அவரை மகிமையின் ராஜாவாக காண்பார்கள். பரலோகமே கண்டு அதிசயித்த முகத்தை தாக்கி சேதப்படுத்திய யாவரும் மீண்டும் நண்பகல் சூரியனைப் போல பிரகாசிக்கும் அதே முகத்தைக் கண்டு, நிற்க இயலாமல் ஓடி மறைத்துக்கொள்வார்கள். இயேசு, சிலுவை மரணத்தின் சின்னங்களை ஏந்திய கரங்களை நீட்டுவார், அச்சின்னங்களை அவர் நித்தியமாக சுமப்பார். ஒவ்வொரு ஆணியின் தழும்பும், மானிடனின் ஒப்பற்ற மீட்பைக் குறித்தும், அதனை கிரயத்துக்கக் கொண்ட விலையைக் குறித்தும் பேசும். அவருடைய விலாவில் ஈட்டியை பாய்த்த மனிதர்கள் அத்தழும்பைக் கண்டு வியாகுலப் படுவார்கள். அவருடைய தலையின் மேல் வைக்கப்பட்டிருந்த "இவன் யூதருடைய ராஜா" என்ற பலகையைக் கண்டு எரிச்சலடைந்த நபர்கள் அவரை, ராஜாவின் மகிமையோடு காண்பார்கள். "நீ யூதரின் ராஜாவானால் உன்னை இரட்சித்துக்கொள்" என்று ஏளனம் செய்த மனிதர்கள் அவரை ராஜா கம்பீரத்திலும், அதிகாரத்திலும் காண்பார்கள். அச்சமயத்திலே யாதொரு சாட்சியத்தையும் எதிர்பாராமல், அவருடைய மகிமையினால் ஈர்க்கப்பட்டு. 'கர்த்தரின் நாமத்தினால் வருகிறவர் ஆசிர்வதிக்கப்பட்டவர்' என்று அங்கீகரிக்க தூண்டப்படுவர்.

ஜீவனை விடும் நேரத்தில் இயேசு உரக்கச் சொன்ன 'முடிந்தது' என்கிற சத்தமும், பூமியை சூழ்ந்த அந்தகாரமும், பிளந்து நின்ற பாறைகளும்,

பூமியின் அதிர்வும், அவருடைய கொலைகாரர்களை நடுங்க வைத்தது. இவைகளை கண்டு வியந்த சிடர்களின் நம்பிக்கை முற்றிலும் தகர்க்கப்பட்டிருந்தது. யூதர்கள் அவர்களையும் கொலை செய்ய தேடுவார்கள் என எண்ணி பயந்தார்கள். தேவ குமாரனுக்குவிரோதமாக எழும்பிய வெறுப்பு விரைவில் தீரக்கூடியதாக இல்லை என்று நினைத்தார்கள். இந்த ஏமாற்றத்தை குறித்து பல மணி நேரங்கள் தனித்து துக்கித்தார்கள். லௌகீக ராஜாவாக ஆட்சி செய்வார் என எதிர்பார்த்த அவர்கள், இயேசுவின் மரணத்தோடு அவர்களின் நம்பிக்கையும் செத்துப் பேனாதை கண்டார்கள். இயேசுவின் தாயாரின் விசுவாசமும் தடுமாறித்தான் பேனது.

இயேசுவைக் குறித்த நம்பிக்கை தகர்க்கப்பட்டிருந்த போதிலும் அவரை சீடர்கள் நேசித்தார்கள். எனவே, அவருடைய சரீரத்தை கௌரவிக்க விரும்பினார்கள். ஆனால், அதை எப்படி பெற்றுக்கொள்வது என்று அறியாதிருந்தார்கள். அரிமத்தியாவிலிருந்து வந்த இயேசுவின் சீடனாகிய யோசேப்பு என்பவன், பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டு வாங்கினான். யூதர்களின் கோபம் மிகுதியாக இருந்ததினால், இயேசுவின் சரீரத்தை கனப்படுத்த அனுமதியாமல் போவார்களோ என்ற பயந்ததினால் வெளிப்படையாகச் சொல்லாமல் ஒளிந்துச் சென்றான். பிலாத்து அவனுடைய விண்ணப்பத்தை ஏற்று, இயேசுவின் சரீரத்தை அவனிடம் கொடுத்தார். சீடர்கள் இயேசுவின் சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்கியபோது, அவர்களுடைய துயரம் மீண்டும் எழும்பிற்று. அவர்கள் அவருடைய சரீரத்தை மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, யோசேப்புக்கு சொந்தமான, புதிய கல்லறையிலே வைத்தார்கள். இயேசு ஜீவனோடு இருந்த நாட்களிலே அவருடனே நெருக்கமாக இருந்த ஸ்திரீகள் இன்னமும் அவரை நெருங்கியே வந்தார்கள். அவருடைய சரீரம் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டு, அதன் நுழைவு வாயில் ஒரு பெரிய கல்லால் அடைக்கப்பட்ட பிறகே அந்த ஸ்திரீகள் அவ்விடத்தை விட்டுச் சென்றார்கள். எதிரிகள் இயேசுவின் சரீரத்தை திருடிவிடக்கூடாதே என்று பயந்தார்கள். ஆனால், அப்படி பயந்திருக்க அவசியம் இல்லை என்று நான் கண்டேன். ஏனெனில், இயேசு இளைப்பாறிய இடத்தை வாஞ்சையோடு தூதர்கள் காத்துக்கொண்டிருந்ததை நான் கண்டேன். மகிமையின் ராஜாவை சிறையிருப்பிலிருந்து விடுவிப்பதற்கான கட்டளைக்காக ஏங்கிக்கொண்டே அக்கல்லறையை காத்துக் கொண்டிருந்தார்கள்.

கொலைகாரர்களும் இயேசு உயிருடன் எழுந்து தப்பிவிடுவார் என பயந்து, அவருடைய கல்லறையை காக்க காவற்காரரை போடும்படி பிலாத்துவை வேண்டிக் கொண்டார்கள். பிலாத்துவும், மூன்றாம் நாள் வரை கல்லறையை காப்பதற்கு ஆயுதம் ஏந்திய சேவகர்களை நியமித்தான். அந்தப்படியே, கல்லறையின் வாசலை மூடி, சீடர்கள் அச்சரீரத்தை திருடிவிட்டு, இயேசு உயிரோடு எழுந்துவிட்டார் என்று சொல்லிவிடாதபடி

ஜாக்கிரதையாக காவற்காக்குமாறு உத்தரவிட்டான்.

பார்க்க : மத்தேயு 21:1-11; 27:32-66

மாற்கு 15 : 21-47

லூக்கா 23 : 26-56

யோவான் : 19 : 17-42

வெளி 19 : 11-16

அத்தியாயம் 10

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், இயேசு, இளைப்பாறிக் கொண்டிருக்க, அந்த ஓய்வுநாளில், அவருடைய சீடர்களும் துக்கத்துடன் ஓய்ந்திருந்தார்கள். இரவு கடந்து, அதிகாலையின் வெளிச்சம் தோன்றுவதற்கு முன்னரே தங்களது அன்பான அதிகாரியை விடுவிப்பதற்கு தூதர்கள் ஆயத்தமானார்கள். இயேசுவின் வெற்றியை எதிர்நோக்கியிருந்த வேளையில், பரலோகத்திலிருந்து மாவலிய தூதன் ஒரவன் துரிதமாக இறங்கி வந்தான். அவனுடைய வஸ்திரம் பனியைப் போல் வெண்மையாகவும் இருந்தது. அவனிலிருந்து வந்த ஒளி, அவ்விடத்தில் வெற்றி களிப்பில் மிதந்துக்கொண்டிருந்த தீய தூதர்களை கலங்கடித்து, விரட்டியடித்தது. இயேசுவின் பாடுகளை கவனித்து வந்த ஒரு தூதன், இவ்வலிய தூதனோடு இணைந்து, இருவருமாக கல்லறைக்கு வந்தார்கள். அவர்கள் நெருங்கி வந்த சமயத்தில் பயங்கரமான பூமியதிர்வு உண்டாயிற்று. அவ்வலிய தூதன், கல்லறையின் வாசலில் வைக்கப்பட்டிருந்த கல்லலை உருட்டி, நுழைவு வாயிலை திறந்து, அக்கல்லின் மேலே அமர்ந்தான்.

காவற்காரரை திகில் பற்றிக்கொண்டது. இயேசுவின் சரீரத்தை காக்க வேண்டிய வல்லமையை எங்கே? அவர்களுடைய கடமையைக் குறித்தோ, சீடர்கள் இயேசுவின் சரீரத்தை திருடக்கூடியதோ இப்பொழுது அவர்கள் நினைவில் இல்லை. கதிரவனின் ஒளியைக் காட்டிலும் பிரகாசமான தேவதூதர்களின் ஒளி, அவர்களை ஆச்சரியத்திலும், பயத்திலும் ஆழ்த்தியது. ரோமாபுரி சேவகர்கள் தூதர்களை கண்ட மாத்திரத்தில் செத்ததைப் போல விழுந்தார்கள். ஒரு தூதன் உரத்த சத்தத்தில் இயேசுவை வெளியே வரும்படி அழைத்தான். அவர் மீது மரணத்திற்கு அதிகாரமில்லாமல் போனது. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். மற்ற தூதன் உள்ளே சென்று, இயேசுவின் தலையில் சுற்றப்பட்டிருந்த சீலைகளை கழட்டிவிட்டான். இயேசு ஜெயங்கொண்டவராக வெளியே வந்தார். பக்தியின் பயத்தோடு அக்காட்சியை தூதர்கள் கண்டார்கள்.

கல்லறையை விட்டு கெம்பீரமாக வெளியே வந்த இயேசுவை சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்துக் கொண்டார்கள். மரணம் அவரை பிடித்துக்கொள்ளாமல் போனாதை மகிழ்வுடன் பாடி பூரித்தார்கள். சாத்தான் இப்பொழுது குதூகலிக்கவில்லை பரலோக தூதர்களின் ஒளியை தாங்க இயலாமல், அவனுடைய தூதர்கள் ஓடிப்போயிருந்தார்கள். இயேசு மரணத்தை வென்ற செய்தியை சாத்தானிடம் கூறினார்கள்.

ஜீவனின் அதிபதியை கல்லறைக்குள் கிடத்தியதைக் குறித்து, சாத்தானின் குழு சற்றே மகிழ்ந்திருந்தது. ஆனால், இந்நரக ஆசை மிகக்குறுகிய ஆசையாக இருந்தது. கம்பீரமான வெற்றி வீரனாக வலம் வர இருப்பதையும், தன் வசப்படுத்தியிருந்த இவ்வுலகினை மீண்டும் இயேசுவிடம் ஒப்படைக்க வேண்டியதையும், சாத்தான் உணர்ந்தான். தனது முழுமையான பெலத்தைக் கொண்டும் இயேசுவை மேற்கொள்ள முடியாத சாத்தான் கோபத்தில் புலம்பினான். இயேசு ஜெயித்தது மட்டுமல்ல, அவரது வெற்றியின் காரணமாக மீட்பின் திட்டத்தையும் வழி வகுத்து கொடுத்திருந்தார்.

சாத்தான் சற்றே ஏமாற்றத்துடனும், கவலையுடனும் காணப்பட்டான். தேவனின் அதிகாரத்திற்கு எதிராக அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்ய, சாத்தான், தனது ஆலோசனைக் குழுவை கூட்டினான். பிரதான ஆசாரியர்களையும், மூப்பர்களையும் மீண்டும் சந்திக்க முடிவு செய்யப்பட்டது. இதுவரை, அவர்களை வஞ்சித்து, இதயங்களை கடினப்படுத்தி, இயேசுவிற்கு எதிராக மாற்றியிருந்தான். இயேசுவை வஞ்சகர் என நம்ப வைத்திருந்தான். எனவே, இயேசு உயிர்த்தெழுந்ததினால் அவர்களுக்கு ஆபத்து நேரிடக் கூடுமென்று அவர்களை எச்சரிக்க முடிவு செய்தான்.

தேவதூதர்கள் பரலோகத்திற்கு சென்றபின், ரோமாபுரிய சேவகர்கள் மெதுவாக எழுந்ததை நான் கண்டேன். மாபெரும் கல் அகற்றப்பட்டதையும், இயேசு உயிர்த்தெழுந்ததையும் அவர்கள் கண்டு, வியந்தார்கள். அவர்கள் கண்டிருந்த அற்புத கதையை பகிர்ந்து கொள்ளும்படி, பிரதான ஆசாரியர்களிடம் விரைந்துச் சென்றார்கள். இச்செய்தியை கேட்டதும், அக்கொலைகாரரின் முகம் வாடிப்போனது. அவர்கள் செய்த காரியத்தை குறித்த பயம் அவர்களை தொற்றிக்கொண்டது. அவர்களுக்கு இப்பொழுது கிடைத்த தகவல் மெய்யென்றால், அவர்கள் தொலைந்துப்போவார்கள் என்பதை உணர்ந்தார்கள். சற்று நேரம் உணர்ச்சி இழந்து, செய்வதறியாது, மௌனமாக, ஒருவரின் முகத்தை ஒருவராக பார்த்துக்கொண்டார்கள். மக்களிடத்தில் இயேசு உயிர்தெழுந்த செய்தி போனால், சபைத் தலைவர்களை ஜனங்கள் கொன்றுபோடுவார்கள் என்பதையும் அறிந்திருந்தார்கள். எனவே, பணம் கொடுத்து, சேவகர்களை மௌனமாக்கவேண்டும் என தீர்மானித்தார்கள். அப்படியே திரளான பணத்தை கொடுத்து, இயேசுவின் உயிர்த்தெழுதலின் செய்தியை இரகசியமாய் வைத்து, யாராவது வினவினால், "இயேசுவின் சீடர்கள் நாங்கள் உறங்கியபோது, திருடிக்கொண்டு போய்விட்டார்கள்" என்று சொல்லவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். கடமையின் போது

உறங்கியதற்காகவும், தேசாதிபதியிடம் பேசி தீர்வு காணப்போவதாகவும் உறுதியளித்தார்கள். பணத்திற்காக மரியாதையை விற்று, ஆசாரியரின் ஆலோசனைப்படி செய்ய ரோம சேவகர்கள் ஒத்துக்கொண்டார்கள்.

இயேசு, சிலுவையில் தொங்கியபடி, "முடிந்தது" என்று உச்சரித்ததும், பாறைகள் பிளந்தன, பூமி அதிர்ந்தது, சில கல்லறைகளும் திறக்கப்பட்டன. இப்பொழுது. அவரே மரணத்தை ஜெயித்தவராக வந்தபோது, அநேக நீதிமான்கள் மரணத்திலிருந்து எழும்பி அவரது உயிர்த்தெழுதலின் காட்சியை கண்டார்கள். உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் மகிமையடைந்தவர்களாய் வந்தார்கள். சிருஷ்டிப்பின் காலம் முதல் இயேசுவின் நாட்கள் வரை மரித்திருந்த அநேக பரிசுத்தவான்கள் இக்காட்சியை கண்டார்கள். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மறைக்கவேண்டும் என்று அலைந்துக் கொண்டிருந்த பிரதான ஆசாரியார்களும், பரிசேயரும் ஒரு பக்கம் இருக்க, கல்லறைகளிலிருந்து ஒரு கூட்டத்தை எழுப்பி, அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து சாட்சி பகரும்படி, தேவன் மறுபக்கத்தில் கிரியை செய்து கொண்டு இருந்தார்.

உயிர்த்தெழுப்பப்பட்ட அனைவரும் மாறுபட்ட தோற்றங்களை கொண்டிருந்தார்கள். இவ்வுலக மக்கள், காலப் போக்கில், சீரழிந்து, அவர்களுடைய பெலனையும், ரூபத்தையும் அழித்துக் கொண்டிருந்தார்கள். என எனக்கு தெரிவிக்கப்பட்டது. நோய்களையும், மரணத்தையும், சாத்தான், தன் வசம் வைத்திருந்தான். காலப்போக்கில், ஒவ்வொரு வயதிலும், இச்சாபம் நிழலாடுவதை காணமுடிந்தது. எழுப்பப் பட்ட சிலர், பிறரை காட்டிலும் அழகிய தோற்றத்தை கொண்டிருந்தார்கள். நோவாவின் நாட்களிலும், ஆபிரகாமின் காலத்திலும் வாழ்ந்து வந்தவர்கள், தோற்றத்திலும் வலிமையிலும், தூதர்களை போல் இருப்பார்கள் என்று எனக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால், ஒவ்வொரு தலைமுறையும் பெலவீனமாகிக் கொண்டே போய், நோய்களும் அதிகரித்து, வாழ்நாட்களும் குறைந்துக்கொண்டே போனது. மனிதனை நிம்மதியிழக்கச் செய்து, மனுக்குலத்தையே பெலவீனப்படுத்த, சாத்தான் கற்றுக் கொண்டான்.

உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் அநேகருக்கு தோன்றி, இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை சாட்சியாக அறிவித்தார்கள். இயேசுவின் வல்லமையினால்தான் தாங்களும் மரணத்தை ஜெயித்தார்கள் என்றும் சாட்சி பகிர்ந்தார்கள். பொய்யான பிரச்சாரங்களினால், சாத்தானோ, அவனுடைய தூதர்களோ, பரிசேயர்களோ, உயிர்த்தெழுதலின் உண்மையை மறைக்க முடியவில்லை. ஏனெனில், கல்லறையிலிருந்து எழும்பிய பரிசுத்தவான்களின் கூட்டம், இந்த மகிழ்ச்சியின் செய்தியை துரிதமாக பரப்பினார்கள். இஃதோடு இயேசுவும், மனம் நொந்திருந்த சீடர்களிடம் தம்மை காண்பித்து, அவர்களுடைய பயங்களை களைந்து, பூரண சமாதானத்தை கொடுத்தார்.

ஒவ்வொரு நகரமாக, பட்டணத்திலிருந்து பட்டணமாக பரவிய இச்செய்தி, யூதர்களின் உள்ளங்களிலும் பயத்தை வளர்த்தது. எனவே,

யூதர்கள், சீடர்களின் மீது வைத்திருந்த வெறுப்பை மறைத்துப்போட்டார்கள். தவறான செய்தியை பரப்புவதுதான் சிறந்த வழியென யூதர்கள் கருதினார்கள். பிலாத்து நடுங்கினான். இயேசு உயிர்த்தெழுந்ததையும், அவரோடு வேறு சிலர் எழுந்ததையும் பிலாத்து விசுவாசித்ததால், அவனுடைய நிம்மதி அவனை விட்டு நிரந்தரமாக பிரிந்திருந்தது. உலக கௌரவத்திற்காகவும், அதிகாரத்தை காத்துக்கொள்ளவும், இயேசுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்திருந்தானே! தான் சுமந்துக் கொண்டிருப்பது ஒரு சாதாரண மனிதனின் இரத்தப்பழி அல்ல என்றும், அது தேவகுமாரனின் இரத்தப்பழி என்றும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டான். அவனுடைய ஜீவியம் துக்ககரமானதாக மாறிற்று. தேற்றப்படுவதை மறுத்து, பரிதாபமாக மடிந்துப் போனான்.

ஏரோதின் இருதயமோ அதிக கடினமானது. இயேசு உயிருடன் எழுந்த செய்தி அவனை அதிகமாக பாதிக்கவில்லை. சீடனாகிய யாக்கோபை கொன்று போட்டான் இது யூதர்களுக்கு பிடித்திருந்ததால், பேதுருவையும், பிடித்து சிறை வைத்தான். ஆனால் தேவனோ, தமது தூதனை அனுப்பி, பேதுருவை விடுவித்தார். திரளான ஜனங்களுக்கு முன்னால் தன்னையே புகழ்ந்துக் கொண்டிருந்து ஏரோது, கொடூரமாக செத்தான்.

இருள் நிறைந்த அதிகாலை நேரத்தில், பரிசுத்த ஸ்திரிகள், இயேசுவின் சரீரத்தை சுகந்தவர்க்கமிடும்படியாக வந்தார்கள். அடைப்புக் கல் அகன்றிருப்பதையும், இயேசுஅங்கில்லா திருப்பதையும் அவர்கள் கண்டு பயந்தார்கள். எதிரிகள் திருடிவிட்டார்களோ என்று எண்ணிய அவர்களின் இதயங்கள் தோய்ந்து போயின. இதோ, இரண்டு வென்னங்கிதரித்த தூதர்கள், பிரகாசமான முகங்களோடு அங்கே தோன்றினார்கள். இந்தப் பெண்களின் வாஞ்சையை உணர்ந்த தூதர்கள், இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி கூறி, அவரை கிடத்தியிருந்த இடத்தையும் காட்டினார்கள். அஃதோடு, சீடர்களிடம் போய், அவர்களுக்கு முன்பாக இயேசு கலிலேயாவிற்கு போகிறார் என்றும் அறிவிக்கும்படியாக கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அந்த ஸ்திரிகள் பயந்திருந்தார்கள். எனினும், அப்பெண்கள் துரிதமாக ஓடி, தாங்கள் கண்ட அனைத்தையும் சீடர்களிடம் கூறினார்கள். இதனை நம்ப இயலாமல், சீடர்களும், அப்பெண்களோடு கூட வந்து கல்லறையை பார்த்தார்கள். இயேசு அங்கில்லாதிருந்ததை கண்டார்கள். ஸ்திரீகளின் மூலமாக தாங்கள் அறிந்துக்கொண்ட செய்திகளுக்காகவும், தாங்களே நேரில் கண்ட காட்சிகளுக்காகவும் நன்றி தெரிவித்தார்கள். பிரமித்துபோய் வீடு திரும்பினார்கள். மரியாளோ, தான் கண்ட காட்சிகளை எண்ணி, மீண்டும் ஏமாந்து விடக்கூடாது என்கிற நோக்கத்தில், அங்கேயே உலாவிக் கொண்டிருந்தாள். புதிய சோதனைகள் தனக்காககாத்திருப்பதாக மரியாள் உணர்ந்தாள். அவளுடைய சோகம், புதுப்பிக்கப்பட்டு, கசப்பான அழுகையில் வெடித்தது. அவள் மீண்டும் கல்றைக்குள் எட்டி பார்த்து, இரண்டு தூதர்களை கண்டாள். இயேசு

கிடத்தப்பட்டிருந்த இடத்தில் ஒருவன் தலை அருகிலும், மற்றொருவன் கால் பகுதியிலும் அமர்ந்திருந்தார்கள். அத்தூதர்கள் மென்மையாக அவளை விசாரித்தார்கள். அதற்கு மரியாள், "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்கு தெரியவில்லையே" என பதிலளித்தாள்.

கல்லறையிலிருந்து திரும்பிய அவள், இயேசு தனதருகே நிற்பதை கண்டாள். ஆனாலும் அவரை அடையாளம் காணதிருந்தாள். இயேசு கனிவோடு, "ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய்" என வினவினார். அவள், அவரை தோட்டக்காரர் என்று எண்ணி, "ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன்" என்று கேட்டாள். அப்பொழுது இயேசு, தமது பரலோக தெனியில், "மரியாளே" என்று அழைத்தார். அந்த சத்தம் பழக்கமானதாக இருந்தபடியால், மரியாளும் உடனே, "போதகரே" என்றாள், மகிழ்ச்சியோடு அவரை அனைத்துக்கொள்ள அவள் முயற்சித்தபோது, இயேசு, "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவின் இடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்" என்று சொன்னார். மகிழ்வுடன், இந்நற்செய்தியை சீடர்களிடம் கூறச்சென்றாள். இயேசு அக்கணமே, பரம பிதாவிடம் சென்று, பரத்திலும், பூமியிலும் உண்டாயிருந்த வல்லமையை பெற்றுக்கொள்ளச் சென்றார்.

மகிமையின் ராஜா பிரவேசிக்கும்படி, பரலோகத்தின் கதவுகளை திறந்து, தேவதூதர்கள், இயேசுவை, மேகம் போல் சூழ்ந்துக்கொண்டார்கள். பரம தகப்பனின் சமூகத்தில் இருந்த போதிலும், தமது மானிட சீடர்களை இயேசு மறந்துவிடவில்லை. பிதாவிடமிருந்து வல்லமையை பெற்று, உலகிற்கு திரும்ப வந்து, அவ்வல்லமையை சீடர்களுக்கு அளிக்கவேண்டுமென்று ஆசித்தார். அந்த நாளிலேயே அவர் திரும்ப வந்து சீடர்களின் நடுவே தோன்றினார். அவ்வேளையில், அவர் பரம பிதாவிடம் சென்று வல்லமையை பெற்று விட்டபடியால், சீடர்களை தொட அனுமதித்தார்.

இந்நேரத்தில் தோமா இல்லாதிருந்தான். சீடர்கள் சொன்ன செய்தியை அவன் ஏற்கவில்லை. மாறாக அவன், "அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான, காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலை விட்டு, என் கையை அவர் விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்" என உறுதியாக கூறினான். தன் சகோதரர் மீது தோமா வைத்திருந்த அவ நம்பிக்கை இதிலே விளங்கிற்று. அனைவரும் இத்தகைய சாட்சிகளை எதிர்பார்த்தால், வெகு சிலரே இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள். இவை அனைத்தையும் கண்டிருந்த சீடர்களின் மூலமாக இச்செய்தி பரவவேண்டுமென பிதா விரும்பினார். எனவே இத்தகைய அவநம்பிக்கையை குறித்து தேவன் விசனப்பட்டார். இயேசு

மறுபடியும் சீடர்களை சந்தித்தபோது, தோமாவும் உடன் இருந்தான். இயேசவை பார்த்த மாத்திரத்தில் அவரை விசுவாசித்தான். ஆகிலும், தொட்டுப் பார்க்காமல் விசுவாசிக்கப் போவதில்லை என்று அவன் அறிவித்திருந்ததினால், இயேசு அவனுக்கு அந்த வாய்ப்பையும் கொடுத்தார். தோமா அதற்கு பதிலாக, "என் ஆண்டவரே! என் தேவனே!" என்று அலறினான். தோமாவின் அவிசுவாசத்தை கண்டித்த இயேசு, "தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்றார்.

அந்தப்படியே முதலாம் தூதனின் தூதையும், இரண்டாம் தூதனின் தூதையும்1 அனுபவிக்காதவர்கள், அனுபவித்தவர்களின் சாட்சியிலிருந்து அவைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நான் கண்டேன். இயேசு சிலுவையிலறையப்பட்ட படியே, இத்தூதுகளும் அறையப்பட்டிருந்ததை நான் கண்டேன். நாம் இரச்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என்று சீடர்கள் அறிவித்தப்படியே, தேவ ஊரியக்காரர்களும் விசுவாசத்தோடு, பயமின்றி முத்தூதினையும் தேவன் அருளியப்படியே ஏற்றுக்கொள்வது அவசியமென்றும் நான் கண்டேன்.2

ஸ்திரீகள், இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை எடுத்துச் சென்ற அதே நேரத்தில், ரோமாபுரிய காவல்சேவகர்கள், இயேசு உயிர்த்தெழவில்லை; அவருடைய சீடர்கள் அவரை கடத்திச் சென்றுவிட்டார்கள் - என்ற பொய்யை பரப்பிக்கொண்டிருந்தார்கள். பிரதான ஆசாரியாரின் இருதயங்களில் இத்தகைய தீமையை சாத்தான் விதைத்திருந்தான். மக்களும் இதனை உடனடியாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனாலும் ஆண்டவர், இம்மீட்பின் திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, உண்மையை விளக்கி, சந்தேகங்களுக்கு அப்பால் அதை உயர்த்தி வைத்தார். யாராலும் அதனை மறைக்க கூடாமல் போயிற்று, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக, மரணத்திலிருந்து எழுப்பப்பட்டவர்கள் இருந்தார்கள்.

இயேசு, தனது சீடர்களோடு நாற்பது நாட்கள் தங்கியிருந்து, அவர்களுடைய இருதயங்களை களிப்படையச் செய்து, பரலோக இராஜ்ஜியத்தின் சத்தியங்களை விளக்கினார். அவருடைய பாடுகளை குறித்தும், மரணத்தை குறித்தும், உயிர்த்தெழுதலைக் குறித்தும், அவர்கள் சாட்சியாக இருக்க வேண்டுமென வலியுறுத்தினார். அவர் செய்த தியாகத்தையும், அதனை கண்டடையும் எவரும் ஜீவனை கண்டடைவார்கள் என்கிற சத்தியத்தையும் சீடர்கள் பலருக்கு எடுத்துரைக்க வேண்டும். அவர் நிமித்தம், சீடர்களும் பாடுகளையும், நிந்தைகளையும் சகிக்க வேண்டியது அவசியம் என்று தெளிவுப் படுத்தினார். சாத்தானின் சோதனைகளை தான் ஜெயித்ததை எடுத்துரைத்த இயேசு, தமது ஜீவியத்தில் இனி சாத்தானுக்கு அதிகாரம் இல்லை என்பதை விளக்கினார்.எனவே, சாத்தானின் முழுமையான கோபத்துக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலைகள் அவர்களுக்கு வரக்கூடும் என்பதைக் குறித்து எச்சரித்தார். எனினும், சாத்தானை அவர் வென்றதைப் போலவே,

அவர்களும் வெல்ல முடியும் என நம்பிக்கையளித்தார். அற்புதங்கள் செய்யக்கூடிய வல்லமையை அவர்களுக்குத் தந்தார். தங்களுடைய ஊழியங்களில் போராட்டங்கள் எழும்பும் என்றும், அத்தகைய சூழ்நிலைகளில் அவருடைய ஆவியானவர் அவர்களை தேற்றுவார் என்றும், தூதர்கள் அவர்களை காத்துக்கொள்வார்கள் என்றும் எடுத்துரைத்தார். அவர்களுடைய இலக்கு நிறைவேறுமட்டும் அவர்களுடைய ஜீவனை பிசாசு எடுத்துக்கொள்ள முடியாது என்றும் உறுதியளித்தார். அவருடைய போதனைகளை மகிழ்ச்சியோடு கேட்டார்கள். அவருடைய பரிசுத்த உதடுகளிலிருந்து உதிர்ந்த ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாக கேட்டார்கள். அவர்தான் உலகத்தின் இரட்சகர் என்று விசுவாசித்தார்கள். ஒவ்வொரு வார்த்தையையும் பற்றிக்கொண்ட சீடர்கள், விரைவில் தங்கள் ஆண்டவர் அவர்களிடமிருந்து பிரிந்துவிடுவார் என்பதை நினைத்து வருந்தினார்கள். இயேசு, தமது பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்களை ஆயத்தப்படுத்திய பின்பு, மீண்டும் வந்து, அனைவரையும் தம்முடன் அழைத்துச் செல்வதாக வாக்கு அருளின பின்பு, சற்றே திருப்தியடைந்தார்கள். மேலும், பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவதாகவும், அவர், அவர்களை வழிநடத்தி, ஆசீர்வதித்து, காத்துக்கொள்வார் என்றும் தைரியப்படுத்தினார். இறுதியாக, தம் கரங்களை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார்.

1. வெளி 14:6-8 இப்புஸ்தகத்தின் 23ம், 24ம் அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளது.

2. வெளி 14:9-12 இப்புஸ்தகத்தின் 28ம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

பார்க்க : மத்தேயு 27 : 52-53; 28 :1-20
மாற்கு 16:1-18
லூக்கா 24:1-50
யோவான் 20:1-31
அப்போஸ்தலர் 12 : 1-25

அத்தியாயம் 11

# கிறிஸ்துவின் பரமேறுதல்

தமது பிதாவிடம் மீண்டும் வருவதற்காக இயேசு பரம் ஏறப்போவதை, பரலோகமே மிகுதியான அவலோடு பார்த்துக் கொண்டிருந்தது. மகிமையின் ராஜாவை ஏற்று, அவரை பரலோகினுள், வெற்றியின் ஆரவாரத்தோடு அழைத்துச் செல்ல தேவதூதர்கள் வந்தார்கள். இயேசு சீடர்களை ஆசீர்வதித்த பின்பு, அவர்களை விட்டு பிரிந்து, பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். திரளான பரம சேனைகள் அங்கு கூடியிருந்தன. அதே சமயத்தில், எண்ணிலடங்கா தூதர்கள் இயேசுவின் வருகைக்காக பரலோகத்தில் காத்துக்கொண்டிருந்தார்கள். பரிசுத்த நகரத்திற்கு ஏறியபோது, இயேசுவுடன் வந்த தூதர்கள் மிகுந்த சத்தத்துடன், "வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்; அநாதி கதவுகளே, உயருங்கள்; மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்" என்று பாடினார்கள். நகரத்திலிருந்த தூதர்கள் பரவசப்பட்டு, "யார் இந்த மகிமையின் ராஜா?" என வினவினார்கள். இயேசுவுடன் வந்த தூதர்கள், "அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே" என இசைப்பாடினார்கள். பரலோக தூதர்கள் மீண்டுமாக, "யார் இந்த மகிமையின் ராஜா?" என்று கேட்க,"அவர் சேனைகளின் கர்த்தரானவர்" என்ற பதில் வந்தது. இவ்விதமாக இயேசு பரலோகம் வந்தடைந்தார். பின்பு, பரலோகத்தின் திரளான சேனையும் அவரை சூழ நின்று, மிகுந்த துதிகளோடு வணங்கி, ஒளிரும் கிரீடங்களை அவருடைய பாதத்தில் சமர்ப்பித்தார்கள். அதற்கு பின்னர், தங்களுடைய பொன் வாத்தியங்களை மீட்டி, பரலோகத்தையே இனிமையான இசையால் நிறைத்தார்கள். அடிக்கப்பட்டும், மகிமையில் உலாவரும் ஆட்டுக்குட்டியானவரை வாழ்த்திப் பாடினார்கள்.

அடுத்ததாக, பரத்துக்கேறிக் கொண்டிருக்கும் இயேசுவை இறுதியாக பார்த்துவிட வேண்டும் என்று நினைத்து, ஆவலோடு மேல் நோக்கியிருந்த சீடர்களை நான் கண்டேன். வெள்ளங்கி தரித்த இரண்டு தூதர்கள் அங்கே தோன்றி, அவர்களை பார்த்து, "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று சொன்னார்கள். இயேசுவின் தாயாரோடு சேர்ந்து இக்காட்சியை கண்ட சீடர்கள், இராமுழுவதும் இதனைக் குறித்துப் பேசி மகிழ்ந்தார்கள். குறுகிய காலத்தில் நடந்தேறிய அநேக மகிமையான காரியங்களை எண்ணி வியந்தார்கள்.

சாத்தான், அவனுடைய தூதர்களோடு கலந்தாலோசனை நடத்தி, இவ்வுலகின் அதிகாரம் தன் வசமிருக்கும்போதே தேவனின் அரசாட்சிக்கு விரோதமாக செயல்பட்டு, இயேசுவை பின்பற்றுகிறவர்களுக்கு எதிராக பத்து மடங்கு அதிகமாக செயலாற்ற வேண்டுமென தீர்மானித்தான். இயேசுவை எதிர்த்து ஒன்றுமே செய்ய முடியவில்லை; எனவே, தலைமுறை தலைமுறையாக அவர்மீது விசுவாசம் வைக்கிறவர்களை தாக்கி, அவர்களை பிடித்துக் கொள்ள முடிவெடுத்தான். இயேசு, தமது சீடர்களுக்கு, பிசாசை

வெல்லும் வல்லமையை அருளியுள்ளதை தெளிவாக எடுத்துரைத்தான். இவையனைத்தையும் கேட்ட பின்பு, அவனுடைய தூதர்கள், கெர்ச்சிக்கிற சிங்கம் போல புறப்பட்டுச் சென்றார்கள்.

பார்க்க : சங்கீதம் 24:7-10

அப்போஸ்தலர் 1:1-11

அத்தியாயம் 12

# கிறிஸ்துவின் சீடர்கள்

சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்த இரட்சகரைப் பற்றி சீடர்கள் வல்லமையாக பிரசங்கித்தார்கள். சுகவீனர்களை சுகப்படுத்தினார்கள். பிறப்பிலிருந்தே சப்பாணியாய் இருந்த ஒருவனை நடக்கச் செய்ததினிமித்தமாக அவனும் சீடர்களுடன் சேர்ந்து, குதித்து, நடந்து தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். இதனை திரளான ஜனங்கள் கண்டார்கள். செய்தி பரவியது; அநேகர் சீடர்களை சூழ ஆரம்பித்தார்கள். கிடைத்த சுகத்தை பெரும் வியப்புடனும், ஆச்சரியத்துடனும் ஏற்று, அநேகர் தேவனைத் துதித்தார்கள்.

இயேசு மரித்தபோது, இனி அற்புதங்கள் ஒன்றும் நிகழாது என்றும், மனிதர்கள் மீண்டும் சம்பிரதாய வாழ்க்கையைத் தொடங்குவார்கள் என்றும், பிரதான ஆசாரியர்கள் நினைத்தனர். ஆனால், அவர்கள் மத்தியிலேயே சீடர்கள் வியக்கதக்க அற்புதங்களை செய்தார்கள்! இயேசு சிலுவையில் அறையப் பட்டாரே, இவர்களுக்கு இத்தகைய வல்லமை எங்கிருந்து வந்தது என்று குழம்பினார்கள். இயேசு உயிரோடு இருந்த நாட்களில் அவருடைய வல்லமையை சீடர்களுக்கு கொடுத்து வந்தாரென்றும், அவர் மரித்தபின் அவ்வித வல்லமைகள் இல்லாது போகுமென்றும் ஆசாரியர்கள் எண்ணினார்கள். அவர்களுடைய மனக்குழப்பத்தை அறிந்த பேதுரு, அவர்களை நோக்கி, "இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுய சக்தியினாலாவது, எங்கள் சுய பக்தியினாலாவது, இவனை நடக்கப் பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன? ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப் படுத்தினார்; அவரை நீங்கள் ஒப்புக்கொடுத்தீர்கள்; பிலாத்து அவரை விடுதலையாக்க தீர்மானித்தபோது, அவனுக்கு முன்பாக அவரை மறுதலித்தீர்கள். பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை உங்களுக்காக விடுதலை பண்ணவேண்டுமென்று கேட்டு, ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந் தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்" என்று கூறினான். சப்பாணியாய் இருந்தவனை பூரணப்படுத்தியது அந்த இயேசுவின் மேல் வைக்கப்பட்ட விசுவாசம்தான் என்று அவர்களுக்கு விளக்கமளித்தான் பேதுரு.

பிரதான ஆசாரியர்களுக்கும், மூப்பர்களுக்கும் இவ்வார்த்தைகளை கிரகிக்க இயலவில்லை. சீடர்களை பிடித்து சிறை வைத்தார்கள். சீடர்களின் ஒரே செய்தியில், ஆயிரக் கணக்கானோர் இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் விசுவாசித்து, மனந்திரும்பினார்கள். ஜனங்களின்

கவனம் தங்கள் வசம் திரும்ப வேண்டும் என்பதற்காகத் தான் இயேசுவை கொலைச் செய்திருந்தார்கள். ஆனால், இப்பொழுதோ மக்கள், முன்பை காட்டிலும் அதிகமாக இயேசுவின் மீது வாஞ்சையாக இருந்ததைத் கண்டு ஆசாரியர்கள் மிகவும் கலங்கினார்கள். ஏற்கனவே, இயேசுவை கொலை செய்தவர்கள் இவர்கள் தான் என்று சீடர்கள் நேரிடையாக குற்றப்படுத்தியிருந்தார்கள். இத்தகைய குற்றச் சாட்டுகள் எந்த அளவுக்கு வளரும் என்றோ, ஜனங்களின் எண்ணங்கள் எங்ஙனம் மாறும் என்றோ அறியாது மூப்பர்கள் தவித்தார்கள். சீடர்களை எளிதாக கொலைச் செய்திருப்பார்கள்; ஆனாலும், ஜனங்கள் தங்கள் மீது கல்லெறிந்துவிடுவார்கள் என்கிற பயம் இருந்தது. சீடர்களை அவைக்கு வரவழைத்தார்கள். நீதியின் குமாரனின் இரத்தத்திற்காக வெறியோடு கத்திய மனிதர்களே அங்கு இருந்தார்கள். பேதுரு, கோழைத்தனமாக, இயேசுவை மூன்று முறை மறுதலித்ததை நினைவில் கொண்டு, அவனை எளிதாக மடக்கிவிடலாம் என்று எதிர்பார்த்தார்கள். அவனோ மனந்திரும்பியிருந்தான். இயேசுவை மகிமைப்படுத்தும் ஒரு வாய்ப்பு பேதுருவிற்கு கொடுக்கப்பட்டது. ஒருமுறை இயேசுவை மறுதலித்திருந்தான்; ஆனால், இப்பொழுது, அக்கறையை நீக்கி, அவருடைய நாமத்தை கனப்படுத்தினான். கோழைத்தனமான பயங்கள் ஏதும் நெஞ்சில் இல்லாமல், பரிசுத்த ஆவியின் வல்லமையில், அஞ்சாமல், இயேசுவின் நாமத்தை உயர்த்தி, அவன் முழுமையாக அங்குநிற்பதற்கு அவரே காரணம் என்று சாட்சியம் அளித்தான். பேதுரு அவர்களை நோக்கி, "வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானார்" என்று மரித்துயிர்த்த இயேசுவைக் குறித்து சாட்சிப் பகிர்ந்தான். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படியாக வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே, அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.

பேதுருவும், யோவானும் வெளிக்காட்டிய அஞ்சாமையைக் கண்டு, ஜனங்கள் வியந்தார்கள். அவர்கள் இயேசுவுடன் இருந்ததை யாவரும் அறிந்துக்கொண்டார்கள். விசாரணையின் போது, இயேசுவிடம் காணப்பட்ட தைரியம் இவர்களிடமும் பிரதிபலித்ததை யாவரும் கண்டார்கள். தேவகுமாரனை மறுதலித்த பேதுருவை தன் கூர்மையான பார்வையால் கண்டித்த இயேசுவின் நாமத்தை, இன்று, தனது அஞ்சாமையினால், உயர்த்தி வைத்தான் பேதுரு. இதினிமித்தமாக, கர்த்தர் பேதுருவை அங்கீகரித்து, ஆசீர்வதித்தார். இதன் சாட்சியாக, பேதுரு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தான்.

சீடர்களின் மீது தங்களுக்கு இருந்த வெறுப்பை வெளிக்காட்ட இயலாமல், அவர்களை ஆலோசனை சபையை விட்டகற்றினார்கள். அதன்பின், அவர்களுக்குள் பேசி, "இந்த மனுஷரை நாம் என்ன செய்யலாம்? எருசலேமில் வாசம் பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளியரங்கமான அற்புதம் இவர்களால் செய்யப்பட்டதே, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது" என தீர்மானித்தார்கள். இத்தகைய நல்ல ஊழியம் பரவினால், தங்கள் வலிமையை இழந்து, ஜனங்களுக்கு முன்பாக, இயேசுவை கொன்றவர்களாக நிற்க வேண்டும் என்பதை உணர்ந்த ஆசாரியர்கள், இந்த ஊழியம் பரவுவதை விரும்பவில்லை. எனவே, சீடர்களை பயமுறுத்தி, ஒருக்காலும் இயேசுவின் நாமத்தைப்பற்றி பேசக்கூடாது என்றும், அப்படி பேசினால், அவர்கள் மரிக்க நேரிடுமென்று

அச்சுறுத்தினார்கள். ஆகிலும், தாங்கள் கேட்டவைகளையும் பார்த்தவைகளையும் பற்றி பேசாமல் இருக்க முடியாதென்று, பேதுரு, துணிவுடன் கூறினான்.

இயேசுவின் வல்லமையினால், தங்களிடம் கொண்டு வரப்பட்ட எல்லா விதமான நோயாளிகளையும், சீடர்கள் அற்புத சுகமளித்தார்கள். அவர்கள் மீது கோபம் கொண்டிருந்த மூப்பர்கள் இவைகளைக் கண்டு, திடுக்கிட்டார்கள். சிலுவை மரணமடைந்து, உயிர்த்தெழுந்து, பரமேறிய இயேசுவின் நிழலின்கீழ் நூற்றுக்கணக்கானோர் அனுதினமும் வந்து சேர்ந்தவண்ணம் இருந்தனர். அப்போஸ்தலர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். சாத்தான் மகிழ்ந்திருந்தான். ஆனால், தேவ தூதர்களை தேவன் அனுப்பி, அவர்களை விடுவித்தார். பிரதான ஆசாரியார்களும் வேதபாரகரும் சொன்னதற்கு எதிராக, தேவாலயத்தில், இயேசுவைப் பற்றி அதிகதிகமாய் பேசினார்கள். ஆலோசனை சபை கூடி, சிறையிலிருந்தவர்களை அழைத்து வரும்படி கட்டளை யிடப்பட்டது. அந்தப்படியே, சிறையிலிருந்த அப்போஸ் தலர்களை அழைத்து வருவதற்காக சிறைக்குச் சென்றனர். அதிகாரிகள் சிறைக் கதவுகளை திறந்துப்பார்த்தபொழுது, அவர்கள் தேடியவர்கள் அங்கில்லாதிருந்தார்கள். அவர்கள் ஆலோசனை அங்கத்தினரிடம் திரும்பி வந்து, "சிறைச்சாலை மிகவும் பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் வெளியே கதவுகளுக்குமுன் நிற்கவும் கண்டோம்; திறந்த பொழுதோ உள்ளே ஒருவரையும் காணோம்", என்று அறிவித்தார்கள். அப்பொழுது ஒருவன் வந்து : "இதோ, நீங்கள் காவலில் வைத்த மனுஷர் தேவாலயத்திலே நின்று ஜனங்களுக்குப் போதகம் பண்ணுகிறார்கள்" எனக் கூறினான். உடனே சேனைத்தலைவன் சேவகரோடேகூடப் போய், ஜனங்கள் கல்லெறிவார்கள் என்று பயந்ததினால், பலவந்தம் பண்ணாமல் அவர்களை அழைத்துக்கொண்டு வந்தான். அப்படி அவர்களை அழைத்துக்கொண்டு வந்து, ஆலோசனைக் சங்கத்துக்கு முன்பாக நிறுத்தினார்கள். அப்பொழுது, பிரதான ஆசாரியன் அவர்களை நோக்கி, "நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம் பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டு மென்றிருக்கிறீர்கள்" என்று சொன்னான்.

வேஷதாரர்களாக இருந்த சங்கத்தினர், தேவனைக் காட்டிலும் மனிதரின் புகழ்ச்சியையே அதிகம் விரும்பினார்கள். அவர்கள் இருதயங்கள் கடினப்பட்டிருந்ததால், அப்போஸ்தலர்கள் நிகழ்த்திய பெரிய அற்புதங்கள் அனைத்தும் அவர்களை எரிச்சலடையச் செய்தது. இயேசுவைக் குறித்து சீடர்கள் பேசிவந்தால், அவர்களுடைய குற்றம் நிரூபிக்கப்பட்டு, அவர்கள்தான் இயேசுவை கொலை செய்தார்கள் என்பது தெளிவாகிவிடும் என்று மூப்பர்கள் கலங்கினார்கள். இயேசுவின் இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருக்கக்கூடாது என்று சூலுரைத்தவர்கள், இப்பொழுது, அப்பழியை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இல்லை.

மனுஷருக்கு கீழ்ப்படிவதைப்பார்க்கிலும், தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்று அப்போஸ்தலர்கள் தைரியமாக அறிவித்தார்கள். பேதுரு எழுந்து, "நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை, நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி,

இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார். இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளா யிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி" என்றான். அப்பொழுது மூப்பர்கள் மூர்க்கமடைந்து, அப்போஸ்தலர்களைக் கொலை செய்யும்படி யோசனைப் பண்ணினார்கள். இப்படியிருக்கையில், கமாலியேல் என்கிற பேர் கொண்ட நியாயசாஸ்திரியின் உள்ளத்தில் தேவதூதன் கிரியைச் செய்தபடியால், அவன் ஆலோசனைச் சங்கத்தில் எழுந்திருந்து, "இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல் இவர்களை விட்டுவிடுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் ஒழிந்துபோம். தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள்" என்றான். அப்போஸ்தலரை கொன்றுப் போடும்படி, தீய தூதர்கள் அன்று, அச்சங்கத்தினரை ஏவி விட்டார்கள். ஆகிலும் கர்த்தர், அவர்களில் ஒருவனையே எழுப்பி, அப்போஸ்தலர்கள் தப்பிக்கொள்ள கிரியை செய்தார்.

அப்போஸ்தலரின் ஊழியங்கள் இன்னும் முடிவடைய வில்லை. மன்னர்களுக்கு முன்பாக வந்து, இயேசுவைக் குறித்து அவர்கள் பார்த்ததையும், அறிந்ததையும் சாட்சியாக அறிவிக்க வேண்டியது இருந்தது. அவர்களை விடுவிக்கும் முன்னே, பிரதான ஆசாரியர்களும், மூப்பரும், அவர்களை அடித்து, இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். இயேசுவின் நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப் பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டு புறப்பட்டுப் போனார்கள். ஆகிலும், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று, பிரசங்கித்தார்கள். கர்த்தருடைய வார்த்தை வளர்ந்து, பெருகிற்று. பிரதான அசாரியர்களின் உள்ளங்களில் சாத்தான் அசைவாடி, அப்போஸ்தலர்கள் தான் இயேசுவின் சரீரத்தை திருடிச் சென்றார்கள் என்று பொய் பிரச்சாரம் செய்வதற்காக ரோமாபுரியின் காவற்காரர்களை விலைக்கு வாங்கச் செய்தான். இப்படிச் செய்வதினால் உண்மையை மறைத்துவிடலாம் என்று எண்ணினான். ஆனால், இயேசுவின் உயிர்த்தெழுதலின் செய்தி பல இடங்களில் துளிர் விட்டு பரவிற்று. அப்போஸ்தலர்கள் தைரியமாக இதனை அறிவித்து, அநேக பிரம்மாண்டமான அற்புதங்களை செய்தார்கள். தேவ குமாரனின் மீது அதிகாரம் கிடைத்தபோது, அவருடைய இரத்தப்பழியை தாங்கள் மீது ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தவர்களை குற்றப்படுத்தி, தைரியமாக பேசினார்கள்.

ஒவ்வொரு தலைமுறையின் வழியாக, கிறிஸ்துவின் சீடர்கள் உறுதியாக தாங்கப்படுவதற்கு ஏதுவாகவும், பரிசுத்தமான சத்தியங்கள் பாதுகாக்கப்படுவதற்காகவும், தேவன் அவருடைய தூதர்களை நியமித்ததை நான் கண்டேன்.

இஸ்ரவேலரின் நம்பிக்கையாக இருக்கவேண்டிய சத்தியங்களை சுமந்த அப்போஸ்தலரிடையில் பரிசுத்த ஆவியானவர் விசேஷமாகத் தங்கினார். இயேசுதான் தமது ஒரே நம்பிக்கை என்றும், அவருடைய

உயிர்த்தியாகத்தின் மூலமாக திறக்கப்பட்ட வழிகளில் நடக்கவேண்டுமென்றும், தேவ கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து வாழவேண்டும் என்றும் அப்போஸ்தலர்கள் முடிவு செய்தார்கள். யூதர்கள் வெறுத்து, அவரையே கொலைச் செய்ய வைத்த அதே சத்தியத்தை பிரசங்கிக்க, அப்போஸ்தலருக்கு, இயேசு வல்லமை அளித்திருந்ததைக் கண்டு, நான் பிரமித்தேன். சாத்தானின் கிரியைகளை முறியடிக்கக்கூடிய வல்லமை அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. துன்மார்க்க கரங்களினால் கொலை செய்யப்பட்ட இயேசுவின் நாமத்தினால், அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார்கள். இயேசுவின் மரணத்தின்போதும், உயிர்த்தெழுதலின்போதும் உண்டான ஒளி வட்டங்கள், அவரே இவ்வுலகின் இரட்சகர் என்பதை நித்தியப்படுத்திவிட்டன.

பார்க்க : அப்போஸ்தலர் 3 : 1-26
அப்போஸ்தலர் 4 : 1-37
அப்போஸ்தலர் 5 : 1-42

## அத்தியாயம் 13

# ஸ்தேவானின் மரணம்

எருசலேமில் சீடர்கள் பெருகினார்கள். கர்த்தரின் வார்த்தை வளர்ந்ததினால், அநேக ஆசாரியர்களும் விசுவாசித்து கீழ்ப்படிந்தார்கள். ஸ்தேவான், விசுவாசம் நிறைந்தவனாக, அநேக அற்புதங்களைச் செய்து வந்தான். அநேக ஆசாரியர்கள் தங்கள் வழிகளையும், பலிகளையும் விட்டு, இயேசுவே மெய்யான பலி என ஏற்றுக்கொள்ள துவங்கியிருந்ததால், அநேகர் மூர்க்கமடைந் திருந்தார்கள். பிரதான ஆசாரியர்களையும் மூப்பரையும் கண்டித்து, ஸ்தேவான், வல்லமையாக பிரசங்கித்துக் கொண்டிருந்தான். அவன் பேசிய வலிமையை எதிர்கொள்ள முடியாதபடியால், ஒரு ஜனக்கூட்டத்தை திரட்டி, மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக அவன் தூஷண வார்த்தைகளைப் பேசக்கேட்டோம் என்று அறிவிக்க வைத்தார்கள். ஜனங்களை எழுப்பி, ஸ்தேவானை பிடித்து, பொய்ச் சாட்சிகளின் மூலமாக அவன் தேவாலயத்திற்கும் கற்பனைகளுக்கும் விரோதமாக பேசினான் என்று சொல்ல வைத்தார்கள். "ஸ்தேவான், நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று சொன்னதை நாங்கள் கேட்டோம்" என்று அறிவித்தார்கள்.

ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவனுடைய முகத்தில் தேவ மகிமையைக் கண்டார்கள். அவனுடைய முகக்குறி தேவதூதனைப் போல பிரகாசமாய் இருந்ததைக் கண்டார்கள். ஸ்தேவான், விசுவாசத்தாலும் பரிசுத்த ஆவியாலும் நிறைந்தவனாய் எழுந்து, தீர்க்கதரிசிகளின் காலத்தில் தொடங்கி, இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்த்தெழுதல், பரமேறுதல் வரை தெளிவாக எடுத்துச் சொன்னான். அப்படியே, தேவன் மனித கரங்களினால் உண்டாக்கப்பட்ட தேவாலயங்களில் இருக்கவில்லையென்றும் கூறினான். ஆசாரியார்களும், மூப்பர்களும் தேவாலயத்தை வழிபட்டு வந்தார்கள். தேவனை எதிர்த்துப் பேசப்படுவதைக் காட்டிலும், தேவாலயத்தை எதிர்த்து பேசப்படுவதை வன்மையாகக் கண்டித்தார்கள். ஸ்தேவானோ, ஆவியில் நிறைந்தவனாய்,

அவர்களை "வணங்காக் கழுத்துள்ளவர்கள்" என்றும் "இருதயத்திலும், செவியிலும் விருத்தசேதனம் பெறாதவர்கள்" என்றும் நிந்தித்தான். பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறவர்களாக அக்கூட்டத்தினர் இருந்தனர். வெளிப்புறமான சடங்குகளை கையாண்டு வந்தார்கள். ஆனால், அவர்கள் இருதயமோ பாழடைந்து, தீமையினால் நிறைந்ததாக இருந்தது. இதனை ஸ்தேவான் வெளிப்படுத்தி, "நீதிபரருடைய" வருகையை முன்னறிவித்தவர்களையும் உங்கள் பிதாக்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரை கொலைச்செய்த பாதகருமாயிருக்கிறீர்கள்" எனக் கடிந்துக்கொண்டான்.

வெளிப்படையாக வந்த உண்மைகளை சகிக்க முடியாமல், மிகுந்த கோபம்கொண்டு, ஒருமனப்பட்டு, ஸ்தேவான் மீது பாய்ந்தார்கள். பரலோகத்தை ஏறிட்டு பார்த்த ஸ்தேவான் மீது பரலோக ஒளி படர்ந்தது. தேவ தூதர்கள் அவனை சூழ்ந்துக்கொண்டார்கள். பரலோகத்தின் மகிமையை கண்டான். அவன் சத்தமிட்டு, "அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்" என்றான். வேதபாரகர்களும், பிரதான ஆசாரியர்களும் கூக்குரலிட்டு, தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்கு புறம்பே தள்ளி, அவனை கல்லெறிந்தார்கள். அப்பொழுது ஸ்தேவான் முழங்காற்படியிட்டு, "இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்", என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.

திருச்சபையில் ஒரு முக்கிய இடத்தை நிரப்புவதற்காக எழுப்பப்பட்ட வல்லமையான தேவ மனிதன்தான் ஸ்தேவான் என்ற நான் கண்டேன். அவன் கல்லெறிந்து கொல்லப்பட்டபொழுது, சாத்தான் வெகுவாக மகிழ்ந்தான். சாத்தானின் வெற்றி மீண்டும் குறுகியதாகவே இருந்தது. ஏனெனில், அக்கூட்டத்தில் நின்று அனைத்தையுமே கவனித்துக் கொண்டிருந்த ஒருவனிடம் இயேசு சீக்கிரமாக வெளிப்பட இருந்தார். ஸ்தேவான் மீது கல்லெறிவதில் தனது கையை போடாதிருந்தாலும், அதற்கு ஒப்புதல் அளித்தவன் இவனே. சவுல், திருச்சபையை துன்புறுத்துவதில் அலாதி பிரியம் வைத்திருந்தான். சபையோரை வேட்டையாடி, வீடுகளில் இருந்து அவர்களை பிடித்து, கொலை செய்கிறவர்களிடம் அவர்களை ஒப்படைத்தான். சாத்தான் அவனை சக்திவாய்ந்த விதத்தில் பயன்படுத்திக் கொண்டிருந்தான். ஆகிலும், சாத்தானால் பிடிக்கப்பட்டவர்களை அவனிடத்திலிருந்து மீட்க இயேசுவிடம் அதிகாரம் இருக்கிறதே! கல்விமானாக இருந்த சவுலை, திருச்சபைக்கு விரோதமாக, சாத்தான் வலிமையாக உபயோகித்து வந்தான். ஆனால் இயேசுவோ, ஸ்தேவானின் இடத்தை நிரப்பவும், அப்போஸ்தலருக்கு வலிமை சேர்க்கவும், அவருடைய நாமத்தை பிரசங்கிக்கவும், சவுலைத் தெரிந்துக்கொண்டார். யூதர்களால் உயர்வாய் கருதப்பட்டவன் சவுல். அவனுடைய சிரத்தையும், கல்வியும் அவர்களுக்கு பிடித்திருந்தது. அநேக சீடர்களுக்கு அதுவே கலக்கமாயிருந்தது.

பார்க்க : அப்போஸ்தலர் : 6:1-15
அப்போஸ்தலர் 7:1-60

அத்தியாயம் 14

# சவுலின் மாறுதல்

இயேசுவை பிரசங்கித்து வந்த புருஷர்களையும் ஸ்திரீகளையும் எருசலேமிற்கு கட்டி இழுத்து வருவதற்காக, சவுல், பிரதான ஆசாரியர்களிடம் நிருபங்களை கேட்டு வாங்கினான். அந்த அதிகார நிருபங்களை எடுத்துக் கொண்டு தமஸ்குவிற்கு புறப்பட்ட போது, சாத்தானின் தூதர்கள் அவனை சுற்றிலும் ஆர்ப்பரித்துக்கொண்டு இருந்தார்கள். ஆனால், அவன் போகையில், சடிதியில் வானத்திலிருந்து ஒரு ஒளி அவனை சுற்றிப் பிரகாசித்தது. தீய தூதர்கள் சிதறிப்போனார்கள். சவுல் தரையிலே விழுந்தான். அப்பொழுது, ஒரு சத்தம் உண்டாகி, "சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?" எனக் கேட்டது. அதற்கு சவுல், "நீர் யார், ஆண்டவரே?" என்றான். கர்த்தர் அவனிடம், "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்கும் கடினம்" என்றார். சவுல் அதற்கு பிரதியுத்திரமாக, "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?" என்று வினவினான். அதற்கு கர்த்தர், "நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ; நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்", என்றார்.

சவுலுடன் பிரயாணம் பண்ணின மனிதர்கள் சத்தத்தை கேட்டும் ஒருவரையும் காணாமல் பிரமித்து நின்றார்கள். அவ்வொளி மறைந்தபின், சவுல் தரையிலிருந்து எழுந்து, கண்களை திறந்தபோது ஒருவரையும் பார்க்கவில்லை. பரலோகின் ஒளி அவனை பார்வையிழுக்கச் செய்திருந்தது. அவனை கரம்பற்றி தமஸ்கு மட்டும் அழைத்து வந்தார்கள். அங்கே மூன்று நாட்கள் புசியாமலும், குடியாமலும், பார்வையற்றவனாய் இருந்தான். சவுல் சிறைப்பிடிக்கவேண்டிய ஒருவனிடம் தேவன் தரிசனமாகி, "அனனியாவே, நீ எழுந்து, நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு. அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான். அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான்", என்றார்.

அன்னியா, பயந்தவனாக, சவுலைக் குறித்து தான் கேள்விப்பட்டதை கர்த்தரிடத்தில் பகிர ஆரம்பித்தான். ஆனால் கர்த்தர் அவனை நோக்கி, "நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துக்கொண்ட பாத்திர மாயிருக்கிறான்" என்றார். கர்த்தரின் கட்டளைகளுக்கு இணங்கி, அந்த வீட்டினுள் பிரவேசித்து, அன்னியா சவுலின் மேல் கை வைத்து, "சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும் படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும் படிக்கும் என்னை அனுப்பினார்" என்று கூறினான்.

சவுல் உடனே பார்வையடைந்து, எழுந்து, ஞானஸ்நானம் பெற்றான். தாமதமின்றி, இயேசு தான் மெய்யான தேவகுமாரனென்று ஆலயங்களிலே சவுல் பிரசங்கித்தான். அவனை கேட்டவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டு, "எருசலேமில் இந்த நாமத்தை தொழுதுகொள்ளுகிறவர்களை நாசமாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டிப் பிரதான ஆசாரியர்களிடத்திற்குக் கொண்டுபோகும்படி வந்தவன் இவனல்லவா" என்று பேசினார்கள். சவுல் அதிக வலுவடைந்து, யூதர்களை திகைக்கச்

செய்தான். அவர்கள் மீண்டும் குழப்பமடைந்தார்கள். பரிசுத்த ஆவியின் அனுபவத்தை எல்லாருக்கும் சவுல் அறிவித்தான். இயேசுவை எதிர்த்து, அவரை பின்பற்றியவர்களை சவுல் தண்டித்து வந்தது அனைவருக்குமே தெரிந்திருந்தது. அவனுடைய அற்புத மனமாறுதல் அநேகரை இயேசுவின் மீது நம்பிக்கை வைக்க வைத்தது. தான் செய்து வந்த கொடூரமான செயல்களையும், தமஸ்குவிற்கு அவன் வந்த நோக்கத்தையும், வழியில் நிகழ்ந்த அற்புதத்தையும் சாட்சியாக சவுல் அறிவித்து வந்தான். சவுல் தைரியமாக இயேசுவைப் பற்றி பிரசங்கித்தான். அது அநேகருக்கு பெலனாக இருந்தது. வேதத்தின் அறிவை ஏற்கனவே பெற்றிருந்த சவுல், இப்பொழுது கிட்டிய தேவ ஒத்தாசையினால், தீர்க்கதரிசன வசனங்களை எவ்வித குழப்பமின்றி போதிக்க ஆரம்பித்தான். அவன் மீது தங்கியிருந்த பரிசுத்த ஆவியின் மூலமாக, இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்த்தெழுதல் பற்றிய சத்தியங்களை விளக்கி, எவ்வாறு வேதப்புத்தகங்களில் உரைக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியுள்ளது என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தான்.

பார்க்க : அப்போஸ்தவர் 9:1-43

அத்தியாயம் 15

# யூதர்கள் பவுலை கொல்ல தீர்மானித்தார்கள்

பவுலின் புதிய வாழ்க்கை அநேகரை இயேசுவண்டை கவர்ந்திழுத்தது. இதனைக் கண்ட பிரதான ஆசாரியர்களும் அதிகாரிகளும் அவன் மீது வெகுவாக வெறுப்புக் கொண்டார்கள். பவுல், இயேசுவைப் பற்றி தைரியமாக உபதேசிப்பதையும், அவருடைய நாமத்தினால் அற்புதங்களை நடப்பிப்பதையும், இதினிமித்தமாக அநேகர் மனந்திரும்பி சம்பிரதாய பழக்கங்களை விட்டு விலகியதையும் உணர்ந்த மனிதர்கள் பலரும் ஆசாரியர்களை கொலை பாதகர்களாக பார்த்தனர். இதனைக் கண்ட பிரதான ஆசாரியர்களும் வேதபாரகர்களும், பவுலை அதிகமாக வெறுத்தார்கள். கோபமூண்ட அவர்கள், திரண்டு, அடுத்ததாக என்ன செய்யவேண்டுமென ஆலோசிக்க ஆரம்பித்தார்கள். முடிவில், பவுலை கொலை செய்வதே இப்பிரச்சனையின் தீர்வு என்று தீர்மானித்தார்கள். ஆகிலும், இவர்களுடைய உள்நோக்கங்களை அறிந்த தேவன், பவுலை காக்கவும், ஊழியத்தை முழுமையாக செய்து முடிக்கவும், இரட்சகருக்கென்று பாடுபடவும், சில தூதர்களை நியமித்து, அவனை காக்க ஏற்பாடு செய்தார்.

யூதர்கள் தன்னை கொலை செய்ய நாடுவதை யாரோ பவுலுக்கு தெரிவித்தார்கள். விசுவாசியாத யூதர்களைக் கொண்டு, தமஸ்குவின் வாசல்களில் இராப்பகலாக பவுலின் வருகைக்காக காத்துக்கொண்டு இருந்த சாத்தான், வாசல்களுக்கு வெளியே பவுல் வர நேரிட்டால், அவனை கொன்று போட வேண்டும் என்று முடிவெடுத்திருந்தான். ஆனால், நடு இரவிலே, சீடர்கள் அவனை ஒரு கூடையில் வைத்து மதிற்சுவருக்கு அப்பால் இறக்கிவிட்டார்கள். இங்கும், யூதர்களின் முயற்சி தோல்வி அடைந்தது. இதன்பின், பவுல், மற்ற சீடர்களோடு இணைவதற்காக எருசலேம் வந்தடைந்தான்; சீடர்களோ அவனைக் கண்டு பயந்தார்கள். பவுல் ஒரு சீடனாக மாறிவிட்டான் என்பதை அவர்களால்

நம்பமுடியவில்லை. தமஸ்குவிலே, யூதர்களால் தேடப்பட்டும், சொந்த ஜனத்தாரால் ஏற்றுக்கொள்ளப்படாமலும் தவித்த பவுலை, பர்னபா என்பவன், அப்போஸ்தலரிடம் அழைத்து வந்து அறிமுகப்படுத்தினான். தமஸ்குவிற்கு போகும் வழியில் இயேசுவை பவுல் சந்தித்ததையும், அதன்பின் இயேசுவைப் பற்றி மிக தைரியமாக தமஸ்குவிலே அவன் பிரசங்கித்ததையும் பர்னபா எடுத்துரைத்தான்.

பவுலை அழிக்கும்பொருட்டாக சாத்தான் யூதர்களை ஏவி விட்டான். எனவே, உடனடியாக பவுலை, எருசலேமை விட்டு வெளியேறும்படி கர்த்தர் கட்டளையிட்டார். அவ்விதமாக, அநேக பட்டணங்களில் பவுல் வல்லமையாக பிரசங்கித்தான், அற்புதங்களை செய்தான். பவுல் பிறவிச் சப்பாணியை சுகப்படுத்தியதினால், விக்கிரகங்களை சேவித்து வந்த அநேகர், அப்போஸ்தலருக்கு பலியை செலுத்த விரும்பினார்கள். பவுல் மிகவும் விசனமடைந்து, "மனுஷரே, ஏன் இப்படி செய்கிறீர்கள்? நாங்களும், உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்" என்று தேவனை உயர்த்திப் பேசினான். அப்படியிருந்தும், அவர்களுக்கு ஜனங்கள் பலியிடாதபடிக்கு அவர்களை அமர்த்துகிறது அரிதாயிருந்தது. உண்மையான தேவனின் மீது விசுவாசத்தை வைக்கவும், அவருக்குரிய கனத்தையும், ஸ்தோத்திரத்தையும் அவருக்கே செலுத்தவும், முதன்முறையாக இம்மக்கள் தங்களது இருதயங்களில் சிந்தித்துக் கொண்டே இருந்தார்கள். இவ்வேளையில், அவிசுவாச யுதர்கள் பலரை வெவ்வேறு பட்டணங்களிலிருந்து திரட்டி, பவுலின் செம்மையான ஊழியத்தை தகர்த்து விட சாத்தான் அவர்களை ஏவி விட்டான். இந்த யூதர்கள் எழும்பி, அந்த விக்கிரகக்காரர்களின் மனதை (பவுலைக் குறித்து பொய்யான தகவல்களைக் கொடுத்து) பவுலுக்கு விரோதமாக எழுப்பினார்கள். சற்று நேரத்திற்கு முன், பவுலை நன்றியோடும் பிரமிப்போடும் பார்த்த அந்த மனிதர்கள், திடீரென்று பவுல் மீது கல்லெறிந்து, அந்த பட்டணத்தை விட்டே விரட்டியடித்தார்கள். பவுல் மரித்ததுபோல் மூர்ச்சையானான். சீடர்கள் துக்கித்துக் கொண்டிருந்த சமயத்தில், பவுல் எழுந்து, அவர்களுடன் பட்டணத்துக்குள் பிரவேசித்தான். சீடர்கள் மகிழ்ந்தார்கள்.

பவுல் பிரசங்கித்துக் கொண்டிருந்த போது, ஒரு குறி சொல்லி ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த ஸ்திரீ, அங்கு வந்து, "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்; இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று உரக்கச் சொன்னாள். இப்படியாக அவள், அநேக நாட்களாக அப்போஸ்தலர்களை தொடர்ந்துக் கொண்டிருந்தாள். ஆனால், பவுல் வருத்தம்கொண்டான். ஏனெனில், அவளின் சத்தம் அநேகரை சத்தியத்திலிருந்து திசை திருப்பியது. இப்பெண்ணை இவ்விதமாக சாத்தான் ஏவியதன் நோக்கம் : மக்களின் கவனத்தையும் ஈடுபாட்டையும் தளர்த்துவதுதான். ஆனால், பவுல் தனக்குள்ளே ஆவியினால் நிரப்பப்பட்டவனாய், அந்த ஸ்திரீயை திரும்பிப்பார்த்து, அவளில் வசித்து வந்த தீய ஆவியை நோக்கி, "நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்கு கட்டளையிடுகிறேன்" என்று சொன்னான். உடனே அந்த ஆவி புறப்பட்டுப் போயிற்று.

அவளுடைய எஜமான்கள், தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப் போயிற்றென்று கண்டு, மூர்க்கங்கொண்டார்கள். குறி சொல்லும் திறனை வைத்து, அதிகமாய் சம்பாதித்து வந்த அவர்களுக்கு, இது ஒரு பேரிழப்பாக இருந்தது. சாத்தானின் நோக்கம் முறியடிக்கப் பட்டிருந்தது; ஆகிலும், அவனுடைய சகாக்களாகிய அந்த எஜமான்கள் சேர்ந்து, பவுலையும் சீலாவையும் பிடித்து, சந்தைவெளியிலுள்ள அதிகாரிகளிடத்தில் இழுத்துக்கொண்டு போனார்கள். அவர்களை அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு, அவர்களிடம், "யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்திலே கலகம்பண்ணி, ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும், அனுசரிக்கவும்தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள்" என்று குற்றம் சாட்டினார்கள். இதனை கேட்ட ஜனங்கள் அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அவர்களுடைய வஸ்திரங்களை கிழித்துப்போடவும், அவர்களை அநேக அடிகள் அடித்த பின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களை பத்திரமாய் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்கு கட்டளையிட்டார்கள். அவன் இக்கட்டளையைப் பெற்றவுடன், அவர்களை உட்காவலறையிலே வைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைத்தான். எனினும், தேவ தூதர்கள் பவுலோடும் சீலாவோடும் சிறையினுள் இருந்தார்கள். அவர்களுடைய சிறையிருப்பு தேவனின் மகிமையை வெளிப்படுத்தியது. தெரிந்துக்கொள்ளப்பட்ட ஊழியக்காரர்களோடும், அவர்கள் செய்து வரும் ஊழியங்களோடும் தேவன் இருக்கிறார் என்பதை உலகம் அறிந்துக்கொள்ளும் பொருட்டாக இந்த அனுபவம் நிகழ்ந்தது. தேவனால் சிறையின் சுவர்கள் அசைக்கப்படக் கூடுமென்றும், வலிமையான இரும்புக் கம்பிகள் உடைக்கப்படக்கூடுமென்றும் நிரூபிக்கப்படவேண்டும்!!

நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. தேவதூதன் எல்லாருடைய கட்டுகளையும் அவிழ்த்துப்போட்டான். சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலைசெய்துக்கொள்ளப்போனான். அப்பொழுது பவுல் சத்தமிட்டு, "நீ உனக்கு கெடுதி ஒன்றுஞ் செய்துக் கொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம்," என்றான். தேவ வல்லமையினால் தனது குறையை அந்த சிறைச்சாலைக்காரன் உணர்ந்தான். அவன் தீபங்களை கொண்டுவரச்சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்து வந்து, அவர்களிடம், "ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என வினவினான். அதற்கு அவர்கள், "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்று சொன்னார்கள். சிறைச்சாலைக்காரன் உடனடியாக, தன் வீட்டிலிருந்த அனைவரையும் அழைத்துவந்தான். அவனுக்கும் அவன் குடும்பத்தாருக்கும், பவுல், இயேசுவைக் குறித்து போதித்தான். அவன், அந்நேரத்திலேயே அவர்களை அழைத்துக்கொண்டுப் போய், அவர்களுடைய காயங்களை கழுவினான். அவனும், அவனுடைய வீட்டாரும் அந்த இரவிலேயே ஞானஸ்நானம் பெற்றார்கள். அதன்பின், அவர்களுக்கு உணவு அளித்து, தன் வீட்டாரோடு தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.

சிறைச்சாலைக் கதவுகள் திறக்கப்பட்டதும், காவலரின் குடும்பம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றதும் விசாலமாக பரவியது. தேவனின் மகிமை பிரஸ்தாபமடைந்தது. அதிகாரிகள் இவைகளைக் கேட்டு, கலங்கி, சிறைச்சாலைக்காரனை வரவழைத்து, பவுலையும் சீலாவையும் விடுதலையாக்கி விடும்படி கட்டளையிட்டார்கள். சிறைச்சாலைக்காரன் அவர்களை விடுவித்தபோது, பவுல் அவனிடம், ”ரோமராகிய எங்களை நியாயம் விசாரியாமல், வெளியரங்கமாய் அடித்து, சிறையிலே போட்டார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்களை விடுதலையாக்குகிறார்களோ? அப்படியல்ல, அவர்களே வந்து, எங்களை வெளியே அழைத்து அனுப்பிவிடட்டும்” என்றான். சேவகர்கள் அதிகாரிகளிடம் இவ்வார்த்தைகளை அறிவித்தார்கள். ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் அறிந்தபோது மிகவும் பயந்தார்கள். அவர்கள் வந்து, தயவாய் பேசி, அவர்களை வெளியே அழைத்துக்கொண்டு போய், பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப் போகும்படி கேட்டுக்கொண்டார்கள்.

பார்க்க : அப்போஸ்தலர் 14 : 1-28
அப்போஸ்தலர் 16 : 1-40

## அத்தியாயம் 16

# பவுல் எருசலேம் சென்றார்

மனம் திருந்திய பவுல், எருசலேமிற்கு வந்து இயேசுவைப் பற்றி பிரசங்கித்து, அவருடைய கிருபையின் மகத்துவத்தைக் குறித்தும் அறிவித்தான். தனது அற்புத மனந்திரும்புதலைக் குறித்து அவன் அறிவித்தது, ஆசாரியர்களையும், வேதபாரகரையும் கோபமடையச் செய்தது. அவனுடைய ஜீவனை அழிக்க வகை தேடினார்கள். ஆனால், தேவன் பவுலை அங்கிருந்து போய்விடும்படி கூறினார். பவுலோ, ”ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெப ஆலயங்களிலே அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிற போது, நானும் அருகே நின்று, அவனைக் கொலை செய்வதற்கு சம்மதித்து, அவனைக் கொலை செய்தவர்களின் வஸ்திரங்களை காத்துக்கொண்டிருந்ததையும், இவர்கள் அறிந்திருக்கிறார்கள்”, என்று கூறினான். தன்னுடைய அற்புத மாற்றத்தைக் குறித்த சாட்சியை மறுக்க இயலாமல், எருசலேமில் வாழ்ந்த யூதர்கள், இஃது நிச்சயமாகவே தேவ வல்லமையின் செயல்தான் என்று ஏற்றுக்கொள்வார்கள் என பவுல் எண்ணினான். ஆனால் இயேசுவோ, ”நீ போ, நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன்” என்று கூறினார்.

எருசலேமிலிருந்து அகன்றிருந்த நாட்களிலே, பவுல், வெவ்வேறு இடங்களுக்கு அநேக நிரூபங்களை எழுதினார். இந்நிரூபங்கள், பவுலின் அனுபவங்களை விவரித்து, மகா சாட்சியை சுமந்துச் சென்றது. ஆகிலும் சிலர், இந்த நிரூபங்களை அழிக்க முயற்சித்தார்கள். பவுலின் நிருபங்கள் வலிமை நிறைந்தவை என்றும், ஆனால், அவருடைய பிரசன்னமும், பேச்சும் நிந்தனைகள் நிறைந்தவை என்றும் முடிவெடுத்தார்கள்.

பவுலோ, கல்வியில் தேர்ச்சிப் பெற்றவன் என்றும், அவனுடைய ஞானமும் பண்பும் கேட்பவர்களைக் கவர்ந்தது என்றும் நான் கண்டேன்.

கல்விமான்களில் அநேகர், இவனது அறிவில் மயங்கி, இயேசுவை விசுவாசித்தார்கள். திரளான கூட்டத்திற்கு முன்பாகவும், இராஜாக்களுக்கு முன்பாகவும், அவன் பேசியபோதெல்லாம் தனது பேச்சுத்திறமையினால் அனைவரையும் செயலிழக்கச் செய்ததையும் நான் கண்டேன். இஃது வேதபாரகரையும், ஆசாரியர்களையும் வெகுவாக பாதித்தது. தனது ஆழமான விவாதங்களினால் உயர எழும்பி, தன்னை கவனிக்கின்ற யாவரையும் தன்னுடன் உயர்த்தி, கர்த்தரின் கிருபையின் ஐசுவரியத்தைக் காட்டி, கிறிஸ்துவின் அன்பையும் விவரிக்கும் திறமை பவுலுக்கு இருந்தது. அதேசமயத்தில், மிகவும் எளிமையான விதத்தில், சராசரி மனிதனின் கவனத்தையும் ஈர்த்து, அவனையும் இயேசுவின் சீடனாக மாற்றியது.

மீண்டும் எருசலேமிற்கு செல்லவேண்டும் என்றும். அங்கு தம் நாமத்தினிமித்தம் பாடனுபவிக்கவேண்டும் என்றும் தேவன் பவுலுக்கு வெளிப்படுத்தினார். அநேக ஆண்டுகளாக பாடுகளை சந்தித்து வந்த பவுலைக் கொண்டே இச்சிறப்பான ஊழியத்தைச் செய்ய தேவன் விரும்பினார். பவுலின் கட்டுகள் தேவனின் மகிமையை பிரஸ்தாபப்படுத்த உதவிய கருவிகளாகும். அவனுடைய விசாரனைகளுக்காக பல பட்டணங்களுக்கு இழுத்துச்செல்லப்பட்ட பவுல், தனது அற்புத சாட்சிகளினிமித்தமாக அநேக ராஜாக்களையும், அதிகாரிகளையும், மக்களையும் தேவனிடத்தில் திரும்பச் செய்தான். பவுலின் சாட்சிகள் மூலமாக அக்கப்பல் மாலுமிகளும், பயணிகளும் இயேசுவின் வல்லமையை அறிந்துக் கொண்டார்கள். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் பிரசங்கித்த பவுல், தனது பேச்சாற்றலினால் அநேக பிரபுக்களையும் கவர்ந்து, இயேசுவே மெய்யான தேவ குமாரன் என்று நம்ப வைத்தான். இவ்விதமாக அநேகர் சிந்தித்துக் கொண்டிருக்கையில், ஒருவன் பவுலிடம், ”நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப் பண்ணுகிறாய்” எனக் கூறினான். எனினும், பிற்காலங்களில் இதனைப் பற்றி ஆலோசிப்போம் என்ற தங்கள் நம்பிக்கையை தள்ளிப்போட்டார்கள். இந்த தாமதத்தை பயன்படுத்தி, சாத்தான் அவர்களுடைய இதயங்களை கடினப்படுத்தி, நித்தியமாக அவர்களை வசூசித்துப் போட்டான்.

சாத்தானின் கிரியைகள் என்னவென்று எனக்கு காட்டப்பட்டது. முதலாவதாக அவன், இயேசுவை தங்களது இரட்சகராக ஏற்காதபடி யூதர்களின் கண்களை மறைத்தான்; அடுத்தப்படியாக, இயேசுவின் வல்லமையான கிரியைகளின் மீது பொறாமை கெண்டதன் மூலமாக, அவருடைய ஜீவனையும் பறித்துப் போடும்படியாக அவர்களை வழி நடத்தினான். அவரின் சீடரைக்கொண்டே அவரை காட்டிக்கொடுத்து, சிலுவையில் அறைந்து, கொன்றுப்போட்டார்கள். இயேசு மரணத்தை ஜெயித்தெழுந்த போது, அவருடைய உயிர்த்தெழுதலை மறைக்கும்படியாக பொய்ச் சொல்லி, தங்கள் பாவங்களை அதிகமாக்கிக் கொண்டார்கள்.

இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல், தேவனுக்கு விரோதமாக எழும்பி, குற்றமற்ற அவருடைய இரத்தப்பழியையும் தங்கள் கைகளில் ஏந்திக்கொள்ளும்படி சாத்தான் அவர்களை ஏவினான். இயேசுவே தேவ குமாரன் என்பதை காட்ட எவ்வளவு அடையாளங்கள் இருந்தபோதிலும், அவரை ஏற்காமல், உலக இரட்சகராகிய அவரையே கொன்றுப் போட்டார்கள். தேவகுமாரனுக்கு விரோதமாக நிற்பதை தங்களுக்கு

கிடைக்கும் ஆறுதல் என்று நம்பினார்கள். எனவே, இயேசுவின் நாமத்தைப்போல் வேறு எதுவும் அவர்கள் செவிகளை சங்கடப்படுத்தவில்லை. அவர் சார்பில் யாதொரு சாட்சியத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவும் இல்லை. ஸ்தேவானின் சாட்சியின் போது, பரிசுத்த ஆவியானவர் தேவகுமாரனைப் பற்றி சாட்சியம் அளித்ததற்கு தங்கள் செவிகளை மூடிக்கொண்டார்கள். ஸ்தேவான் தேவமகிமையினால் மூடப்பட்டிருந்த வேளையில், அவனை கல்லெறிந்து கொலைச் செய்தார்கள். இயேசுவின் கொலை பாதகர்களை தன் கைவசத்தில் சாத்தான் வைத்திருந்தான். சாத்தானின் சித்தத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்திருந்தபடியால், அவர்களைக் கொண்டு, இயேசுவின் ஆதரவாளர்களை அவன் கொடுமைப்படுத்தி வந்தான். யூதர்களின் முலமாக புறஜாதிகளையும் இயேசுவிற்கு விரோதமாக திருப்பிவிட்டான். ஆகிலும், சீடர்கள் தங்களுடைய ஊழியங்களில் பெலப்படவும், தாங்கள் கண்டவைகளைக் குறித்தும் கேட்டவைகளைக் குறித்தும் சாட்சி பகரவும், அச்சாட்சியை தங்கள் இரத்தத்தின் மூலமாக முத்தரிக்கவும், தேவன் தமது தூதர்களை அவர்களிடத்தில் அனுப்பி வைத்தார்.

தனது பிடியில் யூதர்கள் இருப்பதைக் கண்ட சாத்தான், மகிழ்ந்தான். இன்னமும், அவர்களின் முறைமைப்படி பலியிடவும் மதச்சடங்குகளை பின்பற்றவும் செய்தார்கள். இயேசு சிலுவையில் தொங்கியபொழுது, தேவாலயத்தின் சீலை கிழிந்தது. இதனால், தேவன் ஆசாரியர்களை சந்தித்து, பலிகளை ஏற்றுக்கொள்ள அவசியமில்லாமல் போயிற்று. மேலும், யூதர்களுக்கும், புறஜாதியாருக்குமிடையே இருந்து வந்த பிரிவும் அவ்வேளையிலேயே முற்றுகை பெற்றது. தம்மையே இரட்சிப்பின் பலியாக ஈந்ததின் நிமித்தமாக, இயேசுவின் நாமமே இரட்சிப்பின் நாமம் என்கிற சத்தியம் இருதரத்தாருக்கும் பொருந்தியது.

இயேசு சிலுவையில் தொங்கியப்பொழுது, அவருடைய விலாவில் ஈட்டியால் ஒரு சேவகன் குத்தினான். அப்பொழுது, குருதியும், தண்ணீரும் தெளிவாக புறப்பட்டு வந்தது. அந்தக் குருதி, தம்மை விசுவாசிக்கிறவர்களின் பாவங்களை சுத்தம் செய்யும், அத்தண்ணீர், விசுவாசிகளுக்கு ஜீவனைக் கொடுக்கும்.

பார்க்க : மத்தேயு 27 : 51
யோவான் 19 : 34
அப்போஸ்தலர் 24 : 1 - 27
அப்போஸ்தலர் 26 : 1 - 32

## அத்தியாயம் 17
# பொய் மனச்சாட்சியின் காலம்

விக்கிரக வழிபாடுடைய அந்நியர்கள், கிறிஸ்தவர்களை கொடூரமாக துன்பப்படுத்தி, கொலைச் செய்த நாட்களுக்கு நான் எடுத்துச் செல்லப்பட்டேன். குருதி வெள்ளமாக ஓடிற்று. உயர்ந்தவர்கள், கல்விமான்கள், பொது மக்கள் என்ற பாகுபாடில்லாமல் இரக்கமற்ற விதத்தில் கொலைச் செய்யப்பட்டார்கள். தங்களுடைய மதத்தை விட்டுக் கொடுக்காததினால், பல ஐசுவரியவான்கள், தரித்திரராக ஆக்கப்பட்டனர்.

எத்தனை பாடுகளை அனுபவித்தாலும் தங்களது விசுவாசத்தை காத்து, தங்கள் நியமத்தையும் குறையாமல் பார்த்துக் கொண்டார்கள். தேவப் பிள்ளைகளின் துன்பங்களில் சாத்தான் களிகூர்ந்தான். ஆகிலும், தேவனுடைய பார்வையில் அவருடைய பிள்ளைகள் மிகவும் நேசிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் அனுபவித்த ஒவ்வொரு பாடும், அவர்களுக்கு பரலோகத்தில் பலனைக் கூட்டிக்கொண்டே இருந்தது. பரிசுத்தவான்களின் பாடுகளில் மகிழ்ந்த சாத்தான் திருப்தியடைய வில்லை. அவர்களுடைய சரீரத்தை மாத்திரமல்லாமல் மனதையும் ஆட்கொள்ள விரும்பினான். அக்கிறிஸ்தவர்கள் சகித்த பாடுகள், அவர்களை சகோதர அன்பில் திளைக்கச்செய்து, தேவனிடத்தில் நெருங்கி வர உதவியது. தேவனுக்கு விரோதமாக அவர்களை திருப்பிவிட்டால், தங்களுடைய மனோபலத்தையும், உறுதியையும் அழித்துவிடலாம் என்று சாத்தான் விரும்பினான். ஆயிரக் கணக்கானோர் கொலைச் செய்யப்பட்டபோதிலும், புதிய விசுவாசிகள் தோன்றி, அவர்களுடைய இடங்களை நிரப்பிக் கொண்டிருந்தார்கள். தனது பிரஜைகள் இயேசுவினிடத்தில் திரும்புகிறார்கள் என்பதை கவனித்த சாத்தான், தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு விரோதமாக இன்னமும் அதிகமாக செயல்படவேண்டும் என்று தீர்மானித்து, கிறிஸ்துவின் திருச்சபையின் மீது தன் கவனத்தை திருப்பினான். கிறிஸ்தவ நம்பிக்கையின் ஒரு பகுதியை மாத்திரம் தழுவிக்கொள்ளும்படி சிலரை ஏவினான். வேத சித்தாந்தங்களை களங்கப்படுத்த வகை தேடினான். அந்தப்படியே, சபையின் தரம் குறைந்து, அநேக விக்கிரகங்களை வழிபடுபவர்கள் சபையில் சேரத்துவங்கியதை நான் கண்டேன். அந்த விக்கிரக வழிபாட்டுக்காரர்கள், கிறிஸ்தவர்களாக மாறிய போதும், தங்களுடைய வழிபாடுகளையும் சபையில் சேர்க்க ஆரம்பித்தார்கள். வணங்குவதற்கு தகுதியான ஒருவராகிய தேவனோடு, பரிசுத்தவான்களின் உருவங்களையும், கிறிஸ்துவின் உருவத்தையும், இயேசுவின் தாயாகிய மரியாளின் உருவத்தையும் சேர்த்து, வழிபட ஆரம்பித்தார்கள். மெய்கிறிஸ்தவர்களில் அநேகரும் அவர்களோடு படிப்படியாக சேர்ந்துக்கொண்டார்கள். கிறிஸ்தவ சமயம் கலங்கப்பட்டு, திருச்சபையும் தனது சுத்தத்தையும் அதிகாரத்தையும் இழந்துப்போனது. ஆகிலும் சிலர், அவர்களோடுச் சேர விரும்பாமல், தங்களுடைய தூய்மையைக் காத்து, தேவனை மட்டுமே சேவித்தார்கள். எவ்விதமான விக்கிரகங்களையும் வணங்க அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

அநேகர் வீழ்ந்ததில் பெருமகிழ்ச்சி கொண்ட சாத்தான், தன்னுடைய திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்காத பிள்ளைகளுக்கு எதிராக, திருச்சபையில் கலகத்தை உண்டுபண்ணினான். இயேசுகிறிஸ்துவின் உண்மையான சபைக்கு எதிராக துன்பங்கள் மீண்டும் எரியத்துவங்கினது. இலட்சக் கணக்கானோர் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

காரியங்கள் இவ்விதமாக எனக்கு காட்சியளிக்க கப்பட்டது: திரளான விக்கிரக வழிபாட்டுக்காரர்கள் தங்கள் கரங்களில் கறுமை நிறக்கொடிகளை ஏந்திக்கொண்டிருந்தார்கள். அக்கொடிகளில், சூரியன், சந்திரன், நட்சத்திரங்களின் படங்கள் பொறிக்கப்பட்டிருந்தது. மற்றொரு கூட்டத்தினர் சுத்தமான வெள்ளைக்கொடியை ஏந்திக் கொண்டிருந்தார்கள். அக்கொடியில் தேவனுக்கே பரிசுத்தமுண்டாவதாக' என்று எழுதப்பட்டிருந்தது. அவர்களுடைய முகக்குறி உறுதியாகவும், பரலோக களையாகவும் இருந்ததை நான் கண்டேன். விக்கிரக வழிபடுபவர்கள்

இக்கூட்டத்தினரில் அநேகரை இரக்கமற்றுக் கொன்றார்கள். இருப்பினும் வெள்ளைக் கொடியை விடாமல் இறுக பற்றிக்கொண்டு தங்கள் நிலையில் மிக உறுதியாக நின்றார்கள். அநேகர் விழுந்தார்கள். ஆகிலும் மற்றவர்கள் அந்த இடங்களை நிரப்பி வந்தார்கள்.

கிறிஸ்தவர்கள் தங்கள் திட்டங்களுக்கு அடிபணியாததால், வேறொரு திட்டத்தை அவர்கள் வகுத்தார்கள். கறுப்புக் கொடியை சற்றே தாழ்த்தி, கிறிஸ்தவர்களிடம் இறங்கி வந்து, ஆலோசனைகளை கொண்டு வரவேண்டிய விஷயங்களை பேசத் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் இஃது முற்றிலுமாக மறுக்கப்பட்டது. சில மணி நேரம் சென்ற போது, அக்கிறிஸ்துவ கூட்டம் கலந்தாலோசனை செய்ததை நான் கண்டேன். அதில் சிலர், தங்கள் வெள்ளைக் கொடிகளை இறக்கவும், விக்கிரக வழிபாட்டுக்காரரின் கருத்துக்களை ஏற்கவும், அதினிமித்தமாக, தங்கள் ஜீவனைக் காத்துக்கொள்ளவும் முடிவு செய்தார்கள். ஆனால் வேறு சிலரோ, வெள்ளைக் கொடியை இறக்க மறுத்தது மட்டுமில்லாமல், அதனை இறக்குவதை விட, உயிரை மாய்த்துக்கொள்வது சால சிறந்தது எனக் கருதி, அக்கொடியை இறுக பற்றிக்கொண்டார்கள். இப்பொழுது, அநேக கிறிஸ்தவ சகோதரர்கள் தங்கள் கொடிகளை தாழ்த்தி, புறஜாதியாரோடு பிணைவதை கண்டேன். அதே சமயத்தில், விசுவாசத்தில் உறுதியாக இருந்தவர்கள், வெள்ளைக் கொடிகளை உயரப் பிடித்ததையும் நான் கண்டேன். இப்படி விக்கிரகக்காரர்களோடு சேர்ந்துக்கொண்டவர்கள், வெள்ளைக் கொடியை பற்றிக்கொண்டவர்களை அடிக்கடி துன்புறுத்த ஆரம்பித்து, அநேகரை கொலை செய்துப்போட்டார்கள். ஆகிலும், வெள்ளைக் கொடி உயரப் பறந்தது. அதனை தாங்கிப் பிடிக்க புதியவர்கள் எழும்பினார்கள்.

இயேசுவிற்கு விரோதமாக புறஜாதியாரை ஏவி விட்ட யூதர்கள் தப்பித்துக்கொள்ளவில்லை. அன்று, விசாரணை அறையிலே, "அவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் விழட்டும்" என அலறியவர்கள், பிலாத்துவின் விளக்கங்களுக்குக்கூட செவிசாய்க்கவில்லையே. தங்கள் தலைகளில் தாங்களே இழுத்துப் போட்டுக்கொண்ட இச்சாபம் யூத இனத்தை பிடித்து வாட்டியது. புறஜாதியாரும், கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டவர்களும் யூதருக்கு விரோதிகளானார்கள். கிறிஸ்துவின் சிலுவையின் மீது அளவுகடந்த பற்றை வைத்திருந்த கிறிஸ்தவர்கள், யூதருக்கு எவ்வளவு கஷ்டங்கள் வருமோ அந்த அளவுக்கு தேவன் சந்தோஷப்படுவார் என நம்பினார்கள். இந்தப்படியே, அநேக யூதர்கள் கொல்லப்பட்டார்கள்; பல இடங்களுக்கு சிதறியடிக்கப்பட்டார்கள்; பலவிதத்தில் தண்டிக்கவும் பட்டார்கள்.

கிறிஸ்துவின் இரத்தமும், சீடர்களின் இரத்தமும், அவர்கள் மேல் இருந்தது. தேவனின் சாபம் அவர்களை தொடர்ந்தபடியால், யூதர்கள், புறஜாதியாருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஏளனமாய் போனார்கள். காயீன் மீது சுமத்தப்பட்ட சாபத்தின் பங்காளிகள் போல, யாவராலும், யூதர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள்; மிகவும் வெறுக்கப்பட்டார்கள்; தரம் இழந்துப்போனார்கள். ஆகிலும், தேவன் அவர்களை பாதுகாத்து, உலகின் பல இடங்களுக்கு அவர்களை சிதறியடித்து, அவர்கள் மூலமாக தேவனுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும்படியாக சித்தம் கொண்டதை பிரமிப்புடன் நான் கண்டேன். குறிப்பாக, யூதர்கள் தேவனுடைய சாபத்தை சம்பாதித்தவர்கள் என்பதை உலகம் அறிந்துக்கொள்ள வேண்டும் என்று

தேவன் ஆசித்தார். ஒரு தேசமாக, யூதர்களை தேவன் புறக்கணித்தார். இருப்பினும், அவர்களில் ஒரு சிலர், தங்கள் இதயத் திரைகளை கிழித்து, உண்மையை உணர்வார்கள் என தேவன் அறிந்திருந்தார். சிலர், அவர்களைச் சார்ந்த தீர்க்கதரிசனங்களை உணர்ந்து, இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள்; அவர்களுடைய தேசத்தின் பாவத்தை காண்பார்கள். தனிநபர்களாக சில யூதர்கள் மனந்திரும்புவார்கள். ஆனால், ஒரு தேசமாக, தேவனால் நித்தியத்திற்கும் புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள்.

அத்தியாயம் 18

# பாவத்தின் மர்மம்

ஜனங்களின் கவனத்தை இயேசுவினின்று திருப்பி, மனிதர்களிடத்தில் கொண்டுவந்து, தனி நபரின் பொறுப்புகளை அழித்துவிடவேண்டும் என்பது, சாத்தானின் எண்ணமாக இருந்து வந்தது. தேவகுமாரனை சோதித்தபோது, சாத்தான், தனது எண்ணங்களில் தோல்வியடைந்தான். ஆனால், வீழ்ந்த மானிடனிடம் சற்றே வெற்றி கண்டான். கிறிஸ்தவ தத்துவங்கள் கெட்டுப்போயிற்று. போப்பும், ஆசாரியர்களும் தங்களையே உயர்த்திக்கொண்டார்கள். பாவ மன்னிப்பை பெறுவதற்காக, இயேசுவை நோக்க அவசியமில்லை என்றும், தங்களைப் பார்த்தாலே போதும் என்றும் போதித்தார்கள். வேதத்தை புறம்பே வைத்துவிட்டார்கள்.

ஜனங்கள் முழுமையாக ஏமாற்றப்பட்டார்கள் நிஜத்தில் சாத்தானின் பிரதிகளாக இருந்த ஆசாரியர்களை தேவனின் பிரதிகளாக ஏற்றுக்கொள்ளும்படி போதிக்கப் பட்டார்கள். பிரதான குருவையும், ஆசாரியர்களையும் வணங்கியபொழுது சாத்தானையே வணங்கினார்கள். தேவ வசனத்தை ஜனங்கள் நாடியபொழுது, அஃது அவர்களுக்கு கிடைக்காமல் செய்தார்கள். ஏனெனில், வேதத்தைப் படித்தால், தங்களுடைய சாயம் வெளுத்து, சத்தியம் வெளிச்சமாகி விடும் என்று பயந்தார்கள். எனவே, இந்த ஏமாற்றுக்காரர்களையே நோக்கி, இவர்களின் வாயிலிருந்து புறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் தேவனிடத்தில் இருந்து வந்ததாக நம்பவேண்டும் என்று ஜனங்கள் போதிக்கப்பட்டார்கள். தேவன் மாத்திரமே கட்டுப்படுத்தவேண்டிய மனதை இவர்களே கட்டுப்படுத்தி வந்தார்கள். ஒருவேளை, தன்னுடைய மனச்சாட்சிக்கு அஞ்சி மாறாக முடிவெடுக்க ஒருவன் துணிவானானால், இயேசுவின் மீது காட்டப்பட்ட அதே கோபத்திற்கும் வெறுப்பிற்கும் அவன் ஆளாக நேரிடும். இச்சமயங்களில் சாத்தான் மிகுதியாக வெற்றிக் கண்டதை நான் கண்டேன். தங்களுடைய விசுவாசத்தின் தூய்மையை காத்துக்கொள்ள துடித்த திரளான கிறிஸ்தவர்கள் கொடூரமாக கொலை செய்யப்பட்டார்கள்.

பரிசுத்த வேதாகமம் வெறுக்கப்பட்டு, முற்றிலுமாக அழிக்கப்படுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுக்காக கிறிஸ்து, தம்மையே அளிக்க முன் வந்தார். கிறிஸ்துவின் மரணம் பிதாவின் கற்பனையை அழித்துவிடவில்லை. மாறாக, அவருடைய மரணம், கற்பனைகளை கனப்படுத்தி, கீழ்ப்படிதலின் அவசியத்தையும் உணர்த்தியது. திருச்சபை தூய்மையாகவும், கற்பனைகளில் உறுதியாகவும் இருந்திருந்தால், சாத்தான் அவர்களை வஞ்சித்திருக்கக் கூடாமல் போய்

இருக்கும். இப்புதிய திட்டத்தில், தேவ இராஜ்ஜியத்தின் அஸ்திவாரத்தை நேரிடையாக தாக்கினான். அவனுடைய கலகம் அவன் பரலோகிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு வழி வகுத்தது. அவனுடைய கலகத்திற்குப் பின், தன்னை காத்துக் கொள்வதற்காக, கற்பைனையை சற்றே மாற்றி அமைக்க வேண்டும் என விரும்பினான். ஆனால் தேவனோ, கற்பனை மாற்றப்படக் கூடியதல்ல என்று திட்டமாக கூறிவிட்டார். எனவே, கற்பனையை மீறுவதற்கு ஏதுவாக ஜனங்களை திசை திருப்பிவிட்டால், அவர்களை எளிதாக தன் வசப்படுத்திக் கொள்ளலாம் என்று சாத்தான் நினைத்தான். கற்பனையை மீறுகின்ற யாவரும் மரித்தாக வேண்டுமே!

சாத்தான் இன்னமும் ஆழமாக செல்ல யோசித்தான். சிலர், தேவ கற்பனையின் மீது எல்லையற்ற ஈடுபாட்டுடன் இருந்ததினால், அவர்களை தன் வசப்படுத்திக் கொள்ள இயலாமல் சாத்தான் தவித்தான். எனவே, தேவன் வெளிப்படக்கூடிய கற்பனையாகிய நான்காம் கற்பனையின் மீது தன் கவனத்தை திருப்பினான். பரலோகத்தையும் பூமியையும் உண்டாக்கின ஒரே தேவனை காட்டிய ஓய்வுநாளின் கற்பனையை சிதைக்க முற்பட்டான். அப்படியே, இயேசுவின் மகிமையான உயிர்த்தெழுதலைக் காட்டி, ஏழாம் நாளிலிருந்து ஓய்வுநாளை முதலாம் நாளுக்கு மாற்றும்படி தூண்டினான். தன்னுடைய நோக்கம் நிறைவேற, இயேசுவின் உயிர்த்தெழுதலை சாத்தான் பயன்படுத்திக்கொண்டான். கிறிஸ்துவின் நண்பர்கள் கூட இக்குழப்பத்திற்கு ஆளானதில் சாத்தானின் குழுவிற்கு ஏக மகிழ்ச்சி. சிலர் பயந்தாலும், பிறர் ஏற்றுக்கொண்டார்கள். இத்தவறுகள் ஏற்கப்பட்டு, உற்சாகத்துடன் ஆதரிக்கவும் பட்டன.

வேத வாசிப்பு தடை செய்யப்பட்டது. கிடைத்த இப்பரிசுத்த புத்தகத்தின் பிரதிகள் அனைத்தும் சுட்டெரிக்கப் பட்டன. ஆகிலும், அவருடைய வசனத்தை தேவன் பாதுகாத்தார். வெவ்வேறு சமயங்களில் வெகு சில வேத பிரதிகளே இருந்தன. ஆகிலும், தேவன் தமது வார்த்தையை அழிக்க விடவில்லை. கடைசி நாட்களிலே ஏறக்குறைய அனைத்து இல்லங்களிலும் இப்புத்தகம் இருக்கும் அளவிற்கு தேவன் இதனை பெருக்கினார். வெகு சில பிரதிகள் மாத்திரமே இருந்த நாட்களில், அதனை வாசித்தவர்கள் அதன் மீது வைத்த வாஞ்சையையும், அதனை வாசித்தவர்கள் தங்களுக்கு தேவனோடும், இயேசுவோடும், சீடர்களோடும் சம்பாஷிக்கும் திருப்தியை அளிப்பதையும் நான் கண்டேன். அநேகரின் ஜீவன் இதனிமித்தமாக அழிக்கப்பட்டது. வேதப்புத்தகம் மிக இரகசியமாக வாசிக்கப்பட்டது. வாசிப்பது கண்டுபிடிக்கப்பட்டால், தலை துண்டிக்கப்படும் இடத்திற்கோ, கழுமரத்திற்கோ, பசியால் வாடிச் சாவதற்கோ அவர்கள் இழுத்துச் செல்லப்படும் நிலை இருந்தது.

மீட்பின் திட்டத்தை சாத்தானால் தடுக்க இயலவில்லை. இயேசு, சிலுவையில் மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இச்சம்பவத்தையும் தனக்கே சாதகமாக்கிக் கொள்ளமுடியும் என்று தன் தூதர்களிடம் சொல்லியிருந்தான். இயேசுவின் மரணத்தோடு முற்றுப்பெற்றிருந்த யூத பலிகளும் காணிக்கைகளும் மட்டுமல்லாது, பத்து கற்பனைகளும் முற்றுப்பெற்றதாக அறிவித்து, போதிக்கவேண்டும் என திட்டமிட்டான்.

சாத்தானின் இந்த உபாயத்திற்கு அநேகர் அடிமைகளானதை நான் கண்டேன். தேவனின் பரிசுத்த கற்பனைகள் மிதிக்கப்படுவதை, பரலோகமே

வெறுப்புடன் கலந்த கோபத்தோடு பார்த்துக்கொண்டிருந்தது. தேவ கற்பனைகளின் இயல்பை இயேசுவும், தூதர்களும் நன்கு அறிந்திருந்தார்கள். இக்கற்பனை மாற்றப்படவோ அழிக்கப்படவோ தேவன் ஒருக்காலும் சம்மதியார். மனிதனின் சீர்கேடான இந்த நிலைதான் பரலோகத்தில் மிகுந்த துக்கத்தை உண்டாக்கியது. முடிவாக, இயேசு, கற்பனைகளை மீறியவர்களுக்காகமரிப்பதற்காக தம்மையே ஒப்புகொடுத்தார். அவருடைய வார்த்தைகளில் காட்டப்பட்டிருந்த தேவனின் சித்தம், பிழைகளாலும் சம்பிரதாயங்களினாலும் மூடப்பட்டு, இதுதான் தேவனுடைய உண்மையான கற்பனை என்று போதிக்கப்பட்டது. பரலோகத்தை எதிர்த்து செய்யப்பட்ட இந்த ஏமாற்று வேலை, இயேசுவின் இரண்டாம் வருகை மட்டும் அநேகரை வஞ்சித்துக்கொண்டே இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகிலும், தேவனுக்கேற்ற விசுவாச சாட்சிகள் தோன்றிய வண்ணமே இருந்தனர். திருச்சபையின் துன்பங்களின் மத்தியிலும், இருளின் மத்தியிலும், தேவனுடைய உண்மையான கற்பனைகளை முழுமையாக கடைபிடித்து வந்த திரளான சாட்சிகள் வந்த வண்ணமே இருந்தனர்.

மகிமையின் ராஜாவின் பாடுகளையும் மரணத்தையும் ஆச்சரியத்தோடு பார்த்த தேவதூதர்கள், அவர் மரணக்கட்டுகளை தறித்து உயிருடன் எழும்பி வந்ததை ஆச்சரியத்தோடு பார்க்காதிருந்ததை நான் கவனித்தேன். இந்த இரண்டு நிகழ்ச்சிகளின் ஞாபகாரத்தமாக அமைந்தது கிறிஸ்துவின் சிலுவை மரணமே. ஆகிலும், இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் தேவனுடைய கற்பனையை மாற்றவோ அழிக்கவோ எத்தனிக்கவில்லை என்பதையும், மாறாக, கற்பனையின் மாறாத தன்மைக்கு இவைகள் பெரும் சாட்சிகளாக இருந்தது என்பதையும் நான் கண்டேன்.

முக்கியம் வாய்ந்த இவ்விரண்டு நிகழ்வுகளுமே தங்களுடைய ஞாபகார்த்த சின்னங்களை கொண்டிருந்தன. கர்த்தரின் இராப்போஜனத்தில் பங்கு கொள்வதின் மூலமாக, கர்த்தரின் வருகை மட்டும் அவருடைய மரணத்தை நாம் நினைவுக் கொள்கிறோம். இந்த ஞாபகார்த்த நிகழ்ச்சியின் மூலமாக அவருடைய பாடுகளும் மரணமும் நமது உள்ளங்களில் புதுமைப் படுத்தப்படுகின்றன. ஞானமுழுக்கின் மூலமாக, கிறிஸ்துவைப் போல அடக்கம் செய்யப்பட்டு, அவர் உயிர்த்தெழுந்ததின் அடையாளமாக, தண்ணீரிலிருந்து ஒரு புதுவாழ்வை தொடங்குவதற்காக வெளியே வருகிறோம்.

கர்த்தரின் கற்பனைகள் நித்தியமாக இருக்கப்போவதை நான் கண்டேன். இப்பூமியின் அஸ்திபாரங்கள் போடப்பட்ட சிருஷ்டிப்பின் நாளிலே பரலோகின் குடும்பமே களிகூர்ந்தது. அப்பொழுதே ஓய்வுநாளின் அஸ்திபாரமும் போடப்பட்டது. ஆறு நாட்களில் தனது சிருஷ்டிப்பின் வேலைகளை முடித்துவிட்டு, ஏழாம் நாளில் கர்த்தரே ஓய்ந்திருந்து, அதனை ஆசீர்வதித்து, பரிசுத்தமாக்கினார். மானிடனின் வீழ்ச்சிக்கு முன்பே, ஏதேன் தோட்டத்தில், ஆதாமும், ஏவாளும், பரம சேனைகளும், ஓய்வு நாளை அனுசரித்தார்கள். தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து, அதனை ஆசீர்வதித்து, பரிசுத்தப்படுத்தியதினால், ஓய்வுநாள் ஒருபோதும் அழிந்துப்போவதில்லை என்று நான் கண்டேன். மாறாக, பரிசுத்தவான்களும், தேவதூதர்களும் கர்த்தரை கனப்படுத்தும்படியாக, ஓய்வுநாளை நித்தியமாக அனுசரிப்பார்கள் என்றும் கண்டேன்.

## 53

பார்க்க : தானியேல் 7 : 1-28

ஐஐ தெசலோனிக்கேயர் 2 : 1-17

அத்தியாயம் 19

# மரணம், விசனத்தில் நித்திய ஜீவனல்ல

சாத்தான் தனது ஏமாற்று வேலையை ஏதேனில் தொடங்கினான். அவன் ஏவாளிடம், ”நீங்கள் சாகவே சாவதில்லை” என்று கூறினான். ஆத்துமாவின் அழிவில்லாமையைக் குறித்து, சாத்தான் போதித்த முதல் பாடம் இஃது. அந்நாளிலிருந்து இந்நாள் வரை இப்போதனையை விளக்கிவரும் சாத்தான், தேவப்பிள்ளைகளின் சிறையிருப்பு மாறும் நாள் வரை அதனை தொடர்வான். ஆதாமையும், ஏவாளையும் நான் காண நேரிட்டது. தடைச்செய்யப்பட்ட விருட்சத்தை அவர்கள் புசித்த மாத்திரத்தில், தேவன், ஜீவ விருட்சத்தை சுடரும் பட்டயத்தைக் கொண்டு காத்து, அவர்களை அத்தோட்டத்தை விட்டகற்றினார். அப்படியில்லாதிருந்தால், ஜீவவிருட்சத்தின் கனியையும் புசித்து, அவர்கள் நித்திய பாவிகளாக மாறிவிடுவார்களே! ஒரு தூதன், ”சுடர்வீசும் பட்டயத்தை கடந்து, ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்த ஆதாமின் குடும்பத்தினர் யாரேனும் உண்டோ?” என்று வினவியதை நான் கேட்டேன். அதற்கு வேறொரு தூதன், ”சுடர்வீசும் பட்டயத்தை கடந்து, ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்த ஆதாமின் குடும்பத்தினர் யாருமே இல்லை. எனவே நித்திய பாவியாக எவருமே இல்லை” என்று பதிலளித்தான். பாவம் செய்கின்ற ஆத்துமா நித்திய மரணத்தை அடையும்; உயிர்த்தெழுதலின் நம்பிக்கை அங்கு இல்லை.

தேவனின் வார்த்தைகளை திசை மாற்றி, அநேகரை வஞ்சித்துப்போட்ட சாத்தானை ஆச்சரியமாக பார்த்தேன். தேவன் கூறிய வார்த்தையில், பாவம் செய்யும் ஆத்துமா அழியும் என்றிருக்க, அப்படி அழிவதில்லை என்றும், அஃது நித்தியமாக விசனத்தில் வாழும் என்றும் சாத்தான் கூறிவந்தான். ஒரு தேவதூதன், ”வேதனையாக இருப்பினும் மகிழ்ச்சியாக இருப்பினும், ஜீவன் ஜீவன்தான். ஆனால் மரணத்தில் வேதனையும் இல்லை, மகிழ்ச்சியும் இல்லை, வெறுப்பும் இல்லை” என்று விளக்கமளித்தான்.

”நீங்கள் சாகவே சாவதில்லை” என்று ஏதேனில் ஏவாளிடம் கூறிய அதே வார்த்தைகளையும், ஏமாற்றலையும் தொடர்ந்து கையாண்டு வரும்படி தனது தூதர்களுக்கு சாத்தான் கட்டளையிட்டிருந்தான். மக்கள் இதனை ஏற்று, மனிதனுக்கு சாவு இல்லை என்று எண்ணி, பாவிகள் நித்தியமாக வேதனைப்படவேண்டுமென நம்பினார்கள். இப்படி செய்ததின் மூலமாக, சாத்தான், தேவனை ஒரு கொடுங்கோலனாக விவரிக்க துவங்கினான். தேவனை திருப்தி படுத்தாதவர்களை நரகத்தில் தள்ளி விடுவார் என்றும், அவருடைய கோபத்தை அவர்கள் நித்தியமாக உணரவேண்டும் என்றும், சொல்லிமுடியாத வேதனையை அனுபவிக்கவேண்டுமென்றும், அப்பொழுது தேவன், அவர்களின் வேதனையைப் பார்த்து திருப்தி அடைவார் என்றும் தனது பிரதிகளின் மூலமாக கிரியை செய்வதற்கு சாத்தான் தீர்மானித்தான். இந்த யுக்தியில் வெற்றிக் கண்டால், அநேகர், தேவனை நேசிப்பதற்கு பதிலாக அவரை வெறுப்பார்கள் என்பதை சாத்தான் அறிந்திருந்தான். மேலும் அநேகர்,

கர்த்தருடைய வார்த்தைகளின் எச்சரிப்புகள் நிஜத்தில் நிறைவேறப்போவதில்லை என்று எண்ணுவார்கள்; ஏனெனில், அன்பும் இரக்கமும் கொண்ட தேவனின் குணாதிசயத்திற்கு இஃது முற்றிலும் விரோதமானதல்லவா? இப்படியொரு குழப்பத்தை ஒரு பக்கத்தில் உண்டாக்கிய சாத்தான், வேறொரு மிதமிஞ்சிய சூழ்ச்சியையும் விடுவித்தான். அதில், தேவனின் நீதியையும், எச்சரிப்புகளையும் முற்றிலுமாக மறைத்துவிட்டு, அவர் மிகவும் கிருபை உள்ளவர் என்பதால் எவரும் மடிந்துப் போவதில்லை என்றும், பாவிகளும் பரிசுத்தவான்களும் இறுதியாக இரட்சிக்கப்படுவார்கள் என்றும் விளக்கினான். இவைகளினிமித்தமாக, வேதவசனங்கள், பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டவைகள் அல்ல என்று மனிதர்கள் எண்ணத் தொடங்கினார்கள். வேதாகமம் அநேக நன்மையான காரியங்களை போதிக்கிற போதிலும், நித்திய வேதனையின் கோட்பாடுகளை கொண்டிருப்பதினால், அஃது நேசிக்கப்படவோ, நம்பப்படவோ தகுதியற்றது என்று மனிதர்கள் விவாதித்தார்கள்.

இன்னும் ஒரு வகுப்பினரை, தேவன் இல்லை என்கிற வாதத்திற்குள்ளாக சாத்தான் எடுத்துச்சென்றான். தேவனின் குணம் நிலையற்றது என்றும், மக்களை நித்திய வேதனைகளால் வாதிக்கிறார் என்றால் அவர் தேவனே இல்லையென்றும் அவர்கள் விவாதித்தார்கள். தேவனையும் வேதப்புத்தகத்தையும் மறுதலித்து, மரணத்தை நித்திய உறக்கமாக கருதினார்கள்.

தைரியமில்லாதவர்களை பாவம் செய்யத் தூண்டிவிட்டு, அவர்கள் பாவம் செய்தபின், பாவத்தின் சம்பளம் மரணம் இல்லை என்றும், பாவத்தின் சம்பளம் நித்திய வேதனை என்றும் நம்பவைத்தான். நித்திய நரகத்தை பெரிதாக்கி, பயந்த சுபாவமுள்ளவர்களை சிந்தனையிழக்கச் செய்தான். அதற்கு பின், சாத்தானோடு நாஸ்திகர்களும் இணைந்து கிறிஸ்தவர்கள் மீது நிந்தனைகளை வீசினார்கள். இவையனைத்தும், தேவ வசனத்தின் மீதும், தேவனின் மீதும் வைக்கப்பட்டிருந்த நம்பிக்கையினிமித்தமாக நிகழ்ந்தது என்றும் ஜனங்களை நம்ப வைத்தான்.

சாத்தானின் துணிச்சலான இச்செயலால் பரலோகமே கொதித்தது. தேவதூதர்களால் எளிதாக எதிரிகளின் கட்டுகளை தகர்த்தெறிய முடியுமென்றிருக்க, ஏன் இத்தனை இன்னல்கள் அனுமதிக்கப்படவேண்டும் என்று நான் கேட்டேன். தேவன், பெலவீனமான பாவிக்கும் உதவும் வகையில், தம்முடைய வார்த்தைகளை எழுதி வைக்கும்படி கட்டளையிட்டார். இவ்வார்த்தைகளில் தேவனின் திட்டங்கள் மிகத்தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. மனிதனிடம் தனது வார்த்தைகளை கொடுத்த கர்த்தர், அதனை யாரும் அழித்துவிடாதபடி பாதுகாத்துவந்தார். பிற புஸ்தகங்கள் அழிக்கப்பட்டாலும், பரிசுத்த வேதாகமம் நித்தியமானதாகும். கடைசி நாட்களில், சாத்தானின் கிரியைகள் துரிதப்படுத்தப்படும்பொழுது, கர்த்தரின் வேதப்புஸ்தகம் அனைவரின் கரங்களில் இருக்கும் வகையில், தேவன் அதை பலமடங்காக அதிகரித்தார். இதனிமித்தமாக, தனது சித்தத்தை மனிதனுக்கு வெளிப்படுத்தி, சாத்தானின் சகல சூழ்ச்சிகளுக்கும் தப்பித்துக்கொள்ள அவசியமான வழிமுறைகளையும் வேதத்தின் மூலமாக பரிந்துரைத்தார்.

தேவன் வேதாகமத்தை சிறப்பாக பாதுகாத்து வந்ததை நான்

கண்டேன். ஆகிலும் கற்றவர்கள், சில இடங்களில் அவர்களுடைய சம்பிரதாய கோட்பாடுகளுக்கு இணங்கி, வார்த்தைகளை மாற்றினார்கள். வேதத்தை தெளிவு படுத்துவதாகக் கூறி, தங்கள் எண்ணங்களை அங்கு புகுத்தார்கள். ஆகிலும், பரிசுத்த வேதாகமம் ஒரு பூரணச்சங்கிலி என்பதையும், அதின் ஒரு பகுதி மற்றொரு பகுதியை விளக்கிக் காட்டுகிறது என்றும் நான் கண்டேன். சத்தியத்தை உண்மையாக தேடுகிறவர்கள் பயப்படத் தேவையில்லை, தவறிப்போகவும் அவசியமில்லை. ஏனெனில், தேவ வசனங்கள் தெளிவாக கொடுக்கப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், ஒத்தாசையாக பரிசுத்த ஆவியானவரும் நமக்கு அருளப் பட்டிருக்கிறார், அல்லவா?

மனிதனின் மனோசக்தியை கட்டுப்படுத்தும் அதிகாரம் தூதர்களுக்கு அருளப்படாததை நான் கண்டேன். தேவன், மரணத்தையும் ஜீவனையும் மனிதனுக்கு முன்பாக வைக்கிறார். தெரிந்தெடுத்தல் மனிதனுடையது. அநேகர் ஜீவனை நாடுகிறார்கள். ஆகிலும், விசாலமான சாலையில் கடந்துச் செல்கிறார்கள்.

குற்றம்புரிந்த மனிதனுக்காக தமது ஒரே குமாரனை தந்தருளியதில், தேவனின் இரக்கத்தையும், அன்பையும் நான் கண்டேன். அவர்களுக்கென்று தியாக விலைக்கொடுத்து வாங்கப்பட்ட இலவச இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள விரும்பாதவர்கள், தண்டிக்கப்பட வேண்டும். தேவன் படைத்த பிராணிகள் அவருடைய ராஜ்ஜியத்துக்கு எதிராக எழும்பினது; ஆகிலும் கர்த்தர், அவர்களை நித்தியமாக வேதனையை அனுபவிக்கும்படி அவர்களை நரகத்தில் தள்ளிவிடவில்லை. பாவ நிலையில், அவர்களை பரலோகத்திற்கு எடுத்துச் செல்ல இயலாது. அதே நேரத்தில் அவர்களை, நித்தியமாக நரகத்தில் தள்ளவும் மாட்டார். ஆனால், துன்மார்க்கர்களை இப்பூமியிலிராதபடி அழித்துப்போடுவார். இஃது நிறைவேறும் நாளிலே, பரம சேனைகள் இணைந்து "ஆமென்" என்று சொல்வார்கள்.

கிறிஸ்துவின் பெயரை சுமந்தும், தனது வலைகளில் அகப்பட்டுக்கொண்ட மக்களை பார்த்து, சாத்தான் பூரித்துப்போனான். இன்னமும் அதிகமான மாயைகளை உண்டாக்க விரும்பிய சாத்தான், அதிகமாக வலிமையடைந்தான். அவனுடைய பிரதிகளாகிய போப்பாண்டவரையும், ஆசாரியர்களையும் சுய கௌரவத்தினால் ஈர்த்து, இயேசுவின் விசுவாசிகள் மீது தாக்கங்களை ஏற்படுத்தினான். கிறிஸ்துவின் நம்பிக்கையான சீடர்களின் மீது தனது தூதுவர்களை சாத்தான் ஏவினான். எத்தனை பாடுகள்! எத்தனை துன்பங்கள்!! இவை அனைத்தையும் தேவதூதர்கள் குறித்து வைத்திருக்கிறார்கள். இதை செய்த தூதர்களிடம், சாத்தானும் அவனுடைய தூதர்களும் வந்து, விசுவாசமாக இருந்த யாவரையும் கொலை செய்யப்போவதாகவும், அதன்பின் யாதொரு உண்மையான கிறிஸ்தவனும் இருக்கப் போவதில்லை என்றும் எச்சரித்தார்கள். அச்சமயத்தில், தேவனின் திருச்சபை தூய்மையாக இருந்ததை நான் கண்டேன். கேடான இதயங்கள் கொண்ட மனிதர்கள் யாரும் திருச்சபைக்குள் வரவில்லை. ஏனெனில், உண்மையான கிறிஸ்தவன், சாத்தான் வகுத்து வைத்திருந்த அனைத்து உபாதைகளுக்கும் அடிபணிந்து, விசுவாசத்தை தளரவிட்டுவிடாமல் நிலைத்து நின்று மடிந்துப்போனதை நான் கண்டேன்.

பார்க்க : அதியாகமம் 3 : 1 – 24
பிரசங்கி 9 : 5 ; 12 : 7
லூக்கா 21 : 33
யோவான் 3 : 1
ஐஐ தீமோத்தேயு 3 : 16
வெளிப்படுத்தல் 20 : 14-15 ; 21 : 1;
22 : 12 – 19

அத்தியாயம் 20

# சீர்திருத்தம்

அநேக சாட்சிகள் துன்புறுத்தப்பட்டும், கொலைச் செய்யப்பட்டும் வந்தபோதும், புதிய சாட்சிகள் எழும்பிக் கொண்டே இருந்தனர். தேவ தூதர்கள் தங்களுடைய சேவைகளை செவ்வன செய்து வந்தார்கள். இருளான இடங்களிலிருந்து, தேவனிடத்தில் விசுவாசமுள்ள நபர்களை தேவதூதர்கள் தேடிப்பிடித்தார்கள். பாவத்திலிருந்து சவுலை தெரிந்துக்கொண்டது போல, அநேகரை தெரிந்துக்கொண்டு, அவர்கள் மூலமாக தனது சத்தியத்தை தாங்கவும், பாவத்திற்கு எதிராக குரல் எழுப்பவும் தேவன் முற்பட்டார். மார்ட்டின் லூத்கரின் மீதும், மெலன்க்தான் மீதும், வேறு அநேகரின் மீதும் தேவ தூதர்கள் அசைவாடினார்கள். எதிராளியானவன் வெள்ளம் போல் புகுந்திருந்தான். எனவே அவனை எதிர்கொள்ள சபையின் தரம் திடமாக உயர்த்தப்படவேண்டும். விழுந்துப் போன திருச்சபையின் கோபத்தை எதிர்த்துப் போராடி, விசுவாசத்தில் நிலைத்திருந்த சிலரை பெலப்படுத்துவதற்காக மார்ட்டின் லூத்தர் தெரிந்துக்கொள்ளப்பட்டார். தேவனை வேதனைப் படுத்துவதைக் கண்டு மிகவும் பயந்திருந்த லூத்தர், கிரியைகளின் மூலமாக தேவனின் கிருபையை பெற்றுக்கொள்ள முடியும் என்று விசுவாசித்து வந்தான். ஆகிலும், அதில் திருப்தியில்லாமல் இருந்த அவனுக்கு பரலோகிலிருந்து கிளம்பிய ஒரு ஒளி, சத்தியத்தை தெளிவுப் படுத்தியது. அதிலிருந்து, தனது கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவின் இருத்தத்தினாலே எல்லாம் கூடும் என்று விசுவாசித்தான். அஃதோடு, தான் பிதாவினிடத்தில் வருவதற்கு இயேசுதான் ஒரே வழி என்றும், போப்பாண்டவர் மூலமாகவோ, வேறு ஆசாரியர்கள் மூலமாகவோ செல்ல அவசியமில்லை என்றும் புரிந்துக்கொண்டான். இந்த அறிவு லூத்தருக்கு மிகவும் விசேஷமானதாக இருந்தது! தனது இருளான சிந்தையிலிருந்து உதித்த வெளிச்சத்தைக் குறித்த மிகவும் மகிழ்ந்தான். தேவ வசனம் புதிதாக தோன்றியது. எல்லாம் மாறிப்போயிற்று. எவ்வித அழகுமில்லை என்று தான் நினைத்திருந்த வேதப்புத்தகம், இப்பொழுது லூத்தருக்கு ஜீவனாக இருந்தது!! அது அவனுடைய மகிழ்ச்சியும், ஆறுதலும், ஆசிரியனுமாய் இருந்தது. அதனை தியானிப்பதை விட்டு நகர மனதில்லாதிருந்தான். மரணத்தைக் குறித்து பயந்திருந்த அவன், இப்பொழுது சகல பயங்களையும் மேற்கொண்டவனாக, தேவனை ஆழமாக நேசிக்க ஆரம்பித்தான். வேதாகமத்தை ஆழமாகப் படித்தான். அதிலிருந்த அநேக பொக்கிஷங்களைக் கண்ட அவன், திருச்சபையைக் குறித்த விளக்கங்களை தேடினான். தனது இரட்சிப்பிற்காக எவர் மீதெல்லாம் நம்பிக்கை வைத்திருந்தானோ, அவர்களுடைய

பாவங்களை கண்டு கோபமடைந்தான். தன்னை மறைத்திருந்த இருள் இன்னமும் அநேகரை மறைத்திருப்பதை உணர்ந்தான். உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கும் ஒரே ஆட்டுக்குட்டியை அவர்களுக்கு காட்டவேண்டும் என்று வாஞ்சித்து, ஒரு நல்ல வாய்ப்பிற்காக காத்திருந்தான். கத்தோலிக்கத் திருச்சபைக்கு எதிராக தனது குரலை எழுப்பிய லூத்தர், இருளில் அடைப்பட்டிருந்த அனைவரையும் விடுவிக்கவிரும்பினான். அத்திருச்சபையின் பாவங்களையும் பிழைகளையும் தெளிவுப் படுத்திய லூத்தர், கிறிஸ்துவின் கிருபையையும் அவர் மூலமாக கிடைக்கக்கூடிய உன்னத இரட்சிப்பையும் அறியாதவர்களுக்கு அதனை அறிவிக்கவும் துடித்தான். உற்சாகமாக தனது குரலை எழுப்பி, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே, திருச்சபையில் நிலவிய பாவங்களையும், அத்திருச்சபை தலைவர்களின் துன்மார்க்கத்தனத்தையும் வெளிக்காட்டினான். ஆசாரியர்களிடமிருந்து எதிர்ப்பு கிளம்பியபோதிலும் அவன், தளர்ந்துவிடவில்லை. ஏனெனில் அவன், தேவனின் புயத்தில் உறுதியாக சாய்ந்து, அவரை முற்றிலுமாக நம்பினான். சபையின் தலைவர்களோ சீர்த்திருத்தங்களை விரும்பவில்லை. மாறாக, உல்லாசமான சுகபோகத்திலும், துன்மார்க்கத்திலும், இருளிலும் இருப்பதையே விரும்பினார்கள். திருச்சபையையும் இருளிலேயே வைக்க விரும்பினார்கள்.

சத்தியத்தை எடுத்துறைப்பதிலும், பாவத்தை நிந்திப்பதிலும், லூத்தருக்கு இருந்த தைரியத்தையும், பயமின்மையையும், உற்சாகத்தையும் நான் கண்டேன். தீய மனிதர்களைக் குறித்தோ பிசாசுகளைக் குறித்தோ அவன் கலங்கவில்லை. அவர்கள் அனைவரைக் காட்டிலும் அதிக வல்லமையுள்ளவர் தன்னுடன் இருப்பதை லூத்தர் அறிந்திருந்தான். வைராக்கியத்தையும், தைரியத்தையும் பெற்றிருந்த லூத்தருக்கு உதவியாக குணத்தில் முற்றிலும் மாறுபட்ட மெலன்க்தானை கர்த்தர் தெரிந்துக்கொண்டார். மெலன்க்தான் பயந்த சுபாவமுள்ளவனும் மிகுந்த பொறுமையுள்ளவனுமாய் இருந்தான். தேவனை மிகவும் நேசித்த அவன், வேத அறிவில் தேறியவனும், சிறப்பான ஞானத்தை பெற்றவனுமாக இருந்தான். லூத்தரைப் போலவே தேவ ஊழியத்தில் நாட்டம் கொண்டிருந்தான். இவர்கள் இதயங்களை தேவன் இணைத்தார். இணைபிரியாத தோழர்கள் ஆனார்கள். மெலன்க்தான் பயந்து மெதுவாகச் சென்றபோது, லூத்தர் அவனை உற்சாகப்படுத்தி உதவினான்; லூத்தர் வெகு விரைவாக அவசரமாக செயல்பட்டுவிடபாதபடி மெலன்க்தான் கட்டுப்பாடுகளை விதித்து வந்தான். மெலன்க்தானின் ஜாக்கிரதையான போக்கு, அநேக பிரச்சனைகளை தவிர்த்தது. லூத்தரின் வேகத்தினால், சீர்திருத்த வேலைகள் துரிதமாக நடந்தன. சீர்திருத்தப் பணிகளுக்காக இரண்டு மாறுபட்ட நபர்களை தெரிந்துக்கொண்ட தேவனின் ஞானத்தை எண்ணி நான் பிரமித்தேன்.

அப்போஸ்தலரின் நாட்களுக்கு நான் எடுத்துச் செல்லப்பட்டேன். அங்கு தேவன், ஆர்வம் கொண்ட பேதுருவையும், சாந்தமும் பொறுமையும் நிறைந்த யோவானையும் ஊழியத்திற்கென்று தெரிந்துக்கொண்டதைக் கண்டேன் சில சமயங்களில் பேதுரு தீவிரமிக்கவனாக இருந்தான். யோவானின் அன்பான சிந்தனைகள் பேதுருவை ஆரம்பத்தில் திருத்தவில்லை. ஆகிலும், இயேசுவை மறுதலித்து, மனந்திரும்பிய பின்னர், யோவான் கூறிய சிறிய விஷயங்கள் கூட பேதுருவின் வேகத்தை கட்டுப்படுத்தின. பேதுருவின் தைரியமும், மன உற்சாகமும் அவர்களது

எதிராளிகளை அமைதியாக்கி, அநேக இக்கட்டுகளுக்கு அவர்களை தப்புவித்தது. யோவானின் சாந்த குணத்தால் அநேகரை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்தான்.

போப்பாண்டவரின் சபையின் பாவங்களை எதிர்த்து, சீர்த்திருத்தப் பணியை துரிதப்படுத்தும்படி, தேவன், மனிதர்களை எழுப்பினார். இத்தகைய சாட்சிகளை அழிக்க சாத்தான் வகைதேடினான். ஆனால், தேவன் அவர்களைச் சுற்றிலும் காப்பு வேலி அமைத்தார். சிலர், தங்களது இரத்தம் சிந்தி தேவ நாமத்திற்கு மகிமை சேர்த்தார்கள். பிறர் (லூத்தர், மெலன்க்தான் போன்றவர்கள்), போப்பாண்டவர்கள், ஆசாரியர்கள் மற்றும் ராஜாக்களுக்கு எதிராக தங்களது குரலை உயர்த்தி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். தெரிந்துக்கொள்ளப்பட்ட இம்மனிதர்கள் மூலமாக இருளை நீக்கும் சத்திய ஒளி உண்டாயிற்று. அநேகர் இந்த ஒளியை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார்கள். ஒரு சாட்சி கொல்லப்பட்டபோது வேறு சிலர் எழும்பி அவ்விடத்தை நிரப்பினார்கள்.

ஆகிலும் சாத்தான் திருப்தியடையவில்லை. சரீரத்தின் மேல் மட்டுமே அவனுக்கு அதிகாரம் இருந்தது. விசுவாசிகளை, தங்கள் நம்பிக்கையை துறக்கச் செய்ய இயலவில்லை. மரண இக்கட்டுகளிலும் கூட, உயிர்த்தெழுதலின் நம்பிக்கையில் பூரணப்பட்டவர்களாக, உற்சாகமாகவும் உறுதியாகவும் இருந்து வந்தனர். மனித வலிமையைக் காட்டிலும் அதிகமான வலிமையை அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆவிக்குரிய எதிரிகளை எதிர்கொள்ளவும், மனிதரூபத்தில் பிரச்சினைகளை உண்டாக்கி சாத்தானை எதிர்த்து நிற்கவும், எப்பொழுதும் விழிப்புடன் இருந்தார்கள். தமது நாமத்தை தரித்திருக்கும் கோடான கோடி மாந்தரைக் காட்டிலும், மரணபரியந்தமும் விசுவாசத்தில் உறுதியாய் நின்ற சாட்சிகளின் மீது தேவன் மிகவும் பிரியமாயிருந்தார். திருச்சபை துன்புறுத்தப்பட்ட சமயங்களில் விசுவாசிகள் ஒற்றுமையாகவும் அன்பாகவும் இருந்தார்கள். கர்த்தரின் பட்சத்தில் பெலனடைந்திருந்தார்கள். இந்த ஐக்கியத்தில், பாவத்தை விரும்பியவர்களுக்கு இடமில்லாமல் போயிற்று. கிறிஸ்துவிற்காக அனைத்தையும் விட்டு வர மனதாயிருந்தவர்கள் மாத்திரமே சீடர்களாக இருந்தார்கள். அவர்கள் கிறிஸ்துவைப்போல, ஏழ்மையையும் தாழ்மையையும் தரித்தவர்களாக இருந்தார்கள்.

பார்க்க : லூக்கா 22 : 61-62
யோவான் 18:10
அப்போஸ்தலர் 3 : 1-26
அப்போஸ்தலர் 4 : 1-37

* மேலும் படிக்க : கலைக்களஞ்சிய நூலில் ”சீர்திருத்தம்” என்கிற தலைப்பின் கீழ் படிக்கவும்.

அத்தியாயம் 21

# திருச்சபையும் உலகமும் ஒருமுகமானது

தாங்கள் அபகரித்திருந்த காரியங்களைக் குறித்து சாத்தானும் அவனுடைய தூதர்களும் கலந்தாலோசித்தார்கள். சிலரை பயத்தினால் நிறைத்து, சத்தியத்தை ஏற்காமல் இருக்கச் செய்தார்கள் என்பது

உண்மைதான். ஆனால், அநேகர் பயத்தைத் துறந்து தைரியமடைந்து, சத்தியத்தை ஏற்றுக்கொண்டார்கள். தங்களுடைய முன்னோடிகளின் விசுவாசத்தையும் உறுதியையும் பார்த்த அவர்கள், தேவனும் அவருடைய தூதர்களும் இவர்களுக்கு பணிவிடைச் செய்தார்கள் என்பதை அறிந்துக்கொண்டார்கள். இவர்கள் அனைவரும் தங்களது ஜீவனை கிறிஸ்துவுக்காக கொடுக்க தயக்கமில்லாமல் முன்வந்தது, கொலைகாரர்களையே மிரள வைத்தது. இவ்விதமாக சாட்சிகளை வசப்படுத்த இயலாத சாத்தான், வேறு யுக்தியை ஆயத்தப்படுத்தினான். அவன் ஏற்கனவே சபையின் கோட்பாடுகளை களங்கப்படுத்தியிருந்தான். சம்பிரதாயச் சடங்குகளை விரும்பிய லட்சக்கணக்கானோர் இந்த இழிவான கோட்பாடுகளில் வேரூன்ற ஆரம்பித்தார்கள். இதனை பயன்படுத்தி, விசுவாசம் அல்லாமல், உலகின் சம்பிரதாயங்களை ஊக்குவிக்கும்படி சபையை நடத்த வேண்டுமென சாத்தான் திட்டம் வகுத்தான். உலக மரியாதையையும், ஆதரவையும் எதிர்பார்க்க ஆரம்பித்திருந்த திருச்சபை, தேவனுடைய ஆதரவை இழக்க ஆரம்பித்தது. சுகபோகப்பிரியரையும், உலக சிநேகிதர்களையும் வெளியே நிறுத்திய கற்பனைகளை எப்பொழுது திருச்சபை தொலைத்துப்போட்டதோ, அப்பொழுதே சபையின் வல்லமையும் படிப்படியாக குறைய ஆரம்பித்தது.

நிந்தைகளின் நெருப்பு சுட்டெரித்த காலங்களில் காணப்பட்ட திருச்சபையின் விசுவாசிகள், இப்போது காணாமல் போயிருந்தார்கள். பொன்னின் மகிமை மங்கியது எப்படி? பசும்பொன்னின் மகிமை மாறியது எப்படி? திருச்சபைக்கே உரிய நற்பண்புகளையும் கற்பனைகளையும் கைக்கொண்டிருந்தால், பரிசுத்தஆவியின் வல்லமை சபைக்கு இருந்துக்கொண்டே இருந்திருக்கும். நோயாளிகள் சுகமடைந்திருப்பார்கள், பிசாசுகள் விரட்டியடிக்கப்பட்டிருக்கும், தனது எதிராளிகளுக்கு சிம்ம சொப்பனமாக திருச்சபை திகழ்ந்திருக்கும்.

கிறிஸ்துவின் நாமத்தை தரித்திருந்த திரளான கூட்டத்தை நான் கண்டேன். தம்முடையவர்கள் என்று தேவன் அவர்களை அடையாளம் காணாதிருந்தார். அவர்களால் அவருக்கு சந்தோஷம் இல்லாதிருந்தது. கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் குறித்து தாங்களே நினைத்துக்கொள்ள வேண்டுமென்று சாத்தான் ஆலோசனை கூறினான். இயேசுவையும், அவருடைய சிலுவை மரணத்தையும், உயிர்த்தெழுதலையும், அனைவரும் நம்ப வேண்டுமென சாத்தான் விரும்பினான். அவனும் அவனுடைய தூதர்களும் இவைகளை விசுவாசித்து, கலங்கினார்கள். ஆகிலும், இந்த விசுவாசம், ஒருவரை நல்ல கிரியைகளில் ஈடுபட தூண்டாவிட்டாலும்; அல்லது, இயேசுவில் காணப்பட்ட சுயநலமற்ற வாழ்க்கையை பிரதிபலிக்காவிட்டாலும், அஃது சாத்தானை சேதப்படுத்தவில்லை. ஏனெனில், கிறிஸ்துவின் நாமத்தை மாத்திரம் தரித்திருந்த அவர்களின் சிந்தை மாம்சமானதாக இருந்தது. கிறிஸ்தவன் என்கிற நாமத்தில் தங்களது குறைபாடுகளை மறைத்து வைத்தார்கள். இதனிமித்தமாக, தூய்மையும் களங்கமுமில்லாத சத்தியம் அவமானங்களுக்குட் படுத்தப்பட்டது.

மாமிச சிந்தை கொண்டவர்களை திருப்திப் படுத்தும்படியாக பிரசங்கிமார் பிரசங்கித்தார்கள். இதனை சாத்தான் விரும்பினான். இயேசுவைப் பற்றியோ, சத்திய உண்மைகளைக் குறித்தோ யாரும் பிரசங்கிக்கவில்லை. ஏனெனில், உலகத்தார் அதனை ஏற்க மறுத்தார்கள். அநேகர் ஐசுவரியவான்களாக இருந்ததினால், சத்தியமே இல்லாதபோதிலும்,

சபையில் அங்கம் வகித்து வந்தார்கள். உலகத்தாரின் கண்களில் பேரும் புகழும் பெறும்படியாக, கிறிஸ்துவின் சத்தியம் பரைசாற்றப்பட்டது. இத்தகைய மதக்கோட்பாடுகளை பின்பற்றுகிறவர்கள் உலக அரங்கில், தனிச் சிறப்பையும் அந்தஸ்தையும் பெற்றுக் கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டது. இத்தகைய போதனைகள், கிறிஸ்துவின் போதனைகளுக்கு மாறுபாடானவைகள். கிறிஸ்துவை உண்மையாக பின்பற்ற விரும்புகிறவர்கள், உலகத்தை விட்டு- வர மனமுடையவர்களாக இருப்பது அவசியம். இப்பொழுதோ, வேஷம் தரித்தவர்களும், பாவிகளும், சபையோடு இணைந்துக் கொண்டார்கள். கட்டுக்கதைகள் போதிக்கப்பட்டும் அங்கீகரிக் கப்பட்டும் வந்தன. இந்தப்படியே, உலகத்தாருக்கும் பெயரளவு கிறிஸ்தவர்களுக்கும் வித்தியாசங்கள் இல்லாமல்போனது. திருச்சபை விசுவாசிகளின் முகத்திரைகள் கிழிக்கப்பட்டால், அவர்களிடம் காணப்படும் பாவங்களும், இழிவான குணங்களும், தீமைகளும், அவர்களை ‘பிசாசின் பிள்ளைகள்’ என்று வர்ணிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதில் ஐயமில்லாதிருந்தது. இக்காட்சியை, தேவனும் அவருடைய தூதர்களும் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். திருச்சபைக்கான விசேஷித்த செய்தி ஒன்றை தேவன் ஏற்படுத்தினார். இச்செய்தி ஏற்கப்படுமானால், திருச்சபையின் அவலட்சணங்கள் வேரறுக்கப் பட்டு, தேவனின் பார்வையில் அத்திருச்சபை மீண்டும் பிரியமானதாக இருக்கும்.

பார்க்க : ஏசாயா 30 : 8 -21
யாக்கோபு 2 : 19
வெளிப்படுத்தல் 3 : 1-22

அத்தியாயம் 22

# வில்லியம் மில்லர்

வேதாகமத்தை அறிந்திராத ஒரு விசுவாசியின் இதயத்தில் பேசி, தீர்க்கதரிசனங்களை ஆராயும்படிக்கு தேவன் தம்முடைய தூதர்களின் மூலமாக எத்தனித்தார். தேவ ஜனங்களுக்கு அதுவரை இருளாக இருந்த தீர்க்கத்தரிசன வசனங்களை, இந்த விவசாயியின் மூலமாக தெளிவுப்படுத்த தேவன் சித்தம் கொண்டார். எனவே, தேவ தூதர்கள் அந்த விவசாயியை அடிக்கடி சந்தித்து, அவருடைய மனதையும் ஒருமுகப்படுத்தினார்கள். சத்தியச் சங்கிலியின் விளக்கங்கள் அவருக்கு அருளப்பட்டபொழுது, அச்சங்கிலியை ஒவ்வொரு கரணையாகத் தேடினார். முடிவில், தான் கண்ட விளக்கங்களினிமித்தமாக வேதத்தின் மீது ஆச்சரியமும், பிரமிப்பும் கொண்டார். வேதத்தில், சத்தியச் சங்கிலியானது பூரணப்பட்டிருப்பதைக் கண்டார். ஆவியால் அருளப்படாத வசனம் என்ற கருத்து மாறி, திரளான அழகோடும் மகிமையோடும் கர்த்தரின் வசனம் ஜொலிப்பதை கண்டுக்கொண்டார். மேலும் அவர், அவருடைய அறிவுக்கு எட்டாத ஒரு பகுதியை படிக்கும்போது, அதன் விளக்கம் மற்றொரு பகுதியில் இருப்பதைக் கண்டு நெகிழ்ந்தார். எனவே, தேவ வசனத்தை மகிழ்ச்சியோடும், ஆழமான பயத்தோடும், மரியாதையோடும் அந்த விவசாயி ஏற்றுக்கொண்டார்.

வில்லியம் மில்லர் என்ற இந்த விவசாயி, தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்துக்கொண்டே வந்தபொழுது, இவ்வுலகத்தின் மக்கள் தங்களுடைய சரித்திரத்தின் கடைசி பகுதியில் இருப்பதை கண்டார். இதனை எவரும் அறிந்திருக்கவில்லை. திருச்சபைகளில் நிலவிய நேர்மையற்ற நிலையை கவனித்த மில்லர், இயேசுவின் மீது வைக்கப்படவேண்டிய அன்பை உலகத்தின் மேல் வைத்திருப்பதைக் கண்டு மனமுடைந்துப் போனார். பரலோகத்திலிருந்து வரவேண்டிய கீர்த்திக்குப் பதிலாக, பூலோகக் கீர்த்தியையே சபையினர் விரும்பினார்கள். மேலோகில் சேர்க்கப்படவேண்டிய பொக்கிஷங்களுக்குப் பதிலாக, பூமியில் ஆஸ்தியை அதிகரிப்பதற்கு வகை தேடினார்கள். இருளையும், மரணத்தையும், ஏமாற்றத்தையும், அனைத்து இடங்களிலும் காணமுடிந்தது. அவன் ஆவி அவனுக்குள் கலங்கியது. எலியாவை பின்பற்றுவதற்காக தன் வயலையும் ஏர்மாடுகளையும் விட்டுச் சென்ற எலிசாவைப்போல, தானும் தனது வயல்களை விட்டு வரும்படி தேவன் அழைத்தார். நடுக்கத்துடனே வில்லியம் மில்லர், பரலோகத்தின் இரகசியங்களை ஜனங்களுக்கு தெளிவுப்படுத்தினார். ஒவ்வொரு முயற்சியின் போதும் புது பெலனடைந்த மில்லர், தீர்க்கதரிசனங்களின் வழியாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டும் ஜனங்களை எடுத்துச் சென்றார். இயேசுவின் முதல் வருகையை அறிவித்து, வழியை ஆயத்தம்செய்த யோவான் ஸ்நானகனை போல, வில்லியம் மில்லரும் அவருடைய சகாக்களும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பிரசங்கித்தார்கள்.

சீடர்களின் காலத்திற்கு நான் எடுத்துச் செல்லப்பட்டேன். அங்கு பிரியமான யோவானின் மீது தேவன் சுமத்தியிருந்த சிறப்பு ஊழியங்களை நான் கவனித்தேன். இந்த ஊழியத்தை தடுக்க நினைத்த சாத்தான், யோவானை அழிப்பதற்காக தனது வேலையாட்களை அனுப்பினான். ஆனால், தேவன் தமது தூதர்களை அனுப்பி யோவானை காத்துக்கொண்டார். யோவானின் விடுதலையைக் கண்ட அநேகர், ஆச்சரியப்பட்டு, நிச்சயமாகவே தேவன் யோவானோடு இருக்கிறார் என்றும், இயேசுவைப் பற்றி அவன் கூறிய சாட்சிகள் அனைத்தும் உண்மை என்றும், ஏற்றுக்கொண்டார்கள். அவனை அழிப்பதற்காக வந்தவர்கள், மீண்டும் முயற்சிப்பதற்கு பயந்தபடியால், இயேசுவிற்காக தொடர்ந்து துன்பம் அனுபவித்து வாழ ஆரம்பித்தான். எதிராளிகளால் பொய்யாக குற்றம் சாட்டப்பட்டு, தனிமையான ஒரு தீவுக்கு அவன் எடுத்துச் செல்லப்பட்டான். அங்கு, இவ்வுலகில் சம்பவிக்க வேண்டி இருந்த கடைசிக்கால நிகழ்வுகளை ஒரு தூதன் விளக்கிக் காட்டினான். இறுதிக்காலங்களில் திருச்சபையின் அவல நிலையையும், தேவனை மகிமைப்படுத்தி சாத்தானை மேற்கொள்ள வேண்டுமானால் தேவைப்பட்ட சீர்திருத்தங்களையும் யோவான் கண்டான். பரலோகத்திலிருந்து வந்த தூதன் கெம்பீரமாக வந்தான். அவனுடைய முகக்குறி பரலோக மகிமையால் பிரகாசித்தது. தேவனின் திருச்சபை சந்திக்கவிருக்கும் கடைசிக்காலப்போராட்டங்களை அந்த தூதன் விளக்கிக்காட்டினான். பலவிதமான சோதனைகளுக்குட் படுத்தப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, இறுதியில் மேற்கொண்டு, தேவனுடைய ராஜ்ஜியத்தில் மகிமையாக இரட்சிக்கப்படுவதை யோவான் தெளிவுறக் கண்டான். தேவனின் திருச்சபை இறுதியாக அடையவிருக்கும் வெற்றியைக்குறித்து யோவானுக்கு காட்டப்பட்டபோது, தேவதூதனின் முகம் களிப்பினால்

பிரகாசமடைந்து, மிகவும் மகிமை நிறைந்து காணப்பட்டது. திருச்சபையின் இறுதி விடுதலையைக் கண்ட யோவான், பயபக்தியோடும், தேவஅச்சத்தோடும் அத்தூதனின் பாதத்தில் பணிந்துக்கொள்வதற்காக விழுந்தான். தூதனோ அவனை உடனடியாக எருப்பி, அவனை நோக்கி, "இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்து சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத்தொழுதுகொள். இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது" என்று மென்மையாக கடிந்துக்கொண்டான். மேலும் தேவதூதன், யோவானுக்கு பரலோகத்தின் மகிமையை காண்பித்தான். யோவான், அந்த நகரத்தின் மகிமையைக் கண்டு பரவசமடைந்தான். இந்நிலையில், தன்னையே மறந்தவனாக மீண்டும் தூதனின் பாதத்தில் விழுந்தான். அதற்கு தூதன்," நீ இப்படிச் செய்யாதபடிக்குப்பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள்" என்று மீணடும் கடிந்துக்கொண்டான்.

பிரசங்கிமாரும் மக்களும், வெளிப்படுத்தின விசேஷத்தை, புதிரான புத்தகம் என்றும், வேதத்தின் பிற பகுதிகளை விட குறைவான முக்கியத்துவம் பெற்றது என்றும் கூறி வந்தார்கள். ஆகிலும், கடைசி காலத்தில் கர்த்தருடைய பிள்ளைகளை வழி நடத்தவும், கடமையை உணர்த்தவும், இப்புஸ்தகத்தை தேவன் வெளிப்படுத்தினார் என்று நான் கண்டேன். தீர்க்கதரிசனங்களை கற்ற வில்லியம் மில்லரை தேவன் வழிநடத்தி, வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள ஆழமான சத்தியங்களை அறியும்படி செய்தார்.

தானியேலின் தரிசனங்களை புரிந்துக்கொண்டால், வெளிப்படுத்தின விசேஷத்தின் தரிசனங்களையும் புரிந்துக் கொள்ளும் வாய்ப்பு இருந்தது. தேவன், குறித்த சமயத்திலே, ஒரு ஊழியக்காரனை தெரிந்துக்கொண்டு, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் அவனுக்கு தீர்க்கதரிசனங்களை விளக்கினார். வில்லியம் மில்லர் தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்து படித்து, தானியேலின் புஸ்தகத்திற்கும் வெளிப்படுத்தின சுவிசேஷ புத்தகத்திற்கும் இடையே இருந்த ஒற்றுமைகளை விவரித்துக் காட்டினார். இப்படிச் செய்ததின் மூலமாக, தேவ வார்த்தையின் எச்சரிப்புகளை தெளிவுபடுத்தி, மக்களின் இருதயங்களை மனுஷகுமாரன் வரும் நாளிகைக்கென்று அயத்தப்படுத்துவதில் மில்லர் அக்கறை காட்டியதாகத் தெரிகிறது. அவனைக் கேட்ட யாவரும் தேவனிடத்திற்கு திரும்பினார்கள்; நியாயத் தீர்ப்பில் நிற்பதற்காக தங்களை தயார் படுத்திக்கொள்ளவும் ஆயத்தமானார்கள்.

வில்லியம் மில்லரின் ஊழியத்திலும் தேவ தூதர்கள் ஒத்தாசையாக இருந்தார்கள். அவர் உறுதியாகவும், அஞ்சாதவருமாக இருந்தார். அவரிடத்தில் கொடுக்கப்பட்ட ஊழியத்தை முழுமையாக செய்துமுடித்தார். துண்மார்க்கத்திலிருந்த உலகத்தையும், சிரழிந்துக்கொண்டிருந்த திருச்சபையையும் காக்கும் பொருட்டாக, தம்மீது சுமத்தப்பட்ட சிறப்பு ஊழியத்தை சோர்ந்து போகாமல் செய்தார். ஒப்புக்கொள்ளப்பட்ட கிறிஸ்தவர்களாலும், உலகத்தாராலும் எதிர்க்கப்பட்டாலும், திரண்டு வந்த ஜனங்களுக்கு நித்தியமான சுவிசேஷத்தை பிரசங்கிப்பதிலிருந்து அவர் ஓயவில்லை. போகுமிடமெல்லாம் அவர், "தேவனுக்கு பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத் தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்தது," என்ற செய்தியை அறிவித்துக் கொண்டே இருந்தார்.

பார்க்க : ஐ இராஜாக்கள் 19 : 16-21
தானியேல் 7-12 அதிகாரங்கள்
வெளிப்படுத்துதல் 1 : 1-20; 14:7;
19:8-10, 22 : 6-10

அத்தியாயம் 23

# முதலாம் தூதனின் தூது

1843 ஆம் ஆண்டினில், கர்த்தர், காலங்களைக் குறித்த அதிகாரப்பூர்வமான அறிக்கை ஒன்றை வெளியிட்டார். என நான் கண்டேன். ஜனங்களை விழிப்படையச் செய்து, ஒரு சோதனை கட்டத்திற்கு கொண்டுவந்து, தீர்மானங்களை எடுக்கும்படியாக தூண்டுவது, தேவனின் திட்டமாக இருந்தது. திரளான ஊழியக்காரர்கள், தீர்க்கத்தரிசன காலங்களில் குறிக்கப்பட்ட நிகழ்வுகளைக் குறித்து அறிந்ததை மெய்யான சாட்சி பகிர்ந்தனர். அந்தப்படியே, ஊழியக்காரர்கள் தங்களுடைய பெருமையையும், வருமானத்தையும், சபையையும் விட்டகன்று, பல இடங்களுக்குச் சென்று, இச்செய்திகளை எடுத்துரைத்தார்கள். பரலோகத்திலிருந்து வந்த இச்செய்தியை பரப்ப அநேக ஊழியக்காரர்கள் புதிதாக தெரிந்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்களில் சிலர் வயல்களிலிருந்தும், வேறு சிலர் தங்கள் வியாபாரங்களிலிருந்தும் அழைக்கப்பட்டனர். பிரபலமாகாத ஊழியமாகிய ‘முதல் தூதனின் செய்தியை’ பரப்புவதற்கென்று அநேகர் அழைக்கப்பட்டார்கள். இயேசு கிறிஸ்து வருகையைக் குறித்து அனைவரும் பேசினார்கள். இச்செய்தியைக் கேட்ட யாவரும் அசைக்கப்பட்டார்கள். பாவிகள், மனங்கசந்து அழுது, மன்னிப்பை கோரினார்கள். உண்மையில்லா தவர்கள், தாங்கள் அநியாயமாக பறித்துக் கொண்டவைகளை திருப்பிக் கொடுக்க முன் வந்தார்கள்.

பிள்ளைகளின் மீது பெற்றோர்கள் வெகுவாக அக்கறைக் கொண்டார்கள். செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள், இன்னமும் மனம் திருந்தாத நண்பர்களோடும், உறவினர்களோடும் போராடுவதை நான் பார்த்தேன். கிறிஸ்துவின் வருகைக்காக யாவரும் ஆயத்தமானார்கள். இத்தகைய ”ஆத்தும சுத்திகரிப்பு” கிரியை, உலக ஆசைகளை புறம்பே தள்ளிவிட்டு, இதற்கு முன் அனுபவித்திராத பரிசுத்த நிலையை கொண்டு வந்தது. வில்லியம் மில்லரால் பிரசங்கிக்கப்பட்ட இச்செய்தியை ஆயிரக்கணக்கானோர் ஏற்றுக்கொண்டனர். பிற ஊழியக்காரர்களும், எலியாவின் வல்லமையோடு பிரசங்கிக்க எழுப்பப்பட்டார்கள். இயேசுவின் முன்னோடியாகிய யோவானைப் போல பிரசங்கித்தவர்களும், கோடரியானதை மரங்களின் வேர் அருகே வைப்பது அவசியம் எனக் கருதி, யாவரையும் மனந்திரும்புதலுக் கென்று அழைத்தார்கள். வரப்போகும் உக்கிரகத்துக்கு தப்பியோடுங்கள் என்கிற செய்தியை கேட்டவுடன், திருச்சபையை விட்டு விலகிய அநேகர் மனங்கசந்து அழுது, ஆத்துமபாரத்தோடு, தேவனிடத்தில் தங்களை அர்ப்பனித்தார்கள். தேவ ஆவியானவர் அவர்கள் மீது தங்கியபோது, அவர்களும் அந்த எச்சரிப்பின் தூதை உச்சரிக்கத் துவங்கினார்கள்.

குறித்த காலத்தைப் பற்றிய செய்தி, மறுபக்கத்தில், அநேக

எதிர்ப்புகளை எழுப்பிற்று. மேடை பிரசங்கியாரிலிருந்து மோசமான பாவிவரை எதிர்ப்புகளை தெரிவித்தார்கள். 'நாளையோ நாளிகையையோ ஒருவனும் அறிவதில்லை என்ற வேதக் கூற்று எல்லார் மனதிலும் உதிக்க ஆரம்பித்தது. ஆடுகளை மேய்த்தவர்கள் அநேகர், இயேசுவை நேசித்தப்படியால், அவரின் வருகையைக் குறித்த செய்தியை வரவேற்றார்கள். ஆனால், குறித்தக் காலத்தை எற்கவில்லை. தேவனின் கண்கள் இவர்களுடைய இருதயங்களை ஆராய்ந்தது. அவர்கள் இயேசு சமீபமாக இருப்பதை நேசித்ததாக தெரியவில்லை. தேவனுடைய மகத்துவமான ஊழியத்துக்கு தடையாக அநேகர் எழும்பினார்கள். இவர்கள் சாத்தானோடும் அவனுடைய தூதர்களோடும் இணைந்து, சமாதானம் இல்லாதபோதும் 'சமாதானம், சமாதானம்' என்று கூறிவந்தார்கள். தேவ தூதர்கள் இவை அனைத்தையும் குறித்து - வைத்ததை நான் கண்டேன். தத்தம் செய்யாத மேய்ப்பர்களின் வஸ்திரங்கள் ஆத்துமாக்களின் இரத்தக் கறைகள் நிறைந்ததாய் இருந்தது. சுகபோகத்தை விரும்பியவர்களும், தேவனைவிட்டு விலகி இருப்பதில் லயித்தவர்களும், தங்களுடைய மாமிசப் பிடியிலிருந்து எழுப்பப்படமுடியாது என்று நான் கண்டேன்.

அநேக ஊழியர்கள் இந்த இரட்சிப்பின் செய்தியை ஏற்றுக்கொள்ளாதது மத்திரமல்லாமல், பிறருக்குத் தடையாகவும் இருந்தார்கள். ஆத்துமாக்களின் இரத்தப்பழி அவர்கள் தலைகளில் இருக்கிறது. பரலோகத்திலிருந்து வந்திருந்த இச்செய்தியை அநேக போதகர்களும் ஜனங்களும் இணைந்து எதிர்த்தார்கள். வில்லியம் மில்லரையும், அவரோடு இணைந்து இந்த ஊழியத்தை செய்து வந்தவர்களையும் துன்பப்படுத்தினார்கள். வில்லியம் மில்லருடைய செல்வாக்கை சீர்குலைப்பதற்காக பொய்ப்பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. வெவ்வேறு சமயங்களில், வேத ஆலோசனைகளை நேரிடையாகவும், தெளிவாகவும் எடுத்துறைத்திருந்ததினால், இருதயங்களில் குத்தப்பட்ட ஜனங்கள், வில்லியம் மில்லரை கொலைச் செய்ய திட்டமிட்டார்கள். ஆனால் தேவதூதர்கள், மில்லரை பாதுகாப்பாக எடுத்துச் சென்றார்கள். அவருடைய ஊழியம் இன்னமும் முடிந்திருக்கவில்லை.

விசுவாசம் நிறைந்தவர்கள் இச்செய்திகளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள். அஃது தேனிடத்திலிருந்து வந்தது என்றும், சரியான நேரத்தில் வந்தது என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். இப்பரலோகச் செய்தியை திருச்சபைகள் ஏற்க மறுத்ததால், வருத்தத்துடன் தூதர்கள் இதனை இயேசுவன்டை கொண்டுவந்தார்கள் இசே தமது கவனத்தை திருப்பி, சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்களை சிறப்பாக கவனித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். ஏனெனில், இன்னொரு ஒளி அவர்கள் மீது பிரகாசிக்கவிருந்தது.

தங்களுடைய இரட்சகரின் தோற்றத்தை நேசிப் பர்களாகவோ, அவர்மீது வாஞ்சை வைத்தவர்களாகவோ, இயேசுவிற்கு நிகரானவர் எவரும் இல்லை என்ற விசுவாசமுள்ளவர்களாகவோ இருந்திருந்தால், இந்த பாசங்கு கிறிஸ்தவர்கள் அவருடைய வருகையின் செய்தியை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டிருப்பார்கள். ஆனால், அவர்கள் வெளிப்படுத்திய ஆர்வமற்ற பாவனை, அவர்மீது அவர்களுக்கு அன்பில்லாததை நிரூபித்தது. அவருடைய நாமத்தை தரித்திருக்கும் பிள்ளைகள், அவர் மீது பிரியமில்லாதிருப்பதை, சாத்தானும் அவனுடைய தூதர்களும் இயேசுவின் முகத்தில், வீசியெறிந்தார்கள்.

அதே வேளையில், தேவ ஜனங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன், கர்த்தருடைய வருகைக்காக காத்திருப்பதை நான் கண்டேன். ஆனால் தேவன் அவர்களை சோதிக்க திட்டமிட்டார். தீர்க்கதரிசன காலங்களின் விளக்கத்திலிருந்த ஒரு சிறிய பிழையை கர்த்தரின் கரம் மறைத்துவிட்டது. கர்த்தரின் வருகையை எதிர்பார்த்து இருந்தவர்களும் இதனை கண்டுபிடிக்கவில்லை, இந்த தீர்க்கதரிசன விளக்கங்களை எதிர்த்தவர்களும் இதனை கவனிக்கத் தவறிவிட்டார்கள். ஜனங்கள் ஒரு ஏமாற்றத்தை சந்திக்க வேண்டும் என்று தேவன் திட்டமிட்டார். காலம் கடந்தபோது, கர்த்தரின் வருகைக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தவர்கள் மனம் நொந்துப்போனார்கள். அவருடைய வருகையை பயத்தினால் ஏற்றவர்கள், எதிர்பார்த்த காலத்தில் அவர் வராததால், மகிழ்ச்சி அடைந்தார்கள். இவர்களுடைய இருதயங்கள் மாறவுமில்லை, சுத்திகரிக்கப்படவுமில்லை. இத்தகைய இதயங்களை வெளிக்காட்ட இந்த தீர்க்கதரிசன காலக்கட்டம் சரியாக வடிவமைக்கப்பட்டிருந்தது. இரட்சகரின் வருகையை ஆசித்த நபர்களை இவர்கள்தான் முதலாவதாக நிந்தித்தார்கள். இக்கட்டான வேளைகளில், குறுகி, பின்னடையப் போகிறவர்களை காட்டுவதற்காகவே இந்தப் பரீட்சை விளங்கியது. இதில் தேவனுடைய ஞானத்தை நான் கண்டேன்.

கிறிஸ்துவின் வருகை மீது ஆத்தும தாகம் கொண்டிருந்தவர்களை அன்போடும், அனுதாபத்தோடும் பரலோகமே பார்த்துக்கொண்டிருந்தது. இச்சோதனைக் காலத்தில், அவர்களை, தேவதூதர்கள் தாங்கிக்கொண்டிருந்தார்கள். பரலோகச் செய்தியை ஏற்காதவர்கள் இருளில் வசித்தார்கள். தேவக் கோபம் அவர்கள் மீது எழும்பிற்று. தங்கள் கர்த்தர் எதற்காக இச்சமயத்தில் வரவில்லை என்பதை கண்டறிய, ஏமாற்றமடைந்திருந்த விசுவாசிகள், மீண்டும் வேதத்திலிருந்து தீர்க்கதரிசனக் காலங்களின் விளக்கங்களை அலச ஆரம்பித்தார்கள். இப்பொழுது, கர்த்தரின் கரம் எடுக்கப்பட்டபடியால், காலக்கணக்கில் ஏற்பட்டிருந்த பிழை தெளிவாக்கப்பட்டது. தீர்க்கதரிசன காலங்களின் விளக்கம் 1844 ஆம் ஆண்டு வரை வந்தது. ஆனால், இதே விளக்கத்தை, தீர்க்கதரிசனக் காலங்கள் 1843ஆம் ஆண்டு நிறைவடையும் என்றும், 1844ஆம் ஆண்டு அனைத்தும் முடிந்துவிடும் என்றும் சொல்வதற்கு பயன்படுத்திக்கொண்டார்கள். கர்த்தருடைய வார்த்தையிலிருந்து எழும்பிய ஒளி அவர்களுடைய நிலையை தெளிவாக்கியபடியால், "தாமதிக்கும் காலம்" என்றொன்று இருப்பதை கண்டுப்பிடித்தார்கள். இந்த தரிசனம் பிந்துமானால், அதற்காக காத்திருக்கத்தான் வேண்டும். இயேசுவின் துரித வருகையின் மீது இருந்த அளவற்ற வாஞ்சையினால், இந்த பிழையை கவனிக்காமல் இருத்திருக்கிறார்கள். இன்னொரு காலக்குறியும் அவர்களுக்கு கிடைத்தது. ஆகிலும், 1843ஆம் ஆண்டு வரை இருந்த உற்சாகத்தையும் விசுவாசத்தையும், இந்தப் பெரிய ஏமாற்றத்தின் பின் அடைய அநேகரால் கூடாமறபோனதை நான் கண்டேன்.

சாத்தானும் அவனுடைய தூதர்களும் களிகூர்ந்தார்கள். பரிசுத்த தூதினை ஏற்காதவர்கள், தங்களுடைய ஞான-மிகுதியால் தான் ஏமாற்றத்திலிருந்து தப்பியதாகக் கருதினார்கள். தேவ ஆலோசனைகளை நிந்தித்து, சாத்தானோடு இணைந்து, தேவ ஜனங்களை குழப்பிவிடுகிறார்கள் என்பதை உணராதிருந்தார்கள்.

வருகையின் செய்தியை ஏற்றுக்கொண்டவர்களை திருச்சபைகளில் கொடுமைப்படுத்தினார்கள். ஆரம்பத்தில், சிலர் இக்கொடுமைகளைச்

செய்ய பயந்தார்கள். ஆனால், காலப்போக்கில், தங்களுடைய இருதயங்களின் உண்மையான நிலை வெளி வர ஆரம்பித்தது. தீர்க்கதரிசன விளக்கங்களைப் பெற்று, அதனை பிறருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்கிற ஆர்வம் கொண்டவர்களை அமைதியாக்க முயற்சித்தார்கள். ஆனால், அவர்கள் அளித்த வேத விளக்கங்களை எதிர்க்க முடியாமல் போனது. 1844ஆம் ஆண்டில் கர்த்தர் வருவார் என விசுவாசித்தது ஏன், என்பதற்கு தெளிவான வேத விளக்கங்களை அவர்கள் கொடுத்தார்கள். திருச்சபையின் அதிகாரங்கள் இவர்களுக்கு விரோதமாக எழும்பினது. இந்த சாட்சிகளை தடுக்கவும், யாதொரு சாட்சியத்தையும் அவர்கள் ஏற்காமல் இருக்கவும் தீர்மானித்தார்கள். தாங்கள் தேவனிடத்திலிருந்து பெற்ற சத்திய ஒளியை பிறருக்கு மறைக்கவிரும்பாதவர்களை, திருச்சபையிலிருந்து வெளியேற்றினார்கள். ஆகிலும், இயேசு அவர்களுடன் இருந்தபடியால், அவர்கள் மகிழ்ச்சியாய் இருந்தார்கள். இரண்டாம் தூதனின் தூதினை கேட்க ஆயத்தமாயிருந்தார்கள்.

பார்கக : தானியேல் 8 : 14
ஆபகூக் 2 : 1-4
மல்கியா 3 : 1-18 ; 4 : 1-6
மத்தேயு 24 : 36
வெளிப்படுத்தல் 14 : 6-7

அத்தியாயம் 24

# இரண்டாம் தூதனின் தூது

முதலாம் தூதனின் தூதை ஏற்றுக்கொள்ளாததாலும், பரலோகத்திலிருந்து வந்த ஒளியை மறுத்ததாலும், திருச்சபைகள், தேவனின் தயவிலிருந்து விழுந்துப்போயின. தங்களுடைய பலத்தின் மீது சாய்ந்தபடியால், முதலாம் தூதனின் தூதை எதிர்த்தார்கள். ஆகையால், இரண்டாம் தூதனின் தூதைக்குறித்த வெளிச்சம் அவர்களுக்கு கிட்டாமல் போயிற்று. ஆனால், சபைகளினால் வாதிக்கப்பட்ட தேவனுக்கு பிரியமானவர்கள், "பாபிலோன் விழுந்தது" என்கிற செய்திக்கு தலைவணங்கி, சபைகளிலிருந்து வெளியேறினார்கள்.

இரண்டாம் தூதனின் தூதின் முடிவிலே, தேவ ஜனங்களின் மீது பரலோகத்தின் ஒளி பிரகாசித்ததை நான் கண்டேன். இவ்வொளியின் கதிர்கள் சூரியனைப் போல பிரகாசமாயிருந்தது. தேவதூதர்கள், "இதோ, மணவாளன் வருகிறார். அவரை சந்திக்க புறப்பட்டுப் போங்கள்." என்று கூறுவதை நான் கேட்டேன்.

இரண்டாம் தூதனின் செய்திக்கு வலிமைச்சேர்க்கத்தான் இந்த நள்ளிரவு சத்தம் கொடுக்கப்பட்டது. சோர்ந்துப்போயிருந்த பரிசுத்தவான்களை உற்சாகப்படுத்தி, ஊழியத்தை செய்யும்படியாக ஏவுவதற்காக பரலோகத்திலிருந்து தூதர்கள் அனுப்பப்பட்டனர். இச்செய்தியை ஏற்பதில் தாலந்து மிகுந்தோர் முதன்மை வகிக்கவில்லை. பக்தி நிறைந்த தாழ்மையானவர்களிடம் தூதர்கள், "இதோ மணவாளன் வருகிறார். அவரை சந்திக்க புறப்படுங்கள்" என்கிற தூதை கொடுத்தார்கள். இவர்கள், பரிசுத்த ஆவியின் பெலத்தினால் மிக துரிதமாக இச்செய்தியை ஊரெங்கும் பரப்பினார்கள். இது, சோர்ந்த விசுவாசிகள் அநேகரை எழுப்பி

விட்டது. இந்த செய்தி, மனித அறிவின் மீது நில்லாதபடி, தேவனின் வல்லமையில் நின்றபடியால், இதனை கேட்ட யாதொரு பரிசுத்தவானாலும் இதனை மறுக்க இயலவில்லை. ஆவியில் அனலடைந்திருந்தவர்கள் இச்செய்தியை முதலாவதாக ஏற்றுக்கொண்டார்கள். மற்றவர்கள் சற்று தாமதமாக ஏற்று, இச்செய்தியை பரப்புவதில் சேர்ந்துக்கொண்டார்கள்.

பூமியின் அனைத்து பாகங்களிலும் ஆயிரக் கணக்கானோர் மத்தியில் இரண்டாம் தூதனின் தூதின் மீது வெளிச்சம் காட்டப்பட்டது. காத்துக்கொண்டிருந்த தேவஜனங்கள் யாவரும் எழுப்புதல் அடையும் அளவுக்கு இச்செய்தி பரவியது. திருச்சபைகளில் இத்தூது பிரவேசிப்பதை அநேகர் தடுத்தார்கள். எனவே, உயிருள்ள சாட்சியைப் பெற்றிருந்த அநேகர் திருச்சபைகளிலிருந்து வெளியேறினார்கள். நள்ளிரவு கூக்குரலினால் மகத்தான ஊழியம் ஒன்று செய்யப்பட்டாகிவிட்டது. இந்த தூது, இருதயங்களை ஊடுருவக்கூடியதாக இருந்தபடியால், விசுவாசிகள் யாவரும் அதற்கு கட்டுப்பட்டு வாழ முடிவு செய்தார்கள். ஒருவர் மீது ஒருவராக சாய்ந்துக்கொள்ள இயலாது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

நீதிமான்கள், தங்களுடைய தேவனின் வருகைக்காக உபவாசத்தோடும், ஜெபத்தோடும் காத்திருந்தார்கள். சில பாவிகளும் இச்சம்பவத்தை பயத்தோடு எதிர்நோக்கியிருந்தார்கள். ஆகிலும், பெரும்பாண்மையானோர் இதனை எதிர்த்து, சாத்தானின் ஆவியைக் காட்டினார்கள். அவர்கள் எழுப்பிய கேலியும், நிந்தையும் எல்லா இடங்களிலும் கேட்டது. அவர் வரும் நாளையாவது நாழிகையையாவது ஒருவனும் அறியான். பரலோகத்திலிருந்து வரக்கூடிய அனைத்து ஒளிக்கதிர்களையும் தடுத்து, இருதயங்களை கடினப் படுத்தி, ஜனங்களை தங்கள் வசப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சாத்தானின் தூதர்கள் முயன்று கொண்டிருந்தார்கள். உண்மையான பங்கில்லாமல், அநேகர், கர்த்தருக்காக காத்திருப்பதாகக் கூறி வந்தார்கள். அவர்கள் கண்டிருந்த தேவமகிமையும், பரிசுத்தவான்களின் தாழ்மையும், இருந்த சாட்சியங்களின் வலுவும், சத்தியத்தை ஏற்றுக்கொள்வதாக கூற வைத்தது. ஆனால், அவர்கள் மனந்திரும்பவில்லை. அவர்கள் ஆயத்தமாகவில்லை. பரிசுத்தவான்கள் ஜெப சிந்தை யோடிருந்தார்கள். ஒரு வகையான பரிசுத்தமான பக்தி அவர்களினுள் குடியிருந்தது. தேவதூதர்கள், இச்சம்பவங்களின் முடிவு எப்படி இருக்குமோ என்பதை பார்ப்பதற்கு ஆவலோடு காத்துக்கொண்டிருந்தார்கள். பரலோக சத்தியத்தை ஏற்று, உலக ஐசுவரியங்களிலிருந்து விலகி, இரட்சிப்பின் நீரூற்றிலிருந்து பெலனடையவேண்டும் என்று காத்திருந்தவர்களை தூதர்கள் பெலப்படுத்தினார்கள். அவர்கள் இயேசுவோடும் கூட ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். இயேசுவின் சாயல் அவர்களில் பிரதிபலித்தது. முழுமையாக தத்தம் செய்து, தங்களை வெறுமையாக்கி கொண்டவர்கள், சாவாமையை போர்த்திக்கொள்ள வேண்டும் என்று ஆசித்தார்கள். மறுபடியுமாக அவர்கள் வருத்தத்தோடு ஏமாறவேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. விடுதலை கிடைத்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்திருந்த காலம் கடந்து போயிற்று, அவர்கள் இன்னமும் பூமியில் தான் இருந்தார்கள். தங்களுடைய பிரியத்தை பரலோகத்தின் மீது வைத்திருந்தபடியால், மனதிலே சாவாமையின் விடுதலையை ருசித்திருந்தார்கள். ஆகிலும், அவர்கள் நம்பிக்கை நிறைவேறவில்லை.

அநேகரின் மனதில் குடியிருந்த அச்சம் உடனடியாக மறையவில்லை. இருப்பினும், தேவனின் கோபாக்கினையை அவர்கள் கண்கூடாக காணாததால், தங்கள் அச்சத்திலிருந்து வெளிவந்து, மறுபடியும் தங்கள் கேலியையும், நிந்தைகளையும், பரியாசங்களையும் தொடர ஆரம்பித்தார்கள். தேவ ஜனங்கள் மறுபடியுமாக சோதிக்கப்பட்டார்கள். உலகம் அவர்களை கேலி செய்தது. இயேசு மறுபடியும் வருவார் என்றும், மரித்தோரை எழுப்புவார் என்றும், ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார் என்றும் விசுவாசித்த பிள்ளைகள் இயேசுவின் சீடர்களைப் போல, " என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை " என எண்ணினார்கள்.

பார்க்க : மத்தேயு 24 : 36 ; 25 : 6
யோவான் 20 : 13
வெளிப்படுத்தல் 14 : 8

அத்தியாயம் 25

# வருகையின் இயக்கம் விளக்கப்படுகிறது

கட்டுகளால் கட்டப்பட்டிருந்த அநேக கூட்டங்களை நான் கண்டேன். இக்கூட்டத்தில் அநேகா் இருளில் இருந்தார்கள். அவர்கள் கண்கள் உலகத்தை நோக்கியிருந்தது. இயேசுவிற்கும் அவர்களுக்கும் எவ்வித தொடர்புமே இல்லாதது போல் இருந்தது. இக்கூட்டங்களில் சிதறிக்கிடந்த சில தனிநபர்களை நான் கண்டேன். அவர்களுடைய முகக்குறி பிரகாசமாகவும், அவர்களுடைய கண்கள் பரத்திற்கு நேராகவும் இருந்தது. சூரிய ஒளியைப் போல பிரகாசமான ஒளி, இயேசுவிடமிருந்து அவர்களுக்கு வந்தது. ஒளிக்கதிரைக் கொண்ட ஒவ்வொரு நபரோடும் ஒரு தேவதூதன் நிற்பதையும், இருளில் இருப்பவர்களை தீய தூதர்கள் சூழ்ந்திருப்பதையும் நான் கானும்படி ஒரு தூதன் கட்டளையிட்டான். ஒரு தூதன் எழுந்து, "தேவனுக்கு பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது" என்று அறிக்கை செய்ததை நான் கேட்டேன்.

இக்கூட்டத்தின் மீது மகிமையின் ஒளி தங்கி, அதனை பெற்றக்கொள்கிற யாவருக்கும் விளக்கத்தை கொடுத்தது. இருளில் இருந்த சிலா் இவ்வெளிச்சத்தைப் பெற்று மகிழ்ந்தார்கள்; மற்றவர்கள் இதனை மறுத்து, இஃது அவர்களை வழி தவறிச்செல்ல துண்டும் சக்தி என்று கருதினார்கள். பரலோக ஒளி அவர்களை கடந்துச் சென்றதும் இருள் சூழ்ந்துக்கொண்டது. இயேசுவிடமிருந்து ஒளியை பெற்றவர்கள், மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்கள் முகங்கள் பரிசுத்த சந்தோஷத்தால் நிறைந்திருந்தது. இயேசுவையே நோக்கியிருந்த அவர்கள், தேவதூதர்களோடு இணைந்து, "தேவனுக்கு பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது" என்று கூறினார்கள். இவ்விதமாக அவர்கள் கூறியபோது, இருளில் இருந்தவர்கள் அவர்களை இடித்ததை நான் பார்த்தேன். பரிசுத்த ஒளியை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட அநேகர், அவர்களை கட்டியிருந்த கட்டுகளை களைந்துவிட்டு, அக்கூட்டத்திலிருந்து விலகி, தனித்து நின்றார்கள். இவ்விதமாக கட்டுகளை தறித்துக்கொண்டு ஒரு கூட்டம் வெளியேற,

இருளில் இருந்த கூட்டத்தினரின் மரியாதையை பெற்றவர்கள், அக்கூட்டத்தின் நடுவே கடந்துச் சென்று. "தேவன் நம்மோடிருக்கிறார். நாம் ஒளியில் நிற்கிறோம்; நம்மிடத்தில் சத்தியம் உண்டு" என்று கூறிக்கொண்டே தளர்ந்த கட்டுகளை இறுக்கிவைத்தார்கள். இம்மனிதர்கள் யார் என நான் வினவியதற்கு, அவர்கள் ஊழியக்காரர்கள் என்றும், தலைவர்கள் என்றும் பதில் வந்தது. மேலும், இந்த ஊழியக்காரர்கள் பரலோக வெளிச்சத்தை மறுத்தது மாத்திரமல்லாமல், பிறர் அதை பெற்றுக்கொள்ளக்கூடாது என்பதிலும் உறுதியாக இருந்தார்கள். அதே வேளையில், ஒளியை ஏற்றுக்கொண்டவர்கள், இயேசு வந்து தங்களை அவரிடம் சேர்த்துக்கொள்வார் என்கிற நம்பிக்கையில் மேல்நோக்கி காத்திருந்தார்கள். இவர்கள் மீது ஒரு மேகம் கடந்து போனது. அப்பொழுது ஒளியை ஏற்றுக் கொண்டவர்களின் முகம் வாடியதை நான் பார்த்தேன். இம்மேகம் அவர்கள் கண்ட ஏமாற்றத்தை குறிக்கிறது என்று எனக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இரட்சகரை அவர்கள் எதிர்பார்த்திருந்த சமயம் கடந்து போய்விட்டதால் சோர்ந்துப்போனார்கள். சற்று நேரத்திற்கு முன் நான் கண்ட ஊழியக்காரர்களும் தலைவர்களும் இந்த சோர்வைக் கண்டு நகைத்தார்கள். ஒளியை மறுதலித்திருந்தவர்கள் மகிழ்ந்த வேளையில், சாத்தானும் அவனுடைய தூதர்களும் அவர்களுடன் சேர்ந்து நகைத்தார்கள்.

வேறொரு தூதனின் சத்தம் எழுந்து, "பாபிலோன் மகாநகரம் விழுந்தது! விழுந்தது" என்று அறிவித்தான். மறுபடியுமாக ஒரு வெளிச்சம் சோர்ந்துப்போனவர்களின் மீது விழுந்தது. இயேசுவின் வருகையின் மீது மீண்டும் நம்பிக்கை துளிர்த்து, அவர்கள் கண்கள் இயேசுவின் மீது பதிந்தது. பின்பு அநேக தேவதூதர்கள் இரண்டாம் தூதனை சூழ்ந்துகொண்டு, "இதோ, மாணவாளன் வருகிறார். அவரை சந்திக்க புறப்பட்டுப் போங்கள்" என்று உற்சாகமாக பாடினார்கள். இத்தூதர்களின் இனிமையான சத்தம் அனைத்து இடங்களுக்கும் சென்றடைந்தது. ஒளியை ஏற்றுக் கொண்டவர்களின் மீது ஒரு பிரகாசமான ஒளி மீண்டும் ஒளிர்ந்தது. பிரகாசமான முகங்களோடு அவர்களும் தேவதூதர்களோடு இணைந்து, "இதோ, மணவாளன் வருகிறார்" என்று பாடினார்கள். ஒருங்கிணைந்து இவர்கள் பாடிய பாடல், ஒளியை ஏற்றக்கொள்ளாதவர்களின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது - இவர்களை அவர்கள், கோபத்தோடு நிந்தித்தார்கள். ஆகிலும், தேவதூதர்கள் தங்கள் சிறகுகளாலே துன்புறுத்தப்பட்டவர்களை மறைத்துக்கொண்டார்கள். சாத்தானும் அவனுடைய தூதர்களும் எப்படியாவது இக்கூட்டத்தை பிடித்து, பரலோகத்திலிருந்து வந்த ஒளியை மறுதலிக்கவைக்கவேண்டும் என்று எண்ணினார்கள்.

நிந்திக்கப் பட்டவர்களை அவ்விடத்திலிருந்து வெளியேறவும், அசுத்தமானவர்களை தொடாமல் இருக்கவும் வேண்டும்மென்று ஒரு சத்தம் உண்டாயிற்று; திரளானவர்கள், தங்களை கட்டியிருந்த கட்டுகளை தறித்து, இருளில் இருந்தவர்களை விட்டு வெளியேறி, ஏற்கனவே விடுதலையாகியிருந்தவர்களோடு சேர்ந்துக்கொண்டு பாடினார்கள். இருளில் இருந்தவர்களில் சிலர் ஏறெடுத்த ஊக்கமான ஜெபங்கள் எனது செவிகளில் விழுந்தன. ஊழியர்களும், தலைவர்களும் எவ்வளவுதான் கட்டுகளை இறுக்கினாலும், இத்தகைய ஜெபங்கள் கேட்டுக்கொண்டேதான் இருந்தன. பின்பு, இவ்விதமாக ஜெபிப்பவர்கள் தங்கள் கரங்களை உயர்த்தி, விடுதலை பெற்று, தேவனில் களிகூர்ந்திருந்த கூட்டத்தினரை பார்த்து உதவி கேட்பதை நான் கண்டேன். அதற்கு அவர்கள் அளித்த பதில் என்னவென்றால், இருளான கூட்டத்தை விட்டு வெளியேறி தனியாக வரவேண்டும் என்பதே. சில நபர்கள் கடுமையாகப்



போராடி, கட்டுகளை தகர்த்து வெளியேறினார்கள். தங்கள் கட்டுகளை இறுகப்பண்ணவேண்டும் என்ற முயற்சிகளை எதிர்த்து, போராடி வெற்றி கண்டார்கள். பூமிக்கு மேலாக உயர்த்தப்பட்ட ஒரு தளத்தில் நின்றுகொண்டிருந்த ஒளியின் பிள்ளைகளோடு புதியவர்களும் இணைந்துக்கொண்டார்கள். அவர்கள், மேல் நோக்கியிருந்து துதி பாடல்களைப் பாடினார்கள். தேவ மகிமை அவர்கள் மீது தங்கியது. ஒற்றுமையாக இருந்த அவர்களை பரலோகத்தின் ஒளி மறைத்துக்கொண்டது. இவ்வொளியைப் பெற்றிருந்த யாவரும் ஆர்வத்தோடு மேல்நோக்கி பார்த்தார்கள். இயேசுவும் அவர்களை இனிமையான ஆதரவுடன் பார்த்தார். இயேசுவின் வருகையை எதிர்பார்த்தார்கள். மேல் நோக்கியிருந்த அவர்கள், ஒரு முறை கூட உலகத்தை பார்க்கவில்லை. மீண்டும் ஒரு மேகம் அவர்களை கடந்துச் சென்றதை நான் கண்டேன். நான் விளக்கம் கேட்டபோது, அவர்களுடைய எதிர்பார்ப்புகளில் மீண்டும் ஏமாற்றமே கிட்டும். என்று, என்னுடன் இருந்த தூதன் விளக்கமளித்தான். தேவனுடைய பிள்ளைகள், இன்னமும் அதிகமான சோதனைகளையும் துன்பங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. மனிதர்களால் உண்டாக்கப்பட்டிருக்கும் சம்பிரதாயங்களை விட்டுவிட்டு, முழுமையாக தேவனிடத்திலும், அவருடைய வார்த்தையினிடத்திலும் அவர்கள் திரும்ப வேண்டும். அவர்கள் சுத்திகரிக்கப்பட்டு, சோதிக்கப்பட வேண்டும்; இத்தகைய சோதனைகளை சகிக்கிறவன்

நித்திய வெற்றியை பெறுவான்.

காத்திருக்கும் கூட்டத்தின் விருப்பம்போல இயேசு உலகத்திற்கு வரவில்லை. அவர்களுடைய தீர்க்கதரிசன விளக்கங்கள் சரியாக இருந்தது என்று நான் கண்டேன். தீர்க்கதரிசன காலம் 1844ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. ஆசாரிப்புக் கூடாரத்தைப் பற்றிய விளக்கமும், அதன் சுத்திகரிப்பை பற்றிய விளக்கமும் தான் சரியாக புரிந்துக் கொள்ளப்படாத பகுதியாக இருந்தது. இயேசு மகாபரிசுத்த ஸ்தலத்தினுள் சுத்திகரிப்பதற்காக நுழைந்தார். காத்துக் கொண்டிருந்தவர்களை நான் மீண்டும் கவனித்தேன். மிகுந்த வருத்தத்துடன் இருந்த அவர்கள், தங்களுடைய விசுவாசத்தின் அடிப்படையிலே, அவர்கள் கற்றிருந்த தீர்க்கதரிசன விளக்கங்களை மீண்டும் கவனித்தார்கள். யாதொரு பிழையையும் காணாத அவர்கள், சமயம் நிறைவேறிற்றே, இரட்சகர் எங்கே? என வருந்தினார்கள்.

சீடர்கள் கல்லறைக்கு வந்து இயேசுவை காணாமல் தவித்த காட்சி எனக்கு காட்டப்பட்டது. மரியாள், "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை." என்றாள். கர்த்தர் உயிர்த்தெழுந்ததை தேவ தூதன் சீடர்களிடம் கூறினான.

ஏமாற்றத்துடன் இருந்தவர்களை தேவன் நோக்கினார். தூதர்களை அனுப்பி, இந்த உலகம் ஆசாரிப்புக் கூடாரம் இல்லையென்றும் அவர் பரலோகக் கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் நுழைவது அவசியமென்றும் புரியவைக்க வேண்டுமென விரும்பினார். பரலோகக் கூடாரத்தை சுத்திகரித்தப்பின், இஸ்ரவேலுக்காக பரிந்து பேசி, தனது பிதாவின் ராஜ்ஜியத்தை பெற்றுக்கொண்டு, பூமிக்கு மறுபடியும் வந்து, அதன் பின்தான் இருக்கும் இடத்தில் இவர்களும் இருக்கும்படியாக அவர்களை அழைத்துப் போவார் என்கிற விளக்கத்தை தமது பிள்ளைகளுக்குத் தர இயேசு விரும்பினார். 1844ஆம் ஆண்டு பெரும் ஏமாற்றத்தை அடைந்த விசுவாசிகளுக்கு ஒத்தாற்போல் சீடர்களும் ஏமாந்துப் போனார்கள். அதன் பின், கிறஸ்து ஜெயமாக எருசலேமிற்குள் நுழைந்ததை நான் கண்டேன். மகிழ்ந்த சீடர்கள், இயேசு அன்றே மன்னராக

முடிசூடுவார் என்று எதிர்பார்த்தார்கள். அவர்களுடைய அரசனை பெரிய நம்பிக்கையோடு தொடர்ந்தார்கள். எனவே, குருத்தோலைகளை விரித்து, மேல் வஸ்திரங்களை பரப்பி, அவருக்கு முன்பாகவும் பின்பாகவும், ”ஓசண்ணா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர். பரலோகத்திலே சமாதானமும், உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக” என்று மிகுந்த சத்தத்தோடே புகழ்ந்தார்கள். இந்த உற்சாகம் பரிசேயரை மிகவும் பாதித்தது. இயேசு, தமது சீடர்களை கண்டிக்கவேண்டுமென அவர்கள் விரும்பினார்கள். ஆனால் இயேசுவோ, ”இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்” என்றார். சகரியா 9 : 9ல் குறிக்கப்பட்டிருக்கும் தீர்க்கத்தரிசனம் நிறைவேற வேண்டும். ஆகிலும், சீடர்கள் மிகுந்த ஏமாற்றத்துடன் இருந்ததை நான் கண்டேன். சில நாட்களில் அவர்கள், கல்வாரியில் இயேசுவை கண்டு, அக்கொடூரச் சிலுவையில் அவர் இரத்தஞ்சிந்தியதை கண்டார்கள். அவருடைய பாடுகளையும் மரணத்தையும் கண்ட அவர்கள், அவரை கல்லறையில் அடக்கம் செய்தார்கள். அவர்களுடைய இருதயங்கள் துக்கத்தால் நிறைந்திருந்தது. இயேசுவுடன் தங்களது நம்பிக்கையும் மடிந்துப்போனது. ஆனால், அவர் உயிர்த்தெழுந்து அவர்களுக்கு காட்சியளித்தபோது, மீண்டும் நம்பிக்கை துளிர்ந்தது. இரட்சகரை மீண்டும் கண்டுப்பிடித்தார்கள்.

சீடர்களின் ஏமாற்றமும், 1844ஆம் ஆண்டு காணப்பட்ட ஏமாற்றமும் ஒன்றல்ல என்று நான் கண்டேன். முதலாம், இரண்டாம் தூதர்களின் தூதுகளினால் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியது. சரியான சமயத்தில் அருளப்பட்டு, தேவன் நியமித்திருந்த கிரியையை சரியாக செய்து முடித்தது.

பார்க்க : தானியேல் 8 : 14, மத்தேயு 21 : 4 - 16
மாற்கு 16 : 6 - 7, லூக்கா 19 : 35 - 40
யோவான் 14 : 1-3; 20:13 ஐஐ கொரிந்தியர் 6 : 17
வெளிப்படுத்தல் 10 : 8-11; 14 : 7-8

அத்தியாயம் 26

# மற்றொரு விளக்கப்படம்

பூமியில் நடந்த அனைத்து கிரியைகளிலும் பரலோகம் காட்டிய அக்கறை எனக்கு காட்டப்பட்டது. தமது இரண்டாவது வருகையைக் குறித்து பூமியின் மனுபுத்திரருக்கு எச்சரிக்கும்படி, இயேசு, ஒரு மகத்தான தூதனை நியமித்தார். பரலோகில், இயேசுவின் பிரசன்னத்திலிருந்து புறப்பட்ட அந்த தூதனை நான் கண்டேன். அவனுக்கு முன்பாக மிகப்பிரகாசமான ஒளி ஓடியது. தனது மிகிமையினால் பூமியை நிறைத்து, வருகின்ற தேவ உக்கிரத்தைக் குறித்து மனுஷரை எச்சரிப்பதே இத்தூதனுடைய கடமையாகும். திரளானோர் இவ்வொளியை ஏற்றுக்கொண்டனர். சிலர் துக்கித்தனர். பிறரோ, அளவுகடந்த இன்பமடைந்தார்கள். இவ்வொளி யாவர் மேலும் பிரகாசித்தது. ஆகிலும், சிலர் இதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அதனை ஏற்றுக்கொண்டவர்கள், தங்கள் முகங்களை பரலோகத்திற்கு நேராக உயர்த்தி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். பலர் கடுங்கோபம் கொண்டனர். தேவதூதன் பரப்பிய ஒளியை எதிர்த்து அநேக ஊழியர்களும் மனிதர்களும் எழும்பினார்கள். அதனை ஏற்றுக்கொண்டவர்களோ, உலகை விட்டு விலகி, ஒன்று பட்டார்கள்.

மனிதரின் மனதினை ஒளியிலிருந்து திருப்புவதில் சாத்தானும் அவனுடைய தூதர்களும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். இந்த ஒளியைபுறக்கனித்தவர்களோ இருளில் இருந்தார்கள். பரலோகத்திலிருந்து வந்த செய்தி, தேவனுடைய நாமத்தை தரித்தவர்களிடையே என்ன மாறுதல்களை விளைவிக்கும் என்பதை கணக்கிடுவதற்காக தேவதூதன் ஆவலோடு காத்திருந்தான். இயேசுவை நேசிப்பதாகக் கூறிவந்த அநேகர் இச்செய்தியை கேட்டவுடன், வெறுப்போடு திரும்பிச் சென்றதை, அந்த தூதன் தன் கையிலிருந்த தோல் காகிதத்தில் குறித்து வைத்தான். இயேசு இவ்விதமாக புறக்கணிக்கப்பட்டதை, பரலோகமே கோபத்துடன் கவனித்துக்கொண்டிருந்தது.

அதே சமயத்தில், ஒளியை நம்பினோர்களின் ஏமாற்றத்தையும் நான் கண்டேன். அவர்கள் எதிர்பார்த்த நாளிலே தங்களுடைய கர்த்தரை காணவில்லை. வருங்காலத்தை மறைத்து, தம்முடைய ஜனங்களை ஒரு தீர்மானத்திற்கு கொண்டுவருவதே தேவனுடைய நோக்கமாக இருந்தது. இத்தகைய காலங்கள் இல்லாவிடில், கர்த்தருடைய திட்டங்கள் நிறைவேறாமல் போய்விடக்கூடும். எதிர்காலத்தை அறிந்துக்கொள்ளும் வாஞ்சையில் மனிதனின் மனதை வெகு தொலைவிற்கு சாத்தான் வழிநடத்தியிருந்தான். எனவே, தேவன் வருவார் எனக் கணக்கிடப்பட்ட ஒரு காலம் வந்தால் தான், மனிதனின் மனது, உண்மையை கற்க வாஞ்சிக்கும். காலம் கடந்து சொன்ற போது, தூதனின் ஒளியை முழுமையாக ஏற்றுக்கொள்ளாதவர்களும் ஒளியை இகழ்ந்தவர்களுடன் இணைந்து, ஒளியை ஏற்று ஏமாற்றம் அடைந்தவர்களை நிந்தித்தார்கள்.

பரலோகத்தின் தூதர்கள் இயேசுவுடன் கலந்தாலோசித்ததை நான் கண்டேன். கிறிஸ்துவின் பெயரளவு சீடர்களை அவர்கள் குறித்து வைத்தார்கள். தீர்க்கத்தரிசன காலம் கடந்துச் சென்று அவர்களை சோதித்து, நிரூபித்திருந்தது. அநேகர் தராசில் நிறுக்கப்பட்டு, குறைவாய் காணப்பட்டார்கள். சாத்தான் குதூகலித்தான். அவன் விரித்திருந்த வலையில் அவர்கள் சிக்கியிருந்தார்கள். பெரும்பான்மையோரை நேரான வழியிலிருந்து விலக வைத்து, பரலோகத்திற்கு வேறு ஏதாவது வழியில் சென்றுவிடலாம் என்று முயற்சிக்க வைத்தான். சீயோனிலே, பாவிகளுடன் பரிசுத்தவான்களும் கலந்திருந்ததை தேவதூதர்கள் கவனித்தார்கள். இயேசுவை மெய்யாகவே நேசித்தவர்களை அவர்கள் காத்து வந்தார்கள். ஆகிலும், பாவிகள் பரிசுத்தவான்களை தாக்கினார்கள்.

இயேசுவை காண வேண்டுமென்று மிகுதியான வாஞ்சையோடு காத்திருந்தவர்களை, அவருடைய வருகையைக் குறித்து பேசாதபடி சிலர் தடுத்தார்கள். தேவதூதர்கள் இவை அனைத்தையும் கண்டு, சத்தியவான்களினிமித்தம் வருந்தினார்கள். வேறோரு பிரதான தூதன் பூமிக்கு இறங்கி வருவதற்காக நியமிக்கப்பட்டான். அவன் பூமிக்கு இறங்கி வந்தபோது, மிகுந்த சத்தத்துடன், "பாபிலோன் மகாநகரம் விழுந்தது! விழுந்தது" என்று கூறினான். ஏமாந்திருந்த விசுவாசிகள் மீண்டும் எழுச்சியடைவதையும், கண்களை பரலோகத்திற்கு நேராக நம்பிக்கையுடன் உயர்த்தியதையும் நான் கண்டேன். ஆகிலும், அநேகர் உறங்குவதைப் போல இருந்தார்கள். அவர்கள் முகக்குறியில் சஞ்சலம் இருந்ததை காண முடிந்தது. ஏமாந்திருந்தவர்கள் காத்திருக்கும் காலத்தில் தாங்கள் இருப்பதையும், தீர்க்கதரிசன காலம் நிறைவேறும்வரை தாங்கள் பொறுத்திருக்கவேண்டும் என்பதையும் வேதத்திலிருந்து கண்டெடுத்தார்கள். 1843ஆம் ஆண்டில் கர்த்தரை எதிர்பார்க்க வைத்த அதே காரணம் 1844ஆம் ஆண்டில் அவரை எதிர்பார்க்க வைத்தது. ஆகிலும், பெரும்பான்மையோர் 1843ல் பெற்றிருந்த விசுவாச வலிமையை இப்பொழுது பெற்றிருக்கவில்லை. அவர்களுடைய ஏமாற்றம் அவர்களுடைய விசுவாசத்தை குறைத்திருந்தது. கிறிஸ்தவ பெயர்களை கொண்டவர்கள் அநேகர், ஏமாற்றம் அடைந்திருந்தவர்களை மீண்டும் வெகுவாய் நிந்தித்ததை தூதர்கள் கவனித்தார்கள். அந்த பரியாசக்காரரின் உதட்டிலிருந்து "நீங்கள் இன்னமும் உயரே போகவில்லையே!" என்று வந்த ஏளனப் பேச்சை தூதர்கள் எழுதி வைத்தார்கள். இஃது தேவனை பரியாசம் செய்வதாகும் என ஒரு தூதன் உரைத்தான்.

எலியா மறுரூபமாக்கப்பட்ட காட்சிக்கு நான் எடுத்துச் செல்லப்பட்டேன். எலியாவின் சால்வை எலிசாவின் மேல் விழுந்தது. அப்பொழுது பிள்ளைகள் அவனை பின்தொடர்ந்து, "மொட்டைத்தலையா ஏறிப்போ, மொட்டைத்தலையா ஏறிப்போ" என்று நிந்தித்தார்கள். அவர்கள் தேவனை நிந்தித்தபடியால், தண்டனையை அங்கே பெற்றார்கள். அவர்களுடைய பெற்றோர்களிடமிருந்து அதனை கற்றிருந்தார்கள். அந்தப்படியே, பரிசுத்தவான்கள் உயரே எழும்புவதைக் குறித்து பரியாசம் செய்த யாவரும் தேவனின் வாதைகளுக்கு ஆளாவார்கள்.

தம்முடைய ஜனங்களிடையே சோர்ந்துப்போய்க் கொண்டிருந்த விசுவாசத்தை நிலைநிறுத்தும்படி மற்ற தூதர்களுக்கு இயேசு

கட்டளையிட்டார். இரண்டாம் தூதனின் செய்தியை அவர்கள் புரிந்துக்கொண்டு, பரலோகத்தில் சீக்கிரமாக நிகழவிருக்கும் மாற்றங்களை அறிந்துக்கொள்ள உதவி செய்யும்படியாகவும் அத்தூதர்களுக்கு கட்டளையிடப்பட்டது. இயேசுவிடமிருந்து மகத்தான வல்லமையையும், ஒளியையும் பெற்ற தூதர்கள் துரிதமாக பூமிக்கு வந்து, இரண்டாம் தூதனுக்கு உதவியாக செயலாற்ற ஆரம்பித்ததை நான் கண்டேன். "இதோ, மணவாளன் வருகிறார். அவரை சந்திக்கும்படி எதிர்கொண்டு புறப்படுங்கள்" என்று தூதர்கள் கூறியபோது, தேவ ஜனங்களின் மீது பிரகாசமான ஒளி வீசியது. அப்பொழுது, ஏமாற்றமடைந்திருந்தவர்களில் சிலர் எழும்பி அவர்களுடன் இணைந்து மணவாளனின் வருகையைக்குறித்து பேச ஆரம்பித்தார்கள். தூதர்களிடமிருந்து புறப்பட்ட ஒளி அனைத்து இடங்களிலும் பரவிற்று. இதனை தடுக்க சத்தானும், அவனுடைய தூதர்களும் முயற்சித்தார்கள். தேவதூதர்களோடும் அவர்கள் தர்க்கம் பண்ணினார்கள். தேவன் ஜனங்களை ஏமாற்றி விட்டதாகவும், அவர்களுடைய ஒளியினால் ஜனங்களின் ஏமாற்றத்தை சரி செய்ய இயலாது எனவும் தேவதூதர்களிடம் கூறினார்கள். எவ்வளவுதான் சாத்தான் தடைகளை எழுப்பினாலும், தேவதூதர்கள் தங்களுடைய வேலைகளை செய்துக்கொண்டே தான் இருந்தார்கள். இந்த செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் மகிழ்ச்சியாய் இருந்தார்கள். அவர்கள் பரலோகத்திற்கு நேராக கண்களை உயர்த்தி, இயேசுவின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தார்கள். ஆனால் வேறு சிலரோ, பெருந்துயரத்திலிந்துக் கொண்டு ஜெபிப்பதை நான் கண்டேன். அவர்களுடைய கண்கள் அவர்கள் மீதே இருந்தது. மேல்நோக்கி பார்க்க தைரியமற்றவர்களாக இருந்தார்கள்.

பரலோகத்திலிருந்து கிளம்பிய ஒரு அசாதாரண ஒளி அவர்களிடமிருந்த இருளை நீக்கி, அம் மனிதர்களின் கண்களை மேல் நோக்கி திருப்பியது. அவர்களுடைய முகத்தில் நன்றியுணர்வும், பரிசுத்த ஆனந்தமும் நிலவியது. இதனை, இயேசுவும் அவருடைய தூதர்களும் பெரும் உவப்புடன் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

முதலாம் தூதனின் தூதை ஏற்காதவர்கள், இரண்டாம் தூதனின் ஒளியையும் தொலைத்துவிட்டார்கள். எனவே, மணவாளனை சந்திக்கப் புறப்படுங்கள் என்கிற செய்தியின் வல்லமையை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. இயேசுவும் அவர்களிடமிருந்து திரும்பிவிட்டார். இத்தூதை ஏற்றுக் கொண்டவர்களை மகிமை மறைத்துக்கொண்டது. அவர்கள், தேவ சித்தத்தை அறிந்து கொள்ள ஜெபத்துடன் காத்திருந்தார்கள். தேவனை வேதனைப்படுத்த அவர்கள் பயந்தார்கள். இந்த தெய்வீக ஒளியை மறைப்பதற்கு சாத்தானும் அவனுடைய தூதர்களும் முயற்சிப்பதை நான் கண்டேன். ஆகிலும், காத்திருப்பவர்கள், தங்களுடைய கண்களை இயேசுவை நோக்கி உயர்த்தியிருந்ததாலும், தேவ ஒளியை ஏற்றுக்கொண்ட படியினாலும், சாத்தானால் அவர்களை தடுக்கக்கூடாமற் போனது. பரலோகத்திலிருந்து கொடுக்கப்பட்ட செய்தி, சாத்தானையும் அவனுடைய தூதர்களையும் கடுங்கோபமடையச் செய்தது. அதே சமயத்தில், இயேசுவை நேசிப்பவர்கள் எனக்கூறி அவருடைய வருகையை நிந்தித்து, விசுவாசிகளை பரிகாசம் செய்தவர்களும் இருந்தனர்.

தேவதூதர்கள் ஒவ்வொன்றையும் குறித்துக் கொண்டார்கள். இயேசுவின் வருகையை ஏற்காதவர்களையும், அவருடைய வருகையை குறித்து விமர்சிக்காதவர்களையும் விட்டு, அநேகர் "இதோ மணவாளன் வருகிறார்" என்று காத்திருக்கும் கூட்டத்தோடு இணைந்தார்கள். தேவதூதர்களின் அறிவிப்பை ஏற்றுக்கொண்டவர்கள் ஓற்றுமையாகவும், சுதந்திரமாகவும் நின்றார்கள். ஒரு மகிமையான ஒளி அவர்கள் மீது வீசியது. அவர்கள் உலகத்தை வெறுத்து, தங்களுடைய விருப்பங்களை பூமியிலிராதபடி எடுத்துக்கெண்டார்கள். உலக ஐசுவரியங்களை விட்டுவிட்டு, தங்களுடைய அன்பான மீட்பரை எதிர்நோக்கி ஆவலோடு காத்திருந்தார்கள். அவர்களுடைய முகங்களில் காட்சியளித்த ஆனந்தம், தங்களுடைய உள்ளங்களில் குடியிருந்த சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் பிரதிபலித்தது. இவர்களுடைய சோதனைக் காலம் நெருங்கி வந்துக்கொண்டிருந்தபடியால், அவர்களை பலப்படுத்தும்படி தூதர்களுக்கு கட்டளை கொடுக்கப்பட்டது. அவர்கள் இன்னமும் சோதனைகளுக்குட் பட்டவர்களே என்பதை நான் கண்டேன். தொடர்ச்சியாக அனுப்பப்பட்ட எச்சரிப்புகளின் மூலம் தேவனின் கிருபையை நான் உணர்ந்தேன். இந்த செய்திகள் அவர்களுடைய நிலையை பெலப்படுத்தி, அவர்களை பாவத்திற்கு நீங்கலாக்கி, புறஜாதியாரிடமிருந்து நுழைந்த பாவக் கிரியைகளிலிருந்து விடுவிக்க பயன்பட்டது. இச்செய்திகளின் மூலமாக தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அதிகமாக கிரியை செய்யவும், இதினிமித்தமாக அவர்கள் தேவனின் கற்பனைகளை கைக்கொள்ளவும் முடியும்.

பார்க்க : ஐஐ இராஜாக்கள் 2 : 11-25
தானியேல் 8 : 14
ஆபகூக் 2 : 1-4
மத்தேயு 25:6
வெளிப்படுத்தல் 14 : 8; 18 : 1-5

அத்தியாயம் 27

# ஆசாரிப்புப் கூடாரம்

தேவ ஜனங்களின் மகா ஏமாற்றம் எனக்கு காண்பிக்கப் பட்டது. அவர்கள் எதிர்பார்த்த சமயத்தில் இயேசுவை காணமுடியவில்லை. தங்களுடைய இரட்சகர் வராததின் காரணம் அவர்களுக்கு தெரியவில்லை. தீர்க்கதரிசன காலம் இன்னமும் நிறைவேறாததின் காரணத்தையும் அவர்களால் காண முடியவில்லை. தேவனுடைய வார்த்தை தோற்றுவிட்டதா? தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தேவன் தோற்றுவிட்டாரா? என்கிற கேள்விகள் ஒரு தூதனின் மனதில் எழுந்தது. இல்லை! அவர் வாக்கு அருளிய அனைத்தும் நிறைவேறுகின்றனவே!! பரலோகக் கூடாரத்திலே, இயேசு எழுந்தருளி, பரிசுத்த ஸ்தலத்தின்

வாசலை அடைத்துவிட்டு, மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் பிரவேசித்தார். பரலோகத்தின் ஆசாரிப்புக் கூடாரம் சுத்திகரிக்கப்பட வேண்டும். பொறுமையுடன் காத்திருப்பவர்களுக்கு இந்த இரகசியங்கள் விளங்குமென ஒரு தூதன் விளம்பினான். மனிதன் தவறு செய்திருந்தான்; தேவனின் சார்பில் யாதொரு தவறும் நிகழவில்லை. தேவன் விளம்பிய யாவும் நிறைவேறின. ஆனால், மனிதன் தவறாக கணக்கிட்டு, தீர்க்கதரிசன காலங்களின் முடிவில், சுத்திகரிக்கப்படவேண்டிய ஆசாரிப்புக்கூடாரம் இந்த பூமியே என்று நம்பினார்கள். மனிதனின் இந்த எதிர்பார்ப்பு தோல்வியடைந்தது; தேவனின் வாக்குகள் அல்ல. ஏமாற்றமடைந்திருந்தவர்களின் மனதை பரலோகக் கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு திரும்பி விடும்படியாக தூதர்களுக்கு இயேசு கட்டளையிட்டார். அவர் கூடாரத்தை சுத்திகரிக்கவும், இஸ்ரவேலருக்காக விசேஷமான பிராயச்சித்தம் பண்ணவுமே அங்கு நுழைந்திருக்கிறார் என்பதை தமது பிள்ளைகள் உணரவேண்டும். மகாபரிசுத்த ஸ்தலத்திலிருக்கும்போது, இயேசு புதிய எருசலேமுடன் பரிசுத்த விவாகத்தின் மூலமாக இணைக்கப்பட்டதை நான் கண்டேன். இங்கு அவருடைய வேலை நிறைவேறியபின், அவர் பூமிக்கு இராஜாதி இராஜாவாக திரும்பி வந்து, தமக்காக பொறுமையுடன் காத்துக்கொண்டிருப்பவர்களை தம்முடன் சேர்த்துக்கொள்வார்.

1844ஆம் ஆண்டு முடிவடைந்த தீர்க்கதரிசன காலத்தில், பரலோகத்தில் நிகழ்ந்தது என்னவென்பது எனக்கு காட்டப்பட்டது. நான் கண்டது என்னவென்றால், இயேசு பரிசுத்த ஸ்தலத்தில் தமது பணியை முடித்துவிட்டு, அப்பகுதியின் வாசலை அடைத்தபோது, அவருடைய வருகையின் செய்தியை மறுத்திருந்த யாவரின் மீதும் அந்தகாரம் படிந்தது. இயேசு சிறப்பான ஆடைகளினால் தம்மை அலங்கரித்துக்கொண்டார். அவருடைய அங்கியின் கீழ் பகுதியிலே ஒரு மணியும், மாதளம்பழமும் தொங்கும். அவருடைய தோள்பட்டையிலிருந்து ஒரு மார்கவசம் ஒன்று தொங்கவிடப் பட்டிருந்தது. அவர் அசைந்த பொழுது. அஃது வைரம்போல் மின்னியது. மார்ப்பதக்கத்தில் ஏதோ பெயர்கள் பொறிக்கப்பட்டதாகவோ எழுதப்பட்டதாகவோ தெரிந்து. அவர் முழுமையாக ஆடை அணிவித்த பின், சிரசில் கிரீடம் போல் ஒன்றை தரித்துக்கொண்டு, தூதர்கள் புடைசூழ, அக்கினி இரதத்தில் இரண்டாம் அறைக்குள் பிரவேசித்தார். பரலோகக் கூடாரத்தின் இரு அறைகளையும் கவனிக்கும்படி நான் உணர்த்தப்பட்டேன். திறந்திருந்த வாசலின் வழியாக நுழைய எனக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. முதல் அறையில், ஏழு கிளைகளைக் கொண்ட குத்துவிளக்கையும், சமுகத்தப்ப மேஜையையும், தூபபீடத்தையும், தூபகலசத்தையும் கண்டேன். அங்கிருந்த பொருட்கள் அனைத்தும் சுத்தமான பொன்னைப்போல ஜொலித்து. அஃது, அங்கு நுழைபவரின் சாயலை பிரதிபலிப்பதாக இருந்தது. இவ்விரண்டு அறைகளையும் பிரித்த திரைச்சீலை மகிமையாக இருந்தது. அது பல நிறங்களாலும், பல விதமான துணிகளாலும் செய்யப்பட்டு, அதன் ஓரங்கள் மிக நேர்த்தியாக பின்னப்பட்டிருந்தது. அதின் மீது பொறிக்கப்பட்டிருந்த பொன் எழுத்துக்கள் தேவதூதர்களை குறித்துக் காட்டின. இத்திரைச்சீலை உயர்த்தப்பட்டபொழுது, நான் இரண்டாவது அறையை பார்த்தேன். அங்கு,

மகாபரிசுத்த பொன்னினால் செய்யப்பட்ட சாட்சிப் பெட்டியை நான் கண்டேன். கிரீடங்களை அடையாளமாகக் கொண்ட அழகிய வேலைபாடுகளைக் கொண்ட ஓரங்கள் அந்த பெட்டியின் மீது இருந்தது. அது பசம்பொன்னினால் செய்யப்பட்டிருந்தது. பத்து கற்பனைகளைக் கொண்ட கற்பலகைகள் இந்த பெட்டிக்குள் இருந்தன. இச்சாட்சிப்பெட்டியின் இரு பக்கங்களிலும் அழகிய கேருபீன்கள் தங்கள் செட்டைகளை விரித்து நின்றன. இக்கேருபீன்களின் செட்டைகள் உயரே எழும்பி, சாட்சிப் பெட்டியினருகே நின்று கொண்டிருந்த இயேசுவின் மீது படர்ந்திருந்தது. கேருபீன்கள் ஒன்றுக்கொன்று எதிர்முகமுள்ளவைகளாய் நின்று கொண்டு, கீழே இருந்த சாட்சிப் பெட்டியை உற்று நோக்கிக்கொண்டிருந்தன. தேவதூதர்களின் சேனை கர்த்தரின் கற்பனைகளை வாஞ்சையோடு நோக்குவதை இஃது உணர்த்திற்று. இவ்விரு கேருபீன்களின் நடுவே ஒரு தூபகலசம் இருந்தது. பரிசுத்தவான்களின் விசுவாச ஜெபங்கள் இயேசுவன்டை வந்த போது, அவர் தமது பிதாவிடம் அவைகளை அர்ப்பனித்தார். அப்பொழுது, சுகந்த வாசனை எழும்பிற்று. பல அழகிய நிறங்களில் எழும்பிய புகையைப்போல் அக்காட்சி இருந்தது. இயேசு நின்று கொண்டிருந்த சாட்சிப்பெட்டியின் முன் பகுதியில் ஒரு மிதமிஞ்சிய மகிமை இருந்து. என்னால் அதனை நோக்கக் கூடாமற் போயிற்று. தேவன் வாசம் செய்த சிங்காசனத்தைப் போல் அது காட்சியளித்தது. பிதாவினிடத்திற்கு அத்தூபம் உயர்ந்தபோது, அவருடைய சிங்காசனத்திலிருந்து கிளம்பிய மகிமை இயேசுவிடம் வந்தது. பின்பு அது, ஜெபித்த பரிசுத்தவான்களை சென்றடைந்தது. ஒளியும் மகிமையும் இயேசுவின் மீது அதிகமாய் படர்ந்தது. அஃது கிருபாசனத்தையும் மறைத்துக்கொண்டது. ஆசாரிப்புக் கூடாரமே அம்மகிமையால் நிறைந்திருந்தது. இதற்கு மேலாக என்னால் அம்மகிமையை காணமுடியவில்லை. நான் பெருமிதம் அடைந்தேன்.

பரலோகத்திலிருந்த கூடாரத்தைப் போலவே பூமியிலும் ஒரு கூடாரம் இருப்பது எனக்கு காட்டப்பட்டது. அஃது, பரத்திலிருந்த கூடாரத்தின் மாதிரி அமைப்பு, என எனக்கு தெரிவிக்கப்பட்டது. இப்பூமியிலுள்ள கூடாரத்தின் முதல் அறையிலிருந்த பணிமுட்டுகள் அனைத்தும், பரலோகக் கூடாரத்தின் முதல் அறையிலிருந்த மாதிரியே இருந்தது. பூமியிலிருந்த கூடாரத்தின் இரு அறைகளிலும் ஆசாரியர்கள் ஊழியம் செய்தார்கள். முதல் அறையில் அனுதினமும், மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் ஆண்டிற்கு ஒரு முறையும் நுழைந்து ஊழியம் செய்தார்கள். இயேசுவோ, பரலோகக் கூடாரத்தின் இரு ஸ்தலங்களிலும் ஊழியம் செய்தார். பரலோக கூடாரத்திற்குள் தமது சொந்த இரத்தத்தையே தியாகம் செய்து நுழைந்தார். உலகத்தின் ஆசாரியர்கள் மரணத்திற்குட்பட்டபடியினால், அவர்களால் நீண்டகாலம் பணி செய்ய முடியவில்லை. மாறாக, இயேசு, நித்திய ஆசாரியனாக செயல்பட்டார். இவ்வுலகில் உள்ள ஆசாரிப்பு கூடாரத்திற்கு கொண்டுவரப்பட்ட பலிகளினாலும், காணிக்கைகளினாலும், வரவிருக்கின்ற இரட்சகரைக் குறித்து இஸ்ரவேலர்கள் அறிந்துக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. தேவ ஞானத்திலும், இப்பணிகளின் மூலமாக, நாமும் இயேசுவின் பரலோகக் கூடாரப் பணிகளை நன்கு புரிந்துக்கொள்ள வேண்டும் என்பதே திட்டமாக

இருந்தது.

கல்வாரியில் இயேசு மரித்துக்கொண்டிருந்த வேளையில், "முடிந்தது" என்று கூறியவுடன், தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. இஃது, பூமியின் கூடாரங்களின் பலிகளும் பணிகளும் நித்தியமாக நிறைவடைந்துவிட்டது என்பதை காட்டுவதற்காகவே நிகழ்ந்தது. பரலோகக் கூடாரத்தில், தம்மால் மாத்திரமே செய்யப்படக்கூடிய ஊழியத்திற்காக இயேசு தம்முடைய இரத்தத்தையே சிந்தினார். ஆசாரிப்புக் கூடாரத்தை சுத்திகரிப்பதற்காக வருடத்திற்கு ஒரு முறை, பிரதான ஆசாரியன், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைவது போல, தானியேல் 8ஆம் அதிகாரத்தில் உரைக்கப்பட்டிருக்கும் 2300 இராப்பகலின் முடிவில் - அதாவது 1844 ஆம் ஆண்டில் பரலோகக் கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் கிறிஸ்து நுழைந்தார். தமது மத்தியஸ்த ஊழியத்தினிமித்தமாக பயன்பெறுவோருக்கு இறுதி பரிகாரம் செய்வதற்காகவும், கூடாரத்தை சுத்திகரிப்பதற்காகவும் அவர் மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் நுழைந்தார்.

பார்க்க : யாத்திராகமம் 25-28
லேவியராகமம் 16 : 1 - 34
ஐஐ இராஜாக்கள் 2 : 11
தானியேல் 8 : 14
மத்தேயு 27 : 50-51
எபிரேயர் 9 : 1-28
வெளிப்படுத்தல் 21 : 1-27

அத்தியாயம் 28

# மூன்றாம் தூதனின் தூது

பரிசுத்த ஸ்தலத்தில் இயேசுவின் ஊழியங்கள் நிறைவடைந்து, மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் அவர் பிரவேசித்து, கர்த்தருடைய கற்பனைகளைக் கொண்ட சாட்சிப் பெட்டியினருகே அவர் நின்ற பொழுது, ஒரு மகத்தான தூதனை மூன்றாம் செய்தியோடு பூமிக்கு அனுப்பினார். தனது கையில் கொடுக்கப்பட்டிருந்த தோல் காகிதத்தை எடுத்து கொண்டு, அத்தூதன் பூமியிலிறங்கியபோதே, மனுஷருக்கு இது வரை கொடுக்கப்படாதிருந்த பயங்கரமான எச்சரிப்பு கொடுக்கப்பட்டது. தேவனுடைய பிள்ளைகள் விழித்தெழும்பி, தங்களுக்கு நேரிடவிருக்கும் சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்கொள்ள ஆயத்தமாகும்படியாக இச்செய்தி அளிக்கப்பட்டது. மிருகத்தோடும் அதின் சொரூபத்தோடும் கடுமையாக போராட வேண்டுமென்றும், நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்வதற்கு இப்போராட்டத்தில் அவர்கள் ஊறுதியாக இருப்பதே ஒரே வழி என்றும் அத்தூதன் விளக்கினான். அவர்களுடைய ஜீவன் ஆபத்தில் இருந்தாலும், சத்தியத்தில் உறுதியாக இருந்தாக வேண்டும். மூன்றாம் தூதன் : "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும்

காத்துக் கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்” எனக் கூறி, தனது செய்தியை முடித்தான். இவ்வார்த்தைகளை அவன் மீண்டும் மீண்டும் கூறியபடியே பரலோகக் கூடாரத்தை காட்டினான். இச்செய்தியை ஏற்றுக்கொள்ளும் யாவருடைய இருதயமும் மகாபரிசுத்த ஸ்தலத்தில் சாட்சிப் பெட்டியின் அருகே நின்று கொண்டிருக்கும் இயேசுவினிடத்திற்குச் சென்றது. அவர், தேவ கற்பனைகளை உடைத்தவர்களுக்காக இன்னமும் வேண்டுதல் செய்துக்கொண்டிருக்கிறார். மரித்திருந்த நீதிமான்களுக்கும், ஜீவிக்கும் நீதிமான்களுக்கும் இப்பரிகாரம் செய்யப்பட்டது. தேவ கற்பனைகளைப் பற்றிய ஒளியை பெறாதபடியால், அறியாமையினால் பாவம் செய்தவர்களுக்கும் இப்பரிகாரம் தேடப்பட்டது.

மகா பரிசுத்த ஸ்தலத்தின் வாசலை இயேசு திறந்த பின், ஓய்வுநாளின் ஒளியும் தென்பட்டது. ஆதியிலே இஸ்ரவேலர்கள் சோதிக்கப்பட்டபடியே, இப்பொழுதும், தேவ ஜனங்கள் கற்பனைகளை கைக்கொள்வார்களா என்று சோதித்தறியப்படும். ஏமாற்றமடைந்தவர்களுக்கு பரலோகக் கூடாரத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு செல்லக்கூடிய வழியை மூன்றாம் தூதன் மேல்நோக்கி காட்டினான். அவர்கள் விசுவாசத்துடன் இயேசுவை பின்பற்றியதால், மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் பிரவேசித்தார்கள். அவர்கள் மீண்டும் இயேசுவை கண்டபடியால், மகிழ்ச்சியும் நம்பிக்கையும் புதிதாக துளிர்விட்டது. அவர்கள் கடந்து வந்த காலங்களை அவர்கள் பின்னோக்கிப் பார்த்தார்கள். இயேசுவின் இரண்டாம் வருகையின் செய்தி கிடைத்ததிலிருந்து, 1844ஆம் ஆண்டு அவர்கள் அடைந்த மிகப்பெரிய ஏமாற்றம் வரை யாவையும் சிந்தித்தார்கள். இப்பொழுது, தங்களுடைய ஏமாற்றம் விளக்கப்பட்டபடியால், மகிழ்ச்சியும் நம்பிக்கையும் அவர்களை உயிரடையச் செய்தது. அவர்களுடைய கடந்த காலத்தையம், நிகழ் காலத்தையும், வருங்காலத்தையும் மூன்றாம் தூதன் விளக்கியபடியால், தேவன் தங்களை நடத்தி வந்த இரகசிய கிருபையை உணர்ந்துக்கொண்டார்கள்.

இயேசுவுடன் மகா பரிசுத்த ஸ்தலத்தினுள் நுழைந்த மீதமானவர்கள், அங்கிருந்த சாட்சிப் பெட்டியையும், கிருபாசனத்தையும் கண்டு பிரமித்ததை நான் கண்டேன். இயேசு சாட்சிப் பெட்டியின் மூடியை திறந்தார். தேவனுடைய கற்பனைகள் எழுதப்பட்டிருந்த பலகைகள் உள்ளே இருந்தன. கற்பனைகளை வாசித்த அவர்கள், நான்காம் கற்பனையின் மீது படர்ந்திருந்த சிறப்பு ஒளியையும் மகிமையையும் கண்டபோது நடுங்கினார்கள். ஓய்வுநாள் அழிக்கப்பட்டதாகவோ, வாரத்தின் முதல் நாளுக்கு மாற்றப்பட்டதாகவோ எந்த விளக்கமும் அங்கு இல்லாததை அவர்கள் கண்டார்கள். இடி முழக்கங்களின் மத்தியிலும், மின்னல்களின் மத்தியிலும் சீனாய் மலையின் மீது தேவனே தமது பரிசுத்த விரல்களால் கற்பலகையின் மீது எழுதிய படியே இப்பொழுதும் இருந்ததை அவர்கள் உணர்ந்தார்கள். ”ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்”. பத்து கற்பனைகள் பாதுகாக்கப்பட்டிருந்த விதம் அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. யேகோவாவின் அருகில் வைக்கப்பட்டிருந்ததையும், அதனை அவருடைய பரிசுத்தம்

காத்துக்கொண்டிருந்ததையும் அவர்கள் கண்டார்கள். யேகோவா பரிசுத்தப்படுத்திய நாளுக்குப்பதிலாக, போப் மார்க்கத்தாரும் அந்நியருமாக இணைந்து அருளிய வேறொரு நாளை அவர்கள் அனுசரித்து வந்தபடியால், பத்து கற்பனைகளில் நான்காம் கற்பனையை எவ்வளவாக சிதைத்திருந்தார்கள் என்பதை கவனித்தார்கள். உடனே, தங்களுடைய கடந்த கால மீறுதல்களை உணர்ந்தவர்களாக தேவனுடைய சமூகத்தில் தங்களை தாழ்த்தி, புலம்பினார்கள்.

பரிசுத்தவான்களின் அறிக்கைகளையும் ஜெபங்களையும் பிதாவினிடத்தில் இயேசு கொடுத்தபோது, கலசத்திலிருந்த தூபம் புகைந்ததை நான் பார்த்தேன். இத்தூபம் மேலேறியபோது, இயேசுவின் மீதும், கிருபாசனத்தின் மீதும் பிரகாசமான வெளிச்சம் படர்ந்ததை நான் கண்டேன். கற்பனைகளை மீறியபடியால் வருந்தி, ஜெபித்துக்கொண்டிருந்த பரிசுத்தவான்களின் முகங்கள் இப்பொழுது நம்பிக்கையினாலும் மகிழ்ச்சியினாலும் நிறைந்தது. மூன்றாம் தூதனின் பணியோடு இவர்களும் இணைந்து, இறுதி எச்சரிப்பை அறிவித்தார்கள். ஆரம்பத்தில் வெகு சிலரே இதனை ஏற்றுக்கொண்டபோதிலும், எச்சரிப்பை கொடுப்பதில் அவர்கள் தளர்ந்து விடவில்லை. அதன்பின், அநேகர் இச்செய்தியை ஏற்றுக்கொண்டு, தூதனோடு இணைந்து, யேகோவாவின் பரிசுத்த நாளை ஆசரிப்பதின் மூலமாக தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

மூன்றாம் தூதனின் எச்சரிப்பை ஏற்றுக்கொண்டவர்களில் அநேகர், முதல் இரண்டு செய்திகளை அனுபவிக்காதிருந்தனர். சாத்தான் இதை புரிந்துக்கொண்டு, அப்படிப்பட்டவர்களை மேற்கொள்ளும் நோக்கத்தோடு பார்த்தான். ஆகிலும், மூன்றாம் தூதன் அவர்களுக்கு பரலோக கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தை காட்டிக் கொண்டே இருந்தான். அப்படியே, முதல் இரண்டு தூதுகளின் அனுபவங்களை பெற்றிருந்தவர்களும் அவர்களை பரம கூடாரத்திற்கு நேராக திருப்பினார்கள். முத்தூதுகளில் காணப்பட்ட பூரணமான சத்தியத்தொடர்ச்சியை கண்ட அநேகர், மகிழ்வுடன் அவைகளை எற்றுக்கொண்டார்கள். முத்தூதுகளையும் வரிசையாக ஏற்றுக்கொண்ட அவர்கள், விசுவாசத்துடன் இயேசுவோடு பரமக் கூடாரத்திற்குள் பிரவேசித்தார்கள். இத்தூதுகள், சரீரத்தை நிலை நிறுத்தக்கூடிய நங்கூரங்களாக திகழ்ந்தன என்று எனக்கு அறிவிக்கப்பட்டது. தனி மனிதர்கள் இவைகளை ஏற்றுக்கொள்ளும்போது, சாத்தானின் அநேக சூழ்ச்சிகளிலிருந்து அவர்கள் காக்கப் படுகிறார்கள்.

1844 ஆம் ஆண்டு நிகழ்ந்த மாபெரும் ஏமாற்றத்திற்கு பின், சத்திய அமைப்பின் விசுவாசம் உறுதிப்படுவதை சிதைக்க சாத்தானும் அவனுடைய தூதர்களும் அயராது முயற்சித்தார்கள். இவைகளில் அனுபவமடைந்திருந்த தனி மனிதர்களின் மனதை, சாத்தான் பாதித்தான். அதினிமித்தமாக, இம்மனிதர்கள் முதல் இரண்டு தூதுகளையும் மாற்றி, அவைகளின் நிறைவேறுதல் வருங்காலத்தில் இருக்கும் என கூறினார்கள். வேறு சிலரோ, இவைகள் யாவும் அநேக ஆண்டுகளுக்கு முன்பாகவே நிறைவேறிவிட்டது என அறிவித்தார்கள். அனுபவமில்லாதவர்கள் விசுவாசத்தில் உறுதிப்படாமல் இருப்பதற்கு இது வழிவகுத்தது. சிலர், வட்டமைப்பிலிருந்து விலகி, சுயமாக விசுவாசத்தை பலப்படுத்துவதற்காக

வேதத்தை அதிக ஆர்வத்துடன் படிக்கத் துவங்கினார்கள். இவை எல்லாவற்றிலும் சாத்தான் குதூகலித்தான். நங்கூரத்திலிருந்து விலகியவர்களை எளிதாக மேற்கொண்டு விடலாம் என்பது அவன் கணிப்பாக இருந்தது. முதல் இரண்டு தூதுகளையும் முன் நின்று எடுத்துரைத்தவர்கள், இப்பொழுது அவைகளை மறுதலித்தார்கள். எனவே, சபைகளில் பிரிவுகளும் சிதறல்களும் உண்டாயிற்று. பின்பு நான் வில்லியம் மில்லரை கண்டேன். அவர் மிகுந்த குழப்பத்தில் இருந்தார். சக மனிதர்களை பற்றி கவலையும், வேதனையும் கொண்டிருந்தார். 1844ஆம் ஆண்டு வரை அன்புடனும், ஒற்றுமையுடனும் இருந்த கூட்டத்தினர் இப்பொழுது, அன்பிழந்து, ஒருவரை ஒருவர் எதிர்த்துக்கொண்டிருந்ததை கண்டார். துக்கம் அவருடைய பெலனை குறைத்தது. அநேக தலைவர்கள் அவரை கவனித்துக்கொண்டே இருந்தார்கள். வில்லியம் மில்லர், மூன்றாம் தூதனின் செய்தியை ஏற்று, தேவனுடைய கற்பனைகளையும் கைகொள்வாரோ என்று கவனித்தார்கள். பரலோகத்திலிருந்து வந்த வெளிச்சத்தை நோக்கி மில்லர் சாயும்போது, அவருடைய கவனத்தை திருப்பிவிடும்படியாக ஏதாவது ஒரு திட்டத்தை செயல்படுத்தினார்கள். அவருடைய செல்வாக்கை தங்களுடனே வைத்துக் கொள்ளவும், அவருடைய மனதை இருளில் வைத்திருக்கவும் ஒரு கூட்டத்தினர் அயராது உழைத்தனர். இறுதியாக, பரலோக ஒளிக்கு எதிராக தனது குரலை வில்லியம் மில்லர் உயர்த்தினார். வடிந்துபோன சக்தியை திரும்ப பெற்று, இழந்த நம்பிக்கையை துளிர்விடச் செய்து, தேவனை மகிமை படுத்தும் அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்கு மில்லர் தவறினார். அவருடைய ஏமாற்றத்தின் விளக்கங்களை அவர் முழுமையாக பரத்திலிருந்து பெற்றிருக்கக் கூடும். ஆனால், அவர் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆகிலும், தனது ஏஜமானாகிய இயேசுவுக்கென அவர் பட்ட பாடுகளும், அவருடைய முதிர் வயதும் அவரை தளர்த்தியது. அவரை இத்தகைய நிலைக்கு இழுத்த மனிதர்களையே தேவன் அதிகமாக கணக்கு கேட்பார். இப்பாவம் அவர்கள் மீது விழுந்தது. வில்லியம் மில்லர் மூன்றாம் தூதின் ஒளியை கவனித்திருந்தால், அநேக தெளிவான விளக்கங்கள் கிடைத்திருக்கும். ஆகிலும், தனது சகோதரர்கள் தன் மீது வைத்திருந்த மதிப்பையும் மரியாதையையும் அவரால் தகர்த்தெறிய இயலவில்லை. சத்தியத்தை தன் இருதயம் நாடும்; ஆனால் அவருடைய சகோதரர்கள் அதனை எதிர்த்தார்கள். இயேசு கிறிஸ்துவின் வருகையைக் குறித்து தன்னுடன் இத்தனை ஆண்டுகளாக இணைந்து பிரசங்கித்த அவர்கள், தன்னை ஒருபோதும் வழி விலகச் செய்ய மாட்டார்கள் என்று நம்பினார்.

தேவன் அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனை விட்டு அவரை இழுத்துக்கொண்டிருந்த மனிதர்களின் பார்வையிலிருந்து அவருடைய கல்லறையில் அவரை மறைத்து வைத்தார். வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தினுள் நுழையும் முன் மோசே பாவம் செய்தான். அப்படியே, தனது போராட்டத்தின் முடிவு நிலைக்கு வந்திருந்த மில்லரும், பரம காணானுக்குள் நுழையுமுன் பாவம் செய்தார். பிறர் அவரை இப்படி இடறலடையச் செய்தார்கள். அவர்கள் அதற்கு கணக்கொப்புவிக்க வேண்டும். ஆகிலும், இந்த தேவ ஊழியக்காரனின் புழுதியை தேவதூதர்கள் காத்து வருகிறார்கள். கடைசி எக்காளம் தொனிக்கும்போது, அவரும் எழுந்து

வருவார்.

பார்க்க : யாத்திராகமம் 20 : 1-17

யாத்திரகமம் 31 : 18

ஐ தெசலோனிக்கேயர் 4 : 16

வெளிப்படுத்தல் 14 : 9 -12

அத்தியாயம் 29

# ஒரு திடமான பீடம்

ஸ்தாபிக்கப்பட்ட விசுவாசத்தை எவ்விதத்திலும் தகர்ப்பதற்கு இடங்கொடாமல், தங்கள் நிலையில் உறுதியாக இருந்த ஒரு கூட்டத்தை நான் கண்டேன். தேவனும் அவர்களை ஆதரவுடன் பார்த்தார். ஒன்று, இரண்டு, மூன்று - என மூன்று படிகள் எனக்கு காட்டப்பட்டன. அவைகள் மூன்று தூதர்களின் அறிவிப்புகளாகும். இத்தூதுகளில் யாதேனும் ஒரு கல்லை ஒருவன் புரட்டினாலும் அவனுக்கு ஐயோ! இச்செய்திகளில் சத்தியங்களை நன்கு புரிந்துக்கொள்வது மிக முக்கியம். ஆத்துமாக்களின் முடிவு, இச்சத்தியத்தை எவ்விதமாக எடுத்துக் கொள்கிறோமோ, அதனை பொருத்து தான் உள்ளது. இச்செய்திகளின் வாயிலாக நான் கிழே கொண்டு வரப்பட்டபொழுது, தேவ பிள்ளைகள் அநேக பாடுகளனுபவித்து இத்தகைய அனுபவங்களை பெற்றிருந்தார்கள் என்பதை கண்டேன். படிப்படியாக தேவன் அவர்களை உயர்த்தி, இப்பொழுது உறுதியான அசைக்கமுடியாத ஒரு தளத்தில் அவர்களை நிறுத்தியிருந்தார். அநேக மனிதர்கள் இந்த உறுதியான தளத்தை நெருங்கி, அதன் அஸ்திபாரத்தை சோதித்தார்கள். சிலர் மகிழ்வுடன் அதன் மீது ஏறிக்கொண்டார்கள். பிறரோ, அஸ்திபாரத்தில் குற்றங்களை கண்டறிய முனைந்தார்கள். அஸ்திபாரத்தில் உள்ள குறைகளை நிவிர்த்தி செய்தால் நலமாக இருக்கும் என்றும், ஜனங்கள் அதிகமாக மகிழ்வார்கள் என்றும் அவர்கள் கூறினார்கள். தளத்தில் நின்றவர்களில் சிலரும் கீழே இறங்கிவிட்டார்கள். ஆகிலும், இந்த அஸ்திபாரம் தேவனால் போடப்பட்டது என்பதை விசுவாசித்த அநேகர், தளத்தின் மீது உறுதியாக நின்றுவிட்டார்கள். இப்படி உறுதியாக இருந்த அனைவரும் தேவனின் கிரியைகளின் மகத்துவத்தை எண்ணி, பரலோகத்திற்கு நேராக தங்கள் கண்களை ஏறெடுத்து, உரத்த சத்தத்தோடு தேவனை துதித்தார்கள். இக்காட்சி, தளத்திலிருந்து இறங்கிய சிலரை மீண்டும் மேலே ஏறி வரச்செய்தது.

கிறிஸ்துவின் முதல் வருகையின் அறிவிப்பின் காட்சிக்கு நான் தள்ளப்பட்டேன். எலியாவின் ஆவியோடும் வல்லமையோடும் இயேசுவின் வருகைக்கான வழியை ஆயத்தம் செய்ய யோவான் அனுப்பப்பட்டான். யோவானின் சாட்சியை மறுத்தவர்கள் எவரும் இயேசுவின் போதனைகளால் பயன்பெறவில்லை. அவருடைய வருகையைக்குறித்த அறிவிப்பை ஏற்காதவர்களுக்கு, அவர்தான் மேசியா என்பதையும் ஏற்றுக்கொள்ள கடினமாக இருந்தது. யோவானின் பிரசங்கங்களை ஏற்காமல்



இருப்பவர்களை கொண்டு, சாத்தான், இயேசுவையும் ஏற்காமல் அவரை சிலுவையிலறைந்து கொலை செய்ய வழிநடத்தினான். இப்படி செய்தபடியால், பெந்தெகோஸ்தே நாளில் ஆசிர்வாதத்தை பெற இயலாமல் போனதோடு, பரலோகக் கூடாரத்திற்கு செல்லும் வழியையும் அறிந்துக்கொள்ள கூடாமல் போனது. தேவாலயத்தின் திரைச் சீலை இரண்டாக கிழிந்தது யூதர்களின் பலி முறைகள் இனிமேல் ஏற்கப்படமாட்டாது என்பதை உறுதிபடுத்தியது. மகத்தான பலி கொடுக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டும் ஆயிற்று. பெந்தெகோஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியானவர் இறங்கி, சீடர்களின் இருதயங்களை பூலோக ஆசரிப்புக் கூடாரங்களிலிருந்து எழுப்பி, பரலோகக் கூடாரத்திற்கு நேராக திருப்பிவிட்டார். இதனிமித்தமாக, யூதர்கள் ஏமாற்றம் அடைந்து, முழுமையான இருளில் தள்ளப்பட்டார்கள். இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்து அவர்கள் பெற்றிருந்த ஒளியை தொலைத்தபோதும், தங்களுடைய பயனற்ற பலிமுறைகளையும், காணிக்கைகளையும் விடாதிருந்தார்கள். பரிசுத்த ஸ்தலத்தில் இயேசு செய்த ஊழியத்தினால் அவர்களுக்கு எவ்வித பயனுமில்லாமல் போயிற்று. பூலோகக் கூடாரத்தை பரலோகக் கூடாரம் மேற்கொண்டபோதிலும், பரலோகக் கூடாரத்துக்கு செல்லும் வழியை அறியாதிருந்தார்கள்.

யூதர்கள் இயேசுவை மறுதலித்து, அவரை சிலுவையிலறைய எடுத்துக்கொண்ட கொடூர வழிமுறைகளை அநேகர் கலக்கத்தோடு பார்க்கிறார்கள். இயேசுவின் அவமானங்களை சரித்திரத்தில் படிக்கும் போது, அவரை நேசிப்பதாக நினைத்து, நாங்கள் பேதுருவைப் போல இயேசுவை மறுதலிக்கவே மாட்டோம் என்றும், யூதர்களைப் போல் அவரை சிலுவையில் அறையவும் மாட்டோம் என்றும் கூறிக்கொள்கிறார்கள். இந்த விளம்பரத்தை கவனிக்கும் தேவன், அவர்களுடைய அன்பை சோதித்தறிந்தார்.

பரலோகமே வாஞ்சையோடு கவனித்துக்கொண்டிருந்தது. இத்தூது ஏற்றுக்கொள்ளப்படுமா? ஆனால், இயேசுவை நேசிப்பதாக கூறி வரும் அநேகர், பரலோகச் செய்தியை மகிழ்வுடன் ஏற்பதற்கு பதிலாக, கோபப்பட்டு, இயேசுவின் வருகைச் செய்தியை ஏளனம் செய்து, அதனை மாயை என்று அறிவிக்கிறார்கள். இயேசுவின் வருகையை விரும்பிய நபர்களோடு ஐக்கியப்படுவதற்கு பதிலாக, அவர்களை வெறுத்து, சபைகளிலிருந்து ஒதுக்கினார்கள். முதலாம் தூதனின் அறிவிப்பை ஏற்காதவர்களால் இரண்டாம் தூதனின் செய்தியால் பயனடைய இயலவில்லை. நள்ளிரவு கூக்குரலினாலும் அவர்களுக்கு எவ்வித பயனுமில்லை. முதல் இரண்டு தூதுகளையும் மறுத்ததினால், மூன்றாம் தூதனின் தூதிலும் அவர்களுக்கு ஒளி கிட்டவில்லை. எனவே, மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு செல்லும் வழியை அவர்கள் அறியவில்லை. அநேக பெயரளவு சபைகள், யூதர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தது போலவே இச்சத்தியங்களையும் அறைந்துவிட்டபடியால், பரலோகத்தில் நடைபெறும் சம்பவங்களையோ, மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு செல்லும் வழியையோ அறியாதிருக்கிறார்கள். பயனற்ற பலிகளை செலுத்தும் யூதர்களைப் போலவே, பயனற்ற வேண்டுதல்களை இவர்கள் செய்துவருகிறார்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தான் தன்வசப்படுத்தி, அவர்களைக் கொண்டு தனது பெலத்தையும், அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்து

வருகிறான். ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாக வஞ்சித்து வருகிறான். ஒரு சில சூழ்ச்சிகளை கண்டு பயப்படும் இவர்கள், வேறுஏதாவது ஒன்றுக்கு அடிமையாகிவிடுகிறார்கள். இறந்தவர்களின் ஆவிகளோடு தொடர்பு கொள்ளலாம் என்கிற நம்பிக்கையினால் சிலரை வஞ்சித்தான். ஒளியின் தூதனாக வந்து, தனது செல்வாக்கை பூமியில் சாத்தான் படரவிட்டான். பொய்யான சீர்த்திருத்தங்கள் எழும்புவதை நான் கண்டேன். சபைகளில் தேவன் வல்லமையாக கிரியை செய்கிறார் என்று சொல்லி, வேறு ஆவியினால் சபைகளை நடத்துவதை நான் கண்டேன். இந்த வளர்ச்சி அழிந்துப் போகும். ஆனால், சபையையும் இக்கட்டான நிலைக்கு அது தள்ளி விடும்.

பெயரளவிலுள்ள அட்வெண்டிஸ்ட் சபையிலும் தேவனுக்கு உண்மையான பிள்ளைகள் இருந்ததை நான் கண்டேன். வாதைகள் ஊற்றப்படுவதற்கு முன்பாக, விழுந்துப்போன சபைகளிலிருந்து வெளியேறும்படி ஊழியர்களுக்கும் விசுவாசிகளுக்கும் எச்சரிப்பு கொடுக்கப்படும். அவர்களில் அநேகர் மகிழ்ச்சியுடன் சத்தியத்தை ஏற்றுக்கொள்வார்கள். இதனை சாத்தான் அறிவான். எனவே, இத்தகைய மாறுதல் ஏற்படுமுன், இச்சபைகளிலேயே தேவன் இருக்கிறார் என்று நம்பத்தக்க எழுப்புதல்களை அவன் உண்டுப்பண்ணுவான். இப்படிச் செய்வதன் மூலம், நேர்மையானவர்கள் ஏமாந்துப் போவார்கள். ஆகிலும் சத்திய ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கிறபடியால், நேர்மையானவர்கள் யாவரும் வீழ்ந்த சபைகளை விட்டு வெளியேறி மீதமான சபையாரோடு நிற்பார்கள்.

பார்க்க : மத்தேயு 3 : 1-17

அப்போஸ்தலர் 2 : 1-47

ஐஐ கொரிந்தியர் 11 : 14

ஐஐ தெசலோனிக்கேயர் 2 : 9-12

வெளிப்படுத்தல் 14 : 6-12

அத்தியாயம் 30

# ஆத்மீக சக்தியில் நம்பிக்கை

வேறு ஒரு மாயத்தையும் நான் கண்டேன். ஏற்கனவே மரித்திருக்கும் நமது உறவினர்களையும் நண்பர்களையும் போல காணப்படும் உருவங்களை தோன்றச் செய்யும் வல்லமை சாத்தானுக்கு உண்டு. நமது உறவினர்கள் உயிருடன் இருந்த நாட்களில் இருந்தவாறே தோன்றுவார்கள். அவர்களின் பேச்சும் சத்தமும் நமக்கு அறிமுகமானவைகளாகவே இருக்கும். இவைகள் அனைத்தும் உலகத்தை வஞ்சித்து, இத்தகைய மாயையை நம்பவைக்கும்படியாக நடக்கும்.

தேவ வசனங்களிலிருந்து சத்தியத்தை முழுக்க கற்று, அதில்

தேறினவர்களாக பரிசுத்தவான்கள் இருக்க வேண்டும் என்று நான் கண்டேன். மரித்தவர்களின் நிலையை நன்கு அறிந்திருக்க வேண்டும். ஏனெனில், பிசாசின் ஆவிகள் தோன்றி, உறவினர்களைப் போல காட்சியளித்து, வேத வசனங்களுக்கு புறம்பான கோட்பாடுகளை நமக்கு வலியுறுத்துவார்கள். தாங்கள் செய்வதை நிலைநிறுத்துவதற்காக, அவர்களுடைய வல்லமையைக் கொண்டு, அநேக அற்புதங்களை செய்வார்கள். மரித்தோர் ஒன்றையும் அறியார்கள் என்கிற வேத சத்தியத்தைக் கொண்டு, இத்தகைய ஆவிகளை எதிர்க்க, தேவனுடைய ஜனங்கள் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

இந்த மாயை வளர்ந்து, நம்மை முகமுகமாய் எதிர்கொள்ளும் என்பதால், நமது நம்பிக்கையின் அஸ்திபாரத்தை நாம் வேத அடிப்படையில் சோத்தித்தறியவேண்டும். அப்படி ஆயத்தமாகாவிடில், நாம் மேற்கொள்ளப்படுவோம். ஆகிலும், நமக்கு முன்பாக இருக்கும் போராட்டத்தை எதிர்த்து, நம்மால் இயன்றமட்டும் போராடும்போது, தேவன் தமது மகத்துவமான கரங்களால் நம்மை பாதுகாத்துக்கொள்வார். அவர் துரிதமாக தமது மகிமையின் தூதர்களை அனுப்பி, தம்முடைய விசுவாசப் பிள்ளைகளைச் சுற்றிலும் அரண் அமைத்து, ஏமாற்றப்படாதபடி காத்துக்கொள்வார்.

இந்த மாயை பரவிய வேகத்தை நான் கண்டேன். வரிசையாக நீண்டிருந்த ஜனக்கூட்டத்தை நான் பார்த்தேன். இஃது ஒரு ரயிலைப்போல இருந்தது. நான் கவனமாக பார்க்கும்படி, தூதன் விரும்பினான். நான் உற்று கவனித்தபொழுது, முழு உலகமே அந்த ரயிலில் இருந்ததைப் போல இருந்தது. பின்பு தூதன், அந்த ரயிலின் நடத்துனரை காட்டினான். அவரை பயணிகள் யாவரும் மிகுந்த மரியாதையுடன் நோக்கியதை நான் கவனித்தேன். குழும்பிய நான், என் தூதனிடம் கேட்டேன். அது சாத்தான் என்று அவன் கூறினான். ஒரு ஒளியின் தூதனைப்போல் அவன் காட்சியளித்தான். அவன் உலகையே தன் வசப்படுத்தியிருந்தான். பயணிகள் யாவரும் மாயையை நம்பாவிடில் அழிந்து போவார்கள் என்கிற பொய்யை முழுமையாக நம்பியிருந்தார்கள். சாத்தானின் உதவியாளர்கள் வெவ்வேறு வேளைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததை நான் கண்டபோது, ”வேறு யாரும் இல்லையா?” என தூதனிடம் வினவினேன். எதிர் திசையில் நான் பார்க்கும்படி அவன் கட்டளையிட்டான். நான் பார்த்தபோது, அங்கே ஒரு சிறு கூட்டம் ஒரு குறுகிய பாதையில் பயணப்பட்டிருந்ததை கண்டேன். சத்தியத்தினால் அவர்கள் அனைவரும் இணைக்கப்பட்டிருந்தார்கள்.

இச்சிறுக் கூட்டத்தினர் சோர்வாய் காணப் பட்டனர். ஏதோ கடுமையான போராட்டங்களை கடந்து வந்தது போல் இருந்தார்கள். அச்சமயத்தில், மேகத்தின் மறைவிலிருந்து எழும்பிய கதிரவன், அவர்களுடைய முகத்தில் ஒளியை கக்கினான். அப்பொழுது, அவர்கள் வெற்றியின் களிப்பிற்கு மாறினார்கள்.

தேவன், இத்தகைய மாயைகளை கண்டுபிடிக்கும் வாய்ப்புகளை உலகத்துக்கு தந்திருந்தார். ஒரு கிறிஸ்தவனுக்கு இது ஒன்றே போதுமானது. மதிப்புள்ளவைகளுக்கும் இழிவான வைகளுக்கும் இடையே யாதொரு வித்தியாசமும் காட்டப்படவில்லை.

தாமஸ் பைன் என்பவர் துன்மார்க்கமான ஜீவியத்தை ஜீவித்து மரித்துப்போனவர். புழுதியாக மாறிய இவர், 1000 வருட அரசாட்சிக்கு பின்னரே எழுப்பப்பட்டு, தனது பலனை பெற்று, இரண்டாம் மரணத்தையும் தழுவுவார். ஆனால், தாமஸ் பைன் என்பவர் பரலோகத்தில் இருப்பதாகவும், அங்கு அவர் கணத்திற்குரியவராக திகழ்கிறார் என்றும் சாத்தன் நம்பவைக்கிறான். தாமஸ் பைன் உலகில் ஜீவித்த நாட்களில் சாத்தானின் பிரஜையாக ஜீவித்து வந்தான். மரித்த பின்னும், சாத்தான் அவனைக்கொண்டு பலரை வஞ்சித்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய வாழ்க்கையையும் சாவையும் சீர்கெட்ட போதனைகளையும் பயத்துடன் அறிந்தவர்கள் கூட இப்பொழுது அவனிடம் சரணடைந்திருக்கிறார்கள்.

பொய்யின் பிதாவாகிய சாத்தான், தனது தூதர்களை அனுப்பி, அப்போஸ்தலர்களைப் போலவே பேச வைத்து, பூமியில் வாழ்ந்த நாட்களில் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் தாங்கள் எழுதிவைத்ததை தாங்களே மறுப்பதைப் போல காட்சிகளை உண்டுபண்ணினான். இப்படி செய்வதின் மூலம், தேவ வசனத்தின் மீது இருக்கக் கூடிய நம்பிக்கையை தகர்த்தெறிந்தான். ஏனெனில், வேதவசனங்கள் சாத்தானின் ஓட்டத்தை குறுக்கிட்டு, அவனுடைய திட்டங்களை திசை திருப்பக்கூடியதாக இருந்தன. எனவே, வேத வசனங்களின் பிறப்பிடத்தை சந்தேகிக்க வைத்து, கடவுள் நம்பிக்கையற்ற தாமஸ் பைன் என்பவரும் பரலோகம் சென்றடைந்ததைப் போல காட்டி, மனிதர்களை குழப்புவது சாத்தானின் யுக்தியாகும். இந்த மாயை மூலமாக, தாமஸ் பைன் என்பவரும், பூமியில் அவர் வெறுத்த கிறுஸ்துவின் அப்போஸ் தலர்களும், இப்பொழுது இணைந்து செயலாற்றுகிறார்கள் என்பதை போல சாத்தான் உலகுக்கு காட்டி வந்தான்.

சாத்தான் தனது தூதர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு கொடுத்திருந்தான். அவர்களை தந்திரமாகவும், ஏமாற்றும் சுபாவமுள்ளவர்களாகவும் இருக்கும்படி ஏவினான். அவர்களில் சிலரை அப்போஸ்தலர்களைப் போல நடிக்கவேண்டுமென்றும், பிறரை துன்மார்க்கரைப்போல நடிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். அஃதோடு, துன்மார்க்கராக வாழ்ந்து, தேவனை தூஷித்து மரித்தவர்கள், இப்பொழுது தேவபயம் நிறைந்தவர்கள் போல் எழும்பினார்கள். மிகவும் பரிசுத்தமான அப்போஸ்தலருக்கும், மிகக்கொடிய துன்மார்க்கருக்கும் வித்தியாசமே இல்லாமல் போய்விட்டது. இவர்கள் இருவருமே ஆவியாக வந்து ஒரே காரியத்தை போதித்தார்கள். தாமஸ் பைன் உலகத்தில் வாழ்ந்த நாட்களில் சாத்தானுக்கு மிக நெருக்கமானவனாக வாழ்ந்தபடியால், அவன் உபயோகித்த வார்த்தைகளும், எழுத்துக்களும் இப்பொழுது சாத்தானுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. தாமஸ் பைன் எழுதிய புத்தகங்களை சாத்தானே ஏவியதால், இப்பொழுது தனது தூதர்களின் மூலமாக, தாமஸ் பைனே எழுந்து வந்து பேசுவது போலவும், எழுதுவது போலவும் நடித்துக்காட்டுவது எளிதாக இருந்தது. இஃது சாத்தானின் மிகச் சிறந்த படைப்பாகும். அப்போஸ்தலரைப் போன்றும், பரிசுத்தவான்களைப் போன்றும், துன்மார்க்கரைப் போன்றும் தோன்றியவைகள் யாவும் சாத்தானின் மாட்சிமையிலிருந்து நேரிடையாக வந்தவைகளாகும்.

இஃது யாவரின் மனதிலிருக்கும் மறைவுகளை நீக்கி, சாத்தானின் கேடுள்ள கிரியைகளை கண்டுகொள்ள போதுமானது. அவனுக்கு பிரியமானவனும், தேவனுக்கு விரோதமானவனுமான ஒருவனையும், பரிசுத்தமான அப்போஸ்தலரையும் தேவ தூதர்களையும் அவன் வசப்படுத்தியிருந்தாக காட்டினான். இதினிமித்தமாக அவன் உலகத்துக்கு கூறும் செய்தி யாதெனில் : நீங்கள் எவ்வளவு துன்மார்க்கராக இருந்தாலும் சரி ; நீங்கள் தேவனையும் வேதத்தையும் விசுவாசித்தாலும் விசுவாசிக்காவிட்டாலும் சரி; நீங்கள் விரும்பும் விதமாக வாழுங்கள், பரலோகம் உங்கள் இருப்பிடம் தான். ஏனெனில், தாமஸ் பைனுக்கே பரலோகில் இடமுண்டு என்றால், யாவரும் அங்கு சென்றடையலாமே! இது யாவரும் கவனிக்கும் விதத்தில் பிரகாசித்தது. தாமஸ் பைன் போன்ற தனிமனிதர்களை கொண்டு, சாத்தான், அவனது வீழ்ச்சியின் நாளிலிருந்து செய்ய முற்பட்டதை இன்னமும் செய்து கொண்டிருந்தான். தனது பலத்தாலும், மாயையான அற்புதங்களினாலும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை தகர்த்து, அவர்களுக்கு வழிகாட்டக்கூடிய சூரியனையும் அனைத்துப்போட்டான். பரிசுத்த வேதாகமம் ஒரு சாதாரன கதை புஸ்தகத்தைக் காட்டிலும் உயர்ந்தது அல்ல என்றும், அஃது ஆவியானவரால் அருளப்பட்டது அல்ல என்றும் சாத்தான் அறிவித்தான். வேதாகமத்தின் இடத்தில் 'ஆவிக்குரிய வெளிப்பாடுகள்' என்கிற புத்தகத்தை கொண்டு வந்தான்.

இங்கு, சாத்தானுக்கு என்று ஒரு வழி உருவாக்கப்பட்டது. அவ்வழி அவன் வசம் இருந்தது. எனவே உலகம் அவனை நம்பும்படி செய்வது எளிதாகிவிட்டது. அவனையும், அவனை பின்பற்றுகிறவர்களையும் நியாயந்தீர்க்கும் புஸ்தகத்தை அவன் விரும்பியபடியே இருளில் வைத்தான். உலக இரட்சகரை ஒரு சராசரி மனிதனாக மட்டும் காட்டினான். இயேசுவின் கல்லறையை காத்த ரோமாபுரிய சேவகர்கள் எவ்விதமாக பிரதான ஆசாரியர்களும் வேதபாரகர்களும் கூறியபடியே பொய்ச்சாட்சி பகிர்ந்தார்களோ, அப்படியே, 'ஆவிக்குரிய வெளிப்பாடுகளை' படித்த அனைவரும் இயேசுகிறிஸ்துவின் பிறப்பிலும், இறப்பிலும், உயிர்த்தெழுதலிலும் யாதொரு அற்புத நிகழ்வும் இல்லை என பொய்ப்பிரச்சாரம் செய்தார்கள். இவ்விதமாக, இயேசுவையும் பரிசுத்த வேதாகமத்தோடு இருளில் மறைத்துவிட்டு, தங்களது மாயையான அற்புதங்களை நடப்பித்து, தங்களுடைய கிரியைகள் யாவும் கிறிஸ்துவின் கிரியைகளைவிட சிறந்தவை எனவும் அறிவித்தார்கள். அந்தப்படியே, உலகம் சிக்குண்டு, சாத்தானின் மடியில் தாலாட்டப்பட்டது. இறுதியில், கடைசி ஏழு வாதைகள் ஊற்றப்படும் வரை இந்த ஏமாற்றத்தை எவரும் உணரப்போவது இல்லை. தனது திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறுவதை சாத்தான் நகைப்போடு கண்டுகளித்தான். உலகம் அவனது பிடியில் இருந்தது.

பார்க்க : பிரசங்கி 9 : 5

யோவான் : 11 : 1-45

ஐஐ தெசலோனிக்கேயர் 2 : 9 ஶி12

வெளிப்படுத்தல் 13 : 3-14

அத்தியாயம் 31

# பேராசை

சாத்தானும் அவனுடைய தூதர்களும் கலந்தாலோசிப்பதை நான் கண்டேன். இயேசுவின் வருகைக்காக காத்திருப்பவர்களுக்காகவும், அவருடைய கற்பனைகளை உண்மையாக கைக்கொள்கிற வர்களுக்காகவும் சிறப்பான கண்ணிகளை வைக்கும்படி சாத்தான் கட்டளையிட்டான். சபைகள் அனைத்தும் உறங்கிக்கொண்டிருக்கின்றன என சாத்தான் தனது தூதர்களிடம் அறிவித்தான். எனவே, தனது வல்லமையை அதிகரித்து, மாயையான அற்புதங்களையும் அதிகரித்து, சபைகளை தன் வசப்படுத்திக்கொள்ள முடியும் என்று கூறினான். ஆனால், ஓய்வுநாளை கடைபிடிப்போரை தான் வெறுப்பதாக விளம்பினான். ஏனெனில், அவர்கள் சாத்தானுக்கு எதிராக வேலை செய்து, சாத்தான் வெறுக்கும் ஓய்வுநாள் கற்பனையை கடைபிடிக்கும்படியாக வலியுறுத்தி வந்தார்கள்.

மேலும் சாத்தான் தனது தூதர்களுக்கு கொடுத்த அறிவுரைகள் யாவன :

உலகத்தின் ஐசுவரியவான்களை ஆசைகளால் நிரப்புங்கள். உலக ஆசைகளில் அவர்களுடைய மனதை லயிக்கச் செய்துவிட்டால், அவர்கள் நம் வசம்தான். அவர்களுக்கு பிரியமானதையே அவர்கள் சொல்லக்கூடும். ஆனாலும், கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தைக் காட்டிலும் அவர்களுக்கு பண ஆசையை தூண்டிவிடுங்கள். அவர்களுக்கு முன்பாக உலகத்தை வசீகரப்படுத்தி காட்டுங்கள். அவர்கள் அதனை விரும்பவும், வணங்கவும் செய்யுங்கள். அவர்களுக்கு உண்டான வழிகளெல்லாம் நம் வசமாக வேண்டும். அவர்கள் வசத்தில் நிறைய வாய்ப்புகள் இருக்குமேயானால், நமக்கு எதிராக அநேக காரியங்களை அவர்கள் செய்யக் கூடும், அவர்கள் பற்பல இடங்களில் கூடி ஆலோசித்தால், நமக்கு ஆபத்தாகிவிடும். எனவே எச்சரிக்கையாயிருங்கள். உங்களால் முடிந்த தடுமாற்றங்களை உண்டுபண்ணுங்கள். ஒருவரிடத்தில் ஒருவர் கொண்டுள்ள அன்பை அழியுங்கள். நாம் வெறுக்கின்ற அவர்களுடைய ஊழியக்காரர்களை சோர்வடையச் செய்யுங்கள். வழிமுறைகளை பெற்றவர்களுக்கு ஏதாவது ஒரு சாக்குபோக்கை காட்டி, பிறருக்கு அவைகளை காட்டிவிடாதபடி தடுத்துவிடுங்கள். உங்களால் கூடுமானால் பண விஷயங்களை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வாருங்கள். அவர்களுடைய ஊழியக்காரர்களை வறுமைக்குள் தள்ளிவிடுங்கள். அப்பொழுது, அவர்களுடைய தைரியமும் உற்சாகமும் பெலவீனமாகும். பொருளாசையும், இச்சையும் அவர்களுடைய குணாதிசயங்களை ஆளுகின்ற தன்மைகளாக மாற்றுங்கள். இத்தகைய தன்மைகள் ஆளுகை செய்யும் வரை இரட்சிப்பும் கிருபையும் பின் தங்கி இருந்துவிடும். அவர்களை வசீகரப்படுத்தும்படியாக

எதை எல்லாம் செய்ய இயலுமோ, அதையெல்லாம் செய்யுங்கள். அவர்கள் நம் வசப்படுவது மட்டுமின்றி, பிறரை பரலோகத்திற்கு வழி நடத்துவதையும் நிறுத்திவிடுவார்கள். பிறருக்கு கொடுத்து உதவவேண்டும் என நினைப்பவர்களின் உள்ளத்தில் பொறாமையை வளர்த்து விடுங்கள். அவர்கள் கொடுப்பதை குறைத்துக்கொள்வார்கள்.

சாத்தான் தனது திட்டங்களை நன்றாக செயல்படுத்தியதை நான் கண்டேன். தேவனின் ஊழியர்கள் ஒன்றுகூடியபோதெல்லாம், அவர்களது நோக்கங்களை சாத்தானும் அவனுடைய தூதர்களும் அறிந்து, அவர்களுக்கு இடைஞ்சல்களை உண்டுபண்ணினார்கள். தேவ ஜனங்களின் உள்ளங்களில் பல யோசனைகளை சாத்தான் விதைத்துக்கொண்டே இருந்தான். சிலரை ஒரு வழியாகவும், பிறரை வேறு வழியாகவும் திருப்பி, அவர்களுடைய பெலவீனங்களை பயன்படுத்தி, அவர்களுக்கிடையில் குழப்பங்களை உண்டுபண்ணினான். அவர்களில் யாராவது சுயநலவாதியாகவும் ஆசை நிறைந்தவராயும் இருந்தால், சாத்தான் அவர்கள் அருகே இருந்துக்கொண்டே அந்த பாவங்களை வெளியே கொண்டு வந்தான். ஒரு வேளை தேவனின் கிருபையும், சத்திய சுடரும் அந்த நபரை சுயநலத்திலிருந்தும் இச்சைகளிலிருந்தும் சற்று விடுவித்தால், அவர்களில் காணப்படும் இதர நல்ல பண்புகள் அனைத்தையும் கட்டவிழ்த்துவிட்டு, அவர்களை அளவுக்கதிகமாக நல்ல காரியங்களை செய்ய வைப்பான். இதனிமித்தமாக, நன்மை செய்வதில் அவர்கள் சோர்ந்துப்போய், சாத்தானின் பிடியிலிருந்து தங்களை மீட்கும் பொருட்டு இயேசு செய்த தியாகத்தை மறந்து விடுவார்கள்.

சாத்தான், யூதாசின் இச்சையையும் சுயநலத்தையும் பயன்படுத்தி, மரியாள் இயேசுவின் பாதத்தில் அர்ப்பணித்த தைலத்தைக் குறித்து முறுமுறுக்க வைத்தான். அத்தைலம் வீணாக்கப்பட்டது என்றும், அதனை விற்று தரித்திரருக்கு கொடுத்திருக்கலாம் என்றும் அவன் யோசனை தெரிவித்தான். அவன் தரித்திரரைக் குறித்து கவலை கொள்ளவில்லை. மாறாக, இயேசுவுக்கு அளிக்கப்பட்ட காணிக்கை ஊதாரித்தனமானது என்று விளம்பினான். அவனுடைய ஆண்டவருக்கே சில வெள்ளிக் காசுகளை கிரயமாக நிர்ணயித்தான். கர்த்தருக்காக காத்திருப்பவர்களிலும் சிலர், யூதாசைப் போலவே இருக்கிறார்கள் என்று நான் கண்டேன். சாத்தான் அவர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தான்; ஆனால், அவர்கள் அதை அறியாதிருந்தார்கள். ஒரு துளி இச்சையையோ, சுயநலத்தையோ தேவன் ஆதரிக்கப்போவதில்லை. இவைகளை தேவன் வெறுக்கிறார். இக்குணாதிசயங்களை பெற்றிருப்பவர்களின் ஜெபங்களையும் அவர் வெறுக்கிறார். தனது காலம் குறுகலாக இருப்பதை உணர்ந்திருக்கும் சாத்தான், மனிதரை அதிக அதிகமாக சுயநலவாதிகளாகவும், பொருளாசைப் பிடித்தவர்களாயும் மாற்றி வந்தான். இப்படிப்பட்டவர்கள் தங்கள் கண்களை மட்டும் திறந்து பார்ப்பார்களாகில், சாத்தான் குதூகலிப்பதையும், அவர்கள் மீது அவன் கரம் ஓங்கியிருப்பதையும், அவர்களுடைய மதியீனத்தின் நிமித்தமாக அவன் கேலி செய்வதையும் நிச்சயமாக பார்க்கமுடியும். இதன் பின்னர் சாத்தான், இவர்களை இயேசுவிடம் காட்டி, ஏளனமாக, ”இவர்கள் கிறிஸ்துவின் சீடர்கள்! இவர்கள் மறுரூபமடைவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள்” என்று கூறினான். மேலும் சாத்தான், அவர்கள் சென்ற மாறுபாடான வழியை வேத வசனங்களோடு ஒப்பிட்டு, பரிசுத்த

தூதர்கள் எரிச்சலடையும்படியாக, "இவர்கள் கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையையும் பின்பற்றுகிறவர்கள்! கிறிஸ்துவின் தியாகத்தினாலும் மீட்பினாலும் கிடைத்த கனிகள்!" என்று பரியாசம் செய்தான். இக்காட்சியிலிருந்து தேவதூதர்கள் வெறுப்புடன் திரும்பிக்கொண்டார்கள். தமது ஜனங்களிடமிருந்து இடைவிடாமல் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கும் தேவன், அவர்கள் நன்மை செய்வதில் சோர்ந்து போகும்பொழுது, அவரும் அவர்கள் மீது சோர்ந்து போகிறார். இயேசு தமது ஜீவனை பொருட்படுத்தாமல் பெற்று தந்த இரட்சிப்பை பெற்ற மக்களிடத்தில் காணப்பட்ட சுயநலத்தைக் கண்டு, தேவன் வெகுவாக வேதனையுற்றார். சுயநலமும் பேராசையும் பிடித்த நபர்கள் வழியருகே விழுந்து விடுவார்கள். யூதாசு தனது ஆண்டவரை விற்றது போல, பேராசைப் பிடித்தவர்களும், கிடைக்கக் கூடிய சிறிய லாபத்திற்காக நன்மையை விற்றுவிடுவார்கள். இப்படிப் பட்டவர்கள் தேவ ஜனத்திலிருந்து சலித்து எடுக்கப்படுவார்கள். பரலோகத்தை நாடுகிறவர்கள், தங்களுக்கு உண்டான முழு பெலத்தோடும் பரலோகத்தின் கோட்பாடுகளை ஆதரிக்க வேண்டும். அவர்களுடைய ஆத்துமாக்கள் சுயநலத்தினால் தளர்ந்துபோகாமல், தயையினால் வளர்ந்து, நன்மைகளினால் நிரம்ப வேண்டும். ஒவ்வொரு வாய்ப்பையும் ஒருவருக்கொருவர் நன்மை செய்வதற்காகவும், பரலோக கோட்பாடுகளுக்குள்ளாக முதிர்ச்சியைப் பெறவும், பயன்படுத்த வேண்டும். இயேசுவே இதற்கு சரியான முன் உதாரணம் என்பதை நான் கண்டேன். அவருடைய வாழ்க்கை சுய வாஞ்சையற்றதாக இருந்தது. அவருடைய ஜீவன் எதிர்பார்ப்புகளற்ற தயையினால் நிறைந்திருந்தது.

பார்க்க : மாற்கு 14 : 3 -11,

லூக்கா 12 : 15 - 40,

கொலோசேயர் 3 : 5 -16,

ஐ யோவான் 2 : 15-17

அத்தியாயம் 32

# அந்த அதிர்வு

உறுதியான விசுவாசத்தோடும், வேதனைமிகு கதறலோடும் தேவனிடத்தில் மன்றாடுகிற சிலரை நான் கண்டேன். அவர்களுடைய முகக்குறி வெளிரிப்போயும், வியாகூலம் நிறைந்ததாயும் காணப்பட்டது. இந்நிலைஅவர்களுடைய உட்போராட்டங்களை உணர்த்தியது. அவர்களுடைய முகச் சாயலில் திடமான எதிர்பார்ப்பு தெரிந்தது. அவர்களுடைய நெற்றிகளில் வியர்வைத் துளிகள் உதித்து, தரையில் விழுந்தன. இடையிடையே, தேவ ஆதரவின் சின்னங்களாக, பிரகாச ஒளி அவர்களுடைய முகத்தில் தோன்றி மறைந்தன.

இயேசுவை அவர்களுடைய பார்வையிலிருந்து மறைத்து, அதினிமித்தமாக தேவனை அவிசுவாசித்து, அவருக்கு விரோதமாக முறுமுறுக்கும்படியாக சாத்தானின் தூதர்கள் தங்களுடைய இருளைக்

கொண்டு அவர்களை சூழ்ந்துக் கொண்டார்கள். மேல் நோக்கி தங்களுடைய கண்களை ஏறெடுப்பது மட்டுமே அவர்களுக்கு இருந்த பாதுகாவல். தேவ ஜனங்களின் மீது தேவதூதர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. தீய தூதர்களின் இருளை, தங்களுடைய பிரகாசத்தினால், பரம தூதர்கள் விரட்டியடித்தார்கள்.

வேறு சிலர் இத்தகைய மன்றநாட்டில் கலந்துக்கொள்ளாமல், அலட்சியமாகவும், கவலை யற்றவர்களாகவும் இருந்ததை நான் கண்டேன். அவர்களை சூழ்ந்திருந்த அந்தகாரத்தை அவர்கள் எதிர்க்காததால், அஃது ஒரு கார்மேகம்போல் அவர்களை மறைத்துக்கொண்டது. தேவ தூதர்கள் இவர்களை விட்டு, ஜெபத்தில் தரித்திருந்திருந்த விசுவாசிகளுக்கு ஒத்தாசை செய்யும்படி சென்றுவிட்டார்கள். தங்களுடைய முழுபெலனையும் கொண்டு, தேவனிடத்தில் ஊக்கமாக வேண்டிக்கொண்டிருந்த நபர்களுக்கு தூதர்களின் அனுக்கிரகம் கிடைத்தது. இவ்வித முயற்சிகளை மேற்கொள்ளாத நபர்களை, தூதர்கள், விட்டகன்றார்கள். அவர்கள் என் தரிசனத்திலிருந்தும் மறைக்கப்பட்டார்கள்.

நான் கண்ட இத்தகைய அதிர்வின் விளக்கத்தை நான் கேட்டேன். அதற்கு, உண்மையும் சத்தியமும் உள்ள சாட்சியின் நிமித்தமாக, லவோதிக்கேயா சபைக்கு அருளப்படும் நீதியின் நற்சாட்சியினால் ஏற்படும் அதிர்வுதான் இது என்கிற விளக்கம் எனக்கருளப்பட்டது. இச்சாட்சியை ஏற்றுக்கொள்ளும் இருதயங்களில் பாதிப்புண்டாகி, சத்தியத்தைப் பேசி, அதனையே உயர்த்தவும் வாஞ்சை உண்டாகும். சிலர் இந்த சத்திய சாட்சியத்தை ஏற்கமாட்டார்கள். ஏற்காதவர்கள் அதற்கு விரோதமாக எழும்புவதால், தேவ ஜனங்களிடையே உண்டாகும் அதிர்வு தான் இஃது.

சத்திய சாட்சியின் நற்சாட்சியானது ஐம்பது சதவீதம் கூட ஏற்கப்படவில்லை. திருச்சபையின் முடிவையே தாங்கி நிற்கும் இந்த நற்சாட்சியை முற்றிலுமாக புறக்கணிக்காதபோதும், அதனை மிக இலேசாக மதிப்பிட்டிருந்தார்கள். இந்த நற்சாட்சியை, உண்மையாக பெற்றிருந்தவர்கள், உறுதியாக கீழ்ப்படிந்து, சுத்திகரிக்கப்பட்டு, ஆழமான மனந்திரும்புதலையும் பெறுவார்கள்.

தேவதூதன், "இதை கவனி" என்று சொன்ன மாத்திரத்தில், அநேக வாத்தியங்கள் மிக ரம்மியமாக இசைக்கப்படுவதைப்போல் ஒரு இசை வெள்ளம் பெருகுவதை நான் கேட்டேன். இதுவரை இத்தகைய இனிமையான இசையை நான் கேட்டதில்லை. இந்த இசை, கிருபையும், அன்பும், பரிசுத்த சந்தோஷமும் நிறைந்ததாய் இருந்தது. அப்பொழுது தூதன் என்னிடம், "கவனி!" என்று கூறினான். சற்று நேரத்திற்கு முன் நான் கண்டிருந்த அதே கூட்டத்தை நான் கண்டேன். அவர்கள் மிகவும் அசைக்கப்பட்டிருந்தார்கள். கண்ணீரோடும், ஜெபத்தோடும் இருந்த அந்தக் கூட்டத்தையே மறுபடியும் நான் கண்டேன். இக்கூட்டத்தை பாதுகாக்கும் தூதர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாயிருந்ததை நான் கண்டேன். அவர்கள் தலையிலிருந்து பாதம் வரை கவசம் அணிந்திருந்தார்கள். சேவகர்களைப் போல கட்டுப்பாட்டுடன் அவர்கள் நடந்ததைக் கண்டேன். அவர்கள் கடந்து வந்திருந்த பாடுகளின் பாதிப்பு அவர்கள் முகத்தில் தெரிந்தது. ஆகிலும், அவர்களுடைய முகத்தில் பரலோகத்தின் ஒளியும் மகிமையும்

படர்ந்திருந்தது. அவர்கள் வெற்றியடைந்திருந்தார்கள்.

இக்கூட்டத்தின் எண்ணிக்கை குறைந்திருந்தது. சிலர், வழியில் தவறியிருந்தார்கள். சத்திய நற்சாட்சியை அஜாக்கிரதையாக பார்த்தவர்கள், இக்கூட்டத்தில் சேராததால், இருளில் விடப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு பதிலாக, புதிதாக சத்தியத்தில் இணைந்தவர்கள் இக்கூட்டத்தில் இருந்தார்கள். இப்பொழுதும் தீய தூதர்கள் அவர்களை சூழ்ந்தார்கள். ஆகிலும், அவர்கள் மீது இத்தூதர்களுக்கு வல்லமையில்லாமற் போனது.

கவசங்கள் அணிந்திருந்தவர்கள் சத்தியத்தைமிகுந்த வல்லமையோடு பேசுவதை நான் கேட்டேன். அதன் விளைவுகளையும் கண்டேன். சிலர் கட்டுண்டதையும் கண்டேன்; சில மனைவிமார் தங்கள் கணவன்மாராலும், சில பிள்ளைகள் தங்கள் பெற்றோராலும் கட்டுண்டதையும் கண்டேன். சத்தியத்தை கேட்க இயலாமல் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள், இப்பொழுது, தடைகளை மீறி அதனை ஏற்றுக்கொண்டார்கள். உறவினர்களை சார்ந்த பயம் இல்லாதிருந்தது. சத்தியம் மட்டுமே உயர்வாக தெரிந்தது. ஜீவனை காட்டிலும் அஃது மிகவும் விலையுயர்ந்ததாகக் கருதப்பட்டது. அவர்கள் சத்தியத்தின் மேல் பசிதாகமுள்ளவர்களாக இருந்தார்கள். ”இத்தகைய மாறுதலை ஏற்படுத்தியது என்ன?” என நான் வினவினேன். அதற்கு ஒரு தேவதூதன், ”இஃது மூன்றாம் தூதனின் உரத்த சத்தத்தின் நிமித்தமாக உண்டான பின்மாரியாகும். கர்த்தரின் சமூகத்தினின்று புறப்படும் புத்துணர்ச்சியாகும்” என்று விளக்கினான்.

தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களிடம் பெரும் வல்லமை உண்டாயிருந்தது. அப்பொழுது தூதன், ”பாருங்கள்” எனக் கூற, என் கவனம் முழுவதும் அவிசுவாசிகளும் துன்மார்க்கரும் நிறைந்த இடத்திற்கு திரும்பிற்று. அவர்களிடையே பெரிய குழப்பம் நிலவியது. தேவ ஜனங்களின் உற்சாகமும் வல்லமையும் அவர்களுடைய சினத்தை தூண்டிவிட்டிருந்தது. எங்கும் குழம்பிய நிலை இருந்தது. தேவ ஒளியைப் பெற்றிருந்த கூட்டத்தாரின் மீது அநேக எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதை நான் கண்டேன். அவர்களை இருள் சூழ்ந்துக் கொண்டது. ஆகிலும், தேவ வல்லமையில் சாய்ந்து, அவர்கள் உறுதியாக நின்று கொண்டிருந்தார்கள். தேவனிடத்தில் ஊக்கமாக ஜெபித்துக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். இரவும் பகலுமாக ஜெபித்துக் கொண்டே இருந்தார்கள். ”உம் சித்தம் தேவா, நடப்பியும். உமது நாமத்திற்கு மகிமையுண்டானால் உமது பிள்ளைகளுக்கு ஒரு விடுதலையை கட்டளையிடும். எங்களை சூழ்ந்திருக்கும் அந்நியர்களிடமிருந்து எங்களை விடுவியும். அவர்கள் எங்களை மரணத்திற்கு ஒப்பு கொடுத்தார்கள். ஆகிலும் தேவரீர் எங்களை இரட்சிக்க உமக்கு திராணியுண்டு” என்கிற வார்த்தைகளை கேட்டது மாத்திரம்தான் என் நினைவிற்கு வருகிறது. அவர்கள் தங்களுடைய உதவியற்ற நிலையை உணர்ந்து, முற்றிலுமாய் தேவனிடத்தில் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களாக இருந்தார்கள். அங்கிருந்த அனைவரும், யாக்கோபைப் போல, விடுதலைக்காக ஊக்கமாக ஜெபித்துக்கொண்டே இருந்தார்கள்.

இவர்களுடைய ஊக்கமான வேண்டுதலைக் கேட்ட தூதர்கள், உடனடியாக அவர்களுக்கு உதவ முன் வந்தார்கள். ஆகிலும், வளர்ந்த

அதிகாரத் தூதன் ஒருவன் அவர்களை தடுத்தான். "தேவ சித்தம் இன்னமும் நிறைவேறவில்லை. அவர்கள் பாத்திரத்திலிருந்து குடிக்கவும், ஞானஸ்நானம் பெறவும் அவசியமாயிருந்தது" என்று குறிப்பிட்டான்.

வானத்தையும் பூமியையும் உலுக்கிய தேவ சத்தத்தை நான் கேட்டேன். பூமியில் பயங்கரமான அதிர்ச்சி உண்டாயிற்று. கட்டிடங்கள் இடிந்து தரையில் விழுந்தன. அதற்கு பின், தெளிவான, இனிமையான, பெரிய வெற்றியின் தொணியை நான் கேட்டேன். சற்று நேரத்திற்கு முன், மிகுந்த வேதனையோடு நின்று கொண்டிருந்த கூட்டத்தை இப்பொழுதும் பார்த்தேன். அவர்களுடைய அடிமைத்தனம் மாற்றப்படிருந்தது. அவர்கள் மீது பிரகாசமான ஒரு ஒளி ஜொலித்தது. எவ்வளவு அழகாக இருந்தார்கள்! அனைத்து சோர்வுகளும், பாரங்களும் நீங்கியிருந்தது. அனைத்து முகங்களிலும் ஆரோக்கியமும் அழகும் நிரம்பியிருந்தது. அவர்களுடைய எதிராளிகளான புறஜாதியார், மரித்தவர்கள் போல கீழே விழுந்தார்கள். மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் மீது வீசிய ஒளியை அவர்களால் தாங்க முடியவில்லை. சோதனையை வென்றிருந்த இக்கூட்டத்தினரின் பிரகாசம், இயேசு வானத்தில் வெளிப்பட்ட வரை இருந்தது. மேகத்தின்மேல் அவர் வந்தபோது இவர்கள் எல்லாரும் ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, மறுரூபமாக்கப்பட்டார்கள். கல்லறைகள் திறக்கப்பட்டு, அழியாமையை தரித்துக்கொண்ட பரிசுத்தவான்கள் எழுப்பப்பட்டார்கள். மரணத்தின் மீதும், பாதாளத்தின் மீதும் கண்ட ஜெயத்தை உச்சரித்து, உயிருடன் மீட்கப்பட்டுந்த இக்கூட்டத்தினருடன் இணைந்து, வானத்தில் கர்த்தரை சந்திக்க கிளம்பினார்கள்.

பார்க்க : சங்கீதம் 86: 1 - 17
ஓசியா 6 : 3
ஆகாய் 2 : 21-23
மத்தேயு 10 : 35-39, 20 : 23
எபேசியர் 6 : 10-18
ஐ தெசலோனிக்கேயர் 4 : 14-18
வெளிப்படுத்தல் 3 : 14-22

அத்தியாயம் 33

# பாபிலோனின் பாவங்கள்

இரண்டாம் தூதனின் எச்சரிப்பிற்கு பின், பல திருச்சபைகளில் நிலவிய நிலையை நான் கவனித்தேன். 'கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள்' என்கிற நாமத்தை தரித்துக் கொண்டு, மிகுதியாக கெட்டுப்போயிருந்தார்கள். உலகத்திற்கும் அவர்களுக்குமிடையே வித்தியாசங்கள் காணப்படவில்லை. ஊழியர்கள் தேவ வசனத்தைக் கூறி, மாமிசத்தை திருப்திப்படுத்தும் செய்தியை பிரசங்கித்தார்கள். இதற்கு மனிதரின் இருதயங்களில் தடை ஏதும் இல்லை. மாமிச இருதயத்தில் கிறிஸ்துவின் இரட்சிப்பிற்கும், சத்தியத்தின் வலிமைக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் மட்டுமே தடை இருந்தது. இவ்விதமாக

பிரபலமடைந்திருந்த ஊழியத்தில், சாத்தானின் கோபத்தை கிளறவோ, பாவியை நடுங்க வைக்கவோ, நியாயத்தீர்ப்பின் உண்மையை விளக்கிக் காட்டவோ, இடமில்லாதிருந்தது. உண்மையான தெய்வீகத்தன்மையில்லாத நிலையை துன்மார்க்கர் விரும்பி, அத்தகைய சபையை ஆதரித்தார்கள். முழுமையான நீதியின் கவசமேயல்லாமல் வேறொன்றும் அந்தகாரத்தின் வல்லமையை மேற்கொள்ள இயலாது. திருச்சபைகளை ஒரு சரீரமாக சாத்தான் ஆட்கொண்டிருந்தான். தேவ வசனங்களின் கூர்மையான சத்தியத்திற்கு பதிலாக, மனிதர்களின் வசனிப்பும், செய்கைகளும் சபைகளில் தியானிக்கப்பட்டது. உலகத்தின் நட்பும், ஆவியும் தேவனின் பகைகளாகும். எளிமையும் வலிமையுமான சத்தியம், இயேசுவில் காணப்பட்டது போல, உலக ஆவியை எதிர்கொள்ள ஆரம்பித்தால், அங்கு துன்புறுத்துதல் உண்டாகும். தங்களை கிறிஸ்தவர்கள் என அழைத்துக்கொள்ளும் அநேகரிடம் தேவனைப்பற்றிய ஞானம் இல்லாதிருந்தது. அவர்கள். வேறு பெயரைக் கொண்ட சாத்தானின் விசுவாசமுள்ள ஊழியக்காரர்கள் என்பதை அறியாதிருக்கிறார்கள்.

இயேசு பரலோகக் கூடாரத்தில், பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அடுத்த பகுதிக்கு சென்றதை நான் கண்டேன். இச்சமயத்திலிருந்து, தங்களை கிறிஸ்தவர்கள் என அழைத்துக்கொண்டு, அநேக பாவங்களையும், இழிவான தீமைகளையும் இத்திருச்சபைகள் சேகரித்துக்கொண்டதை நான் கண்டேன். அவர்களுடைய அறிக்கைகளும், ஜெபங்களும், எச்சரிப்புகளும் தேவனுடைய பார்வையில் அருவறுப்பானவைகளாக இருந்தன. "இவர்களுடைய கூட்டங்களில் தேவன் வாசம் பண்ணமாட்டார்" என தூதன் சொன்னான். மனச்சாட்சியின் உந்துதல் இல்லாமல், சுயநலத்தையும், வஞ்சனையையும், சூதையும் அவர்கள் பின்பற்றி வந்தார்கள். இவை அனைத்தையும் மதப்போர்வையால் மூடிக்கொண்டார்கள். இச்சபைகளின் தற்பெருமையை நான் கண்டேன். அவர்களிடம் தேவச்சிந்தை இல்லாமல் சுயச்சிந்தையே இருந்தது. அழியக்கூடிய சரீரங்களை அலங்கரித்து, பெருமையுடன் பார்த்து, திருப்தியடைந்தார்கள். இயேசுவும் அவருடைய தூதர்களும் இதனைக் கண்டு கோபம் கொண்டார்கள். அவர்களுடைய பெருமையும், பாவங்களும் பரலோகத்தை சென்றடைந்தன. அவர்களுடைய பங்கு ஆயத்தமானது. நீண்ட காலமாக உறங்கிக்கொண்டிருந்த நீதியும் நியாயமும் விரைவில் விழித்தெழும்பும். "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். மூன்றாம் தூதனின் அச்சுறுத்தல்கள் நிஜமாகி, தேவனுடைய கோபாக்கினையின் உக்கிரத்தை அவர்கள் குடிக்க வேண்டும். திருச்சபைகளும், மதக்குழுக்களும் தீய தூதர்களால் நிரம்பி இருந்ததை நான் கண்டேன். மிகவும் திரளான பாவங்களும், கொடிய குற்றங்களும் மதப்போர்வையினால் மூடப்பட்டிருப்பதை கண்டு, அத்தூதர்கள் பேருவகையடைந்தார்கள்.

கர்த்தரின் சாயலில் படைக்கப்பட்ட மனிதன், சீர்குலைந்து, சகமனிதர்களின் தூண்டுதலால் கறைப்பட்டு, சிரழிந்து நிற்பதை பரலோகம் வருத்தம் நிறைந்த கோபத்துடன் கண்டது. மனித வேதனைகளை கண்டு மனதுருகிய இரட்சகரின் நாமத்தை தரித்துக்கொண்டு, இந்த மக்கள் இத்தகைய கொடும் பாவங்களில் தழைத்திருப்பதை கண்டேன். இவை

அனைத்தையும் தேவதூதர்கள் பதிந்துக்கொண்டார்கள். புஸ்தகத்தில் எழுதப்பட்டாகிவிட்டது. அதே சமயத்தில், பக்தி-நிறைந்த புருஷர்களின் கண்ணீரும், ஸ்திரிகளின் கண்ணீரும் பரலோகத்தில் துருத்தியில் வைக்கப்பட்டிருக்கின்றன. மனிதனின் மனக்கிலேசங்கள் அனைத்து இடங்களிலும் பரப்பப்பட்டு வந்தது. தேவன் தமது உக்கிரத்தை இன்னும் சில காலங்களுக்கு கட்டுப்படுத்தி வைத்திருந்தார். இத்தகையான வேதனைகளின் வியாபாரங்களில் ஈடுபட்டிருந்த மதஅமைப்புகளின் மீது தேவன் வெகுவாக சினங்கொண்டிருந்தார். கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக்கொண்டு திரிந்த அநேகர், இத்தகைய அநீதிகளையும், கொடுங்கோலாட்சிகளையும், இதயமற்ற அலட்சியத்தோடு கவனித்துவந்தார்கள். மேலும் அநேகர், இத்தகைய வெறுப்பான காரியங்களில் திருப்தியடைந்ததோடு, தேவனையும் தைரியமாக வழிபட்டு வந்தார்கள். இஃது பயபக்தியுடன் கூடிய நிந்தையாகும். சாத்தான் இதனிமித்தமாக குதூகலித்து, இயேசுவையும் அவருடைய சீடர்களையும் "கிறிஸ்துவின் சீடர்கள் இப்படிப்பட்டவர்கள்" என்று கேலி செய்தான்.

இந்த பெயரளவு கிறிஸ்தவர்கள், இரத்தச் சாட்சிகளின் பாடுகளை படிக்கும்போது, கண்ணீர் வடித்தார்கள். ஆகிலும், அவர்களே பலரை துன்புறுத்தினார்கள். அதுமாத்திரமல்ல. இயற்கையின் உறவை துண்டித்து, ஒவ்வொரு நாளிலும் தேவனுடைய பிள்ளைகளுக்கு மிக கொடூரமான தண்டனைகளை அளித்துக்கொண்டிருந்தார்கள். திருச்சபையின் அங்கமாக இருந்து இவர்கள் செயல்படுத்திய இதயமற்ற கொடுமைகள், புறஜாதியார் சத்தியத்தின் பிள்ளைகளின் மீது தொடுத்த கொடுமைகளுக்கு நிகராக இருந்தது. இதனை கவனித்து வந்த தேவதூதன், "தேவனின் நியாயத்தீர்ப்பு நாளிலே இவர்களுக்கு நேரிடுகிறதைப் பார்க்கிலும் புறஜாதியாருக்கு நேரிடுகிறது இலகுவாக இருக்கும்" எனக் கூறினான். கர்த்தரின் சாயலில் படைக்கப்பட்ட ஒருவன் தனது சகோதரருக்கு இழைக்கக்கூடிய அநீதிகளையும் கொடுமைகளையும் பரலோகம் கவனித்துக்கொண்டிருந்தது. "இக்கொடுமைகளை செய்தவர்களின் நாமங்கள் இரத்தத்தினால் எழுதப்பட்டு, வேதனைமிகு பாடுகளின் கண்ணீரால் நிரப்பப்பட்டுள்ளது" என்று ஒரு தூதன் சொன்னான். பாபிலோனுக்கு இரட்டிப்பாக தண்டனையை கொடுக்காமல், தேவனின் கோபம் தனியப்போவதில்லை. "அவள் உங்களுக்குப் பலனளித்தது போல நீங்களும் அவளுக்கு பலனளியுங்கள்; ... அவள் உங்களுக்கு கலந்துகொடுத்த பாத்திரத்தில் இரட்டிப்பாக அவளுக்குக் கலந்து கொடுங்கள்", என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று.

அறியாமையிலே, அடிமையாக பலரை சிறை வைத்ததற்காக, சாத்தான் விளக்கமளிக்கவேண்டியதை நான் கண்டேன். இத்தகைய அடிமையின் பாவங்கள் அனைத்தும் சாத்தானின் தலை மீது சுமத்தப்படும். ஆகிலும், தேவனை அறிந்துக்கொள்ளாத அடிமையை பரத்திற்கு எடுத்துச் செல்ல இயலாது. தேவனைக் குறித்தும், வேதத்தைக் குறித்தும் அவர்கள் அக்கறை கொள்ளாததே அதற்கு காரணம். ஆகிலும், இந்த அடிமைகளின் அதிபதியாகிய சாத்தான், கடைசி ஏழு வாதைகளையும் அனுபவித்து, இரண்டாம் உயிர்த்தெழுதலின் போது மீண்டும் எழுந்து, இரண்டாவது முறையாக, பயங்கரமான மரணத்தை தழுவுவான். அப்பொழுது தான்

தேவனின் உக்கிரம் தனியும்.

பார்க்க : ஆமோஸ் 5 : 21

ரோமர் 12 : 19

வெளி 14 : 9-10; 18 : 6

அத்தியாயம் 34

# உரத்த தேறல்

பரலோகத்தில், தேவதூதர்கள் துரிதமாக மேலும் கீழும் சென்று கொண்டிருந்ததை நான் கண்டேன். ஒரு முக்கியமான சம்பவத்தின் நிறைவேறுதலுக்காக ஆயத்தங்களை மேகொள்ளும்படி அவர்கள் பூமிக்கு இறங்குவதும், பரத்திற்கு ஏறுவதுமாக இருந்தார்கள். மூன்றாம் தூதனோடு இணைந்து, அவனுடைய தூதினை வலிமையாக்கும்படியாக வேறொரு தூதனை தேவன் நியமித்தார். இத்தூதனுக்கு அருளப்பட்ட மகிமையினிமித்தமாக, அவன் பூமியிறங்கியபோது, உலகமே பிரகாசமடைந்தது. இத்தூதனுக்கு முன்னும் பின்னுமாக சென்ற ஒளி அனைத்து இடகளிலும் ஊடுருவியது. அவன் மிகுந்த சத்தமிட்டு, "பாபிலோன் மகாநகரம் விழுந்தது! விழுந்தது!" என்றான். அசுத்தமும் அருவருப்புமான பறவைகள் வந்தடையக்கூடிய கூண்டாக பாபிலோன் திகழ்ந்தது. 1844ஆம் ஆண்டுமுதல் திருச்சபைகளுக்குள் நுழைந்திருந்த நேர்மையற்ற நிலைகளோடுக் கூட, இந்த இரண்டாம் தூதனின் தூதும் நுழைத்தது. இந்த இரண்டாம் தூதனின் ஊழியம் சரியான சமயத்தில் தோன்றி, மிகுந்த சத்தத்தோடு எழும்பிய மூன்றாம் தூதனின் செய்தியோடு கலந்துவிட்டது. தேவ ஜனங்கள், விரைவில் எதிர்கொள்ளவேண்டிய சோதனைகளை எதிர்கொள்ள தகுதியாக்கப்பட்டார்கள். அவர்கள் மீது இறங்கிய ஒளியையும், மூன்றாம் தூதனின் செய்தியோடு இணைந்து அவர்கள் பயமில்லாமல் அச்செய்தியை அறிவிப்பதையும் நான் கண்டேன்.

பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட மூன்றாம் தூதனுக்கு உதவும்படி அநேக தூதர்கள் வந்தார்கள். பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன் அது : "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவுகூர்ந்தார்" என்றது. 1844ஆம் ஆண்டு நள்ளிரவில் தோன்றிய உரத்தச் சத்தத்தில் இச்செய்தியும், அஃதோடு மூன்றாம் தூதனின் செய்தியும் இணைக்கப்பட்டிருப்பதை நான் கண்டேன். பொறுமையுடன் காத்துக்கொண்டிருந்த பரிசுத்தவான்களின் மீது தேவ மகிமை தங்கியது. எனவே, பாபிலோன் நகரம் விழுந்ததையும், அவளுக்கு நேரிடவிருக்கும் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படியும், தேவனுடைய ஜனங்களுக்கு எச்சரிப்பின் செய்தியை இந்த பரிசுத்தவான்கள் தைரியமாக எடுத்துரைத்தார்கள்.

காத்துக்கொண்டிருப்பவர்களின் மீது விழுந்த ஒளி அனைத்து இடங்களிலும் பரவியது. அப்பொழுது, மூத்தூதை கேள்விப்படாதவர்களும், சத்திய ஒளியை பெற்றிருந்தவர்களும், விழுந்துப்போன சபைகளிலிருந்து வெளியேறினர். இந்த தூதினை கேட்டபடியால், அநேகர் தங்கள் ஜீவியகாலத்தின் பதில் சொல்லும் பொறுப்புடைமையை உணர்ந்தார்கள். அவர்கள் மீதும் சத்திய ஒளி விழுந்ததால், ஜீவனையோ மரணத்தையோ தெரிந்துக்கொள்ளும் பாக்கியத்தை அவர்கள் பெற்றார்கள். சிலர் ஜீவனை தெரிந்துகொண்டு, தேவனுடைய கற்பனைகளை கைகொண்டு, கர்த்தருக்காக காத்திருக்கும் கூட்டத்தோடு நின்றார்கள். மூன்றாம் தூது தனது கிரியையை செய்யவேண்டியிருந்தது. அதினிமித்தமாக, யாவரும் சோதிக்கப்பட்டு, மத அமைப்புகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். தேவ ஆவியானவரின் கிரியையை உணர்ந்திருந்த சத்தியவான்களை ஒரு வல்லமை அசைத்துக்கொண்டிருந்தது. அதே சமயத்தில் அவர்களின் தீர்மானங்களுக்கு தடையாக நிற்க இயலாமல், அவர்களுடைய குடும்பத்தினரும் நண்பர்களும், தேவனின் வல்லமையினால் பிடிக்கப்பட்டிருந்தார்கள். இந்த கடைசி அழைப்பு, எளிமையான அடிமைகளையும் சென்றடைந்தது. இவர்களில் பக்தியுள்ளவர்கள், இச்செய்தியை மகிழ்ச்சியுடன் ஏற்று, தங்களது விடுதலையை எண்ணி மகிழ்ந்தார்கள். அவர்களுடைய எஜமான்களால் அவர்களை தடுக்க முடியவில்லை. ஒருவகையான பயமும், பிரமிப்பும் அவர்களை பிடித்திருந்தது. அற்புதங்கள் செய்யப்பட்டன; நோயாளிகள் சுகம் பெற்றார்கள்; ஆச்சரியங்களும் அடையாளங்களும் விசுவாசிகளை தொடர்ந்தது. தேவன் கிரியை செய்தபடியால், விசுவாசிகள் தயக்கமில்லாமல் தங்களுடைய மனச்சாட்சியின் மீது திட நம்பிக்கை வைத்து, கற்பனைகளை முழுமையாக கைகொள்கிறவர்களோடு இணைந்துக்கொண்டார்கள். மேலும், மூன்றாம் தூதினை வல்லமையாக பிரசங்கித்தார்கள். நள்ளிரவு கூக்குரலைக் காட்டிலும் அதிக வல்லமையோடு இம்மூன்றாம் தூது நிறைவுபெறும் என நான் கண்டேன்.

மேலிருந்து வல்லமையைப் பெற்று, முகங்களில் பிரகாசத்துடன், தேவனின் ஊழியக்காரர்கள் இந்தச் செய்தியை எடுத்துச் சென்றார்கள். பலதரப்பட்ட மத அமைப்புகளில் சிதறிக் கிடந்தவர்களில் அநேகர், இச்செய்தியைக் கேட்டு, அத்தகைய அழிவின் சபைகளிலிருந்து வெளியேறினார்கள். இஃது, அழிவிற்கு முன் சோதோம் பட்டணத்திலிருந்து வெளியேறிய லோத்தின் அனுபவத்திற்கு ஒத்ததாய் இருந்தது. அவர்கள் மீது விழுந்த மகிமையினிமித்தமாக, தேவ ஜனங்கள், வர இருக்கும் சோதனைகளை மேற்கொள்வதற்கு ஆயத்தமானார்கள். பின்பு ஒரு சத்தம் உண்டாகி, ”பரிசுத்தவான்களின் பொறுமை இதுவே; தேவனுடைய கற்பனைகளையும், இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களும் இவர்களே,” என்றுரைத்தது.

பார்க்க : ஆதியாகமம் 19:1-38 , வெளிப்படுத்தல் 14 : 12; 18:2-5

அத்தியாயம் 35

# மூன்றாம் தூது மூடப்பட்டது

மூன்றாம் தூதனின் தூது நிறைவேறும் காலத்திற்கு நான் எடுத்துச் செல்லப்பட்டேன். கர்த்தரின் வல்லமை அவருடைய பிள்ளைகளோடு தங்கியிருந்தது. அவர்கள் தங்கள் கடமைகளை முடித்துவிட்டு, அவர்களுக்கு முன் இருந்த இக்கட்டான காலத்துக்கு ஆயத்தமாக இருந்தார்கள். அவர்கள் பின் மாரியை, கர்த்தருடைய சமூகத்தினின்று பெற்றிருந்தபடியால், வாழும் சாட்சிகளாக உயிர்ப்பிக்கப்பட்டிருந்தார்கள். இந்தக் கடைசி மகாஎச்சரிப்பு எல்லா இடங்களிலும் எழுந்தபடியால், அதனை ஏற்காத உலக ஜீவிகளுக்கு அஃது பெருங்கோபத்தை தூண்டியது.

பரலோகத்தில் தூதர்கள் அங்குமிங்குமாக அசைவாடி, அசைந்துக்கொண்டிருந்ததை நான் கண்டேன். பூமியிலிருந்து திரும்பிய ஒரு தூதன், இயேசுவிடம், தான் தனது கடமைகளை முடித்து விட்டதாகவும், பரிசுத்தவான்கள் எண்ணப்பட்டு முத்தரிக்கப்பட்டாகிற்று என்றும் கூறினான். அப்பொழுது, பத்துக் கற்பனைகளைக் கொண்டிருந்த உடன்படிக்கை பெட்டியின் முன் தனது கடமைகளை செய்துக்கொண்டிருந்த இயேசுவானவர், தமது கையிலிருந்த தூபக்கலசத்தை இறக்கி வைத்ததை நான் கண்டேன். அவர் தமதுகரங்களை உயர்த்தி, "எல்லாம் முடிந்தது" என்றார். பின்பும் அவர், "அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யப்பட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்," என பக்தியுடன் பிரகடனம் செய்தார்.

மரணமா, ஜீவனா என்று அனைத்து நபர்களுக்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பதை நான் கண்டேன். இயேசு தம்முடைய ராஜ்ஜியத்தின் பிரஜைகளுக்காக உரிய பரிகாரத்தை செய்து, அவர்களுடைய பாவங்களை அழித்திருந்தார். ஆசாரிப்புக் கூடாரத்தில் இயேசு தனது ஊழியத்தை செய்துக்கொண்டிருந்த வேளையில், மரித்த நீதிமான்களுக்கும், அதன் பின்பு, உயிருடனிருந்த நீதிமான்களுக்கும், நியாயத்தீர்ப்பு நடந்துக்கொண்டிருந்தது. இராஜ்ஜியத்தின் பிரஜைகள் தெரிந்தெடுக்கப்பட்டாகிவிட்டது. ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம் முடிவடைந்தது. பரலோக இராஜ்ஜியத்தின் மகத்துவம் இயேசுவிடம் அருளப்பட்டது. இனி அவர், ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் ஆளுகைச் செய்வார்.

மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இயேசு வெளியேறிய போது, அவருடைய வஸ்திரங்களின் மணிகள் எழுப்பிய ஓசையை நான் கேட்டேன். அப்பொழுது ஒரு அந்தகார மேகம் பூமியின் குடிகளை மறைத்துக்கொண்டது. இதற்கு பின், அங்கு, குற்றம் புரிந்த பாவிக்கும், வருந்திய தேவனுக்குமிடையே மத்தியஸ்தர் யாரேனும் இல்லாதிருந்தது. தேவனுக்கும் பாவிக்கும் இடையே கிறிஸ்து நின்ற சமயங்களில், ஜனங்களிடையே ஒரு கட்டுப்பாடு இருந்தது. ஆனால், இயேசு அங்கிருந்து விலகியபோது, அந்தக் கட்டுப்பாடும் விலகியது. மனிதனின் கட்டுப்பாட்டை சாத்தான் தன்வசப்படுத்திக்கொண்டான். இயேசு ஆசாரிப்பு

கூடாரத்தில் ஊழியஞ்செய்தபோது, ஜனங்களின் மீது வாதைகள் ஊற்றப்பட இயலாமல் இருந்தது. ஆனால் இப்பொழுதோ, தேவனின் உக்கிரம் முழுமையாக பாவிகளின் தலைகளை தாக்கியது. இரட்சிப்பை மறுத்து, கண்டனங்களை புறக்கணித்திருந்தவர்களை மறைக்க யாரும் இல்லை. இத்தகைய திகில் நிறைந்த நாட்களில் இருந்த பரிசுத்தவான்கள், மத்தியஸ்தர் இல்லாமல், பரிசுத்த தேவனின் நேரிடை பார்வையிலே இருந்தார்கள். இயேசு, மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்த சமயத்தில், அறிக்கையிடப்பட்டிருந்த பாவங்கள் அனைத்தும், பாவத்தின் பிதாவாகிய பிசாசின் மீது சுமத்தப்பட்டது. இப்பாவங்களுக்காக அவன் தண்டிக்கப்பட வேண்டும்.

இயேசு தனது ஆசாரிய அங்கிகளை களைந்து, அரசனின் கோலம் பூண்டார். அவருடைய சிரசில் அநேக கிரீடங்கள் வைக்கப்பட்டு, பரம சேனைகள் புடைசூழ, அவர் பரத்திலிருந்து வெளி வந்தார். பூமியின் குடிகளின் மீது வாதைகள் விழுந்துக் கொண்டிருந்தன. சிலர் தேவனை துறந்து, அவரை சபித்தார்கள். வேறு சிலர், பரிசுத்தவான்களிடம் சென்று, தேவனின் நியாயத்தீர்ப்பிலிருந்து எவ்விதம் தப்பித்துக்கொள்ள வேண்டுமென தங்களுக்கு கற்றுத்தரவேண்டும் என்று கேட்டார்கள். அதில் எவ்வித பலனும் இல்லை. பாவிகளுக்காக சிந்தப்பட்ட கடைசி கண்ணீர் துளியும் சிந்தப்பட்டாகிவிட்டது. கிருபையின் இனிய சத்தம், அவர்களை இனிமேல் ஒருக்காலும் வரவேற்கப்போவதில்லை. இறுதி எச்சரிப்பின் செய்தியும் கொடுக்கப்பட்டாகிவிட்டது. பரலோகமே அவர்களுடைய இரட்சிப்பில் வாஞ்சையாக இருந்தபோதும், இவர்கள் தங்களுடைய இரட்சிப்பிலே அக்கறை அற்றவர்களாக இருந்தார்கள். மரணமும் ஜீவனும் அவர்களுக்கு முன் வைக்கப்பட்ட சமயத்தில், ஜீவனை அநேகர் விரும்பினர். ஆகிலும், அதனை பெற்றுக்கொள்வதற்கான எவ்வித முயற்சியையும் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. எனவே, இப்பொழுது அவர்களுடைய பாவங்களை சுத்திகரிப்பதற்கு பரிகாரமாக இரத்தம் ஏதும் இல்லை. அவர்களுக்காக பரிந்து பேசுவதற்கு, இரக்கமான இரட்சகர் இப்பொழுது இல்லை. ‘எல்லாம் முடிந்தது’ என்றுரைக்கப்பட்ட இயேசுவின் வார்த்தைகளோடு பரலோகமே இணைந்துக்கொண்டது. மீட்பின் திட்டம் நிறைவேறியது. ஆகிலும், சிலரே இதனை ஏற்றுக்கொண்டார்கள். கிருபையின் சத்தம் மறைந்தபோது, ஒரு வகையான பயமும், கலக்கமும் பாவிகளை தொற்றிக்கெண்டது. ‘காலம் சென்றுவிட்டதே’ எனும் அங்கலாய்ப்புகள் தெளிவாகக் கேட்டன.

தேவ வார்த்தையை மதிக்காதவர்கள் அலைந்துக் கொண்டிருந்தார்கள். மீண்டும் தேவனுடைய வார்த்தையை கேட்பதற்காக, வடக்கிலிருந்து கிழக்கிற்கும், ஒரு சமுத்திரத்திலிருந்து மறு சமுத்திரத்திற்கும் அலைந்தார்கள். ஆனால் கர்த்தருடைய வார்த்தைக்கு கொடிய பஞ்சமாயிற்று. தேவனிடத்திலிருந்து வரக்கூடிய ஒரு வார்த்தைக்காக எதை வேண்டுமானாலும் கொடுக்க ஆயத்தமாக இருந்தார்கள். ஆகிலும், கிடைக்கவில்லை. பரலோக பொக்கிஷங்களை பார்க்கிலும் உலக பொக்கிஷங்களில் அக்கறை கொண்டவர்கள், இரட்சிப்பின் அழைப்பை ஏற்றுக்கொள்ளாமலே இருந்தார்கள். இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல், அவருடைய பரிசுத்தவான்களையும் நிந்தித்தார்கள்.

அசுத்தமானோர் அசுத்தமாகவே இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

வாதைகளில் பாதிப்படைந்த திரளான துன்மார்க்கர், மூர்க்கங்கொண்டு எழுந்தார்கள். பயம் கலந்த வேதனையின் காட்சியாக அஃது இருந்தது. பெற்றோர்கள் பிள்ளைகளையும், பிள்ளைகள் பெற்றோர்களையும், சகோதரர்கள் தங்கள் சகோதரிகளையும், கடிந்துக்கொண்டார்கள். எல்லாத் திசைகளில் இருந்தும், "இந்த இக்கட்டுகளுக்கு விலக்கி காக்கக் கூடிய சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாதபடி நீ தான் தடுத்தாய்" என்ற குற்றச்சாட்டுகளை கேட்க முடிந்தது. ஜனங்கள் ஊழியக்காரரையும் குற்றப்படுத்தினார்கள். இத்தகைய தேவ ஊழியக்காரர் தப்பித்துக்கொள்ளவில்லை. அவர்களுடைய வேதனைகள், தங்களுடைய ஜனங்களைக் காட்டிலும் பத்து மடங்குகள் அதிகமாக இருந்ததை நான் கண்டேன்.

பார்க்க : எசேக்கியல் 9 :2-11

தானியேல் 7:27

ஓசியா 6 : 3

ஆமோஸ் 8 : 11-13

வெளிப்படுத்தல் 16 : 1-21 ; 17:14

அத்தியாயம் 36

# யாக்கோபின் உபத்திரவ வேளை

பரிசுத்தவான்கள், நகரங்களையும் கிராமங்களையும் விட்டு, தனிமையான இடங்களில் கூடி வாழ்வதை நான் கண்டேன். தேவதூதர்கள் அவர்களை போஷித்து வந்தார்கள். துன்மார்க்கரோவெனில், பசியினாலும் தாகத்தினாலும் வாடினார்கள். பின்பு, உலகத்தின் முக்கிய பிரமுகர்கள் கூடி, ஆலோசனை நடத்தியபோது, சாத்தானும் அவனுடைய தூதர்களும் அவர்களை சுற்றி நின்றதை நான் பார்த்தேன். எழுதப்பட்ட ஏதோ ஒன்றின் பிரதிகள் தேசத்தின் பல்வேறு பகுதிகளில் கொடுக்கப்பட்டது. அதிலே : "பரிசுத்தவான்கள் தங்களுடைய விசித்திரமான விசுவாசத்தைகளைந்து, ஓய்வுநாள் ஆசரிப்பை கைவிட்டு, முதலாம் நாளை அனுசரிக்காவிடில், கொலை செய்யப்படவேண்டும்" என்ற கட்டளை இருந்ததை நான் கண்டேன். ஆனால் இம்முறை, பரிசுத்தவான்கள் தங்கள் நிலையில் உறுதியாக நின்றார்கள். தேவன் மீது விசுவாசம் வைத்து, அவருடைய வாக்குத்தத்தங்களின் மீது பற்றுதலாயிருந்து, தங்களுக்கு விடுதலை வந்துவிடும் என்று காத்திருந்ததை நான் கண்டேன். இக்கட்டளை பிறப்பிக்கப்படுவதற்கு முன், தீயவர்கள், பரிசுத்தவான்களை அழித்துவிட வகை தேடினார்கள். உன்னதத்திலிருக்கிற தேவனின் பரிசுத்தவான்களை அழித்துவிட சாத்தான் வாஞ்சையாயிருந்தான். அந்நியர்களின் மத்தியிலும் கற்பனைகளை கைக்கொண்டவர்களுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தும் பொருட்டு, இயேசு தமது தூதர்களை அனுப்பி,

பரிசுத்தவான்களை காத்துக்கொண்டார். இயேசுவை கான்பதற்காக ஆவலுடன் காத்திருப்பவர்களை, மரணத்தை காணாமல் மறுரூபமாக்கிவிட்டால், இயேசுவே கனம்பெறுவார்.

பரிசுத்தவான்கள் மிகுந்த மனவருத்தங்களை அனுபவித்ததை கண்டேன். பூமியின் துன்மார்க்கர் அவர்களை சுற்றியிருந்ததைப் போல் இருந்தது. அனைத்துமே அவர்களுக்கு விரோதமாக இருந்தது. துன்மார்க்கரின் கரத்தினால் மடிந்துபோகும்படி தங்களை தேவன் இறுதியாக ஒப்புக்கொடுத்துவிட்டாரோவென சிலர் பயந்தார்கள். அவர்களுடைய கண்கள் திறந்திருக்குமானால், அவர்களை சுற்றிலும் இருந்த தேவதூதர்களை கண்டிருப்பார்கள். அநேக மூர்க்கவெறிக் கொண்ட துன்மார்க்கரும், தீய தூதர்களும் இணைந்து, பரிசுத்தவான்களை அழிக்க முற்பட்டார்கள். அவர்கள் அப்படி செய்ய விரைந்துபோது, வலிமையான பரிசுத்த தூதர்களை அவர்கள் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. பரிசுத்த தூதர்கள் அவர்களை பின்னடையச் செய்தார்கள். பரிசுத்தவான்களுக்கு இது ஒரு பயங்கரமான வேதனையின் மணிவேளையாக இருந்தது. விடுதலைக்காக தேவனிடத்தில் இரவும் பகலுமாய் வேண்டிக் கொண்டே இருந்தார்கள். வெளித்தோற்றத்தில் பார்க்கும்பொழுது, அவர்களுக்கு விடுதலையின் வாய்ப்பே இல்லாதிருந்தது. "உங்கள் தேவன் ஏன் இன்னமும் உங்களை எங்கள் கரங்களிலிருந்து விடுவிக்கவில்லை? நீங்கள் உயர எழும்பி, உங்கள் ஜீவனைக் காத்துக்கொள்ளவேண்டியது தானே?" என்று துன்மார்க்கர்கள் ஏளனம் பண்ணினார்கள். ஆகிலும், பரிசுத்தவான்கள் அவர்களை பொருட்படுத்தவில்லை. யாக்கோபைப் போல், அவர்கள், தேவனிடத்தில் போராடினார்கள். தேவதூதர்கள் இவர்களை கவனித்துக்கொண்டே இருந்தார்கள். தேவன் தம்முடைய வல்லமையை எழுப்பி, மகிமையாக இவர்களை விடுவிக்கும் வேளை அருகில் இருந்தது. புறஜாதியாரின் நடுவில் தமது நாமத்தை, தேவன், ஏளனப்படவொட்டார். அவருடைய நாமத்தின் மகிமைக்கென்று, தமக்காக காத்திருந்து, ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டிருந்த யாவரையும் அவர் விடுவிப்பார்.

விசுவாசமுள்ள நோவாவின் நாட்களுக்கு நான் திருப்பப்பட்டேன். மழை பொழிந்து, வெள்ளம் புரண்டோடியது. நோவாவும், அவனுடைய குடும்பத்தினரும் பேழைக்குள் சென்றபின், தேவன் வாசலை அடைத்தார். அவனை ஏளனம் பண்ணி நகைத்திருந்த போதிலும், நோவா, வரவிருந்த அழிவை குறித்து இம்மக்களுக்கு விசுவாசத்துடன் எச்சரித்திருந்தார். வெள்ளம் எழும்பத் துவங்கியபோது, மூழ்கி, மரணத்தோடு போராடுகையில், தாங்கள் ஏளனம் செய்திருந்த பேழை மாத்திரம் பத்திரமாக மிதந்துக்கொண்டிருப்பதையும், நோவாவின் குடும்பத்துக்கு தேவையான பாதுகாப்பை அது கொடுத்திருந்ததையும், அவர்கள் கண்டார்கள். எனவே, வரவிருக்கம் அழிவைக் குறித்த விசுவாசத்துடன் எச்சரித்த பிள்ளைகளை தேவன் காக்கிறார் என்று நான் கண்டேன். மிருகத்தின் முத்திரையை வணங்காமலும், தரித்துக் கொள்ளாமலும் இருந்தவர்களையும், மறுரூபமாக்குதலை எதிர்நோக்கியிருந்தவர்களையும், துன்மார்க்கரின் கைகளுக்கு விடுவிக்க தேவன் வாஞ்சையாய் இருந்தார். நீதிமான்களை அழிக்கும் அனுமதியை பெற்றுவிட்டால், தேவனை வெறுக்கின்ற சாத்தானும் அவனுடைய சகாக்களும், திருப்தியாகிவிடுவார்கள். சாத்தானின் மகிமையை பரைச்சாற்றுகின்ற அனுபவமாக அது

அமைந்துவிடும்! தேவனுடைய பிள்ளைகளை நிந்தித்திருந்த யாவரும், தேவன் தமது பிள்ளைகளின் மேல் வைத்திருக்கும் பற்றையும், அவர்கள் பெறவிருக்கும் இரட்சிப்பையும் காண்பார்கள்.

பரிசுத்தவான்கள் பட்டணங்களையும் கிராமங்களையும் விட்டு வெளியேறியபோது, துன்மார்க்கர் அவர்களை பின்தொடர்ந்தார்கள். நீதிமான்களை அழிக்கும்படி பட்டயங்களை அவர்கள் உயர்த்தியபோது, பெலனற்ற, உலர்ந்த புல்லைப்போல் உடைந்து விழுந்தார்கள். தேவதூதர்கள் நீதிமான்களை பாதுகாத்துக்கொண்டார்கள். தேவனை நோக்கி இரவு பகலுமாக அவர்கள் எழுப்பிய குரல், தேவ சமூகத்தில் வந்த சேர்ந்தது.

பார்க்க : ஆதியாகமம் 6: 1-22 ;7 : 1-24 ;

சங்கீதம் 91 : 1-16

மத்தேயு 20 : 23

வெளிப்படுத்தல் 13 : 11 -17

அத்தியாயம் 37

# பரிசுத்தவான்களின் விடுதலை

தமது ஜனங்களை விடுவிப்பதற்கு தேவன் நள்ளிரவு சமயத்தை தெரிந்துகொண்டார். துன்மார்க்கர், அவர்களை சுற்றிலும் ஏளனமாக நின்றுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது. திடீரென்று கதிரவன் தோன்றி, பிரகாசித்தது; சந்திரன் நிலையாக நின்றது. துன்மார்க்கர்கள் இக்காட்சியை பிரமிப்புடன் பார்த்தார்கள். அற்புதங்களும் அடையாளங்களும் சடுதியாக நிகழ்ந்தன. இயற்கையின் விதிமுறைகளுக்கு புறம்பாக அனைத்துமே செயல்பட்டன. நீதிமான்களோ இக்காட்சிகளை பக்திநிறைந்த மகிழ்ச்சியில் கண்டார்கள்.

நீரோடைகள் ஓட மறுத்தன; கார்மேகங்கள் எழும்பி ஒன்றோடு ஒன்றாக மோதிக்கொண்டன. மகிமை தங்கிய ஒரு இடத்திலிருந்து தேவனின் சத்தம் உண்டாகி, திரளான வெள்ளம்போல் வானத்தையும் பூமியையும் அசைத்தது. ஒரு மகத்தான பூமியதிர்ச்சி உண்டாயிற்று. கல்லறைகள் திறக்கப் பட்டு, மூன்றாம் தூதனின் தூதிற்கேற்ப சத்தியத்தை காத்து மரித்தவர்கள் உயிருடன் எழும்பினார்கள். தேவன் ஏற்படுத்தவிருக்கும் சமாதான உடன்படிக்கையைக் குறித்து இவர்கள் களிகூர்ந்தார்கள்.

வானங்கள் திறந்தும், மூடியும், பெரிய குழப்பத்தில் இருந்தன; கன்மலைகள் அதிர்ந்து அனைத்து திசைகளிலும் கற்பாறைகளை வீசியது; கடல் கொந்தளித்து, கற்களை கரையில் வீசியது. இயேசுவின் வருகையின் வேளையைக்குறித்து தேவன் அறிக்கையிட்டபோது, ஒரே ஒரு வாக்கியம்

மட்டும் விளம்பினார். அஃது உலகெங்கும் உருண்டோடியபடியால், சற்று நேரம் தாமதித்தார். எகோவாவின் வாயிலிருந்து இடி முழக்கங்களைப் போல உருண்டோடியவார்த்தைகளை, தேவனின் இஸ்ரவேலர்கள் வாஞ்சையோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வாக்கியத்தின் நிறைவிலும், பரிசுத்தவான்கள் உரத்த சத்தத்தில், "மகிமை! அல்லேலூயா!!" என்று கூறினார்கள். மோசே சீனாயிலிருந்து இறங்கியபோது காணப்பட்ட முகப்பிரகாசம் போல், இந்த பரிசுத்தவான்களின் முகங்களிலும் தேவ மகிமை தெரிந்தது. இதனை துன்மார்க்கரால் பார்க்க முடியவில்லை. பரிசுத்த ஒய்வுநாளை கைகொண்டு தேவனை மகிமைபடுத்தியவர்களின் மீது மறையா - ஆசீர்வாதங்கள் உச்சரிக்கப்பட்டபொழுது, மிருகத்தின் மீதும் அதன் சொரூபத்தின் மீதும் ஒரு மகத்தான வெற்றியின் ஆரவாரம் எழும்பிற்று.

பக்திமான்கள் வெற்றியுடன் எழும்புவதையும், அவர்களை கட்டியிருந்த சங்கிலிகள் தகர்க்கப்படுவதையும் நான் கண்டேன். துன்மார்க்கத்தின் அதிபதி யாது செய்வதென்றறியாமல் குழப்பத்தில் இருந்தான். தேவ சத்தத்திலிருந்து வெளிவந்த வார்த்தைகள் ஒன்றையும் துன்மார்க்கர்கள் புரிந்துக்கொள்ளவில்லை. மனுஷகுமாரன் வீற்றிருந்த வெள்ளை மேகம் சற்று நேரத்தில் தோன்றிற்று.

தொலைவில் தோன்றியபோது, இம்மேகம், மிகச்சிறியதாக இருந்தது. இது மனுஷகுமாரனின் அடையாளம் என்று தூதன் அறிவித்தான். பூமியின் அருகே வந்தபோது, அதன் மகிமையையும், ஜெயங்கொள்ள வருகிற இயேசுவானவரின் கம்பீரத்தையும் காணமுடிந்தது. பரிசுத்த தூதர்களின் பரிவாரத்தோடு அவர் வந்தார். இக்காட்சியின் மகிமையை எம்மொழியும் விவரிக்க முடியாது. மகத்துவமும் மகிமையும் நிறைந்த இம்மேகம் இன்னும் நெருங்கி வந்தபோது, மேன்மையான இயேசுவை காணமுடிந்தது. அவர் இப்பொழுது முட்கிரீடம் தரித்திருக்கவில்லை. மாறாக, மகிமையின் கிரீடத்தை தரித்திருந்தார். அவருடைய ஆடையிலும், தொடையிலும் "இராஜாதி இராஜா" என்றும், "கர்த்தாதி கர்த்தா" என்கிற நாமங்கள் எழுதப்பட்டிருந்தது. அவருடைய கண்கள், நெருப்பு ஜுவாலைப்போலவும், பாதங்கள் பித்தளை படைப்பை போலவும், சத்தம் அநேக வாக்கியங்களின் இசையைப் போலவும் இருந்தன. மத்தியான வேளையில் சூரியன் பிரகாசிப்பது போல அவருடைய முகக்குறியும் பிரகாசமாக இருந்தது. பூமி அவருக்கு முன்பாக நடுங்கிற்று; வானம் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி, விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத் தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி, "நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக் கூடும்? " என்றார்கள்.

தேவனின் விசுவாசப் பிள்ளைகளை சற்று நேரத்திற்குமுன்

துன்புறுத்தியவர்கள், அவர்கள் மீது தங்கிய தேவ மகிமையை இப்பொழுது கண்டார்கள். அவர்கள் மகிமையடைந்ததை கண்டார்கள். அனைத்து பயங்கரமான சூழ்நிலைகளின் நடுவிலும், "இதோ, இவரே நம்முடைய தேவன், இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்" என்ற ஆரவாரம் கேட்டுக்கொண்டே இருந்தது. மரித்த பரிசுத்தவான்களை எழும்பும்படி கட்டளையிட்ட இயேசுவின் குரலில் இப்பூமியே நடுங்கிற்று! அப்பொழுது, மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்து, "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" என்றார்கள். நித்திரையடையாதவர்களும், இப்பொழுது எழுந்தவர்களுமாய் இணைந்து, ஜெய கீதத்தைப் பாடினார்கள். சுகவீனமடைந்து கல்லறைகளுக்குள் சென்றிருந்த இந்த சரீரங்கள், இப்பொழுது, அழியாத ஆரோக்கியத்துடன் எழும்பி வந்தன. உயிருடன் இருந்தவர்கள் ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்பட்டு மரணத்திலிருந்து எழும்பியவர்களுடன் இணைந்து, வானத்திலே தேவனை சந்தித்தார்கள். மரணத்தினிமித்தமாக பிரிக்கப்பட்ட நண்பர்கள், பிரியா-உறவோடு இப்பொழுது இணைக்கப்பட்டார்கள்.

ஒரு மேக இரதம் ஒன்று வந்தது. இம்மேகரதத்தின் இருபுறங்களிலும் சிறகுகள் இருந்தன. இம்மேகரதம் உயரே எழும்பியபோது, சிறகுகளும் சக்கரங்களும் இணைந்து, "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என ஆரவாரித்தன. தேவதூதர்களும் அவரை, "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" எனப் போற்றினார்கள். இதன் பின்பு, அந்த மேகரதம் பரிசுத்த நகரத்தை நோக்கி நகர்ந்தது. பரிசுத்த நகருக்குள் நுழையுமுன், பரிசுத்தவான்கள் அனைவரும் ஒரு பூரண சதுரவடிவில் நின்றார்கள். அதன் நடுவே இயேசு நின்றார். அவருடைய தலையும், புயமும் பரிசுத்தவான்களைவிடவும் தேவதூதர்களை விடவும் உயர்ந்து இருந்தது. அவருடைய கம்பீரத்தோற்றமும், அன்பான முகத்தோற்றமும், அக்கூட்டத்தினுள் நின்ற யாவருக்கும் தெளிவாக தெரிந்தது.

பார்க்கவும் : ஐஐ இராஜாக்கள் 2 : 11

ஏசாயா 25 : 9
ஐ கொரிந்தியர் 15 : 51-55
ஐ தெசலோனிக்கேயர் 4 : 13 - 17
வெளிப்படுத்தல் 1 : 13-16, 6 : 14-17; 19:16

அத்தியாயம் 38

# பரிசுத்தவானின் வெகுமதி

திரளான தேவதூதர்கள், பரிசுத்த நகரத்திலிருந்து, அநேக கிரீடங்களை கொண்டுவந்ததை நான் கண்டேன். ஒவ்வொரு நீதிமானுக்கும், பெயர் பொறிக்கப்பட்ட கிரீடங்கள் அவை. அக்கிரீடங்கள் அனைத்தும் இயேசுவிடம் ஒப்படைக்கப்பட்டன. இயேசு, அவருடைய வலதுகரத்தினை கொண்டு அக்கிரீடங்களை பரிசுத்தவான்களின் தலைகளில் அணிவித்தார். இதேவன்னமாக, தேவதூதர்கள் சுரமண்டலங்களை எடுத்து வந்தார்கள். அவைகளையும் இயேசு, தமது பிள்ளைகளிடம் எடுத்துக் கொடுத்தார். அதிகார தூதன் முதல் கருவியை இசைக்க, அனைவரும் சேர்ந்து இனிமையான இசையினால் பரலோகத்தை நிரப்பினார்கள். பின்பு, மீட்கப்பட்ட கூட்டத்தினரை பரமநகரத்தின் வாசலுக்கு அழைத்துச்சென்றார். அவர் வாசலைத் திறந்து, சத்தியத்தை காத்துக்கொண்ட ஜனங்களை உட்பிரவேசிக்கும்படியாக உத்தரவிட்டார். அந்த பட்டணமே கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. ஐசுவரியத்தின் மகிமையை அனைத்து இடங்களிலும் காணமுடிந்தது. மீட்கப்பட்ட பரிசுத்தவான்களை இயேசு திரும்பி பார்த்தபொழுது, அவர்களுடைய முகங்கள் மகிமையால் பிரகாசித்தன. இயேசு அவர்களை நோக்கி, "என் ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு, திருப்தியானேன். இந்த மகிமையை உங்களுக்களிக்கிறேன். உங்கள் கவலைகள் எல்லாம் தீர்ந்தது. இனி மரணமில்லை, கவலையில்லை, கண்ணீரில்லை, வேதனையுமில்லை" என்றார். மீட்கப்பட்ட கூட்டத்தினர் அவரை பணிந்து, தங்கள் கிரீடங்களை அவருடைய பாதத்தில் வைத்தனர். இயேசுவின் அன்பான கரம் அவர்களை எழுப்பிற்று. பரிசுத்தவான்கள் தங்கள் சுரமண்டலங்களை மீட்டி ஆட்டுக்குட்டியானவரின் பாடலினால் பரலோகத்தை நிரப்பினார்கள்.

பின்பு, இயேசு அவர்களை நகரத்தின் மத்தியிலிருந்த ஜீவ விருட்சத்தின் அருகே அழைத்து வந்து, செவிகள் இதுவரை கேட்டிராத இனிய குரலில், "இந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இவை அனைத்தையும் புசியுங்கள்" என்று கூறினார். இவ்விருட்சத்தின் கனியை இலவசமாக புசிக்கும் வாய்ப்பினை பரிசுத்தவான்கள் பெற்றுக்கொண்டார்கள். பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணிருள்ள சுத்தமான நதி தேவனின் சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வந்தது. இந்நதியின் இருகரையிலும் கனிகளைத்தரும் ஜீவவிருட்சங்கள் நின்றன. பரலோகத்தை விவரிப்பதற்கு அனைத்து மொழிகளுமே பலவீனமானவைகள் தான். இக்காட்சி என் முன்பாக எழுந்தபோது, நான் பிரமிப்பில் தொலைந்து போனேன். எனது பேனாவை கீழே வைத்துவிட்டு, "என்ன அன்பு! ஆச்சரியமான அன்பு" என்று நான் கத்தினேன். உன்னதமான மொழிகளினால் கூட, பரலோகத்தின் மகிமையையோ, இரட்சகரின் மேன்மையான அன்பின் ஆழங்களையோ விவரிக்க இயலாது என நான் கண்டேன்.

பார்க்க : ஏசாயா 53 : 11

வெளிப்படுத்தல் 21 : 4 ; 22 : 1-2

அத்தியாயம் 39

# தனித்த பூமி

நான் பின்பு பூமியை பார்த்தேன். துன்மார்க்கர் மரித்து, அவர்களுடைய சடலங்கள் பூமியின் மீது கிடந்தன. கடைசி ஏழு வாதைகளின் மூலமாக தேவனின் கோபத்திற்கு அவர்கள் ஆளாகியிருந்தார்கள். அவர்கள் வலியில் துடித்து, தேவனை சபித்திருந்தார்கள். கள்ளப் போதகர்கள் யேகோவாவின் கோபத்தின் குறிகளாக இருந்தார்கள். தேவனின் சத்தத்தினால் நீதிமான்கள் விடுவிக்கப்பட்டபின், துன்மார்க்கரின் உக்கிரம் அவர்களிடையே பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்திற்று. பூமியே இரத்தத்தினால் நனைந்து இருந்தது, உலகத்தின் ஒரு முனைமுதல் மறு முனை மட்டும் சடலங்கள் சிதறிக்கிடந்தன.

இப்பூமி, தனித்து, பாழான நிலையில் இருந்தது. பூமியதிர்ச்சியினால் நகரங்கள் தரைமட்டமாகி இருந்தன. மலைகள் தங்கள் இடங்களை விட்டகன்றிருந்தன. கடல் கொந்தளித்து பூமியின் மீது கற்களை சிதறியிருந்தது. பூமியே ஒரு பாழான வனாந்திரம் போல் காட்சியளித்தது. பெரிய மரங்கள் வேரோடு அகற்றப்பட்டு, சிதறி கிடந்தன. ஆயிரம் வருடங்களுக்கு இதுவே சாத்தானின் இருப்பிடம். தேவ கற்பனைகளை எதிர்த்து நின்றதன் விளைவுகளை, சாத்தான், இப்பொழுது காண்பான். அவன் ஏற்படுத்திய வீழ்ச்சியின் விளைவுகளை இந்த ஆயிரம் வருடங்கள் அனுபவித்தாக வேண்டும். பூமியிலே கட்டப்படவிருக்கும் சாத்தான், வேறு யாரையும் வீழ்த்த இயலாமல், தவிப்பான். அவனுடைய விழ்ச்சியின் நாள் முதல், அவனுடைய தீய குணாதிசயங்கள் கிரியை செய்து கொண்டே இருந்தன. அவனுடைய சகல வல்லமையும் பறிக்கப்பட்டு, தான் இழைத்திருந்த பாவத்தின் சம்பளமாகிய அழிவை இறுதியில் பெற்றுக் கொள்ளும்படியாக அவன் காத்திருப்பான்.

பிசாசினால் சோதிக்கப்படமுடியாததை எண்ணி தூதர்கள் ஆரவாரித்தார்கள். அஃது பத்தாயிரம் இசைக் கருவிகளினால் வாசிக்கப்பட்ட பிரம்மாண்டமான இசையைப் போல் ஒலித்தது.

இயேசுவும், மீட்கப்பட்ட பரிசுத்தவான்களும் சிங்காசனங்களில் அமர்ந்திருப்பதை நான் கண்டேன். தேவனுக்கு ஆசாரியர்களாக பரிசுத்தவான்கள் பணியாற்றுவதையும், மரித்த துன்மார்க்கரை அவர்கள் நியாயந்தீர்ப்பதையும் நான் கண்டேன். கற்பனை புஸ்தகமாகிய தேவ வசனத்தை ஒப்பிட்டு நியாயம் விசாரித்தார்கள். துன்மார்க்கருடைய கிரியைகளுக்கு தக்கதாக நியாயம் விசாரிக்கப்பட்டது. முடிவிலே, மரண புஸ்தகத்தில் அவர்களின் நாமங்கள் எழுதப்பட்டன. சாத்தானும் அவனுடைய தூதர்களும் இவ்வன்னமே நியாயந்தீர்க்கப்பட்டார்கள். தான் வஞ்சித்திருந்தவர்களின் தண்டனையைப் பார்க்கிலும் சாத்தானின் தண்டனை மிக பயங்காரமானதாக இருக்கும். அவன் வஞ்சித்திருந்த யாவரும் மடிந்த பின், சாத்தான், இன்னமும் உயிருடன் இருந்து அநேக நாட்கள் பாடனுபவிக்க வேண்டியிருந்தது.

துன்மார்க்கரின் நியாய விசாரனை முடிந்த பின்பு, ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் இயேசு பரம நகரத்தை விட்டு வெளியேறினார்.

தேவதூதர்களும் அவரை பின்பற்றினார்கள். பரிசுத்தவான்களும் பின்தொடர்ந்தார்கள். இயேசு ஒரு மகாபெரிய கன்மலையின் மீது இறங்கினார். அவர் பாதம் பட்டவுடனே அந்த மலை தரைமட்டமாயிற்று. அப்பொழுது ஒரு மகாபெரிய, அழகிய பட்டணத்தை கண்டேன். இந்த நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரங்களிருந்தன. ஒவ்வொரு பக்கத்திலும் மூன்று வாசல்களாக மொத்தம் பன்னிரண்டு வாசல்கள் இருந்தன. ஒவ்வொரு வாசலிலும் ஒரு தூதன் நிறுத்திவைக்கப்பட்டான். இந்தப் பட்டணம் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து, இயேசு ஆயத்தப்படுத்தி வைத்திருந்த சமபூமியில் நிலைநிறுத்தப்பட்டது.

பார்க்க : சகரியா 14 : 4 -12

வெளிப்படுத்தல் 20 : 2-6; 20:12, 21: 10-27

அத்தியாயம் 40

# இரண்டாம் உயிர்த்தெழுதல்

பின்பு இயேசுவும், தேவதூதர்களும், பரிசுத்தவான்களும், இப்புதிய நகரத்தை விட்டு வெளியே வந்தார்கள். இயேசு, மரித்த துன்மார்க்கரை எழுப்பினார். இந்த துன்மார்க்கர் எப்படி கல்லறைகளுக்குள் சென்றனரோ அப்படியே இப்பொழுதும் எழுந்தனர். முதலாம் உயிர்த்தெழுதலின்போது, அழியாமையை பெற்ற பரிசுத்தவான்கள் மகிழ்ந்திருந்தார்கள். ஆனால், இரண்டாம் உயிர்த்தெழுதலின்போது, சாபத்தின் அடையாளங்கள் நன்றாக வெளிப்பட்டன. இவ்வுலகின் ராஜாக்களுடனும் பிரபுக்களுடனும் சராசரி ஏழைகளும், கல்லாதவர்களும் எழும்பினார்கள். அவர்கள் அனைவரும் மனுஷகுமாரனை கண்டார்கள். இயேசுவை பரியாசம் பண்ணி, அவரை அடித்திருந்த ஒவ்வொருவரும் இப்பொழுது, இயேசுவை ராஜ மகிமையில் காண்பார்கள். அவர், தாங்கள் துன்புறுத்தி, சிலுவை மரணத்திற்கென்று ஒப்புக்கொடுத்திருந்த இயேசுதான் என்பதை உணர்ந்துக் கொள்வார்கள். அப்பொழுது, இராஜாதி இராஜாவின் சமூகத்திலிருந்து விலகியோடுவார்கள். ஒரு பெரிய புலம்பலின் சத்தம் எழும்பிற்று.

முன்பு அவர்களால் நிந்திக்கப்பட்ட இயேசு, இப்பொழுது, பயங்கரமான வல்லமையோடு இருப்பதை கண்டு அதிர்ந்த துன்மார்க்கர்கள், கன்மலைகளுக்கிடையே ஒளிந்துக்கொள்ள முயற்சி செய்தார்கள். அவர்கள் அனைவரும் அவருடைய மகிமையினால் பாதிக்கப்பட்டிருந்ததால், ஏகமாக கூடி, "பிதாவின் நாமத்தினாலே வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்" என்று அறிவித்தார்கள்.

பரிசுத்த நகரத்துக்குள் அவர்கள் மீண்டும் வந்தபோது, துன்மார்க்கரின் அழுகையும் புலம்பல்களும் தொடர்ந்தது. சாத்தான் தனது கிரியையை மீண்டும் துவங்கியதை நான் கண்டேன். அவனுடைய பிரஜைகளின் நடுவே மீண்டும் வலம் வந்து, தான் இன்னமும் வலிமை

மிக்கவன் என்று விளக்கிவந்தான். சோர்வாய் இருந்தவர்களை உற்சாகப்படுத்தினான். அவனுடைய கூட்டத்தில் சிறந்த போர்வீரர்களும், ராஜாக்களும் இருந்தனர். எந்த போரிலும் தோல்வியடையாதிருந்த அநேகர் இருந்தார்கள். பல இராஜ்ஜியங்களை அதிரவைத்திருந்த நெப்போலியன் அங்கிருந்தான். போரில் மடிந்திருந்த வலிமையான, திறமையான, திடகாத்திரமான மனிதர்கள் அங்கிருந்தார்கள். இவர்கள், அதிகமாக கைப்பற்ற வேண்டும் என வாஞ்சித்தபோது மரித்தார்கள். அவர்கள் உயிர்த்தெழுப்பப்பட்டபோது, மரிக்கும் நேரத்தில் என்ன சிந்தனைக் கொண்டிருந்தார்களோ, அதே சிந்தனையோடு எழும்பினார்கள். கைப்பற்ற வேண்டும் என்கிற ஆசையோடு இப்பொழுதும் எழும்பினார்கள். சாத்தான் தனது தூதர்களோடும், உயிர்த்தெழுப்பப்பட்ட பலவான்களோடும் ஆலோசித்தான். பின்பு அந்த திரளான கூட்டத்தைப் பார்த்து, பரலோகப் பட்டணத்தில் இருப்பவர்கள் மிக சொற்பமானவர்கள் என்பதை அறிவித்தான். ஆகையால், எளிதாக அவர்களை வென்று, அப்பட்டணத்தை கைப்பற்றி விடமுடியுமென அறிவித்தான்.

அவர்களை சாத்தான் வஞ்சித்தான். உடனே அனைவரும் போரிடுவதற்காக புறப்பட்டார்கள். திறமையான அநேகர் இருந்தபடியால், போராயுதங்களை உண்டுபண்ணினார்கள். பின்பு, சாத்தானின் தலைமையில் இக்கூட்டம் நகர்ந்தது. பிரபுக்களும், போர் வீரர்களும் சாத்தானின் பின்னே வர, திரளான ஜனங்கள் அவர்களை கூட்டம் கூட்டமாக பின் தொடர்ந்தார்கள். நொறுங்கிய பூமியிலிருந்து பரலோகத்திற்கு நேராக இக்கூட்டம் நகர்ந்தது. இயேசு பரலோக நகரத்தின் வாசலை அடைத்துவிட்டார். சாத்தானின் சேனை நகரத்தை சுற்றிலும் பரவினார்கள். போரின் ஆயுதங்களை தயாரித்திருந்த அவர்கள், பயங்கரமான போரை எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தார்கள். இவ்வேளையில், இயேசுவும், தேவதூதர்களும், மீட்கப்பட்ட பரிசுத்தவான்களும் பரமநகரத்தின் மதிற்சுவரின் மேல் ஏறினார்கள். அங்கிருந்து இயேசு கம்பீரமாக, ”மகா பாவிகளே! இதோ, நீதிமான்களுக்கு வரும் பலன்; இரட்சிக்கப்பட்டவர்களே! இதோ, துன்மார்க்கருக்கு வரும் பலன்,” என்றுரைத்தார். திரண்டிருந்த சாத்தானின் படை இந்த மகிமையைக் கண்டார்கள். பிரகாசிக்கும் கிரீடங்களையும், மகிமையான முகங்களையும் கண்ட கூட்டம், தங்களுடைய அதிபதிகளின் மகிமையற்ற தோற்றங்களை கவனித்தபடியால், அவர்களுடைய மனவலிமை குன்றிப்போயிற்று. பாவத்தின் சம்பளம் மரணம் என்றும், இத்தகைய மகிமையான இராஜ்ஜியத்தை நாம் இழந்துவிட்டோமே என்றும் வருந்தினார்கள். தாங்கள் நிந்தித்து, அவமானப்படுத்தி, வெறுத்து ஒதுக்கிய யாவரும் மகிமையில் இருப்பதையும், அதே வேலையில் பரிசுத்த நகரத்திற்கு வெளியே ஒன்றுமில்லாமல், திக்கற்றவர்களாய் தாங்கள் நிற்பதையும் இக்கூட்டம் உணர்ந்து பார்த்தது.

பார்க்க : மத்தேயு 23 : 29
வெளிப்படுத்தல் 6 : 15, 16
வெளிப்படுத்தல் 20 : 7-9
வெளிப்படுத்தல் 22 : 12-15

அத்தியாயம் 41

# இரண்டாம் மரணம்

சாத்தான் நடுவில் நுழைந்து, ஜனக்கூட்டத்தை குழப்பிவிட முயற்சி செய்தான். ஆனால், பரலோகத்திலிருந்து வந்த அக்கினி அவர்கள் அனைவரையும் பட்சித்துப் போட்டது. சிலர் துரிதமாக அழிந்துப்போனதையும், சிலர் நீண்ட நேரம் தவித்ததையும் நான் கண்டேன். சரீர கிரியைகளின் பிரகாரமாக அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். சிலர் அநேக நாட்களாக எரிந்துக்கொண்டிருந்தார்கள். "அவர்களுடைய பூச்சி சாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும்" என்று தூதன் கூறினான்.

சாத்தானும் அவனுடைய தூதர்களும் நீண்ட நாட்களாக வேதனை அனுபவித்தார்கள். சாத்தான் தன்னுடைய பாவ பாரத்தை மட்டுமல்லாது, இரட்சிக்கப்பட்ட யாவருடைய பாவபாரங்களையும் சோ்த்து, தாங்கவேண்டியிருந்தது. அவன் செய்வித்திருந்த ஆத்தும அழிவுகளுக்காகவும் அவன் தண்டனை அனுபவிக்கவேண்டும். பின்பு, சாத்தானும், துன்மார்க்கரும் அழிக்கப்பட்டார்கள். தேவனின் நீதி விளங்கிற்று. பரம தூதர்களும், இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்களும், உரத்த சத்தத்தில், "ஆமென்" என்றார்கள்.

சாத்தான் வேரென்றும், அவனுடைய பிள்ளைகள் கிளைகள் என்றும் தேவதூதன் விளக்கினான். நித்திய மரணத்தை அவர்கள் அடைந்தாயிற்று. அவர்கள் இனி உயிர்த்தெழப்போவது இல்லை. சுத்தமான உலகத்தை தேவன் பெற்றிருப்பார். துன்மார்க்கரை அழித்த நெருப்பு, உலகின் அழுக்கை சுட்டெரிப்பதை நான் கண்டேன். பின்பு நான், உலகம் சுத்திகரிக்கப்பட்டிருப்பதை கண்டேன். சாபத்தின் யாதொரு அடையாளமும் இல்லாதிருந்தது. உடைந்து, கரடுமுரடாக இருந்த பூமி, இப்பொழுது, சீரான, பரந்த பூமியாக இருந்தது. தேவனின் முழு பிரபஞ்சமும் சுத்தமாய் இருந்தது. எழுந்திருந்த மகா சர்ச்சையும் நிறைவுபெற்றிருந்தது. கண்கள் கண்ட இடமெல்லாம் அழகாகவும், பரிசுத்தமாகவும் இருந்தது. மீட்கப்பட்ட யாவரும் - சிறியோரிலிருந்து பெரியோர் மட்டும் தங்கள் கிரீடங்களை இறக்கி வைத்து, தங்கள் அதிபதியாகிய தேவன் முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து, பணிந்துக் கொண்டார்கள். அழகான புதிய பூமி பரிசுத்தவான்களின் நிரந்தர குடியிருப்பாக மாறிற்று. கர்த்தரின் பரிசுத்தவான்களின் கரத்தில் இந்த ராஜ்ஜியம் ஒப்படைக்கப்பட்டது. இந்த ராஜ்ஜியமும், பரலோகத்தின் கீழ் இருந்த சகல அதிகாரமும் பரிசுத்தவான்களின் கைகளில் கொடுக்கப்பட்டது.

பார்க்க : ஏசாயா 66 : 24

தானியேல் 7 : 26-27

வெளிப்படுத்தல் 20 : 9-15; 21:1; 22:3